உ

ஸ்ரீ குருப்யோ நம:

திருக்குற்றால தத்தாத்ரேய மந்திர

# ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளின்

## திவ்ய சரித்திரம்.

S. வேங்கடசுப்பிரமணிய அய்யர்

ஆசிரியர்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# திருக்குற்றாலம்
## ஸ்ரீ தத்தாத்ரேய மந்திர ஸ்தாபகர்
# ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளின்
## திவ்ய சரித்திரம்.


S. வேங்கடசுப்பிரமணிய அய்யர்

ஆசிரியர்



ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

விஜய வைகாசி

1953.


All Rights Reserved]

[Rs. 2/8/-

**DEDICATED**

to the Memory of my beloved fàther

**S. SUNDARAM AIYER,**

Mittadar, Pudukkottai.

*[Tirunelveli District.]*



ஸ்ரீ ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகள்
[1910ம் வருடம் அளித்த காக்ஷி.]



புதுக்கோட்டை மிட்டாதார் ஸ்ரீமான் S. சுந்தரமய்யர்.

BORN: 8—2—1871] [DIED: 2—1—1942.

# FOREWORD

By

**The Hon'ble Justice T.L. Venkatarama Aiyar,**

*Judge, High Court, Madras.*

---

Sri SIVA CHIDĀNANDA SARASWATHĪ popularly known as MOUNA SWĀMIGAL, is one of the outstanding personalities who dominated the spiritual world in South India in recent times. His life and achievement form the subjectmatter of this work, the author of which is himself one of his most devoted sishyas. How a native of Āndhra Desa, who entered the order of Sanyasins, travelled all over the Tamil Nad visiting shrines for which it is justly famous, how when he visited Courtalam in the District of Tirunelveli he was attracted by the Dēvī in the Dharanī Pītam and made the place his home, how by his Bhakthi and Yogic powers he attracted a large following and how he established a Mutt called "Dattatreya Mandiram" —these and other matters will be found related impressively in the pages of this book.

I have had myself the good fortune to know the Swami personally, and of my own experience I can say he was able to inspire all those who came near him with spiritual ideals. He was a Yogi and many are the anecdotes current of the miracles which he performed as a Yogi. He possessed also special knowledge of the medicinal properties of various herbs and was able, with their aid, to effect cures, where doctors had confessed impotence. The Swami was a friend of Sri Ramana Maharishi and Sri Seshadri Swamigal of Tiruvannamalai and spiritually belonged to their class.

One of the devotees of the Swami was Sri Sundaram Aiyar who belonged to an aristocratic family known as the Mittadar of Pudukkottai. He became one of the earliest sishyas and one of the most devoted and was worthily honoured by the Swami with the title of *Baktha Sikhamani*. Many were the services of Mittadar Sundaram Aiyar to the Swami, the most notable among them being the construction of the Mutt called "Dattatreya Mandirahm]". The writer of this work, Sri S. Venkatasubrahmania Aiyar, is his son who continues the tradition

of the family in his devotion to the Swami and in his services to the Mutt. In appreciation of his work, the Swami has appointed him as one of the five members of an advisory committee for the management of the Mutt; and, if the Mutt continues to be efficiently managed, it is due not a little to the selfless work of Sri Venkatasubrahmania Aiyar. This work itself is the outcome of his great devotion to the Swami and bears the impress of sincerity and truth at every page. It appears that it was the desire of Mittadar Sundaram Aiyar that in due time the life of the Swami should be written and published; and in writing this work the author is also discharging the pious obligation laid on him by his father.

The author deserves the grateful felicitations of all persons who are devoted to the Swami and of all who are interested in the spiritual progress of this country.

"SRI VIDYA VILAS"
81, Mowbray's Road,
Alwarpet, MADRAS-18

T. L. VENKATARAMA AIYAR

# முன்னுரை

[ஸ்ரீ. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L.,]

---

தென் தேசத்தில் மிகவும் கியாதி பெற்றிருந்த ஸ்ரீ மௌனஸ்வாமிகள் என்ற மஹானின் சரித்திரத்திற்கு ஸ்ரீமான் T. L. வெங்கடராமய்யரவர்கள் எழுதியிருக்கும் முகவுரையுடன் இன்னொரு முன்னுரையைச் சேர்ப்பது அனுசிதமும் அனாவசியமுமாகுமென்றே நினைக்கிறேன். ஆனாலும் இந்நூலாசிரியரும் என் நண்பருமான ஸ்ரீமான் S. வெங்கடசுப்பிரமணிய அய்யரவர்கள் இச் சரித்திரத்தை எழுதிமுடித்து என்னிடம் கொடுத்து அத்யாயங்களாகப் பிரித்தும் பிரசுரத்திற்கு லாயக்காக உருவாக்கியும் அச்சுப் பிரதிகளைச் சரிபார்த்தும் கொடுக்கவேண்டிய பொறுப்பை எனக்குத் தந்தபடியால் இக் கைங்கர்யத்தில் எனக்கும் கொஞ்சம் பங்கு ஏற்பட்டமுறையில் நான் சில வார்த்தைகள் சேர்க்க வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டதற்கு நான் இணங்கும்படி ஏற்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்களை எனக்கு அதிகமாக நெருங்கிப் பரிசயமில்லாதபோதிலும் அவர்களுடைய மஹிமையைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டிருக்கிறேன். ஒரு ஸமயம் அவர்கள் என் தகப்பனார் (ஸ்ரீமான் G. ராமசந்திரய்யர்) அவர்களைப் பார்ப்பதற்காக திருநெல்வேலியில் எங்கள் கிருஹத்திற்கு வந்திருந்த காலத்தில் தரிசித்திருக்கிறேன். மற்றொரு ஸமயம், நான் குற்றாலத்திற்குப் போயிருந்த போது தர்சித்திருக்கிறேன். என் தகப்

பனாரைவிட என் சிறிய தகப்பனார் (M. ராஜகோபாலய்யர்) அவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் விசேஷ பழக்கமுண்டு. குற்றாலத்தில் ஒரு ஸமயம் எடுக்கப்பட்ட படத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளும் என் சிறிய தகப்பனாரவர்களும் சேர்ந்து உட்கார்ந்திருக்கிறார்கள்.

யோகசாஸ்திர ரீதியாக ஸித்திகள் யாவற்றும் ஆத்மநிலையை யடைய இடைஞ்சல்களென்றே தெரிந்த போதிலும், இக்காலத்தில் ஆஸ்திக்யம் மிகவும் குறைந்து சாஸ்திரங்களில் நம்பிக்கையில்லாத காலத்தில் ஸாமான்ய ஜனங்களுக்கு சிரத்தை புகட்டுவதற்கு மஹான்கள் சிற்சில ஸமயங்களில் அமானுஷமான ஸித்திகளைக் காட்டுவது மிகவும் உபகாரமாயிருக்கிறது. அதனால்தான் ஆதிசங்கர பகவத்பாதர், ஸதாசிவபிரஹ்மேந்திரர் முதலிய அநேக ஆத்மநிஷ்டர்கள் கூட உலகத்தில் ஆஸ்திக்ய வ்ருத்தியை உத்தேசித்து பல அற்புத லீலைகளைக் காட்டியிருக்கிறார்கள். அதே முறையில் ஸ்ரீ மௌனஸ்வாமிகளும் யோக மஹிமையினாலும் மந்திர சக்தியினாலும் எல்லாவற்றையும் ஸாதிக்கலாமென்று யாருமறிய பிரத்யக்ஷமாய் காட்டினதினால், அநேகர்கள் நாஸ்திக்யக்கொள்கையிலிருந்து திரும்பி சாஸ்திரீய வழியில் வந்திருக்கிறார்கள. இம் மஹானின் சரித்திரத்தை வெளியிட்டு பொது மக்களுக்கு பேருபகாரம் செய்திருக்கும் இந்நூலாசிரியருக்கு நம் நன்றியைத்தெரிவித்துக்கொள்ளவேண்டியது நம் கடமையேயாகும்.

ஸ்ரீரங்கம்
5—5—53

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஆசிரியர் முன்னுரை.

ஸ்ரீ மௌனஸ்வாமிகள் என்றும் ஸ்ரீ மௌனானந்தர் என்றும் வழங்கப்பெற்று வந்த ஸ்ரீ சிவ சிதாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் திருக்குற்றாலத்தில் தோன்றிய நாள் முதல் எனது தகப்பனாரும் புதுக்கோட்டை மிட்டாதாரு மான ஸ்ரீ S. சுந்தரமய்யர் அவர்களும் ஏனைய சில அன்பர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் நெருங்கிப் பழகும் பேறுபெற்று அன்று முதல் ஸ்ரீ மௌனஸ்வாமிகளின் மெய்யடியார்களாகி அவர்களையே தம் குருநாதராகக் கொண்டு, அவர்களிடம் அளவற்ற அன்பு பூண்டு, அவர்களிடும் ஆணைகளை அவ்வப்பொழுதே நிறைவேற்றி வந்தார்கள். எங்கள் குடும்பத்தினர் யாவரும் ஸ்வாமி களிடம் அத்தகைய நெருங்கிய பழக்கமும் தொடர்பும் கொண்டு அவரது சிஷ்யர்களாகித் திகழ்ந்தனர். எனக் கும் அப்பெரும் பாக்கியம் கிட்டியதைக் குறித்து இங்கு அறிமுகப்படுத்திக்கொள்ளப் பெரிதும் மகிழ்ச்சியுறு கிறேன்.

ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் உலகிற்கு எடுத்துக்காட்டிய பல அரிய செயல்களையும் அரும் பணி களையும் லீலாவிநோதங்களையும் அடிக்கடி என் தந்தை யவர்கள் என்னிடம் எடுத்துக்கூற யான் கேட்டு இன்புற்

றிருக்கின்றேன். ஸ்ரீ மௌனஸ்வாமிகளைக் குறித்தும் அவர் ஆற்றிய அற்புதச் செயல்களைப் பற்றியும் நம் தமிழ் நாட்டிலும் ஆந்திர நாட்டிலும் அறியாதார் ஒரு சிலரே இருப்பர் என்றால் மிகையாகாது.

ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றியும், அவர் ஆற்றிய அருஞ்செயல்களைப்பற்றியும், அவர்களால் திருக்குற்றாலத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற ஸ்ரீ தத்தாத்ரேய மந்திராலயம் என்னும் மடாலயத்தைக் குறித்தும, அங்கு பிரதிஷ்டை செய்யப் பெற்றிலங்கும் மூர்த்திகளைக் குறித்தும், மற்றும் இதர விசேஷங்களைக் குறித்தும் நம் தமிழன்பர்கள் யாவரும் அறிந்து கொள்ள ஸாதகமான முறையில் ஒரு புத்தகம் வெளியிட வேண்டுமென்று முன்னரே என் தந்தையவர்கள் மனப்பூர்வமாக எண்ணி, அதற்குத் திட்டமும் வகுத்திருந்தார்கள். ஆனால் சிற்சில அசௌகரியங்களின் காரணங்களினால் அவரது கனவு நனவு பெற வழியின்றி அதற்கு வேண்டுவனவற்றைச் செய்ய இயலாமற் போய்விட்டது. பின்பு சிறிது காலத்தில் என் தந்தையவர்களும் நோய் வாய்ப்பட்டு 1942ம் வருடம் ஜனவரி-மீ 2ம் நாள இறைவன் திருவடிநிழலையடைந்து இன்பமனுபவிக்கலானார்கள்.

''தந்தை சொன்மிக்க மந்திரமில்லை'' என்னும் திருவாக்கிற்கொப்ப, என் தந்தையரின் கனவை நனவாக்கக் கருதியும், குருநாதரிடம் யான் கொண்டுள்ள பேரன்பின் ஆதரவினாலும், ஏனைய அன்பர்களின் வேண்டுகோளுக்

கிணங்கியும், ஸ்ரீ மௌனானந்தரைக் குறித்து என் பிதாவின் மூலமும், பின்பு நானே நேரில் ஆதிமுதல் கண்டு களித்தன யாவற்றையும், மேலும் பல அன்பர்களும் அடியார்களும் என் வேண்டுகோளுக் கிணங்கி அறிவித்த பல விஷயங்களையும், சேகரித்துக் கொண்டு துணிவு மேலிட்டு என் சிற்றறிவிற்கு எட்டிய வரையில் இந்நூலை வரைந்து வெளியிடலானேன். குருநாதரின் கருணை இதற்கு ஒத்துழைக்குமாக !

ஸ்வாமிகளின் சிஷ்யர்களில் பலர் அவரது லீலா விநோதங்களையும், பெருமைகளையும் யான் அறிந்தனவற்றைக் காட்டிலும் மிகுதியாகவே கண்டனுபவித்து ஆனந்தித்திருப்பார்கள் என்று கூறுவதற்கு யான் ஈண்டு அஞ்சி ஐயமடையத்தேவையே இல்லை.

இந்நூலை உருவாக்குவதற்கு மனமுவந்து பல விஷயங்களைச் சேகரித்து உதவிய என் அன்பர்களும் நண்பர்களுமாகிய ஸ்ரீமான்கள்:—

ஸ்ரீ போனங்கி ஸோமசுந்தரராவ் காரு—கோவூர்

,, ராஜவரபு நாராயணராவ் காரு ,,

,, M. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், ரிடயர்டு இன்கம்டாக்ஸ் ஆபிஸர், திருச்சி

,, R. S. சங்கரய்யர் அவர்கள், ரிடயர்டு ஜில்லா ஜட்ஜ், கோயம்புத்தூர்

,, K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், ரிடயர்ட்டு ஜில்லா ஜட்ஜ், மதராஸ்

,, M. V. புன்னைய பந்தலுகாரு, வக்கீல், ஓங்கோல்

ஸ்ரீ V. வெங்கடேச்வர அய்யர் அவர்கள்,
ரிடயர்டு வக்கீல், ஆவுடையார்கோவில்

முதலியவர்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனங்களை ஸமர்ப்பணம் செய்து கொள்கிறேன்.

இந்த நூலை என்னுடனிருந்து நல்ல தமிழில் எழுதிப் பணியாற்றித்தந்து உதவிய ஸ்ரீ கேசவபல்லி சேதுராமய்யா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வேண்டுகோளுக்கிணங்கி மனமுவந்து இந் நூலைப் பார்வையிட்டுப் போற்றி மேலான ஓர் 'முகவுரை' யும் ஈந்தருளிய, சென்னை நீதிபதியும் காலஞ்சென்ற ஸம்ஸ்கிருத வித்வான் மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் லக்ஷ்மணஸூரி அவர்களின் புத்திரருமான, "ஸங்கீத கலாநிதி" ஸ்ரீமான் T. L. வெங்கடராமய்யர் அவர்களுக்கு நமஸ்கரித்து எனது மனமார்ந்த நன்றியை செலுத்திக் கொள்கிறேன்.

இந்நூலை பலவாற்றாலும் அரியமுறையில் திருத்தி அச்சேற்றத் தந்து உதவிய, ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பூர்வ ஆச்ரம புத்திரரான, ஸ்ரீமான் R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் M.A.,B.L., அவர்களுக்கும், இந்நூலை அரியமுறையில் அச்சடித்து புஸ்தக ரூபமாக கொடுத்தருளிய ஸ்ரீரங்கம் "ஸ்ரீ வாணீ விலாஸ்" அச்சகத்திற்கும் என் நன்றி என்றும் உரித்தாகும்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்னும் திருக்குறளுக்கொப்ப இச்

சிறு நூலின்கண் மலிந்து கிடக்கும் குற்றங்குறைகளை நீக்கி குணங்களை மட்டிலும் கைக்கொண்டு ஆதரிக்குமாறு அன்பர்களையும் வாசகர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பர்கள் அனைவரும் திருக்குற்றாலத்தில் ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "தத்தாத்திரேய மந்திராலயத்திற்கு" நேரில் விஜயம் செய்து, ஆங்கு பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் மூர்த்திகளைத்தரிசித்து பிரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு மடாலயத்தைச் சார்ந்த "ஸித்தேச்வரி கிரந்தாலயம்" என வழங்கப்பெறும் வாசகசாலையிலுள்ள பல அரிய பெரிய நூல்களையும் வாசித்துப் பேரின்பம காணவேண்டுமென்று இறைஞ்சுகின்றேன்.

ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளைக் குறித்து ஏனைய சிஷ்யர்களும் அன்பர்களும் இன்னும் அதிகமாய் அறிந்த வேறு அரிய விஷயங்களை அனுப்பினால் அடுத்த பதிப்பில் இத்துடன் இணைத்து வெளியிட ஸாதகமாகும் என்பதை பணிவுடன் அறிவித்துக்கொண்டு "பிறவிக்கடல் நீந்திக் கரையேறி அடியேன் உய்யப்போவதோர் சூழல் சொல்லே" என்று இறைவன திருவடித் தாமரைகளை அந்தரங்கத்தே நினைத்து இறைஞ்சுகின்றேன்.

குருநாதரின் கருணை ஓங்குக!

சுந்தரவிலாஸ்
புதுகிராமம்
தூத்துக்குடி
6—5—53

S. வெங்கடசுப்பிரமணிய அய்யர்



எஸ். வெங்கடசுப்ரமணிய அய்யர்

[ஆசிரியர்.]

# புகழ்மணிமாலை.

## விநாயகர் துதி.

திக்கெலாம் புகழ் த்ரிகூடசைலத்தை
மிக்க அன்போடு மேவிடும் மானிடர்
விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர்
பக்கம நின்று பாவிப் பணிவோம யாம்.

---

## ஸ்ரீ மௌனாநந்த ஸ்வாமிகள் துதி.

நீதியே நிமலா நின்மலச் சுடரே
நிவர்த்தியின் ரூபமாய் நின்றோய்
ஜோதியே செல்வா சீர்நிறை மௌன
ஸ்வாமியே சிறந்த நின் சரிதம
ஓதி யான் மகிழ உண்மையாய் நினைந்தேன்
உன் மனங் கசிந்து நீ யுவந்து
ஆதியே அடியேன் அறிவை நீ தந்து
அன்புடன் காப்பதுன் அருளே.

---

## சிவசிதானந்தர் போற்றித் திருவகவல்.

அளவிலா உண்மை யறிவா னந்தத்
தெழிலுறு மோன இன்பனே போற்றி
இலங்குதா மரையிற் களங்கமில் உள்ளத்துச்
சிவசிதா னந்த தெய்வக் குரவ
திரிகூட மலைவாழ் செல்வனே போற்றி 5

சித்தேசுவரித் திருமலி யிருக்கை
வைத்தாய் போற்றி வாழ்வே போற்றி
திரிபுரம் எரித்தோன் திருமால் அயனென
உருவளர் ஒருவ உயர்ந்தாய் போற்றி
யோகானந்த அச்சுதானந்த
ஆசான் மரபில் அமைந்தாய் போற்றி
அம்மை வழிபா டன்போ டாற்றும்
இம்மையும் அருளும் இயல்பா போற்றி
பொறையுரு விளங்கும் புகழே போற்றி
நிறையன் புடையோர் நேயா போற்றி
ஆசை யெல்லாம் அகன்றாய் போற்றி
இராசராசேச்சுரி இரீஇயாய் போற்றி
மறையீறு தெளிந்து மாண்புற வுணர்த்தும்
துறைநீடு சென்ற துறவோய் போற்றி
கற்றோய்த் துடுத்த கனிவே போற்றி
பற்றிலார் பரவும் பண்பா போற்றி
இசைத்திறம் நுகரும் இயல்பா போற்றி
யாவரும் உறப்பெறும் இனியாய் போற்றி
இரசவாதத்தும் யாகயோகத்தும்
திறலாய் போற்றி சிறந்த அச்சுதன்னி
வழிமுறை போற்றி தெளிவுறு சோதி
நன்னாள் தோன்றிய நல்லாய் போற்றி
எல்லாத் துயரும் இசையா தறுத்த
சொல்லாய் போற்றி நின்னடி
நல்காய் போற்றி நாளும் மகிழ்ந்தே.

ஓம் ஓம் ஓம்.

* போற்றி 21 உருக் காண்க.

## திருக்குற்றாலச் சிறப்பு.

பாரெலாம்பணியும் பாரதகண்டத்தில்
ஊரெலாம்சிறந்து செழிப்புற்றோங்கித்
தென்னிந்தியாவின் திலகமாய்விளங்கும்
பண்ணுதற்கரிய பொதியமலைதிகழ்
புண்ணியதேசம் புனிதர்கள்போற்றுவார்
விண்ணவராங்கு விழைந்துதங்குவார்
இவ்வளநாட்டின் இன்புறுபாகமாய்த்
திகழ்ந்துபொலிவது திருக்குற்றாலம்.
ஆர்த்திடுகடலினை ஆபோசனமாய்
பார்த்ததும்முன்னாள் பருகியபெரியார்
கும்பசம்பவர் குறித்ததலமிது.
உம்பரும்பிறரும் ஒருங்குவியக்க
அகத்தியர்அன்று அன்புமேலீட்டால்
ஜகத்ரக்ஷகராய்ச் சிறந்திடுவிஷ்ணுவைக்
குறுகியஇலிங்கமாய்க் கொண்டதிந்நாடு.
பெருமைபொருந்திய அகத்தியர்புகழை
எவ்விதம்எளியேம் இயம்பக்கூடும்.
அமிழ்தினும்இனித்தாய் அங்கங்குளிரும்
தமிழ்மொழிதனக்குத் தனித்தஇலக்கணம்
உதவியமுனியிவர் உயர்ந்தவரிவரே.
பதவிகளனைத்தையும் பாரினர்க்களிப்பவர்
அறம்பொருளின்ப வீடெனஅறிஞர்
திறம்படக்கூறிடும் திடமுளஉண்மையாம்
சரியை,கிரியை யோகம்,ஞானமாம்
அரியசோபான மார்க்கமாய்அமைந்த

உண்மைவழியில்   உயர்ந்துசென்றவர்
எவருமேயிந்நிலம்   இன்புற்றுறைகுவார்.
அதனையறிந்த   ஆகாயகங்கை
பெரியார்பூசைகள்   புனிதமாய்நடக்கவும்
மாசுகளொழித்து   மானிடர்மகிழவும்
முழங்குபேரொலியொடு   மும்முரமாக
வானின்றிழிந்து   மலைதனில்வழிந்து
வீழும்வீழ்ச்சிகள்   வியக்கத்தக்கன
மக்கள்யாவரும்   மகிழ்ந்திந்நீரில்
பருவகாலங்களில்   பன்முறைதோய்வார்.
பெருகிடும் இன்பால்   புளகங்கொள்வார்.
இந்நீர் விசேஷம்   இன்னுங்கேண்மோ
அருஞ்சுவையமைந்த   அதனின் வளத்தால்
நிலவளமோங்கி   நிலவுகின்றது
நீர்வளம்நிலவளம்   நிறைந்தஇந்நாடு.

---

## ஸ்ரீ தத்தாத்ரேய மகிமை

சீர்பெருகும் தவம்முயலும் செம்மைஉளான் அத்திரியென்
சிறந்தோன் வாழ்க்கை
ஏர்பெருகும் மனைத்துணையாம அநசூயை எனும்பெயரின்
இனியாள் கற்பின்
பேர்பரவத் தன்உரிமை பெற்றானை நாள்தோறும்
பெரிது (உ)வந்து
பார்பரவப் படுவாளாய்ப் பரிவழி பாடுகள்செய்
பணியின் மிக்காள். ॥ க

மனைவாய்மை தரும்சிறப்பின் மாமுனிவன் புகழ்உலகில்
மலியக் கண்டே
அனைவாய்மை நாரதன்அங்(கு) அயன்முதலா மூவருக்கும்
அறிவித் தானாய்ப்
பினைஎதும் அவர்செய்யா ததுகண்டே அவர்மனையார்
பிறங்கு கோயில்
தனைஏகி அவர்உள்ளம் பொருநிலைமை தழைவிக்கத்
தாம்நி னைந்தார். ॥ ௨
நினைந்தனரால் அவள்பெருமை சிதைத்திடுவான் தம்
நெருங்கிச் சென்று [கணவர்
புனைந்தனரால் அவ்வண்ணம் புரிவதுதான் அவ்வார்த்தை
போற்றிக் கொண்டு
புனைந்தனரால் தவவேடம் போயினரால் மூவருமே
பூத லத்தே
நினைந்தனவாம அவையெல்லாம் நொடிப்பொழுதில் முடித்
நிறைந்த கற்பின் [திடுமா]॥ ௩
வாய்மையுறும் அநசூயை அடைந்துகரத் துறுகலத்தின்
வழங்கு கென்று
தூய்மைசில வுறுவாள்தன் ஈகைதனை எதிர்வந்து
தொடங்கு காலை
ஆயபெரும் வஞ்சகத்தின் அடைந்தவர்ஆ தலின் அவள்
அவனி யின்மேல் [தான்
ஏயபிறப்(பு) எய்தியநாள் இருந்ததனி மெய்தோற்றத்(து)
இசைந்து வந்து ॥ ௪
ஈந்திடவே கொள்வேமால் எனஅடிகள் விளக்கியநீர்
தெளிக்க ஏற்றுப்

போந்தவர்மூ வரும்மூன்று குழந்தைவடி வினர்ஆகிப்
பொலிந்து தோன்ற
ஏந்தினளால் மடித்தலத்தே இருத்தினளால் முலைப்
இனிதா ஊட்ட [பாலும்
மாந்தினரால் வஞ்சகத்தின் மறையாளர் அதுகண்டார்
மனையார் மூவர் || ரு

## வேறு

கண்டனர்ம ருண்டனர்க லங்கினர்க ருத்தே
விண்டனர்த வத்தின்வரு மேன்மையைவி யந்து
கொண்டனர்தங் கைதலைகு வித்தனர்சி றந்த
அண்டவர்எ லாம்புகழ அணுகினர்வந் தாங்கே. || சா

## வேறு

ஆங்கு வந்தஅ நசூயைதன் அருள்வர அரற்றி
ஈங்கு வந்தஇம் மூவர்எம் தலைவரே இனியாய்
ஆங்கு நின்திறல் உயர்வினில் எதிர்மனம் உறுத்த
யாங்கள் சொல்வழி இசைந்தனர் பிழைஎலாம் எமக்கே ||எ
பிழைத்த வந்தமைப் பொறுத்தருள் பெருமையும் உடை
இழைத்த வஞ்சகம் மறந்திடாய் மறந்(து)எம் கணவர்[யாய்
மூனைத்தி ருப்பெரும் வடிவுதாம் முழுமையும் விளங்கி
அனைத்தி டர்எலாம் அகன்றுயாம் மகிழ்உற அருளாய்|| அ
என்று வேண்டலும் இசைந்தனள் எழுந்தனர் அவர்தாம்
துன்று கற்பினில் சோர்விலார்க்(கு) எளிமையாம் துணை
அன்றி ஈதும்ஓர் வியப்(பு)இலை அவனியில் அரிய(து)[யே
அன்றி ஈண்(டு)உஞற் றெளிதலாத் தவத்(து)
இருவோரும்|| கூ

## வேறு

முன்நின்ற மூவரையும் பலமுறையும் முறைமை
வணங்கி முன்பால் [யொடு
இல்நின்ற நீயிர்எமக்(கு) ஒருமகவாய் இசைந்துவர
எண்ணம் மிக்கேம்
முன்நின்றீர் அருளீரால் எனவேண்ட மூவுருவும்
முதல்ஒன் றாகிக்
கல்நின்ற மனத்தவரும் கசிந்துருகக் காட்சிதரும்
கனிவென் அம்மா. ‖ ய

ஓர்உடலம் இருதாளின் மும்முகமும் அறுகரமும்
ஒருங்கே தோன்றி
ஏர்உருவம் விளங்கும்இரண் டிருமறையும் ஞமலிகளாய்
இசையக் கொண்டு
சீர்உருவம் திகழ்தரவும் சிறப்பின்வரு தத்தாத்தி
ரேயர் என்ற
பேர்உலகம் விளங்கவரு பெம்மானை வணங்கிஇவண்
பெரிது வாழ்வாம். ‖ யக

---

## தண்டாயுதபாணி ஸ்துதி

அத்துவிதக் கடலிலே முக்தி நிலை மார்க்கத்தில்
ஆதாரமான சிவமே
அரியாரா தியர்கட்கு மெட்டாத வஸ்துவே
அம்பர நிறைந்த வொளியே
வித்து ஜன தெய்வமே சிவகோடி ராஜிக்கும்
மேலாகி நின்ற பரமே

வேதாந்த நாதாந்த யோகாந்தசின்மய
வேத நிறை ஞான வெளியே
சித்திக்கு வன்பருள் மருத்துவயுலகெலாஞ்
சிறந்த சிவ பரிபூரணா
தேவாதி தேவர் நின்றிருவடியைக் கண்டிடச்
செய்த பலன் யாதறிகிலேன்
தத்துவமணியாகியெழுவகைத் தோற்றத்திற்
றுமாகி நின்ற குமரா
தத்தகிரிநாத திரிகூடாசலவளர்
சிவசிதானந்த தண்டாயுதபாணியே.

---

## ஸித்தேச்வரி ஸ்துதி

பூரணி மனோன்மணி தயாபரி பராபரி
புராதனி தராதல மெலாம்
பொற்புட னளித்த சிவசிதானந்த ப்ரியே
சித்தேச்வரி மகாமாயி யென்றே
மௌனியின் தமிழ் சரிதை பாடி முறையிடுவதுன்
செவிதனக் கேற விலையோ?
தேகி யென்று னுனக் கியவகையில்லையோ?
தீனரட்சகி யல்லையோ?
குருநாதனை யிழந்து குருவின்றி பரிதவிக்கும் மக்களை
யாதரிப்பவர்கள் யார் என்று சொல்லாயே
அன்னையே யின்னம் பராமுகம் பண்ணாம
லடியேனை ரட்சிப்பாயே.

---

# குரு ஸ்துதி

மைவிடாதெழ நீலகண்ட குருவே விஷ்ணு
வடிவான ஞான குருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கள் தோறும் நின்ற குருவே
கைவிடாதே யென்ற அன்பருக் கன்பாய்க்
கருத்தூ ணர்த்தும் குருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறிலாச்
சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவசிதானந்தமே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்து
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 19 | எனைய | ஏனைய |
| 37 | 10 | கேழ்க்கவே | கேட்கவே |
| ,, | 19 | இமயமலைப் | இம்மலைப் |
| 39 | 9 | துடர்பும் | தொடர்பும் |
| 42 | 11 | ஜயிப்பூர் | ஜயபூர் |
| 46 | 24 | கேள்யுற்ற | கேள்வியுற்ற |
| 57 | 19 | கல்சிலையில் | கற்சிலையில் |
| 63 | 6 | V.S. சேவுகபாண்டிய தேவர் | V.T.S. சேவுக பாண்டிய தேவர் |
| 107 | 6 | கோறினர் | கோரினர் |
| 137 | 5 | புத்திரபேரு | புத்திரப்பேறு |
| ,, | 21 | பார்த்தால் | பார்த்ததில் |
| 145 | 12 | விருதமாக | விரதமாக |
| 207 | 7 | நாணிவாரிபாளையம் | நானெவாரி பாளையம் |
| | 8 | ஆதிசேஷ | ஆதிசேஷ |
| | 10 | வெங்கயம்மா | வெங்கம்மா |

# பொருள் அடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| ஸமர்ப்பணம் | |
| Foreword | |
| முன்னுரை | |
| ஆசிரியர் முன்னுரை | i |
| புகழ்மணிமாலை | vi |
| பிழை திருத்தம் | xv |
| பொருள் அடக்கம் | xvi |
| அத்தியாயம் | |
| **1.** பூர்வாசிரமம். | |
| 1. ஜனனம் | 1 |
| 2. இல்லறம் | 4 |
| 3. வீடு விடல் | 6 |
| 4. இல்லாள் சிறப்பு | 7 |
| **2.** ஸந்யாஸமும் யாத்திரையும். | |
| 1. துறவியாதல் | 9 |
| 2. மௌன விரதம் | 11 |
| 3. ஸ்தல யாத்திரை | 13 |
| **3.** மூகாம்பிகா தர்சனம். | |
| 1. அம்பிகையின் கருணை | 17 |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| 2. க்ஷேத்திர மஹிமை | 20 |
| 3. ஆச்சர்ய நிகழ்ச்சி | 24 |
| **4. திருக்குற்றல வாஸம்.** | |
| 1. திருவண்ணுமலைப் பெரியார்கள் | 26 |
| 2. குற்ருலம் வருகை | 29 |
| 3. மிட்டாதார் ஸ்ரீ சுந்தரம் அய்யர் | 32 |
| 4. ஸ்ரீ மடாலயம் ஸ்தாபனம் | 34 |
| 5. சேத்தூர் ஜமீன்தார் | 38 |
| **5. ஸ்ரீ தத்தாத்திரேய மந்திரம்.** | |
| 1. கல் நாட்டு விழா | 40 |
| 2. ஸ்ரீ தத்தாத்ரேய பிரதிஷ்டை | 42 |
| 3. ஸ்ரீ தத்தாத்ரேயர் வரலாறு | 45 |
| 4. ஸ்ரீ தத்தாத்ரேய மஹிமை | 48 |
| **6. தேவாலய பிரதிஷ்டைகள்.** | |
| 1. ஸ்ரீ ராஜராஜேசுவரி பிரதிஷ்டை | 50 |
| 2. ஸ்ரீ ஸீதாராமாதிகளின் பிரதிஷ்டை | 52 |
| 3. வேதபாராயண மஹிமை | 55 |
| 4. ஸ்ரீ ஸித்திவிநாயகரின் பிரதிஷ்டை | 57 |
| 5. ஸ்ரீ ஷண்முகர் பிரதிஷ்டை | 58 |
| 6. ஸ்ரீ சாஸ்தா பிரதிஷ்டை | 60 |
| **7. ஸ்ரீ ஸித்தேச்வரி பீடம்.** | |
| 1. பீட ஸ்தாபனம் | 61 |
| 2. ஸ்ரீ ஸித்தேச்வரி கிரந்தாலயம் | 63 |

விஷயம் பக்கம்

3. பழனி கும்பாபிஷேகம் 65
4. கரிவலம்வந்தநல்லூர் 67
5. மற்ற பிரதிஷ்டைகள் 68
6. பாண லிங்க வரலாறு 69
7. கடைசி பிரதிஷ்டை 70

**8.** விதேஹ முக்தி.

1. அந்திய காலம் 74
2. ஸ்ரீ ஸ்வாமிகளின் சாஸனம் 78
3. கஸ்தூரி கிருஷ்ண ராவ் 81
4. லிங்க பிரதிஷ்டை 82

**9.** ஸ்ரீ ஸ்வாமிகளின் மஹிமை.

1. ஸ்வபாவம் 84
2. சக்ர ரேகை 86
3. மூலிகைப் பிரயோகம் 87
4. பிக்ஷா விநோதம் 91
5. பூஜா வைபவம் 95
6. நவராத்திரி உற்சவம் 99
7. தீர்த்தப் பிரஸாதம் 101

**10.** ஸ்வாமிகளின் யோகசக்தி.

1. விசித்திர நிஷ்டை 102
2. அறிவூட்டல் 106
3. வீண் ஆசை 108

விஷயம் பக்கம்

4. ஸத்ய ஸங்கல்பம் 110
5. பலவிடம் தோன்றல் 111
6. திவ்ய திருஷ்டி 112

**11.** சில லீலைகள்.

1. கருணை வள்ளல் 114
2. பஞ்சலிங்க தர்சனம் 117
3. கலவி சுப்பராய செட்டியார் 122
4. காப்பு முனி 123
5. ஏவல் கதி 125
6. பக்த பராதீனர் 128
7. சில விசித்திர ஸம்பவங்கள் 130

**12.** சில முக்கிய பக்தர்கள்.

1. ஸர். எஸ். ஸுப்பிரமண்ய அய்யர் 133
2. சாண்டூர் மஹாராஜா 136
3. பத்ராசலம் ராஜா 138
4. என்ஜினீயர் ராமஸ்வாமி அய்யர் 139
5. என்ஜினீயர் ராமசந்திர அய்யர். 141
6. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். 143
7. ஸ்ரீ தேங்காய் ஸ்வாமிகள் 145
8. செங்கோட்டை ஸ்வாமிகள் 146
9. ஸங்கீத வித்வான்கள் 148

**13.** இதர மதஸ்தர்கள்.

1. சென்னை ஜைனுல் அவுதீன் 150

| விஷயம் | பக்கம் |
|---|---|
| 2. ராமநாதபுரம் மஹமதியர் | 151 |
| 3. கவர்னர் பென்ட்லண்டு துரை | 154 |
| 4. J. C. மெலோனி I.C.S. | 157 |

**14.** சில பக்தர்களின் அனுபவங்கள்.

| | |
|---|---|
| 1. M. சுப்ரஹ்மண்ய அய்யர் | 158 |
| 2. A. S. K. அய்யங்கார் | 167 |
| 3. A. ராமஸ்வாமி அய்யர் | 171 |
| 4. K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் | 173 |
| 5. R. S. சங்கரய்யர் | 182 |
| 6. V. N. விச்வநாத ராவ் | 185 |
| 7. கொண்ட கோட்டய்யா | 186 |
| 8. L. S. பார்த்தஸாரதி அய்யர் | 191 |

**15.** ஸ்ரீ ஸ்வாமிகளின் பொன்மொழிகள்.

| | |
|---|---|
| 1. பற்றுதலின் தன்மை | 192 |
| 2. வைராக்கியம் | I93 |
| 3. நித்திய ஸுகம் தேடு | 194 |
| 4. உலக ஸ்வபாவம் | 196 |
| 5. தனக்குத் தானே துணை | 198 |

**16.** குருபக்தி.

| | |
|---|---|
| 1. குரு அவசியம் | 200 |
| 2. குருவே சரணம் | 204 |

## அனுபந்தங்கள்


*விஷயம்* *பக்கம்*

1. வம்சாவளி.
   A. *குருபரம்பரை* 207
   B. *ஜநக குடும்பம்* ,,
   C. *ஸ்வீகார குடும்பம்* 208

2. தத்தாத்ரேய மந்திர உத்ஸவாதிகளின் விபரம் 210

3. தத்தாத்ரேய ஸ்தோத்ரம் 213

4. ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸஹஸ்ர நாமாவளி 216

5. ஸ்ரீ மௌனானந்த அஷ்டோத்தரசத நாமாவளி 255

6. குருபாதுகாஷ்டோத்தரசத நாமாவளி 260

7. கீர்த்தனைகள் 265

# படங்களின் அட்டவணை.


பெயர் — பக்கம்

1. ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகள்
2. S. சுந்தரம் அய்யர்
3. S. வெங்கடஸுப்ரமண்ய அய்யர்
4. ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் 10
5. ஸ்ரீ பிரஹ்மானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் 16
6. ஸ்ரீ மூகாம்பிகா தேவி 17
7. ஸ்ரீ தண்டாயுதபாணி 34
8. ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாசாரியார் 35
9. ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ ஸச்சிதானந்த
   சிவாபிநவ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் 36
10. ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் (1937) 37
11. ஸ்ரீ தத்தாத்ரேய மூர்த்தி 50
12. ஸ்ரீ ராஜராஜேச்வரி 51
13. ஸ்ரீ ஸீதாராமர் (மூலவர்) 52
14. ஷை (உற்சவர்கள்) 53
15. ஸ்ரீ நாங்குனேரி வாநமாமலை தோதாத்ரி
    மடம் 25-வது பட்டத்தை அலங்கரித்த

பெயர் பக்கம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீ கலியன்
இராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் 56

16. ஸ்ரீ ஸித்திவிநாயகர் 57

17. ஸ்ரீ ஷண்முகர் 58

18. R. S. சங்கரய்யர், Retd. Dt. Judge,
கோயம்புத்தூர் 59

19. பட்டம் பெற்றவர்கள் 62

20. ஸ்ரீ V. N. விச்வநாத ராவ் தம்பதிகள்
Retd. Dt. Collector, & Member,
Advisory Board, Dattatreya Mandiram 76

21. ஸ்ரீ கொண்டா கோடயா, B. A., B. L.
Advocate, Madras & Member,
Advisory Board, Dattatreya Mandiram. 80

22. ஸ்ரீ கஸ்தூரி கிருஷ்ணராவ்,
Agent & Member, Advisory Board,
Dattatreya Mandiram 81

23. ஸ்ரீ. ஸ்ரீ. சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்
என்ற மௌனானந்த ஸ்வாமிகள் (1942) 82

24. ஸ்ரீ நீலகண்டேச்வரர் 83

25. சாண்டூரில் ஸ்ரீ ஸ்வாமிகளின் பால்ய தோற்றம் 144

26. ஸ்ரீ பாலசந்திர கணபதி ஸ்வாமிகள் என்ற
ஸ்ரீ தேங்காய் ஸ்வாமிகள் 145

|| श्रीगुरुभ्यो नमः ||

ஸ்ரீ சிவ சிதானந்த குருவே துணை.

# ஸ்ரீ மௌனாநந்த ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்.

## அத்தியாயம் 1.

## பூர்வாசிரமம்.

### 1. ஜனனம்.

இப்பரந்த பாரில் அரிதெனக் கருதப்படும் மானிடப் பிறவியடைந்து, ஒப்பிலா ஆனந்தநிலை எனப் படும் பேரின்ப நிலையை எய்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங் களுள் முதன்மூன்றையும் கடந்து நான்காவதாம் வீடு எனப்படும் முக்தி வீட்டையடைய வேண்டியது, ஒவ்வொருவருக்கும் மிகமிக அவசியம் என்று வேத சாஸ்திரங்கள் அறைகூவுகின்றன. எனினும் உலக மக்களிற் பெரும்பாலோர் ஸம்ஸாரம் எனும் பெருங் கடலில் வீழ்ந்து, மூவாசைகளிலும் பற்றுற்று அவதிக் காளாகின்றனரேயன்றி, மோக்ஷ வீட்டையடைய நினைப் பார் ஒரு சிலரே யாவர். உலக பாசங்களால் கட்டுண்டு

உழலும் மக்கள் "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா; வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா", என்பதற்கொப்ப உலகிலே தோற்றமளித்திடும் யாவும் நிலையற்றன என்று நன்கறிந்திருந்தும், ஆத்ம ஞான சாதனையை யடைய முயற்சியார்கள். அஞ்ஞான இருளில் வாஸம் செய்யும் பயிற்சியின விளைவால், பரமாத்மஜோதி என்னும் "பரஞ்ஜோதி" நிலையை தரிசிக்க இயலார்கள்.

என்றாலும் இவர்கள் எல்லோரும் அந்நிலையை யடைவது எவ்வாறு? மேலும் இதர பாமர மக்களுக்கும் அந்நிலையைக் காட்டியருளத் தம் வாழ்வு யாவற்றையும் தியாகம்செய்யும் மஹாத்மாக்கள் ஆவது எவ்வாறு? என்று இடையறாச் சிந்தனையில் ஆழ்ந்து அப்பேர்ப்பட்ட அதி உன்னத நிலையடைந்து ஈசனது அம்சம் எனத் தகும் பரமாசாரியர்களாகவும், மார்க்கதர்சிகளாகவும் இயங்கும் மஹானுபாவர்கள் அன்றும் இன்றும் எத்தனையோ பேர். அவர்களுள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த திருக்குற்றாலத்தே "ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரம்" எனப்பெயர்படும் மடாலயத்தை நிர்மாணித்து அஃது ஸ்ரீ ஸித்தேச்வரி பீடாதிபதிகளாக வீற்றிருந்த ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஒரு மஹானுபாவராவர். இவரது பூர்வாசிரம வரலாறு பின் வருமாறு.

புண்ணியபூமி யென்றும், திரிலிங்க க்ஷேத்திர மென்றும் வழங்கப்பெறும் ஆந்திர நாட்டிலே, புனித நதிகளாம் கிருஷ்ணா, கோதாவரி தீரத்திலே, குண்டூர்

ஜில்லாவில் பாபட்லா தாலுகாவைச் சார்ந்த சிராலாவை யடுத்துள்ள நூனெவாரிபாலெயம் உப்பு குண்டூர் என்னும் சிறு கிராமத்திலே, ஆந்திர ஆறுவேல நியோகி பிராஹ்மண வகுப்பில் ஸ்ரீ அச்சுதன்னி பாபணய்யா என்ற ஓர் உத்தமர் தம் தருமபத்தினி அச்சுதன்னி ஸீதம்மா என்னும் உத்தமியுடன், அறநெறி பிறழாமல் இல்வாழ்க்கை நடத்திவந்தார். அந்த ஸதிபதிகளுக்கு, ஆதிசேஷுடு, ராமன்ன, சிவய்யா, சுப்பன்ன என்னும் நான்கு ஸத்புத்திரர்களும், பன்னீடிபாடி ஸீதம்மா என்னும் ஓர் புத்திரியும் பிறந்தனர். இவர்களுள் அச்சுதன்னி சிவய்யா என்பவரே நமது ஸ்ரீ சிவசிதாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் எனப்படும் ஸ்ரீ மௌனாநந்த ஸ்வாமிகள் ஆவார்.

ஸ்ரீ சிவய்யா அவர்கள் சுமார் கி. பி. 1868-ல் அவதரித்தார் எனக் கருதப்படுகிறது. இவரது ஜன்ம நக்ஷத்திரம் ஸ்வாதி. இவர் சிறுபிராயத்திலேயே, பாபட்லாவிற்கும் சிராலாவிற்கும் இடையேயுள்ள பந்தினபள்ளி கிராமத்தில் மக்கட்பேறின்றி வசித்துவந்த ஸ்ரீ அச்சுதன்னி லக்ஷ்மிநரஸய்யா, ஸ்ரீமதி அச்சுதன்னி ஸுந்தரம்மா என்னும் கௌண்டின்ய கோத்ர தம்பதிகளால் தத்து புத்திரனாய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவருக்கு உயர்தரக் கல்வி அதிகமாய் பயிற்றுவிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. ஆனால் இளமை முதற்கொண்டே, இவர் எப்பொழுதும் தெய்வ சிந்தனையிலும், தத்துவ விசாரத்திலும் ஈடுபட்டிருந்தார்களாம்.

## 2. இல்லறம்.

தக்க பருவம் வந்ததும் ஸ்ரீ சிவய்யாவுக்கு சீராலாவில் கௌசிக கோத்திரத்தைச் சார்ந்த ஸ்ரீ பாபய்யா பந்துலுவுக்கும், ஸ்ரீமதி வீரம்மா என்பவருக்கும் பிறந்த ஸுகுணசாலியான ஸ்ரீமதி காமேச்வரம்மா என்னும் நாரீமணியைப் பாணிக்கிரஹணம் செய்துவைத்தனர். இத்தம்பதிகள் மிகுந்த அன்புடன் மலரும் மணமும் போலும், உடலும் உயிரும் போலும், அறநெறியில் சற்றும் வழுவாது இல்லறம் நடத்திவந்தனர். இவர் சுமார் 1894-ம் வருஷம் இராஜமஹேந்திர புரத்திற்குச் சென்று அங்கு வழக்கறிஞர் தொழிலாற்றிவந்த கனுபர்த்தி ஸ்ரீராமுலு என்னும் தனவானின் ஆதரவிலும் பிறகு டெபுடி தாசில்தார் பதவி வகித்துவந்த தம் பந்துவும் மித்ரரும் ஆகிய ஸ்ரீ தவளூரி உமாமஹேச்வர ராவ் என்பவரின் பேராதரவிலும் சிறிதுகாலம் இருந்து வாழ்க்கை நடத்திவந்தார்.

ஸ்ரீ தவளூரி உமா மஹேச்வர ராவ் அவர்களின் தருமபத்தினி இறைவன் திருவடி சேர்ந்தமையாலும், அன்னார் குடும்பத்தையும் மக்கள் பிரஸாதராவ் (பின்னால் Deputy Commissioner of Excise), மற்றும் ஏனைய மதலையர்களையும் கவனிக்கப் போதுமான திறமைவாய்ந்தவர்கள் இல்லாமையின் காரணத்தாலும், ஸ்ரீ சிவய்யா அவர்களே அக்குடும்பத்துடன் கலந்து யாவற்றையும் முனைந்து கவனிக்க வேண்டியதாயிற்று. இதனால் இவ்விருகுடும்பத்தினருக்கும் அதிகப் பற்றுதலும் பாசமும் ஏற்பட்டது.

சிறிது காலம் சென்றதும், தவளூரி உமா மஹேச்வர ராவ், ஸ்ரீ சிவய்யா அவர்களை இராஜமஹேந்திரபுரத்தில் நெல் வியாபாரம் செய்துவந்த ஸ்ரீ மத்துல தாதய்யா என்பவரிடம் அறிமுகப்படுத்தி ஓர் குமாஸ்தாவாகத் தொழிலாற்றிவர ஏற்பாடுசெய்தார். ஸ்ரீ சிவய்யா வேலைக்கமர்ந்த நாள்முதல் தம் எஜமானனுக்கு மிகுந்த திருப்திகரமான முறையில் உண்மையுடன் உழைத்து வியாபாரத்தைப் பெருக்கி லக்ஷக்கணக்கில் பொருளீட்டிக் கொடுத்தார். 1896-ல் இவரது வாய்மையும் தூய்மையும் கலந்த உழைப்பைக்கண்டு, இவரது எஜமானன் இவருக்கு ஊதியத்தில் தகுந்த அளவுக்கு உயர்த்திக்கொடுத்தார்.

இவருக்கு தெய்வ ஸங்கற்பத்தினால் ஓர் ஆண்மகவு பிறந்தது. அக்குழவிக்கு அச்சுதன்னி நாகபூஷணம் என்ற நாமகரணம் செய்தார். பிறகு சிறிதுகாலம் சென்று இரு பெண்மக்களும பிறந்தனர். அவர்களுக்கு லக்ஷ்மி நரஸம்மா என்றும், ஸௌந்தரம்மா என்றும் பெயரிடப்பட்டது. மக்கள் எல்லோரும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து, பெற்றோருக்கு உற்றவராய் இருந்துவந்தனர்.

ஸ்ரீ சிவய்யா அவர்கள் 1903-ஆல தம் மூத்தகுமாரி ஸ்ரீ லக்ஷ்மி நரஸம்மாவை ஸ்ரீ போணங்கி ஸோமஸௌந்தரம் பந்துலு என்பவருக்கு விவாஹம் செய்வித்து அத்துடன் தம் ஏக புத்திரனாகிய நாகபூஷணத்திற்கும் உபநயனம் செய்தார்.

ஸ்ரீ சிவய்யா தூய்மை மிகுந்த உள்ளமும் உள்ளக்

கனிவும், பிடிவாத குணமும் படைத்தவர். இவர் ஓர் பெரிய தேவீ உபாஸகர். தேவீ வழிபாடு காலங்களில் பெருவாரியாய் அடியார்கள் வந்து, வரிசையில் நின்று தேவியைத் தொழுது, இவரிடம பிரஸாதம் பெற்றுச் செல்வது வழக்கம். ஸ்ரீ சிவய்யா அவர்களுக்கு நல்ல அறிவும் ஆற்றலும் உண்டு. இனிய குரலும், இசையறிவும் மிகுதியாய் உடையவர். நல்ல ரசிகர். அதனால் இவர் இராக்காலங்களில் கூட்டங் கூட்டி இராமாயணம், மஹாபாரதம் முதலிய பிரபந்தங்களைக் கதா காலக்ஷேபங்களாகவும், சொற்பொழிவுகளாகவும் நிகழ்த்து வது வழக்கம்.

## 3. வீடு விடல்.

ஒருநாள் ஸ்ரீ தவளூரி உமா மஹேச்வர ராவ் அவர்களின் மக்கள் யாவரும் கோதாவரியில் நீராடிக்கொண்டிருக்கையில் எதிர்பாராதவிதமாய், குழந்தைகளில் ஒன்று வெள்ளத்தில் தவறி வீழ்ந்து நீரில்மூழ்கிவிட்டது. இத்துக்ககரமான செய்தியைக் கேள்வியுற்று ஸ்ரீ சிவய்யா பெரிதும் வருந்தி, ஆறாத்துயரிலாழ்ந்தார்.

இஃது இவ்வாறிருக்கையில் ஸ்ரீ சிவய்யா தம் மூத்த குமாரி லக்ஷ்மி நரஸம்மாவை அன்னார் கணவர் இல்லத்தேயிருந்து தம் வீட்டிற்கழைத்துவர நேரிட்டது. வழியில் கம்பஞ்சத்திரம் என்ற ஓர் கிராமம் உண்டு. அங்குள்ள சத்திரத்தில் யாத்திரிகர்கள், வைராகிகள், பரதேசிகள் மற்றும் ஏனைய வழிப்போக்கர்களும் தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கம். ஸ்ரீ சிவய்யா அவர்களும் தம் புதல்வி

யுடன் அங்கு தங்கியபொழுது யாரோ பெரிய மஹான் போன்ற வைராகியொருவரைச் சந்தித்து சம்பாஷிக்க நேர்ந்ததாகவும், அதிலிருந்தே இவரது மனதில் சிறிது மாற்றம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

சின்னாட்கள் கிரமித்து, அதாவது சுமார் 1906-ஞ டிசம்பர் மாதத்தில், ஸ்ரீ சிவய்யா அவர்கள் ஓர் நள்ளிரவில், யாவரும் வீட்டில் அயர்ந்த நித்திரையிலாழ்ந்திருக்கையில், தம் மூத்த குமாரியை மட்டிலும் எழுப்பி தான் இராஜமஹேந்திரபுரத்திற்கு அவசரமாய்ச் செல்லவேண்டியதாயிருப்பதாகவும், கதவைத் தாளிட்டுக்கொள்ளும்படியாகவும் கூறி வெளியிற் சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனத்தெரிகிறது.

## 4. இல்லாள் சிறப்பு.

அதிலிருந்து அவரது மனைவி மக்கள் ஆதரவற்றவராயினர். பிறகு அவரது ஒரே குமாரன் நாகபூஷணம், நான்காவது பாரம் படிக்கும் தருவாயில், சிறுவயதிலேயே திடீரென்று இறைவன் திருவடிநிழலை யடைந்தனன். இது விஷயத்தில் ஸ்ரீ சிவய்யாவும் தம் குமாரன் அற்ப ஆயுளையுடையவன் என்று முன்னமேயே அறிந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ சிவய்யாவின் மனைவி காமேச்வரம்மா தம் கணவர் வீட்டைவிட்டு மறைந்துபோனதினாலும், தன் ஒரே மகன் இறந்த காரணத்தினாலும், தன் வாழ்க்கையிற் பற்றின்றி, வாழ்நாட்களை வீணாக்காமல் எப்பொழுதும் தேவீவழிபாட்டிலும், வேதாந்த விசாரத்திலும் ஈடுபடுத்திக் காலங்கழித்து

வந்தார். இவருக்கு தேவியின் பிரத்தியக்ஷ தரிசனம் கூட கிடைத்ததெனப்படுகின்றது. இவர் அநேக மக்களுக்கு பிணி நீக்கத்திற்கும், பிறவிப்பிணியினின்று கடைத்தேறுவதற்கும் தேவீ வழிபாடுகளாற்றி பிரஸாதம் வழங்கிவந்தார். இவர் தனக்கு நிர்யாணம் நிகழும் தருணத்தைக் குறித்து முன்னதாகவே அறிந்திருந்தார் என்று சொல்லப்படுகின்றது.

1941-ம் வருஷம், ஒருசமயம் இவர் தம் சுற்றத்தார் வீடொன்றில் ஏதோ ஓர் விசேஷத்திற்கு தம்மிரு பெண் மக்களை அனுப்பியபொழுது, அவர்களை நோக்கி "இன்று என் உடல்நிலை சரியில்லை. நீங்களிருவரும் அவர்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டு, உடனே திரும்பி வந்துவிடுங்கள். அதிகமாய்த் தாமதிக்க வேண்டாம். என் அந்திய காலம் சமீபித்துவிட்டது. யான் இன்றே அன்னையின் மலரடிகளிற் சேரவேண்டும்" என்று கூறி எச்சரித்தனர். அவ்விதமே அவர்கள் போய்வந்ததும், யாவருக்கும் ஆசி கூறி தேவியின் பிரஸாதங்களை யருளி யாவரிடமும் விடையேற்றுக்கொண்டு, குறித்த நேரத்தில் ஓர் ஆஸனத்தில் அமர்ந்து தேவியைத் தியானித்தார். சற்று நேரத்திற்கெல்லாம், அன்னையின் திருமலரடிகளில் இரண்டறக் கலந்தனர். அப்பொழுது இவருக்கு வயது சுமார் 61 எனப்படுகிறது. இச்சம்பவம் மேற்கு கோதாவரியைச் சேர்ந்த அரிகிரேவுலா என்னும் கிராமத்தில், தம் மூத்த குமாரியின் இல்லத்தில் நிகழ்ந்ததாகப் புலனாகிறது. இவரது வாழ்வில் இவருக்கு யாதொரு வியாதியும் ஏற்பட்டதில்லையாம். இப்பேற்பட்ட மகா உத்தமியாகிய

புனிதவதியின் ஆத்மா சாந்தியடைய நம் மனப்பூர்வமான வணக்கங்களை ஸமர்ப்பிப்பதையன்றி நம்மால் வேறுயாது செய்ய இயலும்?

---

## அத்தியாயம் 2.

## ஸந்யாஸமும் யாத்திரையும்.

### 1. துறவியாதல்.

வீட்டைவிட்டு வெளியேறிய ஸ்ரீ சிவய்யா அவர்கள் தம் இல்வாழ்க்கையிற் சற்றும் பற்றின்றி போக மார்க்கத்தைக் காட்டிலும் யோகமார்க்கமே சாலச் சிறந்ததெனக் கருதினார். தமக்கு ஆத்ம ஞானம் போதிக்கத் தகுந்த பரம குருநாதரைத் தேடி வடநாட்டில் சஞ்சரித்துவருகையில் ஸ்ரீ அச்யுதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் ஓர் மஹானைக்கண்டு அவர்களிடமே ஸன்யாஸம் பெற்று, உபதேசமும் பெற்றார். ஒப்பற்ற குருவின் கருணை என்னும் பேரலையால் தாக்கப்பெற்று, மிக்க குளிர்ச்சிபெற்ற மனதுடையவராய், தம் ஆசாபாசாதிகளை அறவே வேரறுத்து, ஆனந்த வெள்ளத்தே மூழ்கினார். உடனே

சிந்முத்ரிதகரகமலம்
சிந்தித பக்தேஷ்டதம் விமலம்
சநவராமாத்யம் கந்தந
நிரவதிகாநந்த நிர்பரம் வந்தே.

[ஆத்ம வித்யாவிலாஸம்.

[(க-ரை) சின்முத்திரையுடன் கூடிய தாமரை போன்ற கைகளையுடையவரும், அடியார்கள் நினைத்தவிருப்பங்களை யருள்பவரும், அளவிலா ஆனந்தவெள்ளத்தே மூழ்கிக் கிடப்பவரும், பரிசுத்தராகவும் திகழ்கின்ற ஒப்பற்ற ஓர் ஆதி குருசிரேஷ்டரை வணங்குகின்றேன்.]

என்று தம் குருநாதரை ஏற்றிப் போற்றித் துதிசெய்தார். அன்றிலிருந்து இவர் ஸ்ரீ சிவசிதாநந்த ஸ்ரஸ்வதி ஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்டார். அஃது சிறிதுகாலம் தங்கியிருந்து பிறகு விடைபெற்றுக்கொண்டு மேலும் யாத்திரை செய்துவரும்பொழுது ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ஸவாமிகள் என்னும் மற்றோர் பெரிய மஹானைத் தரிசிக்கும் பேறுபெற்று, அவர்களிடம் சரண் புகுந்தார். ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸகல வித்யா துரந்தரர், ஸகல சாஸ்திர விற்பன்னர், ஸகல கலாவல்லுனர், அதிமேதையுள்ளவர், யோகாப்யாஸ முறையிலோ மஹா நிபுணர், அஷ்டமஹா ஸித்திகளையும் பெற்று யாவற்றையும் சிருஷ்டிக்கத்தக்க பரம சக்திவாய்ந்தவர்கள் என்று நம் ஸ்வாமிகளே பல ஸந்தர்ப்பங்களில் அறிவித்திருக்கிறார்கள். இவர் ஸ்ரீ தத்தாத்ரேயர் அவதாரம் என்றே நம் ஸ்வாமிகளின் நம்பிக்கை. இவருக்கு நம் ஸ்வாமிகளிடம் மிகுந்த அன்பு உண்டு. ஸ்ரீ வாஸுதேவானந்தரிடம் நம் ஸ்வாமிகள் எல்லா சாஸ்திரங்களையும் யோகாப்பியாஸ முறைகளையும், நுட்பங்களையும் நன்கு கற்றுணர்ந்து, தேர்ச்சிபெற்று, ஓர் ஸித்த புருஷரானார்.



ஸ்ரீ ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

நம் ஸ்வாமிகள் ஸ்ரீ வாஸுதேவானந்தரிடம் சிறிது காலம் தங்கியிருந்து குருவின் மலர்பாதங்களுக்குப் பணி விடைசெய்துவந்தார்.

## 2. மௌன விரதம்.

ஸ்வாமிகள் துறவுபூண்ட சிறிதுகாலத்திற்குப்பின் மௌனவிரதம் பூண்டு அனுஷ்டிக்கவாரம்பித்த விஷயமாய் இருவித அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன.

நமது ஸ்வாமிகள் ஒரு ஸமயம் காஷ்மீரத்திற்குச் சென்றிருந்தாராம். அங்கு வயதுமுதிர்ந்த மஹாபண்டிதர்கள் பலர்சேர்ந்து மாபெரும் சபையொன்று கூட்டி வேதசாஸ்திர ஆராய்ச்சிகளும், தர்க்கங்களும் செய்கின்றனரென்று கேள்வியுற்று உடனே அச்சபைக்குத் தானும் விஜயம்செய்தாராம். அங்கு நடைபெறும் சர்ச்சைகளைக் கவனித்துக்கொண்டிருக்கையில் அப்பண்டிதர்கள் இருவகுப்புகளாய்ப் பிரிந்து பலத்த விவாதங்கள் செய்ததாகவும், ஏதோ ஓர் முக்கிய விஷயத்தில் இருதரத்தினருக்கும் பெரிய ஐயமொன்று ஏற்பட்டு தகுந்த முகாந்திரமும் கிட்டாமல் திகைத்து நிற்கும் சமயம் நமது ஸ்வாமிகள் ஏனையோரைக் காட்டிலும் மிகுந்த இளமையாயிருந்தாலும் அதிகத் துணிவுடன் அச்சபையிற்கலந்து யாவருடைய ஸந்தேகத்தையும் தீர்த்துத் தெளிவுபடுத்தியதாகவும் இதைக் கண்ணுற்ற யாவரும் அவமானமடைந்ததாகக் கருதி இவர்மீது பொறாமை மேலிட்டு, மஹா பண்டிதர்களும் பேரறிஞர்களும் கொண்ட அம்மாபெரும் சபையை அலக்ஷியமாய் நினைத்துத் தன் கல்வி மேலீட்

டாலும், மிதமிஞ்சிப்பேசுந் திறமையினாலும் தம்மை அவமதித்தார் என நினைத்து மனம் புழுங்கி ஆரவாரம் செய்தனராம். இச்செய்தியைக் கேள்வியுற்ற நம் ஸ்வாமிகளின் குருநாதர் ஸ்ரீ வாஸுதேவானந்தர் இவரைக் கண்டித்து மௌன விரதம் பூண்டு அனுஷ்டிக்குமாறு கட்டளையிட்டனராம். அன்றுமுதல் இவரும் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டு மௌனமாகவே காலங்கழிக்கலானார் என்பது ஒரு வதந்தி.

இவர் ஓர்ஸமயம் விருத்தாசலத்திற்கு அண்மையிலுள்ள காடுகளில் வசித்துக்கொண்டு நரஸிம்ஹ உபாஸனை செய்துவரும் காலத்தில், மிகுந்த சீற்றமும், கோபமும் உடையவராய் இருந்ததாகவும், அதன்பயனாய் உலகிற்கும், உலகின் மக்களுக்கும் பல இன்னல்கள் விளையக் கூடும் என்று கருதி தன் பேச்சை அறவே ஒழித்துவிட எண்ணி

"மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்"

என்னும் ஆன்றோர் மொழிக்கொப்ப மௌன விரதம் பூண்டார்கள் என்பது மற்றோர் வதந்தி.

அம்மாதிரி மௌன விரதம் பூண்டபின்பு நமது ஸ்வாமிகள் எந்த ஸந்தர்ப்பத்திலும் வாய்திறந்து பேசியதே கிடையாது. தமது ஆணைகளையோ, அபிப்பிராயங்களையோ, யாவற்றையும் சைகையின் மூலமாயும் சில ஸமயங்களில் துண்டுக்கடிதங்களில் எழுதியும் காட்டுவது தான் வழக்கமாயிற்று. இந்நூலின்கண் தென்படும் "சொன்னார்", "புகன்றார்" போன்ற வாசகங்கள்யாவும்

அவ்விதமான அர்த்தத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## 3. ஸ்தல யாத்திரை.

ஸ்ரீ சிவசிதானந்தர் ஒருஸமயம் வடநாட்டிலுள்ள ஹிமாசலப் பிரதேசம், ஹரித்வாரம், காசி, அயோத்தியை, நைமிசம், பஞ்சவடி, கோகர்ணம், மூகாம்பிகா க்ஷேத்திரம் முதலிய இடங்களைத் தரிசித்து யாத்திரைசெய்து வரவேண்டுமென்று ஸங்கற்பித்துக்கொண்டு பிரயாணமானார்கள்.

ஸ்வாமிகள் முதலில் ஹரித்வாரத்திற்குப் பிரயாணம் செய்தார். அச்சமயம் டில்லியில் அக்கௌண்டெண்டு ஜெனரல் பதவியிலிருந்து நம் ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தி விசுவாசம்கொண்ட ஒரு சிஷ்யர் இவரது யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தான் செய்வதாகக் கூறி, ஹரித்வார் இரயில் நிலைய அதிகாரியாகப் பதவி வகித்துவந்த ஸ்ரீ நாராயண ராவ் நாயுடு என்னும் தம் நண்பருக்கு ஒரு கடிதம் வரைந்திருந்தார். அக்கடிதத்தில், "நாளை இரயிலில் ஓர் மௌன ஸ்வாமிகள் யாத்திரையாக ஹரித்வார் வருகிறார்கள். அவர்கள் என் பரம குருநாதர். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுக்கக் கோருகிறேன்" என்று எழுதப்பட்டிருந்ததாம். ஆனால் ஸ்வாமிகளின் அடையாளக் குறிப்புகள் ஏதும் எழுதவில்லை. ஸ்ரீ நாராயண ராவ் நாயுடு அக்கடிதம் கண்டதும், "ஒவ்வொருநாளும் எல்லா வண்டிகளிலும் எத்தனையோ ஸாதுக்களும் ஸன்யாசிகளும் வந்து

போய்க்கொண்டிருக்கையில், எந்த அடையாளம் வைத்து, கடிதத்தில் குறிப்பிடப்பட்ட மௌனஸ்வாமிகள் இவர்தான் என்று எவ்விதம் நிச்சயிப்பது?'' என்று தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்தார். அன்றிரவே நம் ஸ்வாமிகள் ஸ்ரீ நாராயண ராவ் நாயுடுவின் கனவிற் தோன்றி, தரிசனம் கொடுத்தார்கள். கனவிற்கண்ட குறிப்பை வைத்துக்கொண்டு ஸ்ரீ நாராயண ராவ் நாயுடு மறுநாள் இரயிலில் நம் ஸ்வாமிகளை சந்தித்து வரவேற்றார். பிறகு தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று மிகுந்த அன்புடன் உபசரித்து பிக்ஷை முதலிய தன் கடமைகளையும் செய்துவைத்து, மலைக்குப்போவதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்கள் என்றும் தெரியவருகிறது. பிறகு ஸ்வாமிகள் அங்கிருந்து கிழக்கே காசி, அயோத்தியை முதலிய பல க்ஷேத்திரங்களையும் தரிசித்துவிட்டு தென்நாடுகள் நோக்கி பிரயாணமானர்.

நைமிசவனத்திற்கு விஜயம்செய்ததும், அதனருகிலுள்ள "பாரபங்கி" என்ற கிராமத்தை அடுத்துள்ள ஓர் மலைக்குகையில் தவம் செய்துகொண்டிருந்த மஹாயோகியொருவர் நம் ஸ்வாமிகளுக்கு தரிசனம் தந்தருளினர். இவரும் ஒரு ஸித்த புருஷர். நூற்றுக்கணக்கான வருஷங்கள் அம்மலைக்குகையில் தவமாற்றிவந்த காரணத்தாலும், வயது முதிர்ச்சியினலும், இவரது உடல் குறுகி தேக முழுமையும் உரோமம் வளர்ந்து, தோற்றத்தில் ஓர்குள்ளக் கரடியைப்போலவே இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது. இவரும் தம் பூர்வாசிரமத்தில் ஓர்

ஆந்திர நியோகி பிராஹ்மணர் என்றும், ஸ்ரீ வெங்கடா சலம் பந்துலு என்ற பெயருள்ளவரென்றும் சொல்லப்படு கின்றது. இவர் நம் ஸ்வாமிகளைக் கண்டதும் தம் ஞான திருஷ்டியினால் ஸ்வாமிகளின் திறமைகளையறிந்து, அன்பு மேலிட்டு ஸ்வாமிகளைக் கட்டித்தழுவிக்கொண்டு அளவ ளாவினர் என்றும், நம் ஸ்வாமிகளைத் தம்முடனேயே அக்காட்டில் சிலநாட்கள் வைத்திருந்தார்கள் என்றும் புலனாகிறது.

அம்மஹான் அரிய சக்தி வாய்ந்தவராதலினால் காட்டு வழியில் கல்லிலும் முள்ளிலும் யாதொரு கஷ்டமுமில் லாது நடந்துசெல்வார்களாம். ஒரு ஸமயம் நம் ஸ்வாமி களும் கூட அவருடன், அக்காட்டில் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடந்து ஏகும்பொழுது சற்று தயக்க மடைந்தார்களாம். அதுகண்டு அம்மஹான் ஏதோ ஓர் மந்திரத்தை உச்சரித்ததும் நம் ஸ்வாமிகளுக்கு அக் காட்டுப்பாதையில் நடக்க எவ்வித துன்பமும் ஏற்பட வில்லையாம். அம்மஹான் சமீபகாலத்தில் சில ஆண்டு கட்கு முன்புதான் ஸித்தியடைந்தனர் என்று தெரிகிறது.

அதன்பிறகு அங்கிருந்து நம் ஸ்வாமிகள் தற்சமயம் நாஸிக் என வழங்கப்படும் பஞ்சவடி க்ஷேத்திரத்திற்கு வந்து ஓர் குகையில்தங்கி யோகநிஷ்டையில் அமர்ந்திருந் தாராம்.

பஞ்சவடியிலுள்ள ஆலயத்தில் வெகுகாலத்திற்கு முன் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதி சங்கர பகவத்பாதர் களின் சிலையொன்று பூமியிற் சாய்ந்துகிடந்தது. அவ்

விக்கிரகத்தை எழுப்பி மறுபடியும் நேராக நிற்கச்செய்து புனர்பிரதிஷ்டை செய்வதற்கு அநேக பராக்கிரமசாலிகள் வந்து பன்முறை முயற்சித்தும், தூக்கி நிறுத்துவதற்குக் கூட இயலாமற்போயிற்று. மேலும் இன்னும் வேறு எத்தனையோ அரிய ஸாதனங்களை உபயோகித்தும் பயன் படவில்லை.

அச்சமயம் காசியில் வாசம்செய்துவந்த ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்ற ஆந்திர நாட்டுத் துறவியொருவர் இச்சம்பவத்தைக் கேள்வியுற்று, அக் காரியத்தைத் தாம் ஏற்றுப் பூர்த்திசெய்து நிறைவேற்ற நினைத்துக்கொண்டு, ஏற்கனவே தமக்கு அறிமுகமுள்ள நம் ஸ்வாமிகளுக்கு, செய்திகள் யாவற்றையும் அறிவித்து அந்த ஆதிசங்கரர் விக்கிரகத்தை நேராக நிறுத்தி புனர்பிரதிஷ்டை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அவர் விருப்பத்தின்படி நம் ஸ்வாமிகளும் அப்பொறுப்பை யேற்று, தம் யோகாப்பியாச மகிமையினால், அங்குள்ளோர் யாவரும் அதிசயிக்கும்வண்ணம், தம் பத்மகரங்களினால் அச்சிலையைப் பேரன்புடனும், பக்தியுடனும் தூக்கி நேராக நிறுத்தி பிரதிஷ்டையையும் செய்து கொடுத்தார்கள் என்று சொல்லப்படுகிறது.



ஸ்ரீ ஸ்ரீ பிரஹ்மானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

மூகாம்பி க்ஷேத்திரமென்ற கோலாபுரத்தில்
கோவில்கொண்டுள்ள ஸ்ரீ மூகாம்பிகா தேவி.



மஹாலக்ஷ்மீ : கோலர்புரநிவாஸா விஜயதே-
தராம் சர்ந்தா சங்கார்யபயவரஹஸ்தா த்ரிநயநா.
பரா மூகாம்பாக்யா மஹிஷ:மதனேந்கண்டநிகிலா-
மராஸ்யோத்த ஜ்யோர்திர்மயமிதுநலிங்காக்ரியவபு:

# அத்தியாயம் 3.

## மூகாம்பிகா தர்சனம்.

### 1. அம்பிகையின் கருணை.

ஸ்ரீ ஸ்வாமிகள் மூகாம்பிகா க்ஷேத்திரத்திற்குப் பிரயாணம் செய்யும்பொழுது, ஒரு பெரிய கானகத்தின் ஊடே நடந்துசெல்ல வேண்டியிருந்தது. அப்பொழுது பகலவன் கீழ்த்திசையினின்று வானவீதியில் பிரயாணம் செய்ததின் விளைவால் ஏற்பட்ட களைப்பும வியர்வையும் நீங்கும்பொருட்டு நீராடுவதேபோல், மேல்கடலில் மூழ்கி மறைந்தனன். எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. அடர்ந்த கானகையினுல் ஸ்வாமிகள் செல்லும் பாதை மறைவுபட்டது. திக்குத்தெரியாமல் ஸ்வாமிகள் தயங்கினர். பிறகு யாவும் அன்னையின்செயல் எனக்கருதி,

ஜோதிஸ்வரூபிணி—ஆதி

ப. தாரி ஜூபேவா ரேவரு? நின்னுவினு
பரஞ்ஜோதிஸ்வரூபிணி நாகிபுடு

அ. வாரிஜலோசனி! மூகதைத்ய நிஷூதினி!
கோர மகிஷாசுர மர்த்தனி! அம்பா!

ச. கோமள கோலா புராலயே! மாயே!
ஸோம பிம்ப கேரு மோமுகல ஸ்ரீயம்பா!
காமதேனு போலிக கல மூகாம்பிகே!
ஏமியு தெலியனி ஈ உக்ரா டவிலோ!

[கருத்து:—எழில்மிகு கோலாபுரத்தே கோயிற்கொண்டவளே! மாயே! சந்திரபிம்பத்தையும் நாணச்

செய்யும் முகமுடைய ஸ்ரீ தேவி! காமதேனுவின் தன் மையையுடைய ஸ்ரீ மூகாம்பிகையே! தாயே! தாமரைக் கண்ணினளே! மூகாசுரனை யழித்தவளே! கொடிய மஹிஷாசுரனை வதைத்தவளே! பரஞ்ஜோதி என்னும் திருச்சுடர் வடிவந்தாங்கியவளே! ஏதும் தெரியாத இக் கொடிய கானகத்தில், எனக்கிப்பொழுது வழிகாட்டி யருள்வார் உன்னையன்றி யாரே?]

என்பதற்கொப்ப ஸ்வாமிகள் அன்னையை அந்தரங் கத்தே நினைத்துத் தியானம் செய்தார். சற்றுநேரத்திற் கெல்லாம் திடீரென்று ஸ்வாமிகளின் முன், கரிய மேனி யுடன்கூடிய பெண்மணியொருவள் தோன்றித் தானும் மூகாம்பிகைக்குச் செல்வதாயும், தனக்கு அவ்வழி நன் ருய்த் தெரியுமென்றும் கூறி ஸ்வாமிகளையும் தன்னுடன் பின்தொடர்ந்து வரலாமென்றும் கூறினுள். ஸ்வாமி களும் அந்த ஸ்திரீயைப் பின்பற்றி நடந்தார். இருவரும் அண்மையிலுள்ள "வடிசி" என்ற ஓர் ஊரையடைந் தனர். ஸ்வாமிகளை அன்றிரவு அவ்வூரில் தங்கிப்போகலா மென்று அந்த ஸ்திரீ வற்புறுத்தி அங்குள்ள ஓர் அந்த ணர் விடுதிக்கு அழைத்துச்சென்று, அங்குள்ளோர்க் கெல்லாம் அறிமுகப்படுத்தி, அவசியமான ஆகார வசதி களை அளிக்கச்செய்து அங்கே சற்று இளைப்பாறினர்.

மறுநாட் பொழுதுபுலர்ந்தது. புள்ளினம் ஆர்த் தன. கீழ்கடலினின்று ஆதவன் தன் இளஞ்செங்கதிர் களை வீசிப் பரப்பிக்கொண்டு எழும்பியதும், அப்பெண் மணி ஸ்வாமிகளை அழைத்துக்கொண்டு மறுபடியும் அங் கிருந்து பதினாறு கல் தூலைவிலுள்ள கோலாபுரம் என்ற

மூகாம்பிகா க்ஷேத்திரத்தை நோக்கி நடக்கலானாள். அவ் ஊரை அடைந்ததும் அந்நாரீமணி, நம் ஸ்வாமிகளை அங்கு ஸ்ரீ கிருஷ்ண பௌராணிகர் என்ற ஓர் அந்தணர் இல்லத்திற்கு இட்டுச்சென்று நம் ஸ்வாமிகளுக்கு, அவர்களிடம் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்குமாறு ஏற்பாடு செய்துவிட்டு மறைந்துவிட்டனள்.

அப்பெண்மணி திடீரென்று மறைந்ததும் நம் ஸ்வாமிகள் நிஷ்டையிலமர்ந்து யோஜிக்கையில், தனக்கு வழிகாட்டிவந்தது, ''ஸ்ரீ தேவியே'' என்று உணர்ந்தார். உடனே அளவிலா ஆனந்த பரவசமடைந்தார்; அந்தரங்கத்தே அன்னையின மலரடிகளை நினைத்து மனங் கனிந்துருகினார்.

உடனே,

அன்பே! ஆதரவே! அகிலாண்டமுந்தொழுது
நுகரு மின்பமே! அவ்வின்பத்தேயுதித்த பேரின்பமே!
பொன்னனை மேனிதனிற் பொற்கலனணிந்த
பொற்பாவையே! புகழ்ஞான மணியே! தாயே!
என்னாலாவதொன்றில்லை எல்லாம் நீயே
எனையீன்றெடுத்து ஞானப்பாலூட்டிய கோவே!
கன்னற் தேமொழியே! கற்பகக்கொடியே! கலியில்
எமைக் காக்கும் தெய்வமே! காமதேனுவே.

என்றும்,

நானாகிலும் நீயே! நீயாகிலும் யானே!
நீ நான் எனும் வேறுபாடில்லா மோனமே!
காணாகிலும் களிப்புடன் யான் வாழவேண்டி
வந்துடனிருந்துதவும் ஓர் திருச்சுடரே!

கோனுடும் பொன்னம்பலத்தே கூத்தாடிப் புகழ்
கண்ட மங்கைமயிலே! மடப்பிடியே!
தேனோடும் கோதாவரியே! தெள்ளமுதைப் பழிக்கும்
இசைவெள்ளமுனதன்றே! காமதேனுவே.

என்றமாதிரி கைகூப்பித் துதிசெய்து பரவினர். பிறகு ஆலயம் சென்று ஸ்ரீ மூகாம்பிகா தேவியை தரிசனம் செய்து மனம் பூரித்தார். உவகை மேலிட்ட உள்ளத்துடன் ஸ்வாமிகள் சிறிதுகாலம் கோலாபுரத்திலேயே தங்கி வாசம்செய்தார்.

## 2. க்ஷேத்திர மஹிமை

அச்சமயம் கர்நூல், கடப்பை முதலிய ஜில்லாக்களிலிருந்து, ஸ்தல தரிசனத்தின்பொருட்டு அங்கு வந்த சில லிங்கங்கட்டி வியாபாரிகளுக்கும், நம் ஸ்வாமிகளுக்கும் அறிமுகம் ஏற்பட்டு, நெருங்கிய தொடர்பும் உண்டாயிற்று. ஒருநாள் நம் ஸ்வாமிகளிடம் அவ்வியாபாரிகள், மூகாம்பிகா க்ஷேத்திர மகிமையைச் சொல்லும்படி இறைஞ்சிக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி நம் ஸ்வாமிகளும் மூகாம்பிகா க்ஷேத்திர மகிமையை இம்மாதிரி எழுதிக்காட்டினார்களாம்.

முற்காலத்தில் உலகப்பிரசித்திபெற்ற பிரஹ்மஞானிகளுள் உத்தமர் எனத்தகும் 'கோலர்' என்ற ஓர் மகரிஷி இருந்தார். கோகர்ண க்ஷேத்திரத்தினின்று பத்துயோஜனை தூரத்திலுள்ள ஸஹ்ய பர்வத அடிவாரத்தில் மஹாரண்யபுரம் என்ற இடத்தில் அக்கோல மகரிஷி ஓர் ஆச்ரமம் கட்டிக்கொண்டு வசித்துவந்தார்.

இவர் நீண்டகாலம் பரமேச்வரனைக் குறித்து கடுந்தவம் இயற்றி பெறற்கரிய வரங்களைப் பெற்றிருந்தார். அவ் வரங்களுள் ஒன்று "தானிருந்து தவமியற்றிய இடம் தன் பெயரால் அழைக்கப்பட வேண்டுமென்பது". ஆகவே கோலர் இருந்து தவம்செய்த இடம் கோலாபுரம் என்று வழங்கலாயிற்று.

அக்காலத்தில் கம்ஹன் என்ற ஒரு அஸுரன் கோல மகரிஷியை நிஷ்டையிலிருந்தபடியே தூக்கி அப்புறப் படுத்திவிட்டு அவரது ஆசிரமத்தைப் பறித்துக்கொண்டு அதில் தான் தன் கூட்டாளிகளுடன் வாசம்செய்து வந் தான். அஃது இவர்கள் செய்யும் இடையூறுகளைப் பொறுக்க முடியாமல், ஏனைய முனிவர்கள் திரிபுரபைரவி தேவியிடம் முறையிட்டனர். தேவி கம்ஹனிடம் போருக்கு வரவே அவன் பயந்து ருஷ்யமூக பர்வதத் திற்குச் சென்று மஹேச்வரரைக் குறித்து தவம்செய்ய ஆரம்பித்தான்.

பிறகு மஹிஷன் என்ற அரக்கன் அந்த இடத் திற்கு வந்து உலகையே தன்னுள்ளடக்கி பல இன்னல் களை விளைவித்து வந்தான். கோலர் தம் நிஷ்டையி லிருந்து விழித்தெழுந்து பார்க்கையில், தம் ஆசிரமம் அசுரர்களால் ஆளப்படுவதை அறிந்தார். அதைத் திரும்பக் கைப்பற்ற பரமேச்வரனையும், மஹாவிஷ்ணு வையும் குறித்து தவமியற்றினார். பிரஹ்மதேவனும், தேவேந்திரனும் மற்றும் ஸகல தேவர்களும் பூவுலகில் மஹிஷாஸுரன் படுத்தும் பாடு தாளாமல் கைலாசநாதனை யும், வைகுண்டபதியையும் கண்டு முறையிட்டனர்.

உடனே கோபாவேசங்கொண்ட பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரர்களின் முகத்தாமரைகளினின்று தனித்தனியே ஒளிகள் புறப்பட்டு, பிறகு யாவும் ஒன்றாய்த் திரண்டு ஓரே பேரொளியாகி ஒரு மலைபோல் பெருத்து மஹா லக்ஷ்மிதேவியின் அம்சம் என்பதற்கொப்ப ஓர் பெண் வடிவாயிற்று. ஸ்ரீ தேவி ஆரவாரத்துடன், தேவர்களின் விரோதியான மஹிஷாசுரனை வதைக்க யுத்தம்செய்யப் புறப்பட்டாள். ஸ்ரீ தேவியும் மஹிஷனும் கடும்போர் புரிந்தனர். அந்த பயங்கர யுத்தத்தை மும்மூர்த்திகளும், தேவர்களும், கோலரும் கண்டு பிரமித்தனர். அப்பொழுது தேஜோரூபிணியான அம்பிகையின் தேஜஸ்ஸைப் பரமேச்வரன் சக்ர வடிவத்தில் எடுத்தார். அதுவே ஸ்ரீ சக்ரம் எனப்படும். இப்பிரபஞ்சம் உண்டாகக் காரணமானதும் இந்த ஸ்ரீ சக்ர ரூபமாகையால் இது ஸாக்ஷாத் தேவியின் ஸ்வரூபமாகவும், நிலயஸ்தானமாகவும் விளங்குகிறது.

பரமேச்வரன் உண்டாக்கிய ஸ்ரீ சக்ரத்தை மஹா விஷ்ணு இரகசியமாய் எடுத்து மறைத்துவைத்தார். ஜகன்மாதாவாம் ஸ்ரீ தேவி பலநாட் போர்செய்து மஹிஷாசுரனையும், பிறகு வேத்ராசுரனையும் ஸம்ஹரித்து தேவர்களின் கலி தீர்த்தாள்.

கோல மஹரிஷி செய்த கடுந்தவத்தைக் கண்டு மெச்சி அன்னையே அவருக்கு வரமருளப் பிரத்தியக்ஷமானாள். வரந்தந்தருளியபின் ஸ்ரீ தேவி ஸ்ரீ சக்ரத்தில் சேர்ந்தனள். இந்த கோலாபுரம் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவியின் இருப்பிடமாயிற்று.

கம்ஹன் தன்னைக் குறித்து பன்னெடுநாட்களாய்த் தவமியற்றுகிருன் என்றறிந்த மஹேச்வரன், அவனது தவம் கண்டு மெச்சி விரும்பிய வரங்களையருளும் தருணத்தில், அமரர்கள் அஞ்சி கோலாபுரத்தில் கோவில்கொண்டிருக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவியைத் துதித்துப் பணிந்து "தாயே! ஸதாசிவனிடம் கொடிய கம்ஹன் வரம்பெறப் போகின்ருன். அவன் அவ்விரும்பிய வரத்தைப்பெற்று விட்டால் வந்தது, எங்கள் யாவருக்கும் பெரிய ஆபத்து. உலகையே நாசம் செய்து விடுவான். ஆகையால் தாங்கள்தான் கருணைகூர்ந்து அங்குசென்று, அக்கம்ஹன் தனக்கு விரும்பும் வரத்தைப் பரமனிடம் கேட்கமுடியாமல் ஓர் நிலையை உண்டாக்கியருள வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டனர். உடனே மஹாலக்ஷ்மி தேவி கம்ஹனை வாய்பேச முடியாமல் மூகனுக்கிவிட்டாள். அதனுல் இந்த அம்பிகையை மூகாம்பிகை என்றும், கம்ஹனை மூகாசுரன் என்றும் பிரசித்தமாயிற்று.

பிறகு அம்மூகாசுரன் நினைத்தது நிறைவேருமற் போகவே, தவத்தை விடுத்து மறுபடியும் உலகில் ஊமையாகவே உலாவிக்கொண்டு ஸகலருக்கும் பலவித இடையூறுகள் செய்துகொண்டே இருந்தான். தேவர், முனிவர், மனிதர் யாவரும், பராசக்தியாம் பார்வதி தேவியை பிரார்த்தித்து முறையிட்டனர்.

உடனே பார்வதி தேவி, பரமேச்வரன், வீரபத்திரன், கணேசன் முதலியவர்களுடன் இக் கோலாபுரத்தில் பிரத்தியக்ஷமாகி, மூகாசுரனோடு கடும்போர் புரிந்து

சுக்லாஷ்டமி நாளில் நள்ளிரவில் தன் சக்ராயுதத்தால் அவனது தலையை அறுத்து வீழ்த்தினாள். மூகாசுரனும் இறந்தொழிந்தான். தேவர்களும், முனிவர்களும் கவலை நீங்கப்பெற்று வாழ்ந்தனர். உலகும் க்ஷேமமடைந்தது.

இது ஸ்காந்தபுராணத்தில் உள்ளது, என்றும் நம் ஸ்வாமிகள் அவ்வியாபாரிகளுக்கு அறிவித்தார்.

### 3. ஆச்சர்ய நிகழ்சசி.

சிலநாட்கள் சென்றதும், நம் ஸ்வாமிகளுடன் அந்த வியாபாரிகள் மங்களூருக்கு யாத்திரையாகப் புறப்பட்டனர். சித்திரகூடம் என்ற மலையினருகே, மலங்காட்டு வழியே நடந்து செல்லும்போது, கதிரவன் மறைந்து மாலைப்பொழுது நெருங்கியது. அன்றிரவு அங்கே தங்கிவிட உத்தேசித்து யாவரும் ஓர் பெரிய பரந்த ஆலமரத்தினடியில் அமர்ந்தனர். ஸ்வாமிகளும் அம் மரத்தடியிலேயே யோகாஸனமிட்டு நிஷ்டையிலமர்ந்து விட்டார்கள். வியாபாரிகள் உறக்கமின்றி உட்கார்ந்து காலங்கடத்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது, திடீரென்று எதிர்பாராதவிதமாய் ஓர் புயற்காற்று அடிக்க, அந்த ஆலவிருக்ஷத்தினின்று பெரிய கிளையொன்று முறிந்து கீழே வீழ்ந்தது. உடனே வியாபாரிகள் தப்பி ஓடி அபாயத்திலிருந்து விலகிக்கொண்டனர். ஆனால், அந்தோ ! பயங்கரம்! அக்கிளை நம் ஸ்வாமிகளின்மேல் வீழ்ந்து மூடி மறைத்துக்கொண்டது. வியாபாரிகள் இந்த அபாயத்தைக் கண்ணுற்று, ஸ்வாமிகளின் கதி என்னவாயிற்றோ,

என்று மனம்பதைத்து வருந்தினர். சிறிய கொப்புகளை எல்லாம் நீக்கிப் பார்த்தனர். ஸ்வாமிகள் சற்றும் அசையாமல் உள்ளே நிஷ்டையிலமர்ந்தபடியே இருந்தனர். ஆனால் ஓர் பெரிய கொப்பு ஸ்வாமிகளின் புஜத்தின்மீது கிடந்தது. அந்த கொப்பை புரட்டித் தூக்கி எடுக்க தம்மில் எவராலும் இயலவில்லையே என வியாபாரிகள் வியப்புற்றனர். சிறிது நேரத்தில் ஸ்வாமிகள் தம் நிஷ்டை கலைந்து கண்விழித்து நோக்குங்கால், அங்கு நேரிட்ட அபாயத்தை அறிந்துகொண்டு, வெகு எளிதில், தம் ஓர் கரத்தினாலேயே அக்கொப்பைத் தூக்கி அப்பால் எறிந்துவிட்டு, எவ்விதத் துன்பமுமின்றி எழுந்து நடந்தார்களாம். இந்த ஆச்சரியமான நிகழ்ச்சியைக் கண்டு அவ்வியாபாரிகள் அப்படியே பிரமித்து நின்றனரும், அதன்பின் ஸ்வாமிகள் அவர்களுடன் மங்களூர் சேர்ந்து சிலநாட்கள் அங்கு தங்கினர். வியாபாரிகள் நம் ஸ்வாமிகளை, மங்களூர் இரயில் நிலைய அதிகாரியின் வீட்டில் விட்டுவிட்டு, அனுமதிபெற்றுக் கொண்டு தம்மிருப்பிடம் சென்றனர். பிறகு ஸ்வாமிகள் பாதாமி சென்று அங்கும் சிறிதுகாலம் தங்கி அநேக விநோதங்களைச் செய்தார்கள் என்றும் தெரியவருகிறது.

## அத்தியாயம் 4.

## திருக்குற்றால வாஸம்.

### 1. திருவண்ணாமலைப் பெரியார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஸன்யாஸம் பெற்று தென்திசை வருகையில் திருவண்ணாமலையிலுள்ள பாதாள லிங்க குகையில் சிலகாலம் வசித்துவந்தார்கள் என புலனாகிறது. 1921-ம் வருஷம் யான் எனது குடும்பத்தாருடன் என் இளைய ஸஹோதரன் ராமசந்திரய்யரின் திருமண விழாவிற்காக சித்தூர் செல்ல நேர்ந்தது. அப்பொழுது நாங்கள் யாவரும் திருவண்ணாமலையில் இறங்கிப்போனோம். அண்ணாமலையில் தங்கியபொழுது அந்த மலையில் வசித்துவந்த பகவான் ரமண மகரிஷியை தரிசனம் செய்யச் சென்றோம். பகவான் ரமணர் அப்பொழுது தமது ஆசிரமத்திற்கருகில் ஓர் கற்பாறையின்மீது உட்கார்ந்து ஞமலி ஒன்றிற்கு உணவூட்டிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அங்குசென்று ஸ்ரீ ரமண மகரிஷியைக் கண்டு அஞ்சலிசெய்து நிற்கையில் மகரிஷி எங்களைக் கண்டு "நீங்கள் யாவரும் திருக்குற்றாலத்திலிருக்கும் மௌன ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் தானல்லவா? மௌன ஸ்வாமிகள் சௌக்கியமாக இருக்கிறார்களா? அவரை எனக்கு நன்றாய்த் தெரியும். அவர்களிடம் யான் கேட்டதாகச் சொல்லவேண்டும்" என்று எங்களிடம் சொன்னார்கள்.

நாங்கள் யாவரும் மௌன ஸ்வாமிகளின் சிஷ்யர்கள்

என்பது மகரிஷி ரமணருக்கு எப்படித் தெரியும் என்றும், நம் மௌன ஸ்வாமிகள் தமக்கு ரமண மகரிஷியைத் தெரிந்தும் நம்மிடம் அதை இதுவரை புகன்றதில்லையே என்றும் நினைத்துக்கொண்டு, மகரிஷியிடம் விடை பெற்றுக்கொண்டு எங்கள் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

ஜாகைக்கு வந்ததும் அங்குள்ளோர் யாவரும் எங்களைப் பார்த்து, "ரமண மகரிஷியைப் பார்த்து தரிசித்து விட்டீர்கள். இங்கு மற்றுமோர் மஹான் இருக்கிறார்கள். அவர்கள்தான் சேஷாத்திரி ஸ்வாமிகள். அவர்களையும் கண்டு தரிசித்துவாருங்கள்" என்றார்கள்.

சேஷாத்திரி ஸ்வாமிகளோ ஓரிடத்திலும் நிலையாகத் தங்குவதில்லையாம். எப்பொழுதும் ஊரிலேயே சுற்றித் திரிவார்களாம். நாம் அவர்களைத் தேடித் தேடியலைந்தால் எங்காவது இறுதியில் காணமுடியும் என்றும் சொன்னார்கள்.

நாங்களும் அவரைக்கண்டு தரிசனம்செய்ய நினைத்து அவ்வூரிலுள்ள ஆலயங்கள், மடங்கள், மண்டபங்கள், மற்றும் தெருக்கள் முதலியவற்றில் எல்லாம் தேடியலைந்தோம். ஆனால் ஸ்வாமிகளைக் காணமுடியாமல் களைத்து எங்கள் ஜாகைக்குத் திரும்பிவந்தோம். அப்பொழுது, ஜாகையின் திண்ணையில் ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் உட்கார்ந்திருப்பதை அறிந்து உடனே அவர்களிடம் சென்று அஞ்சலிசெய்து நின்றோம். பிறகு கொஞ்சம் பாலும் பழமும் கொடுத்து உட்கொள்ளும்படி வேண்டிக்கொண்

டோம். ஸ்வாமிகளும் அவ்வாறே உண்டார்கள். பின்பு எஞ்சியுள்ள பழங்களை எங்களுக்குப் பிரஸாதமாகக் கொடுத்தார்கள்.

அச்சமயம் என் சகோதரன் திருமண விஷயமாய் சில வார்த்தைகளைச் சொல்லலானார். அவைகளின் உட்கருத்து எங்களுக்கு அப்பொழுது சற்றும் விளங்கவில்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின்பு எல்லாம் புரிந்தன. இறுதியாய் சேஷாத்திரி ஸ்வாமிகள் கூறிய மொழி என்னவென்றால் "எதுவந்தாலும் உங்கள் ஸ்வாமிகளின் கிருபையால் சௌகர்யமேற்படும்" என்பதுதான்.

சேஷாத்திரி ஸ்வாமிகளையும் நமது மௌனானந்த ஸ்வாமிகளுக்குத் தெரிந்திருப்பதை அப்பொழுதுதான் நாங்கள் அறிந்துகொண்டோம்.

சித்தூரில் நடந்த திருமண வைபவத்திற்கு நமது ஸ்வாமிகள் விஜயம் செய்தபொழுது யான் திருவண்ணாமலையில் நிகழ்ந்த விசேஷங்களைக் குறித்து அவர்களிடம் அறிவித்தேன். சிலவருஷங்களுக்குமுன்பு தாம் திருவண்ணாமலையில் பாதாள லிங்க குகையில் வசித்துவந்ததாயும், அப்பொழுது ரமண மகரிஷி வந்ததாகவும், தன்னுடனேயே குகையில் அவர்களையும் வைத்துக்கொண்டதாகவும், அதே சமயங்களில் சேஷாத்திரி ஸ்வாமிகளும் அடிக்கடி வந்ததாகவும் நமது மௌன ஸ்வாமிகள் தெரிவித்தார்கள்.

இப்படி ஏற்பட்ட சந்திப்புகளில் ஒருஸமயம் சேஷாத்திரி ஸ்வாமிகளுக்குத் தன்னை அதிகமாய் பிடித்திருப்ப

தாகவும், தம்மீது அதிக அன்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறி ஆலிங்கனம் செய்துகொண்டதாகவும், ஆனால் மறு கணமே திடீரென்று இரு கைகளையும் விலக்கிக்கொண்டு சற்று தூரத்தில் நின்று தனக்குப் பற்றுதல் ஏற்படக் கூடாது என்று கூறிச் சென்றுவிட்டதாகவும் நமது ஸ்வாமிகள் அறிவித்தார்கள்,

ரமணரும், சேஷாத்திரி ஸ்வாமிகளும் இரண்டு மஹான்கள் என்றும் சேஷாத்திரி ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில் அஷ்ட ஸஹஸ்ர வகுப்பைச் சேர்ந்த ஸ்மார்த்தர் என்றும் தெரிவித்தார்கள். மகான்கள் திரிகால ஞானிகள் என்பது இதனால் புலனாகிறது.

ரமண மகரிஷிகளைக் குறித்து அக்காலமுதல் அவ்வப்போது முக்கியமாய் நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டு எழுதப்பெற்ற நூல்களின் மூலம் பார்க்கையில், சிவய்யா என்ற குற்றால மௌன ஸ்வாமிகளை தரிசித்ததாகவும், அச்சமயம் பாரதியாரும் தன்னைப் பார்க்க வந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளதை சமீபத்தில் 1952-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 21-ம் தேதி "ப்ரீ இந்தியா" (Free India) என்னும் பத்திரிகையில் பிரசுரமாயிருப்பதை யாவரும் காணலாம்.

## 2. குற்றாலம் வருகை.

ஸ்ரீ ஸ்வாமிகள் தெற்கு நோக்கி மேலும் யாத்ரை செய்து இறுதியில் 1909-ம் ஆண்டு தெய்வ மணங்கமழும் தென்பாண்டிய நாட்டிலுள்ள சிவக்ஷேத்திரங்கள் பதி

ஞன்கிலும் ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி விசேஷங்களுட னும், இயற்கை எழிலுடனும் மிளிரும் திரிகூடாசல க்ஷேத்திரம் என்ற திருக்குற்றால மலைக்கு வந்துசேர்ந் தார். மலைவளமும், நிலவளமும், அம்மலையின் சிகரங் களில் கவிழும் கார்மேகங்கள், அங்கு வீசும் மந்தமாரு தத்தால் தாக்கப்பெற்று அமுதத் துளிகளெனத் தரும் நீர்த்திவலைகளாய் மாறி உதிர்ந்து பெருக்கெடுத்து சித் திரமான சித்திரா நதி என்ற பெயருடன் நிலத்தை நோக்கி அருவியாக ஓடிவரும் வனப்பையும், அதன் நீர் வளத்தையும் கண்ணுற்று அதில் நீராடினால்

எத்தனை பிறவி முன்னெடுத்திருப்பினும் அது
அத்தனையும் புனிதமாத மென்றே
முத்தமிழ்தந்த முனிபுங்கவன் பணித்தனன்''

என்பதற்கொப்ப "சித்திரமா நதியின் சித்திரங்கண்டு நித்தமுமதில் நீராடிட அருள்வாய்'' என்று நினைத்து அத்தலத்தே கோயில்கொண்டு சித்திர சபையிலே திரு நடனமாடும் திருக்குற்றால நாதரை அந்தரங்கத்தே தியா னித்தார். அஃதே எஞ்சியுள்ள தம் வாழ்நாட்களைக் கழிக்க உறுதிகொண்டார். அந்த தலத்திலுள்ள ஆல யத்தினுள் வடபாலிருக்கும் "பராசக்தி பீடம்'' என் றும் "தாணீ பீடம்'' என்றும் வழங்கப்படும் ஸ்ரீ இராஜ ராஜேச்வரி தேவியின் உத்கிருஷ்டமான ஸன்னிதியின் முன் தலைமுதல் கால்கள் வரை வஸ்திரத்தினால் நன்றாய் மூடிக்கொண்டு எப்பொழுதும் பிரஹ்மானந்த நிஷ்டையி லிருக்கலானார். நாள்தோறும் பூஜா காலங்கள் முடி வுற்றதும் ஆனந்த நிஷ்டையிலேயே அமர்ந்திருக்கும்

ஸ்வாமிகளை ஆலயத்தின் உட்புறத்திலேயே வைத்து விட்டு, வெளிக்கதவுகளை மாத்திரம் மூடிக்கொண்டு செல்வது வழக்கமாயிற்று. உச்சிக்கால ஆராதனைக்குப்பின் தேவஸ்தான அதிகாரிகளால் விற்கப்படும் நிவேதன சாதக்கட்டிகளையே, ஸ்வாமிகள் வாங்கி பிக்ஷைசெய்து வந்தார். அதற்குரிய கிரயப்பணம் ஸ்வாமிகள் தம் கரத்தை உதரியதும் தானாகவே கீழே விழும். ஆலய தரிசனத்திற்கும், புனித அருவியில் நீராடுவதற்கும் அயலூர்களிலிருந்து கும்பல் கும்பலாய் வரும் யாத்ரிகரும் ஏனையோரும் தரிசனம் முதலியவற்றை முடித்துக் கொண்டு மௌன ஸ்வாமிகளையும் கண்டு தரிசித்துப் போவது வழக்கமாய்விட்டது. அதனால் பல்வேறு இடங்களிலும் ஸ்வாமிகளின் கீர்த்தி வெகு எளிதில் பரவலாயிற்று.

ஒருஸமயம் ஸ்வாமிகளின் பக்தர்களில் ஒருவராகிய ஸ்ரீ S. ராமஸ்வாமி அய்யர் (Railway Engineer, Retd.) என்பவர், குற்றாலத்திற்கருகிலுள்ள செங்கோட்டையில் வாசம் செய்துவந்தார். அவர் தம் நண்பர்கள் சிலருடன் ஸ்வாமிகளைத் தரிசிக்கும்பொருட்டுத் திருக்குற்றாலத்திற்கு வந்தார். உச்சிக்கால பூஜை முடிந்துவிட்டபடியாலும் இவர்கள் வருவதில் சற்று தாமதம் ஏற்பட்டபடியாலும், வழக்கம்போல் ஸ்வாமிகளை உள்ளேயேவைத்து கோவில் நடைக்கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. அப்பொழுது ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் தம் சிநேகிதர்களுடன் ஆலயத்தின் வடக்குவாசலில் போய் நின்று கொண்டு “ இன்று நாம் எவ்வளவோ வேகமாய் ஓடோடி

வந்தும் ஸ்வாமிகளைத் தரிசிக்க பிராப்தமில்லையே"! என்று வருந்திக் கண்ணீர் உகுத்தார். உடனே திடீரென்று ஸ்வாமிகள் அவர்களுக்கெதிரில் தோன்றி தரிசனமளித்தார்கள். அங்கு கோவிலைக் காவல்புரியும் காவலாளியொருவன் இந்த அதிசயமான நிகழ்ச்சியைக் கண்டு வியந்து "ஆலயத்திற்குள் வைத்து மூடப்பட்டிருந்த இந்த ஸ்வாமிகள் எப்படி வெளியேவர முடிந்தது?" என்று வினவினான். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டு தம் சிஷ்யர்களுக்கு விடைகொடுத்தனுப்பி விட்டுத் தாமும் மறைந்துவிட்டார்கள். அன்று ஸாயங்காலம் கோவில் நடை திறக்கப்பட்ட ஸமயம் அக்காவலாளி மௌன ஸ்வாமிகளை வழக்கம்போல் தரணிபீடத்தின் முன்னாலேயே நிஷ்டையிலிருக்கக்கண்டு "கதவுகள் பூட்டப்பட்டிருந்தபொழுது ஸ்வாமிகள் எவ்விதம் வெளியிற் சென்று மறுபடியும் உள்ளே வந்தார்கள்" என்று பெரிதும் ஆச்சரியமுற்றான்.

## 3. மிட்டாதார் ஸ்ரீ சுந்தரம் அய்யர்.

எனது தந்தை ஸ்ரீ எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடிக்கு அடுத்த புதுக்கோட்டை என்ற எங்களது மிட்டா கிராமத்திலே வசித்துவந்தார்கள். குடும்பகாரியங்கள் யாவற்றையும் தந்தை அவர்களே கவனித்துவந்தார்கள். எஞ்சியவர்களுக்கு இலையெனச் சொல்லா உள்ளம்படைத்தவர். பார்ப்பதற்கு பெயருக்கேற்ப சுந்தர புருஷராயும், கம்பீர தோற்றமும், நல்ல முகவசீகரமும் பெற்றவராயும் இருந்

தார். செந்தூராரின் ஸேவையை பெரிதும் போற்றி மகிழ்பவர். தனது ஜீவியகாலத்தில் சிருங்கேரி ஆச்சாரியாள் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளையும், கும்பகோணம் காமகோடி பீடம் ஆச்சார்ய ஸ்வாமிகளையும், எனது தந்தையார் எங்களது இல்லத்திற்கு வரவழைத்து பூஜைகள் நடத்தியுமிருக்கிறார்கள். எனது தந்தை வருடாவருடம் பருவகாலத்தில் குற்றாலம்போய் தங்கி வருவது வழக்கம். குற்றாலத்தில் வாசம்செய்கையில் தினந்தோறும் அருவியில் ஸ்நானமானதும் கோவில் சென்று ஸ்ரீ குற்றாலநாதரையும், ஸ்ரீ அம்பாளான தரணீ பீடத்தையும் தரிசித்துவருவது வழக்கம். ஸ்ரீ தரணீ பீடமானது மஹாமேருவின் உருக்கொண்டது. ஆதியில் தேவேந்திரனால் பூலோகத்திற்கு நான்கு பீடங்கள் யாவரும் பூஜைசெய்து உய்யுமாறு அனுப்பப்பட்டதாயும் அவைகளில் ஒன்று சிருங்கேரியில் ஸ்ரீ சாரதா பீடமாகவும், காஞ்சியில் "காமகோடி" பீடமாகவும், குற்றாலத்தில் "ஸ்ரீ தரணீ" பீடமாகவும், நான்காவது பீடம் வடதேசத்திலிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

1909-ஆம் எனது தந்தை குற்றாலம் சென்றபோது வழக்கப்படி அருவியில் நீராடி கோவிலில் ஸ்ரீ தரணீ பீடத்தை தரிசிக்கையில் பீடத்திற்கு எதிரில் சற்று தூரத்தில் ஒரு மஹான் யோக ஆஸனமிட்டு தலைமுதல் கால்வரை காஷாய வஸ்திரத்தால் மூடிக்கொண்டு நிஷ்டையிலிருப்பதைக் கண்டார்கள். அதுமுதல் எனது தந்தை இந்த மஹானையும் வணங்கிவருவது வழக்கமாயிற்று.

1910-ஞு எனது தந்தை குற்றாலம் சென்றபோது வழக்கம்போல் தினம் ஸ்ரீ அம்பாளையும், நம் மஹாஞான ஸ்வாமிகளையும் தரிசித்து வருகையில் ஒருநாள் அவர் தன் பூர்வஜன்ம புண்ணியத்தால் ஸ்வாமிகளை தரிசிக்கப் போனபோது ஸ்வாமிகள் நிஷ்டை கலைந்திருக்கும் ஸமய மாயிருந்தது. தந்தை ஸ்வாமிகளை நமஸ்கரித்து நிற்கை யில் ஸ்வாமிகள் தமக்கு சில சௌகர்யங்கள் செய்து கொடுத்து தனது அபீஷ்டத்தை பூர்த்திசெய்ய உதவி செய்ய முடியுமா என தமிழில் எழுதி காண்பிக்க எனது தந்தையும் உடனே ஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி நடந்துகொள்ள ஸித்தமாயிருப்பதாக வாக்குக்கொடுத் தார்கள். இதிலிருந்து எனது தந்தையிடம் தனித்த அபிமானம் ஏற்பட்டது. எனது தந்தையவர்களுக்கும் ஸ்வாமிகளிடத்தில் பக்தி அதிகரித்து இருவரும் அடிக் கடி சந்தித்து நெருங்கி பழகும்படி நேர்ந்தது. இதிலி ருந்து ஸ்வாமிகளின் கோரிக்கைகளை பூர்த்திசெய்து கொடுப்பதே பெரிய கொள்கையாகக்கொண்டு என் தந்தை தன் ஆயுள் முடியும்வரை பணிசெய்து வந்தார்கள்.

## 4. ஸ்ரீமடாலயம் ஸ்தாபனம்.

ஸ்வாமிகளுக்கு பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வேண் டிய சௌகர்யங்களைக் குற்றாலநாதர் கோயில் அதிகாரி களும் கூடுமானவரை கவனித்து வந்தார்கள். நாளடை வில் ஸ்ரீ ஸ்வாமிகளின் தரிசனத்தை நாடிவரும் பக்தர்கள் அதிகரித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற கோயில்



ஸ்ரீ தண்டாயுதபாணி



ஸ்ரீ ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாசார்யாள்

அதிகாரிகள் ஸ்வாமிகளுக்கு வஸதியாகச் சிறிய ஆசிரமம் ஒன்றைக் கட்டிக்கொள்ள கோயிலின் வடக்கு வெளிப் பிராகாரத்தில் ஒரு சிறிய இடம் கொடுத்தார்கள். இந்த இடத்தில் 1910-வரு ஸ்வாமிகளுக்கு ஒரு சிறு ஆசிரமத்தைப் பல பக்தர்களின் அபிப்பிராயத்திற்கு ஏற்ப என் தந்தை ஸ்ரீ சுந்தரமய்யர் நிர்மாணித்தார். ஆசிரம கட்டிடம் மிகவும் சிறியதானது. ஒரு சிறிய ஹாலும், முன்னும் பின்னும் வராந்தாவும், சிறிய மடப்பள்ளியும் அடங்கி உள்ளது. ஆசிரமத்தைத் தழுவி வடபுரம் அருவி ஜலம் போகும் வாய்க்காலும் உண்டு. ஆசிரமம் சிறியதாலும் ரொம்ப ரமணீயமாயும், ஏகாந்தமாயும் மனச்சாந்தி அடையக்கூடிய வாசஸ்தலமாகவே இருந்தது.

இந்த ஆசிரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் வாசம்செய்து வரும் காலத்தில் இவ்விடத்திலேயே சில மூர்த்திகளை பிரதிஷ்டை செய்ய ஸங்கல்பித்துக் கொண்டபடியால், ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, ஸ்ரீ தண்டாயுதபாணியின் விக்ரஹமும், ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகள் விக்ரஹமும் எனது தந்தையினால் ஏற்பாடு செய்யப்பட்டு, விக்ரஹங்களும் தயாராகி வந்தன.

1086-ம் ஆண்டு ஸாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 21க்தேதி (7–9—1910)) சுக்கிரவாரம் கூடிய நன்னாளில் ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்ரீ ஆதி சங்கராசார்ய மூர்த்திகளின் பிரதிஷ்டைகளை ஆசிரமத்தின் ஒருபக்கத்தில் வேதகோஷங்களுடன் வெகு ஆடம்பரமாய் ஸ்வாமிகள் செய்து முடித்தார்கள். விக்ரஹங்களுக்குக் கீழ்

ஸ்தாபனம் செய்வதற்குத் தேவையான நவரத்தினங்களும் இயந்திரம் பொறிக்கப்பட்ட ஸ்வர்ணத்தகடுகளும் எவரும் ஆச்சரியப்படும்படியாக ஸ்வாமிகள் வெறும் கையை மூடித்திறக்கவே கலகலவெனக் கொட்டின. இவற்றை பிரதிஷ்டையின் பூர்வாங்கமாக பீடங்களின் அடியில் வைத்து மூர்த்திகளின் பிரதிஷ்டைகள் செய்யப்பட்டன. பிரதிஷ்டைகள் முடிந்து ஸ்ரீதண்டாயுதபாணி மூர்த்திக்கு கற்பூரஹாரத்தி செய்ய அந்த மூர்த்தியிலிருந்து திடீரென்று பிரகாசமான ஜோதியொன்று சில நிமிஷங்கள் வரை ஒளி வீசியது. இந்த அற்புதத்தை அங்கு கூடியிருந்த அடியார்கள் யாவரும் தரிசித்து ஆனந்தமடைந்தனர்.

வருஷந்தோறும் விழாக்காலங்களில் வைதிக தர்மப்படி யாகங்களும், வேதகோஷங்களும், ஸந்தர்ப்பணைகளும் இவ்விடத்தில் வெகு விமர்சையாய் பக்தகோடிகளினால் நடத்தப்பட்டன. இச்சிறு ஆலயத்தில் நடைபெற்ற ஸகல வைபவங்களையும் விவரிப்பதற்கு ஸாத்தியமில்லை. நேரில்கண்டு அநுபவித்தவர்களுக்குத்தான் நன்கு விளங்கும். மூர்த்திகளுக்கு செய்யப்படும் அபிஷேக அலங்கார தீபாராதனைகளும், நிவேதனங்களும் யாவரையும் பரவசமடையச்செய்யும். ஆண்டிகள் முதல் அரசர்கள் ஈறாக யாவரும் வருஷந்தோறும் இங்கு வந்து தெய்வதரிசனம் செய்து மஹாஸன்னிதானத்தின் கிருபைக்காளாகி பிரஸாதங்கள் பெற்று தம் தம் மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றிக்கொண்டு செல்வார்கள். மடாலய வளர்ச்சிக்கும்



ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி

ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்



ஸ்ரீ ஸித்தேச்வரி பீடாதிபதி
ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்
[1937-ல் அளித்த காக்ஷி]

இடதுபுரம் நிற்பவர் "பக்தசிகாமணி" S சுந்தரமய்யர்
வலதுபுரம் நிற்பவர்: "குருஸேவாதுரிண" V. T. S. சேவுக பாண்டிய தேவர், சேத்தூர் ஜமீன்தார்

போதிய உதவிகளும் புரிந்துவந்தார்கள். குறுகிய காலத்திலேயே ஸ்வாமிகளின் கீர்த்தியும் மூர்த்திகளின் வீக்ஷண்யமும் நம் நாட்டில் பலபாகங்களிலும் பரவி பக்தகோடிகள் வந்து குவிந்த வண்ணமாயிருந்தார்கள்.

ஸ்வாமிகள் எதற்காக ஆசிரமம் நிர்மாணம்செய்து மூர்த்திகளை பிரதிஷ்டைசெய்து வருகிறார் என்பதின் காரணங்கள் எவருக்கும் நெடுநாட்கள்வரை தெரியாமலேயே இருந்துவந்தது. பின்பு ஒருநாள் அதன் காரணங்களை அறிவிக்க வேண்டுமென்று நாங்கள் ஸ்வாமிகளிடம் கேழ்க்கவே அதற்கு ஸ்வாமிகள் சொன்னதாவது-

"உலகில் அடிக்கடி பல பெரிய மஹான்களும், தபஸ்விகளும் ஒன்றுகூடி லோக ஸம்ரக்ஷணார்த்தமாய் கலந்து ஆலோசித்து அவ்வப்பொழுது தகுந்த பரிஹாரங்கள் செய்து நல்லொழுக்கங்களை புகட்டிவருகிறார்கள். அதைப்போல் யானும் பொதியமலைச் சாரலில் தங்கி ஜனங்களுக்கு ஹிந்துமத விஷயங்களைப் பற்றி எடுத்துக்காட்டி வேத மகிமைகளை நிரூபித்து எல்லோருக்கும் அதன் அப்பியாச முறைகளை போதிக்கவே இங்கு வந்தேன். நான் இமயமலைப் பிரதேசங்களில் வாசஞ்செய்து வந்த ஸமயம் ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதிகளாகிய ஸ்ரீ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் பல இடங்களில் திக்விஜயம்செய்து அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள பாபநாசத்திற்கு வந்து முகாமிட்டிருந்த ஸமயம் என்னையும் அங்கு வரும்படி அழைக்கவே, நானும் சென்றிருந்தேன். நாங்கள் இருவரும் முறைப்படி ஆசனமிட்டு

யோகநிஷ்டையில் அமர்ந்து ஆனந்தபாஷ்பம் சொரிந்து கொண்டிருக்கையில், ஆசார்யாள் இப்பிரதேசங்களில் ஆதிசங்கரமடம் ஒன்றை ஸ்தாபித்து, ஸ்ரீ சங்கர மதத்தை வியாபகம்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவருடைய ஸம்மதத்தையும் அருளினார்கள். அதன்காரணமாய் மடாலயம கட்டப்பட்டு ஆதிசங்கரர் பிரதிஷ்டையும், மற்ற மூர்த்திகளின் பிரதிஷ்டைகளும் செய்யப்பட்டன" என்று எங்களுக்கு அறிவித்தார்கள்.

## 5 சேத்தூர் ஜமீந்தார்.

பாண்டியநாட்டில் பல ஜமீன்கள் உண்டு. அவற்றுள் மிக முக்கியமானவைகளில் சேத்தூர் ஜமீன் ஒன்று. இதை ஆண்டுவந்தவர்கள் பரம பக்தர்களாகவும், நல்ல பராக்ரமசாலிகளாகவும் இருந்தார்கள். தற்சமயம் ஜமீனை ஆட்சி புரிபவர் ஸ்ரீ V. T. S. சேவுகபாண்டியத் தேவர். இவர் நல்ல புகழ்பெற்றவர். தெய்வபக்தியில் பெரிதும் ஈடுபட்டவர். கேட்போர்க்கு இல்லை என்னாது வழங்கும் வள்ளல். தயாளகுணம் படைத்தவர். கலைகளிலும், கலைவளர்ச்சியிலும் பெரிதும் ஊக்கம் காட்டுபவர். நல்ல இசையறிவும், லயஞானமும் உடையவர். "கஞ்சரா" என்னும் தாளவாத்தியத்தைக் கையாள்வதில் நிகரற்றவர். இவர் அநேக வித்வான்களுக்கும், பண்டிதர்களுக்கும் ஆதரவு காட்டிவருகிறார்கள்.

சேத்தூர் ஜமீன்தாரும் எனது தந்தையும் இளமைமுதற்கொண்டே நல்ல நட்புகொண்டவர்கள். ஸ்வாமிகள் குற்றாலத்தில் மடாலயம் ஸ்தாபனம் செய்வதற்குமுன்

ஜமீன்தாரவர்களுக்கு நெடுநாட்களாகவே உடல்நலங் குன்றி ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டிருந்தது. எத்தனையோ அரிய வைத்திய சாதனங்களை உபயோகித்தும் குணம்பெற்றபாடில்லை. கடைசியில் என் தந்தைமூலம் ஸ்வாமிகளின் திறமைகளைப்பற்றி அறிந்த ஜமீன்தாரவர்கள் ஸ்வாமிகளிடமே சிகித்சை செய்துகொண்டதின் பேரில் பிணி நீங்கி பூர்ண குணமடைந்தார்.

இதிலிருந்து ஜமீன்தாரவர்களுக்கு ஸ்வாமிகளிடம் நல்ல பக்தியும், விச்வாஸமும் ஏற்பட்டு நெருங்கிய தொடர்பும் உண்டாயிற்று. ஜமீன்தாரவர்கள் மடத்திற்கே பரம பக்தராய்விட்டார். ஜமீன்தாரவர்களின் கருணாரஸ ஸ்வபாவத்தையும் அரூத குருபக்தியையும் கண்டு ஸ்வாமிகள் இவரை தம் பரம சிஷ்யர்களில் ஒருவராய்ச்சேர்த்துக் கொண்டார்கள். ஸ்வாமிகளின் தர்ம கைங்கர்யங்களுக்கு வேண்டிய இடம், பொருள், மற்றும் ஏனைய உதவிகளும் செய்து இப்பெரிய சாசுவத தர்ம கைங்கர்யத்தை நீடித்து நடத்திவருவதற்கு முக்கிய காரணஸ்தர்களாயிருப்பவர்களுள் சேத்தூர் ஜமீன்தாரவர்களே முதன்மையானவர் என்பது என் துணிவு.

ஜமீன்தாரவர்களும் அன்னாரின் குடும்பமும் என்றென்றும் குருபக்திக்கு ஆளாகி நீடூழிகாலம் வாழ இறைவனை பிரார்த்திப்போமாக.

# அத்தியாயம் 5.

## ஸ்ரீ தத்தாத்திரேய மந்திரம்.

### 1. கல்நாட்டு விழா.

எனது பிதா மிட்டாதார் சுந்தரமய்யர் அவர்கள் குற்றாலத்திற்கு வெகு அண்மையிலுள்ள காசிமேஜர்புரம் என்ற சிறு கிராமத்தில் ஓர் கட்டிடம் கட்டத் தமக்கு இடம் வாங்கியிருந்தார். தண்டாயுத பாணி ஆலயத்தைச் சேர்ந்த அர்ச்சகர், கணக்கர் முதலிய சிப்பந்திகள் வசிக்க திருக்குற்றாலநாதர் தேவஸ்தான அதிகாரிகளால் கொடுக்கப்பட்டிருந்த இடத்தை மறுபடியும் ஆலய உப யோகத்திற்குக் கேட்டதனால் காலிசெய்யப்பட்டது. உடனே என் பிதா காசிமேஜர்புரத்தில் தமக்காக வாங்கி யிருந்த நிலத்தில், தனக்கும், மடத்து சிப்பந்திகளுக்கும் வீடுகள் கட்டிவிட உத்தேசித்து, அஸ்திவாரக் கல்நாட்டு வதற்கு ஓர் நல்லநாள் பார்த்துச் சொல்லும்படி ஸன்னி தானத்தைக் கேட்டார். ஸ்வாமிகள் ஒரு நல்லநாள் குறிப்பிட்டதும், அந்த நன்னாளில் கல் நாட்டுவதற்கு என் தந்தை புறப்பட்டபொழுது ஸ்வாமிகளும் கூடச் சென்றார்கள். போகும் வழியிலுள்ள "பரமானந்தத் தோப்பு" என்னும் சேத்தூர் ஜமீன்தாரவர்களுடைய தோட்டத்தின் அருகிற் சென்றதும் ஸ்வாமியவர்கள் அத்தோட்டத்திற்குட் புகுந்து, வடக்கோரத்திலிருந்த ஓர் பெரிய மண் புற்றின்மீது ஏறி நின்று, அப்படியே

அங்கு நிஷ்டையில் அமர்ந்து சற்று நேரங்கழித்து அந்த இடத்திலும் ஒரு கல் நாட்ட அனுமதி யளித்து விட்டு மடத்திற்குப் போய்விட்டார். உடனேயே அன்று அதாவது 1091-ம் ஆண்டு ராக்ஷஸ வருஷம் தை-மீ 4உ (17—1—1916) திங்கட்கிழமை கூடிய சுபதினத்தில் அந்த இரு கல் நாட்டு விழாக்களும் என் பிதா அவர்களால் செய்யப்பட்டன.

பரமானந்தத் தோப்பில் கல்நாட்டு விழாச் செய்த விஷயத்தை தோட்டக் காவலாளி ஜமீன்தார் அவர்களுக்கு எழுதி அறிவித்துவிட்டான். பரமானந்தத் தோப்பில் நாள் செய்யப்பட்ட இடம் ஏற்கனவே தனக்குச் சொந்தக் கட்டிடம் கட்டிக்கொள்ள நிச்சயித்தது, ஆதலால் ஸ்வாமிகள் எவ்விதமான கட்டிடமும் கட்டலாகாது என்று ஜமீன்தார் அவர்கள் கடிதம் எழுதிவிட்டார். இதையறிந்த ஸ்வாமிகள் தனக்கு முக்கியமான இரு சிஷ்யர்களில் ஒருவர் மிட்டாதார், மற்றொருவர் ஜமீந்தார். இவர்கள் இருவரும் கட்டிடம் கட்டிக்கொள்ளவே நாள் செய்யப்பட்டது என்று வெகு சாதுர்யமாய்ப் பதில் எழுதி விட்டார்.

சிலவருஷங்களுக்குப் பிறகு ஜமீன்தார் அவர்களே தமது பரமானந்தத் தோப்பை ஸ்வாமிகளுக்கு தர்ம சாஸனமாக எழுதிக் கொடுத்துவிட்டார். இந்த இடத்தில்தான் ஸ்வாமிகளால் "தத்தாத்திரேய மந்திரம்" கட்டப்பட்டு, ஸ்ரீ ஸித்தேச்வரீ பீடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தியும் இந்த இடத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மிட்டா

தார் சுந்தரமய்யர் மனையும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கே நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## 2. ஸ்ரீ தத்தாத்ரேய பிரதிஷ்டை.

சேத்தூர் ஜமீன்தாரவர்களால் ஸ்வாமிகளுக்கு தர்ம சாஸனமாக எழுதிக்கொடுக்கப்பட்ட பரமானந்தத் தோப்பில் முன்பே மூளைபிடித்து நாள் செய்யப்பட்ட இடத்தில் இரண்டு சிறிய ஆலயங்கள் கட்டி, ஸ்ரீ விநாயக மூர்த்தியையும், ஸ்ரீ தத்தாத்ரேய மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்தார்கள். ஸ்ரீ தத்தாத்ரேய மூர்த்தியானது, சுத்தமான சலவைக் கல்லில் செய்யப்பட்டு, கண், புருவம், உதடுகள் இவைகளுக்கெல்லாம் வர்ணம் தீட்டப்பட்டு ஜயிப்பூர் தேசத்திலிருந்து ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளால் அனுப்பப்பட்டது.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ பிரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவர். நமது ஸ்வாமிகளைவிட வயதில் பெரியவர். இவரும் நமது ஸ்வாமிகளும் ஒரே குருவினிடம் சிஷ்யராக இருந்துவந்ததாக நமது ஸ்வாமிகள் என்னிடம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு ஸமயம் சென்னையில் நம் ஸ்வாமிகள் வந்திருந்தபோது ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் கூட வந்திருந்தார்கள். பிரஹ்மானந்தர் வயதில் முதிர்ந்தவரானாலும் நம் ஸ்வாமிகளிடம் பரம விச்வாஸமும், பிரியமுமுள்ளவராக இருந்துவந்தார். ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வா

மிகள் காசியில் பெரிய மடாலயம் கட்டி மூர்த்திகள் பிரதிஷ்டைகள் செய்திருக்கிறார். நமது ஸ்வாமிகள் ஜீவித காலத்திலேயே இவர் ஸித்தியடைந்துவிட்டார்.

பிரதிஷ்டைசெய்த ஸ்ரீ தத்தாத்திரேய விக்ரஹம் ரொம்ப அழகாக பார்ப்பவர்கள் மனதை வசீகரிக்கும் சக்திவாய்ந்தது. இந்த மூர்த்தி எதிரில் கீழ்ப்பக்கம் கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஸ்ரீ தத்தாத்திரேயரின் பாதுகைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அபிஷேகாதிகள் இந்த பாதுகைகளுக்குத்தான் செய்யப்படும்.

இப்பிரதிஷ்டைகள் முடிந்து நீபாராதனைசெய்யும் ஸமயம் ஸ்வாமிகள் ஸ்ரீ தத்தகீதையில் சொல்லியபடி யோகாப்பியாஸங்கள் செய்து நின்றுகொண்டே சுவாஸ பந்தனம் செய்து, வயிற்றை எக்கி மார்போடு சேர்த்து, கழுத்தையும் உள்ளிழுத்துக்கொண்டு புடைத்த மார்புடன் ஆனந்த நிஷ்டையில் லயித்துவிட்டார்கள். இந்த சம்பவங்களை எல்லாம் கண்ணுற்று பக்தர்கள் யாவரும் குதூகலம் மேலிட்டு ஆனந்தமடைந்தார்கள்.

இந்த பிரதிஷ்டைகளின் வைபவம் நம் பாரதநாட்டில் பல்வேறு இடங்களில் பரவலாயிற்று. பக்தர்கள் கூட்டங் கூட்டமாய் வரத்தொடங்கினர். சென்னைமாநகரிலும் ஸ்வாமிகளுக்கு சிஷ்யர்கள் அதிகமாயினர். கோமுட்டி செட்டிகள் என்னும் வைசியர்களும், குஜராத்தியர்களும் ஸ்வாமிகளிடம் வெகுவாய் வந்து சிஷ்யர்களாயினர். குஜராத்தியர்கள் ஸ்வாமிகளிடம் வந்து,

காட்டிய அந்தரங்க பக்தி விச்வாஸம், ஏனையோருக்கும் ஓர் வழிகாட்டியாயிருந்தது. குஜராத்தியர்கள் குடும்ப சகிதம் ஆண், பெண், குழந்தைகள் முதலாக யாவரும் ஸ்வாமிகளைத் தரிசித்து, வணங்கி, கைகட்டி, பஜனை செய்துகொண்டே பிரதக்ஷிணம் செய்து, புஷ்பத்தினால் சிரஸ்முதல் பாதம்வரை அர்ச்சித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ஸ்வாமிகளினால் வழங்கப்படும் பிரஸாதத்தைப் பெற்றுச் செல்வார்கள். கோமுட்டி செட்டிமார்களும் மற்றும் அநேக பக்தர்களும் ஆலயத்தை விசாலப்படுத்தி விருத்திசெய்வதற்குத் தேவையான பொருளுதவி செய்தார்கள்.

பக்தர்கள் வந்தால் இங்கே தங்குவதற்கு இடவசதியாக ஓர் பெரிய மண்டபமும், ஸ்வாமிகளின் வசதிக்கு ஓர் தனி அறையும், நைவேத்தியாதிகளைத் தயார்செய்ய ஓர் மடப்பள்ளியும் கட்டவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. உடனே கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்வாமிகளின் சிஷ்யர்களில் இன்ஜினீயர்களாயிருந்தவர்கள் கட்டிட வேலையை மேல்பார்வையிட்டு கவனிக்க முன்வந்தார்கள். பெரிய திட்டம் (Plan) வகுக்கப்பட்டு மடாலயத்தைக் கட்டி முடிக்க சுமார் ரூபாய் 50,000 வரை செல்லும் என்று திட்டமிடப்பட்டு, கட்டி முடிக்க சுமார் ஒன்பது மாதகாலமாவது கட்டாயம் வேண்டும் என்றும் மதிக்கப்பட்டது. கட்டிடவேலைக்குத் தேவையான சாமான்கள் எல்லாம் பல்வேறு இடங்களினின்றும் சிஷ்யர்களால் அனுப்பப்பட்டு வந்தன. வேலைசெய்யும் சிப்பந்திகளின் ஊக்கத்தினாலும் வேலைத்திறமையினாலும்

ஸ்வாமிகளின் தெய்விக சக்தியினாலும் கட்டிடங்கள் யாவும் திட்டமிட்ட பணத்திற்கு இரட்டிப்பான துகையில் நாற்பது நாட்களில் கட்டி முடிவுபெற்றன. கண்ணுறும் யாவரும் வியப்புற்று "இவ்வளவு குறுகிய காலத்தில் இக் கட்டிடத்தை எவ்வாறு கட்டி முடிக்க முடிந்தது? ஒரு வேளை இது ஈசனது சிருஷ்டியாகவே இருக்குமோ?" என்றெல்லாம் பேசினர். இந்த கட்டிடத்திற்கு "ஸ்ரீ தத் தாத்திரேய மந்திரம்" என்றும் "வைதிக மடாலயம்" என்றும் பெயரிட்டனர்.

## 3. ஸ்ரீ தத்தாத்திரேயர் வரலாறு.

ஸ்ரீ தத்தாத்திரேயரைப் பற்றியும், அவரது அவதார மகிமைகளைப் பற்றியும் அறியாதார் நம் பாரதநாட்டில் அதிகமிரார். ஆனாலும் ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தியையும், தத்தாத்திரேய ஆராதனை, உபாஸனை முதலியவற்றையும் எடுத்துக்கூறுவதற்குமுன் அவரது அவதாரத்தைக் குறித்து சுருக்கமாய்ச் சொல்லத் துணிந்தேன்.

நம் பாரதநாட்டில் ஸப்தரிஷிகளில் ஒருவரான அத்திரி மகா முனிவர் தம் தருமபத்தினி அனசூயா தேவியுடன் மிகவும் ஒழுக்கமான முறையில் வாழ்க்கை நடத்தி வந்தார். அனஸூயா தேவி ஓர் மகா பதிவிரதை. இவர் தம் கற்புக்கு பங்கம் நேரும்படி எப்பொழுதும் நடந்து கொண்டதேயில்லை, என்பது உலகறிந்தது.

ஒருஸமயம், நாரதமுனிவரின் சூழ்ச்சியின் காரணமாய் மும்மூர்த்திகளின் தேவியர்களாகிய ஸ்ரீ ஸரஸ்வதி,

லக்ஷ்மி, பார்வதி மூவரும் அனஸூயா தேவியின்மீது பொறாமை மேலிட்டு அவரது கற்புநிலையை பங்கப்படுத்த வேண்டுமென்று உத்தேசித்து தம் பிராணநாயகர்களிடம் அறிவித்தார்கள். அவர்களும் அதற்கிணங்கி அனஸூயா தேவியை சோதிக்கக் கருதி, மூன்று துறவிகளாய் வேடம்பூண்டு அத்திரி மகாமுனிவர் இல்லாத சமயம் கண்டு அவரது ஆசிரமத்திற்கு வந்து பிக்ஷை கேட்டனர். அனசூயை பிக்ஷையிட வந்ததும் அந்த பிக்ஷையை அவர்கள் மூவரும் ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து, நிர்வாணமாய வந்து பிக்ஷையிடும்படி கேட்டனர். கற்புநிலையில் சற்றும் வழுவாத ஒரு ஸ்திரீ இதற்கு எவ்வாறு ஒப்புக்கொள்ள இயலும்? பிக்ஷையை இடாமல் துறவிகளைத் திருப்பி அனுப்புவதும் நம் பாரதநாட்டில் வழக்கமில்லை. *அது கேடு விளைவிக்கும் என்று கருதுபவர்கள நம் பாரதமக்கள். இந்த நிலையில் என்னசெய்வாள் அனசூயா தேவி? தர்மசங்கடமான நிலைமை! உடனே எதற்கும் யோஜிக்காமல் தன் பாதிவ்ரத்ய சக்தியினால் அம்மூன்று துறவிகளையும் மூன்று குழந்தைகளாய் மாற்றி தான் அக்குழவிகளின் தாய் என்ற நிலைமையில் கலசப்பாலூட்டிச் சீராட்டித் தொட்டிலில் இட்டுத் தாலாட்டினாள்.

மும்மூர்த்திகளும் சிசுக்களாய் மாறி அனசூயா தேவியிடம் வளர்ந்துவரும் செய்தியை திரிலோக சஞ்சாரியாகிய நாரதரின் மூலம் கேள்யுற்ற மூன்று தேவியர்களும் அத்திரி முனிவரின் ஆசிரமம் வந்து அனசூயா தேவியிடம் "தேவி! அனசூயா! நீயே மகா பதிவிரதை.

மூவுலகிலும் உனக்கு ஈடு எவரைப் புகல இயலும்? உன்னிடம் வளரும் குழந்தைகள் மூவரும் மும்மூர்த்திகளே. நாங்கள் செய்த பிழையை பொறுத்து எங்களுக்கு மாங்கல்ய பிக்ஷையளித்து எங்கள் கணவர்களையும் அவரவர்களின் சுய உருவுடன் எங்களுக்களிக்க வேண்டுகிறோம்" என்று கெஞ்சி இறைஞ்சினர். அனசூயா தேவியும் அவ்வாறே மும்மூர்த்திகளையும் சுய உருவாக்கி அனுப்பினர். உடனே திரிமூர்த்திகளும் தங்கள் தேவியருடன் யாவருக்கும் பிரத்யக்ஷ தரிசனமளித்தருளினர்.

அத்திரி மகா முனிவர் மும்மூர்த்திகளும் தமக்கு ஓர் புத்திரனை அவதரிக்க வேண்டுமென்று வரம் கேட்டனர். அதன்பயனாய் சின்னாட்களில் அத்திரிக்கும் அனசூயா தேவிக்கும் ஸ்ரீ தத்தாத்திரேயர் புத்திரனாய் அவதரித்தார். ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளின் அம்சம் என்பதற்கறிகுறியாய் மூன்று முகங்களுடனும் மூவிரு கரங்களுடனும்கூடி விளங்கினார் ஸ்ரீதத்தாத்திரேயர். இவர் வளர்ந்து பிற்காலத்தில் ஒரு மகா தபஸ்வியாகி ஸகல வேத சாஸ்திரங்களிலும் கற்றுத்தேர்ந்த ஓர் மகானாகி பிரஹ்மசர்ய விரதம் பூண்டு ஒரு மகரிஷியானார்.

ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தியுடனிருக்கும் நாய்கள் நான்கும் நான்மறைகளாகும். இவரது வாஹனம் ரிஷபம். இவர் ஆயிரம் கரங்கள் படைத்த கார்த்தவீரியார்ஜுனனது வம்சத்துப் பரம்பரை குலகுருவாகவும், மகா பக்த சிகாமணியாய்த் திகழ்ந்த பிரஹ்லாதாழ்வாருக்கு பரம குருநாதராகவும் இருந்தனர் என்பதும் உண்டு.

## 4. ஸ்ரீ தத்தாத்திரேய மஹிமை.

வடநாட்டைக் காட்டிலும் நம் தென்நாட்டில் ஸ்ரீ தத்தாத்திரேய ஆலயங்களும், ஆராதனையும் மிக மிகக் குறைவு. அதனாலேயே நம் மௌனானந்த ஸ்வாமிகள் நமது பிரதேசத்திலும் சைவ வைஷ்ணவ ஸம்பிரதாயங்களில் வேறுபாடுகளில்லை என்று நிரூபிக்கவும், ஸமயாசாரியர்கள் யாவரும் ஒன்றுகூடி நல்வழிப்பட்டு ஹிந்து ஸமயத்தை வளர்க்கவும், வேற்றுமையற்று தெய்வவழிபாடுகள் நடத்துவதற்கும், யாவருக்கும் தத்தாத்திரேய உபாஸனையைப் போதிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் திருக்குற்றாலத்திலும் ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தனர்.

நம் பிரதேசத்தில் மற்றும் ஒரு தத்தாத்திரேய ஆலயம் உளது. அது சேலம் ஜில்லாவைச் சேர்ந்த சேந்தமங்கலம் என்னும் ஊருக்கு அடுத்துள்ள கொல்லிமலையின்மீது பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

அந்த ஆலயத்தைக்கட்டி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தவர் ஸ்ரீ ஸ்வயம்பிரகாச பிரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

தத்தாத்ரேய மகிமைகளைக் குறித்தும், உபாசனை பூஜாமுறைகள் முதலியவற்றைப் பற்றியும் "தத்தாத்ரேய உபநிஷத்", "தத்தகீதை" என்ற நூல்களில் அதிகமாய்க் காணலாம். அதன் பொருளை எளிதில் அறிந்துகொள்வது கடினம். பெரிய மகான்கள் யாவரும் அநேகமாய் தத்தாத்ரேய உபாஸகர்களாகவே இருப்பார்

கள். நம் மௌனானந்த ஸ்வாமிகளின் குருநாதர் ஸ்ரீவாஸுதேவானந்த ஸ்வாமிகளும் ஒரு பெரிய தத்தாத்திரேய உபாஸகர். நம் ஸ்வாமிகளும் தத்தாத்திரேய உபாஸனை செய்து ஸித்திபெற்று தம் பல சிஷ்யர்களுக்கும் உபதேசம் செய்து, ஆராதனைக்கும் ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தியின் சிறு விக்கிரஹத்தையும் தந்து ஆசீர்வதித்தருளினார்கள். இப் பெரும் பாக்கியம் பெற்றவர்களுள் யானும் ஒருவன். ஸ்வாமிகள் தத்தகீதையின் உயர்வைப்பற்றியும் பூஜாமுறைகளைப் பற்றியும் அடிக்கடி போதித்து வந்திருக்கிறார்.

தத்தாத்திரேய உபாஸனை செய்து ஸித்திபெற்றவர்கள் தங்கள் மனோபீஷ்டங்களை நினைத்த மாத்திரமே அடைவார்கள் என்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை. ஸ்ரீ ஸ்வயம்பிரகாச பிரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் பிரபல சிஷ்யர்களில் ஒருவரான ஸ்ரீ சாந்தானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் சிறிதுகாலம் என்னுடன் தங்கியிருக்கும் பாக்கியம் பெற்றிருந்தேன். ஜனஸமூகத்திற்கு ரோகம் முதலிய எவ்விதமான பாதைகளும் ஏற்படாமலிருக்க ஸ்ரீ தத்தாத்திரேய ஆராதனை மேலானதென்றும், நாரத மகரிஷியால் இயற்றி அருளப்பெற்றுள்ள ஸ்ரீ தத்தாத்திரேய ஸ்தோத்திரத்தில் ஏதாவது ஓர் அடியையாவது ஒருவன் உச்சரித்து பலதடவை ஜபம் செய்து வந்தால் பிணி முதலிய எந்தவிதமான உபத்திரவங்களும் அணுகாது என்றும் அவர் அடிக்கடி என்னிடம் சொல்லுவதுண்டு. அந்த ஸ்தோத்திரத்தை அனுபந்தத்தில் சேர்த்திருக்கிறேன். பக்தர்கள் யாவரும் அதை பஜித்து

ஸம்பத்துக்களையடைய வேண்டும் என்ற அவாவுடன் த்ரிமூர்த்திகளின் அம்சமான ஸ்ரீதத்தாத்திரேயரின் மலர் பதங்களில் வணங்குகிறேன். வாழ்க தத்தாத்திரேய பக்தர்கள்!

---

## அத்தியாயம் 6

## தேவாலய பிரதிஷ்டைகள்

### 1. ஸ்ரீராஜராஜேசுவரி பிரதிஷ்டை

அடுத்தாற்போல் அம்பாள் பிரதிஷ்டையும் செய்ய வேண்டுமென்று ஸ்வாமிகளுக்கு அபிப்பிராயம் தோன்றிற்று. ஸ்வாமிகளின் ஸங்கற்பப்படி ஸ்ரீ ராஜராஜேசுவரீ தேவியையும், ஸ்ரீ காமேசுவரரையும் புதுக்கட்டிடத்தில் ஸன்னிதானத்திற்கென்று குறிப்பிடப்பட்ட அறையில் பிரதிஷ்டை செய்வதென்று நிச்சயிக்கப்பட்டது. அந்த சமயத்தில் எனது பிதாவுக்கு தேக அஸௌக்கியம் ஏற்பட்டு நாங்கள் யாவரும் சென்னையில் இருந்தோம். பிரேரேபித்த தேவீ பிரதிஷ்டையை கூட இருந்து நடத்த மார்க்கமில்லையே என்று என் பிதா வருந்திக்கொண்டே இருந்தார்கள்.

பிரதிஷ்டை தினத்திற்கு முன்னாள் அதிகாலையில் நான்கு மணி சுமாருக்கு குற்றாலத்தில் தத்தாத்திரேய மந்திரம் என்ற நூதன கட்டிடத்தில் நடு அறையில்



ஸ்ரீ தத்தாத்திரேய மூர்த்தி.



ஸ்ரீ ராஜ ராஜேச்வரி

அம்பிகை பிரதிஷ்டை செய்யப்பட்டு தாம் தரிசிப்பதாக என் பிதா கனவு கண்டார்கள். உடனே ஸ்வாமிகளுக்கு இந்த சொப்பன விஷயத்தைப் பற்றி தந்தியடித்து அறிவிக்கப்பட்டது. தந்தியைப் பார்த்து ஸ்வாமிகள் உடனே நிஷ்டையில் அமர்ந்தார்.

பிறகு என் பிதா சொப்பனத்திற் கண்டபடி நடு அறையில் தான் அம்பிகை பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்றும் தேவிக்கு அதுதான் ஸம்மதம் போலும் என்று கூறி பழைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டார்கள். நடு அறையிலேயே 1092ம் ஆண்டு நள வருஷம் புரட்டாசிமீ 18உ (3—10—16) ஸப்தமீ மங்கள வாரம் மூலா நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் ஸ்ரீ ராஜ ராஜேச்வரி தேவி பிரதிஷ்டையையும், பிறகு அடுத்தாற் போல் ஸ்ரீ காமேச்வரர் பிரதிஷ்டையையும், அநேக தேவீ உபாஸகர்களும் வைதிகர்களும் புடைசூழ ஸ்வாமிகளே மங்களகரமாகச் செய்து முடித்தார்கள். அதே முகூர்த்தத்தில் தத்தாத்திரேயர் ஸன்னிதிக்குப் பக்கத்தில் ஸ்ரீ ஆஞ்ஜனேயர் பிரதிஷ்டையையும் செய்தார்கள்.

ஸ்ரீ ராஜராஜேச்வரி பிரதிஷ்டைக்கு ஏற்பட்ட செலவுகள் முழுவதையும், திருநெல்வேலிக் கடுத்துள்ள பாளையங்கோட்டையில் வசித்து வந்த, கியாதி பெற்ற திருவாளர் வெங்கு பாட்சா முதலியார் அவர்களின் வாரீஸ்தாரரான, திருவாளர் பிங்களநேச முதலியார் அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இக் குடும்பத்தாரின் பராமரிப்பில் இந்த ஜில்லாவில் அநேக ஆலயங்களும், சென்னை மாநகரில் சில கோவில்களும்

இருந்து வருகின்றன. தவிர இன்னும் எத்தனையோ தர்ம கைங்கர்யங்களும் திருவாளர் வெங்கு பாட்சா அவர்களால் ஏற்படுத்தப்பட்டு இன்னும் அதிக கவனத்துடன் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இந்த தர்ம கைங்கர்யங்களுக்கு ஏராளமான சொத்துக்கள் மானியமாக இக்குடும்பத்தினரால் அளிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பத்தார்கள் என்றும் சிரஞ்சீவிகளாயும் நோயற்ற வாழ்வுடனுமிருந்து இன்னும் பல தலைமுறைகள் இம்மாதிரி சிறந்த தரும கைஙகர்யங்களைச் செய்துகொண்டு ஆனந்த வாழ்வு வாழ வேண்டுமென்று ஸ்ரீ ஜகன் மாதாவை நாம் ஒவ்வொருவரும் அந்தரங்கத்தே நினைத்து இறைஞ்சுவோமாக.

## 2. ஸ்ரீ ஸீதாராமாதிகளின் பிரதிஷ்டை.

சில வைஷ்ணவ பக்தர்களின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்வாமிகள் வைஷ்ணவ ஸம்பிரதாயப்படி பிரதிஷ்டைகள் செய்ய உத்தேசித்தார்கள். அதன்படி ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரத்தில் 1094 ஆண்டு காளயுக்தி வருஷம் தைமீ 9-ம்வ (22-1-1919) ஷஷ்டி புதனகிழமை ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் நாள் செய்து ஒரு ஆலயம் நிர்மாணித்து அதில் ஸீதாராமர், ஸந்தான கோபாலர், யோக நரஸிம்ஹ மூர்த்தி முதலியவர்களை பிரதிஷ்டை செய்வதற்கு ஸ்ரீ நாங்குநேரி வானமாமலை தோத்தாத்ரி மடம், 25வது பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீ கலியன் வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகளை அழைப்பதென்று



ஸ்ரீ ஸீதாராமர் [மூலவர்]



ஸ்ரீ ஸீதாராமர் (உற்சவ மூர்த்தி)

ஏற்பாடுசெய்து ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளிடம் தெரிவிக்கப்பட்டது. கல் திருப்பணி வேலைகள் யாவும் செய்யப்பட்டு கோவிலும் நிர்மாணிக்கப்பட்டது. எல்லா மூர்த்திகளின் விக்ரஹங்களும் தயாரிக்கப்பட்டன. விசேஷத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவும் பக்தர்களால் அனுப்பப் பட்டு மடாலயத்தில் வந்திறங்கியவண்ணமாய் இருந்தன. கோமுட்டி வைஷ்ணவ செட்டிமார்கள் யாவரும் சேர்ந்து பெருவாரியாக இப்பிரதிஷ்டைகளுக்கு உதவியளித்தனர்.

பிரதிஷ்டைக்கு பத்துநாட்களுக்கு முன்னமேயே வேதபாராயணங்களும் ஜபங்களும் ஆரம்பிக்கப்பட்டன. நாங்குநேரி ஜீயர் ஸ்வாமிகளும் தம் பரிவாரங்களுடன் வந்து ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தம், திருவாய்மொழி முதலிய பாராயணங்களும் நடைபெற்றன. எங்கும் பக்தகோடிகளின் கூட்டம், எங்கும் வேத கோஷம், எங்கும் பக்திபரவசம்.

நாளொன்றுக்கு சுமார் 2000 பேர்கள்வரை இந்த பத்துநாள் விழாவிலும் ஸந்தர்ப்பணைகள் வெகு விமரிசையாய் நடைபெற்றன.

ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமாநுஜரும் என்பதற்கொப்ப, ஸ்ரீ மௌனானந்தரும் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளும் யாதொரு சைவ வைஷ்ணவ வேறுபாடில்லாமல் நல்ல ஐக்ய பாவங் கொண்டு ஏக மனதுடன் மேற்கூறிய பிரதிஷ்டைகளை, 1094ம் ஆண்டு ஸித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் 20உ (5-7-1919) ஸப்தமி வெள்ளிக்கிழமை உத்தர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சிறப்பாய்ச் செய்துமுடித்தனர்.

இம்மாதிரியான விசேஷங்கள் இதற்குமுன் நடந்ததும் இல்லை, இனி நடக்கப்போவதும் இல்லை, என்றே சொல்லலாம். பிரதிஷ்டையின்போது நம் மௌன ஸ்வாமிகளால் காட்டப்பட்ட அநேக விநோதங்களைப் பின்னால் குறிப்பிடுகிறேன். அங்கு வந்து கூடியிருந்த சிஷ்யர்களின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

இந்த பிரதிஷ்டை வைபவத்தின்பொழுது பிரபல நியாயாதிபதிகள் முதலான ஸகல உத்யோகஸ்தர்களும் மகிழ்ச்சியுடனும், உத்ஸாகத்துடனும், உக்கிராண விசாரணை, வைதிக விசாரணை, ஸமாராதனை முதலிய கைங்கர்யங்களைப் பொறுப்பேற்று நடத்தினர். போலீஸ் இலாகாவிலுள்ள பக்தர்கள் பந்தோபஸ்து முதலிய செயல்களைக் கவனித்து வந்தனர். ஸ்திரீகள் ஸன்னிதிகளில் ஹாரத்தி எடுத்தல், கோலங்களிட்டு அலங்கரித்தல், சமையலுக்கு காய்கறிகள் நறுக்கிக் கொடுத்தல், போஜன காலங்களில் பரிமாறுதல் முதலிய செயல்களாற்றி வந்தனர்.

சிலநாட்கள் சென்று, ஸீதாராமர் கோவிலுக்குமுன்பு விசாலமான பெரிய மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. இக்கட்டிடம் ஸ்வாமிகளின் மேற்பார்வையிலேயே நிர்மாணிக்கப்பட்டது. என்ஜினீயர்கள் யாவரும் இக்கட்டிடத்தை ஸ்வாமிகளின் அபிப்பிராயப்படி கட்டினால் ஏழு வருஷங்களுக்குமேல் நிலைக்காது என்று கூறினர். ஆனால் இது கட்டப்பட்டு முப்பது வருடங்களாகியும் சிறிதும் பழுதேற்படவில்லை. இன்னும் பலவருடகாலம் பலமாகவே நீடித்திருக்கும் என்று தோன்றுகிறது.

இக்கோவிலில் வைஷ்ணவ ஸம்பிரதாயப்படி அந்தந்தக் காலங்களில் பூஜை, நிவேதனம் முதலியன இன்னும் நடைபெற்று வருகின்றன. பக்தர்களும் அவ்வப்போது வந்து தரிசனம் செய்து பிரஸாதங்கள் பெற்று செல்கின்றனர். பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளின் சக்தி அநேக பக்தர்களால் இன்னும் அனுபவிக்கப்பட்டு வருகிறது. சங்கா தோஷத்தால் பீடிக்கப்பட்டவர்களும் மக்கட்பேறில்லாதவர்களும், சித்தப் பிரமை பிடித்தவர்களும், இந்த ஸன்னிதிகளில் வந்து தரிசனம் செய்து, ஆலயத்தை வலம் வந்து, பிணி நீக்கம் பெற்று குணம் கண்டார்கள் என்பது கண்கூடு. வைஷ்ணவ யாத்திரிகர்களுக்கு இதுவும் ஓர் முக்கிய புண்ணிய க்ஷேத்திரமாகி விட்டது.

## 3. வேதபாராயண மஹிமை

ஸ்ரீ ஸீதாராமர் முதலிய மற்ற மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும் காலத்தில் ஸ்வாமிகள் வேதப்பிராஹ்மணர்களை நோக்கி "நீங்கள் வெகு சிரத்தையுடன் வேத பாராயணம் செய்தால் அதனுடைய சக்தியை பின்னால் நீங்களே அறிவீர்கள்" என்று அறிவித்தார். முற்கூறிய படி பிரதிஷ்டைக்குப் பத்து தினங்களுக்கு முன்னதாகவே பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ ராஜராஜேச்வரீ தேவியின் ஸன்னிதிக்கு முன்பு வேதபாராயண கோஷமும் ஸ்ரீ ஸீதாராமர் ஸன்னிதியின் முன் திருவாய்மொழி, திவ்யப்பிரபந்த கோஷ்டிகளும் நடை பெற்று வந்தன. பிரதிஷ்டைக்கு, யந்திர ஸ்தாபனத்திற்குத்

தேவையான தகடு பஞ்சலோகத்தில் செய்யப்பட்டு ஸ்வாமிகளாலேயே சக்ரம் வரையப்பட்டு, ஸ்வாமிகளின் உத்திரவுப்பிரகாரம் சில முக்கிய சிஷ்யர்களிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்தது. அதுவும் ஓர் தனிப்பெட்டிக்குள் வைத்துப் பூட்டி, சாவியையும் அவர்களே வைத்திருந்தனர். ஒவ்வொரு நாளும் வேதபாராயணம் நடைபெறும் ஸமயங்களில், யாவருடைய முன்னிலையிலும், அப்பெட்டி கொண்டு வரப்பட்டு, திறந்து அந்த யந்திரத்திற்கு கற்பூராரார்த்திகள் செய்யப்பட்டு, வேத பாராயணங்கள் முடிவு பெறும் வரை திறந்தே வைக்கப்பட்டு இருக்கும். பாராயணம் முடிவுற்றதும் அந்தத் தகட்டை நிறுத்து எடையிட்டு அதன் எடையைக் குறித்துக்கொண்டு மறுபடியும் உள்ளேயே வைத்துப்பூட்டி முத்திரைவைத்து விடுவார்கள். இம்மாதிரி அந்த பத்து நாட்களும் செய்யப்பட்டு வந்தது. இக்காரியத்தைக் கவனிப்பதற்கு ஸ்வாமிகள், விழாவிற்கு வந்த பக்தர்களில் சில பிரமுகர்களை நியமித்திருந்தார்கள். இக் கைங்கர்யத்தில் பொறுப் பேற்றுக்கொண்டவர்கள் யாவரும் பிரபல நியாயாதிபதி பதவி வகிப்பவர்களாய் இருந்தனர். அவர்கள் யாவரும் ஸ்வாமிகளின் கட்டளைப்படி பணி செய்து வந்தனர். பிரதிதினமும் அத்தகட்டின் எடையும தரமும், என்ன, என்பதை பொற்கொல்லர்கள் மூலம் யாவருக்கு முன்பும் நிறுத்து மாத்துறைத்து கவனிக்கப்பட்டு வந்தது. நாட்கள் செல்லச்செல்ல அத்தகடு வேதகோஷத்தின் மகிமையால் எடையிற்கூடியும் தரத்தில் உயர்ந்தும் வந்தது. நிறமும் மஞ்சளாக மாறி, பிரதிஷ்டைக்கு முதல் நாள்



ஸ்ரீ நாங்குநேரி வானமாமலை தோத்தாத்ரி மடம்
25-வது பட்டத்தை அலங்கரித்த
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீ கலியன்
வானமாமலை இராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்



ஸ்ரீ ஸித்தி விநாயகர்

சுத்தத் தங்கமாகவே மாறிவிட்டது. இந்த அற்புதத்தைக் கண்டு யாவரும் ஆனந்தித்தனர். இதன் மூலம் ஸ்வாமிகள் வேதபாராயணத்தின் மஹிமையை பிரத்யக்ஷமாய் நிரூபித்துக் காட்டினார்கள். பிறகு அந்த ஸ்வர்ணத்தகடு ஸ்வாமிகளின் புனித கரங்களாலேயே ஸ்ரீ ஸீதாராமர் விக்கிரகத்திற்கு அடியில் வைக்கப்பட்டு ஜீயர் ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## 4. ஸ்ரீ ஸித்திவிநாயகரின் பிரதிஷ்டை.

ஸ்ரீ ஸ்வாமிகள் தத்தாத்திரேய மந்திரத்தின் தென் கிழக்கு மூலையில் வாய்க்கால் ஓரமாக ஒரு பெரிய விநாயகர் பிரதிஷ்டையும் செய்தார்கள். பிரதிஷ்டை முடிந்து கர்பூராஹாரத்தி எடுக்கும் தருணம் இந்த விநாயகர் சிலை அசைந்துகொண்டேயிருந்தது. தவிர விநாயகரின் துடையில் மனிதர்களுக்குள்ளதுபோல் சுத்தமாக ஜீவநாடி அடித்துக்கொண்டிருந்தது. இந்த அற்புத நிகழ்ச்சியை யாவரும் பார்த்து அதிசயித்தனர். வந்திருந்த பெரிய வைத்திய நிபுணர்கள் எல்லாரும் சப்தவேதி (Stethoscope) என்னும் கருவியைக்கொண்டு நன்றாக பரிசோதித்து நாடி நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லி ஆச்சரியமடைந்தார்கள். சில விஷமக்காரர்கள் "கல்சிலையில் நாடி எப்படி ஓடும்? கல்லிற்குள் ஏதாவது இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கலாம்" என்று தர்க்கம் செய்து, பூகோள உருப்பு இலக்கணம் (Geology) படித்த நிபுணர்களைக் கொண்டுவந்து கல் விக்கிரஹத்தின்மேல் பல இடங்களில் தட்டிப் பார்த்தும், யாதொரு குற்றமுமில்லை

என்று சொல்லி வியந்தார்கள். இந்தமாதிரி நான்கு நாட்கள்வரை நாடி அடித்துக்கொண்டே இருந்தது.

இந்த விநாயகர் பிரத்தியக்ஷமான மூர்த்தி. அநேக பக்தர்கள் இவ் விநாயகரின் கருணையால் கார்யசித்தி பெற்றிருக்கிறார்கள். விநாயகருக்கு பக்தர்களால் வெள்ளியில் கவசம் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை கவர்னராக இருந்த H. E. ஸர். ஆர்சுபால்டுவையும் அவரது பத்தினியும், குற்றாலம் வந்த சமயம் நமது மந்திரத்திற்கு விஜயம் செய்தபோது, இவ்விநாயகரை தெரிசித்து பிம்பத்தின் ஆகிருதியையும் அழகையும் பார்த்து பிரமித்துப்போனார்கள். கவர்னரின் சீமாட்டி தனக்கு விநாயகர் விக்கிரஹத்தின் மேல் அதிக பிரியம் என்றும் சொன்னார்கள்.

## 5. ஸ்ரீ ஷண்முகர் பிரதிஷ்டை.

அநேக மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்ததுபோல் ஸ்ரீ ஷண்முகரையும் தத்தாத்திரேய மந்திரத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டால், பக்தர்கள் வேறெங்கும் செல்லாமலேயே, அவரவர்களுடைய இஷ்ட தேவதைகளை இம்மடாலயத்திலேயே தரிசித்துவர சௌகர்யமாய் இருக்கும் என்று பல சிஷ்யர்கள் ஸ்வாமிகளைப் பிரார்த்தித்தனர். ஸ்வாமிகள் தாமும் ஒரு ஸுப்ரஹ்மண்ய பக்தர் என்றும், அதனாலேயே முதன்முதலில் தண்டாயுதபாணியைப் பிரதிஷ்டை செய்ததாகவும், அதன் சக்தியினால்தான் இத்தனை மூர்த்திகளையும் இங்கு பிரதிஷ்டை செய்ய இயன்றதென்றும் தெரிவித்தனர். அப்பொழுது



ஸ்ரீ வள்ளி தேவஸேனா ஸமேத ஸ்ரீ ஷண்முகர்.



" பக்தமணி " R. S. சங்கரய்யர், B. A., B L.,
ரிடயர்டு ஜில்லா ஜட்ஜ், கோயம்புத்தூர்.

ஸ்ரீ ஷண்முகர் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்ட சிஷ்யர்களில் ஒருவரான, ஜில்லா நீதிபதியாகப் பதவி வகித்துவந்த ஸ்ரீ R. S. சங்கரய்யர் அவர்கள் தம் மனைவியுடன் மடாலயத்திற்கு வந்திருந்தனர். இந்த ஷண்முகர் பிரதிஷ்டைக்கு ஏற்படும் செலவுகளை ஸ்வாமிகள் ஸ்ரீ சங்கரய்யர் அவர்களையே ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, அவரிடம் யந்திரத்திற்கு வைக்கப்படும் ஓர் செம்புத்தகட்டைக் கொடுத்து, அதில் அவரது கையொப்ப அடையாளமும் வாங்கப்பட்டு பூஜையில் வைக்கப்பட்டது. அதன்பின் ஸ்ரீ வள்ளீ தேவஸேனு ஸமேதராய் ஷண்முகர் விக்கிரஹமும் தயாரிக்கப்பட்டது. மடாலயத்தில் வடபுறம் சிறு ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. பிரதிஷ்டையின் முதல்நாள் பூஜையில் வைக்கப்பட்டிருந்த அதே செம்புத்தகடு ஸ்வாமிகளின் சக்தியினுல் நல்ல ஸ்வர்ணத் தகடாக மாறிவிட்டது. எல்லோரும் இந்த ஸம்பவத்தைக் கண்டு வியப்புற்றனர். பிறகு 1107ம் ஆண்டு ஆங்கிரஸ வருஷம் ஆடி-மீ 2உ (17—7—1932) பௌர்ணமி ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக பிரதிஷ்டையும் செய்விக்கப்பட்டது.

இந்த ஷண்முகர் ஸன்னிதியில் அநேக காவடிகளும், ஸ்ரீவள்ளீ தேவஸேனு பரிணய கதா காலக்ஷேபங்களும் அதிக விமரிசையாய் பக்தகோடிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்து திருக்கல்யாணம் முதலிய திருவிழாக்கள் நடத்தப்பட்டு மூர்த்தி எழுந்திருப்புகளும் நடைபெறும்.

## 6. ஸ்ரீ சாஸ்தா பிரதிஷ்டை

பரமானந்தத்தோப்பில் முன்பு சேத்தூர் ஜமீன்தார் வசித்துவந்த பங்களாவை ஸ்வாமிகள் கிரயத்திற்கு வாங்கியதும், அதையே வஸந்த மண்டபமாக நிர்மாணித்து, ஒவ்வொரு வருஷமும் திருவிழாக் காலங்களில் மூர்த்தி எழுந்திருப்புகள் செய்யப்பட்டும், வஸந்த நவராத்திரி உற்சவத்தின் பொழுதும் நவராத்திரி விஜய தசமியன்றும் ஸ்ரீ ராஜராஜேச்வரீ தேவியைப் பல்லக்கில் ஊர்வலமாக வஸந்த மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கட்டளைகளும் ஆராதனைகளும் நடத்துவது வழக்கம்.

இக் கட்டிடம் பார்வைக்கு கோழிமுட்டை வடிவமாயும், மிகுந்த விசாலமாயுமுள்ளது.

இக் காம்பௌண்டில் வஸந்த மண்டபத்திற்கு மேற்புறம், ஸ்வாமிகளால் 1107ம் ஆண்டு ஆங்கிரஸ வருஷம் ஆடிமீ 2உ (17–7—1932) பௌர்ணமி ஞாயிற்றுக் கிழமையன்று தர்மசாஸ்தா பிரதிஷ்டையும் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு நித்தியப்படி பூஜைகளும், நைவேத்தியாதி ஆராதனைகள் யாவும் செய்யப்பட்டு வருகின்றன. பங்குனி உத்திரத்தன்று விசேஷ வழிபாடுகளும் நடைபெறும்.

மழையின்றிப் பயிர்கள் வாடிக் கெடுவதாயிருந்தால் இந்த சாஸ்தாவுக்கு வழிபாடுகள் செய்து விசேஷ ஆராதனைகளும் (பிரீதியும்) செய்ய, உடனே மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுப்பதை யாவரும் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

# அத்தியாயம் 7.

## ஸ்ரீ ஸித்தேச்வரி பீடம்.

### 1. பீட ஸ்தாபனம்.

இங்கு திருவிழாக்கள் யாவும் வெகு சிறப்பாகவும், முக்கியமாக நவராத்திரி காலங்களில் பலவித வைபவங்களுடனும், மூர்த்தி எழுந்திருப்புகளுடனும், அடியார்கள் யாவரும் பக்தி என்னும் ஆனந்த வெள்ளத்தே மூழ்கி "காணக்கண்கள் கோடானுகோடி யிருந்திடினும் காணுதே!" என்று வியப்புறுமாறு நடைபெறும்.

மடாலயத்தின் உபயோகத்திற்குத் தேவையான பாத்திர வகைகளும், மூர்த்தி அலங்காரங்கள் முதலியவற்றிற்குத் தேவையான அணிகலன்களும், ஆடைகளும் அநேக அடியார்களால் நன்கொடையாகவே அளிக்கப்பட்டன. அன்னை ஸ்ரீ ராஜராஜேசுவரீ தேவி எழுந்தருள வெள்ளியினால் ஓர் அழகிய ஸிம்ஹ வாஹனமும், அன்ன வாஹனமும் ஆக்கப்பெற்றுள்ளன. மடாலயத்தின் சொந்தமாக ஓர் என்ஜின் (Engine) வைக்கப்பட்டு, மின்சார தீபங்களால் ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வசதிக்காக குழாய்கள் (Taps) வைக்கப்பட்டுள்ளன. அடியார்களும் சிஷ்யர்களும் வந்து தங்குவதற்கு வசதியாக பல சிறிய கட்டிடங்களும் கட்டப்பெற்றுள்ளன. மடத்தின் செலவுகளுக்கு அநேக நில புலன்கள வாங்கப்பட்டுள்ளன. பசு மந்தைகளும், கன்றுகாலிகளும் ஏராளமாய் நன்கொடையாக வந்தன.

இந்த மடாலயத்தில் அரிய பெரிய வித்வான்களாலும், பேரறிஞர்களாலும் பல இசை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் அடிக்கடி நிகழும்.

இந்த தத்தாத்ரேய மந்திரம் ஓர் பெரிய தேவஸ்தானம் போலாகி விட்டபடியால் பக்தர்களெல்லோரும் ஒன்றுகூடி ஸ்வாமிகளிடம் "இந்த மடத்திலும் ஏனைய மடங்களைப்போல் ஒரு பீடம் ஸ்தாபிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். ஸ்வாமிகளும் அதற்கிணங்கி ஒரு பீடஸ்தாபனம் செய்து அதற்கு ஸ்ரீ ஸித்தேச்வரி பீடம் என்று நாமகரணம் செய்து அவர்களே முதற் பீடாதிபதி ஸ்தானம் வகித்தார்கள். அதுமுதல் நமது ஸ்வாமிகள் "ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சங்கரமட ஸ்தாபனாசார்ய ஸ்ரீ ஸித்தேச்வரீ பீடாதிபதி ஸ்ரீ சிவ சிதாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

சிற்சில சமயங்களில் ஸ்வாமிகள் மஹாபண்டித சபைகள் கூட்டி பரீக்ஷைகள் நடத்தி பரிசுகளும், ஆப்த சிஷ்யர்களுக்கு கௌரவப்பட்டங்களும் வழங்கிவந்தார்கள். அப்படிப் பட்டம் பெற்றவர்களின் விபரங்களாவன:—

| பட்டம் | பெயர் | வழங்கிய தினம் |
|---|---|---|
| "தர்மரக்ஷக" | ஸ்ரீ மந்தரிப்ரகட நரஸிம்ஹ பந்துலு | 25-7-37 |
| "பக்தமணி" | ,, R.S. சங்கரய்யர், ஜில்லா ஜட்ஜ் | ,, |



1946-௵ ஸ்ரீ ஸித்தேச்வரி பீடாதிபதி
ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்
பக்தர்களுக்கு பட்டம் வழங்கிய காக்ஷி.
இடதுபுறம் கீழ் உட்கார்ந்திருப்பவர்களில்
2-வது 'பக்தமணி' M. சுப்ரமணிய அய்யர்
3-வது 'பக்தசேகர' T. விச்வனாத சாஸ்திரிகள்
நிற்பவரில் முதல் வரிசை இடதுபுறமிருந்து
2-வது 'ஆஸ்திகமணி' V. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
3-வது 'தர்மப்ரவீண' P. V. ரகுநாத சாஸ்திரிகள்
நிற்பவரில் 2-வது வரிசையில் நடுவில்
'ஆஸ்திகமணி' K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள்

| பட்டம் | பெயர் | வழங்கிய தினம் |
|---|---|---|
| "ஆஸ்திகமணி" | ஸ்ரீ K.S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஜில்லா ஜட்ஜ் | 25-7-37 |
| "பக்தபூஷண" | ,, வெங்கடசுப்பையா காரு | ,, |
| "பக்தசிகாமணி" | ,, S. சுந்தரம் அய்யர், மிட்டாதார் | 14-10-37 |
| "குருஸேவாதுரீண" | V.S. சேவுகபாண்டிய தேவர், சேத்தூர் ஜமீன்தார் | ,, |
| "தர்மப்ரவீண" | ,, P.V. ரகுநாத சாஸ்திரி, புதுக்கோட்டை ஜட்ஜ் | ,, |
| "ஆஸ்திகமணி" | ,, V. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், போஸ்டல் ஆடிடர் | 10-10-40 |
| "பக்தமணி" | ,, M. சுப்பிரமணிய அய்யர் இன்கம் டாக்ஸ் ஆபீசர் | ,, |
| "பக்தசேகர" | ,, T. விசுவநாத சாஸ்திரிகள், M.S.M. ரயில்வே | 30-9-41 |

## 2. ஸ்ரீ ஸித்தேச்வரீ கிரந்தாலயம்.

நம் மௌனானந்த ஸ்வாமிகளுக்கு புஸ்தகங்கள் வாசிப்பதில் விருப்பம் அதிகம். அரிய பல வேதாந்த கிரந்தங்களையும், யோகமார்க்கத்தைப்பற்றிக் கூறும் நூல்களையும், இதிகாசம், புராணம் முதலிய பல்வேறு புஸ்தகங்களையும், ஸ்வாமிகள் அரும்பாடுபட்டு சேகரித்து வைத்திருந்தார்கள். சிஷ்யர்களின் ஸந்தேகங்களைத் தீர்ப்பதற்குத் தம் வசமுள்ள நூல்களைக் கொடுத்து படிக்கச் செய்து உதவிபுரிந்து வந்தார்கள்.

ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயம் ஏற்பட்டு பல மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு, பல சிஷ்யர்களும், அடியார்களும், மற்றும் ஏனையோரும் வந்து தங்குவதற்கு சௌகர்யமாய் இடவசதிகள் செய்யப்பட்டன. பலரும் வந்து தங்கி மனச்சாந்தி பெறுவதற்கு இது ஓர் ஒப்பற்ற இடமாகிவிட்டது. அதற்கு ஸாதனமாய் இங்கு ஓர் வாசகசாலையையும் ஏற்படுத்திப் பற்பல பாஷைகளிலுள்ள நூல்களைச் சேகரித்து வைத்துவிட்டால், இத் தென்னாட்டிற்கே ஒரு பெரும் பாக்கியமாய்விடும் என்று எண்ணி, ஸ்வாமிகள் தம் வசமுள்ள புஸ்தகங்களுடன் இதர நூல்களையும் தருவித்து 1942-ளு ஜூலை-மீ 18உ இந்த வாசகசாலையை ஸ்தாபித்து, இதற்கு "ஸ்ரீஸித்தேச்வரீ கிரந்தாலயம்" என்று பெயரும் வழங்கினர்.

இந்த கிரந்தாலயம் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக பதவி வகித்துவந்த ஸ்ரீமான் V. S. ஹெஜ்மாடி, I.C.S. என்பவரால் திறந்துவைக்கப்பட்டது. பல பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், பண்டிதர்களும், பல்வேறு இடங்களிலிருந்து வந்து இவ்வரிய கிரந்தாலயத்தைப் பார்வையிட்டு நற்சாக்ஷி பத்திரங்களும் வழங்கியுள்ளார்கள்.

இந்த கிரந்தாலயத்திற்கு அரியநாயகிபுரம் ஸ்ரீ R.A. சாஸ்திரிகளும், சென்னை ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளும் மிகுந்த பிரயாசை எடுத்து அநேக நூல்களைச் சேகரித்துக் கொடுத்து முன்னணிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அன்னார் அவர்களுக்கும், மற்றும் இக் கிரந்தாலயம் வளர்ச்சி பெற்றிலங்கக் காரணமாயும் உதவியாயு

மிருந்த ஏனையோர்களுக்கும், நம் யாவருடைய மனப்பூர்வ மான நன்றி உரித்தாகுக!

இது ஸ்ரீ தத்தாத்திரேய மந்திரத்தில் வடபாகத்தில் ஓர் அழகிய தனிககட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்டு, நல்ல முறையில் நடத்தப்பட்டு, வாசகர்களுக்குப் பெரிதும் பயனளித்து வருகிறது. இக்கிரந்தாலயத்தில் இப் பொழுது,

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலத்தில் | 179 | கிரந்தத்தில் | 162 |
| தமிழில் | 255 | ஹிந்தியில் | 44 |
| ஆந்திரத்தில் | 517 | மலையாளத்தில் | 11 |
| தேவநாகரத்தில் | 1169 | உருதுவில் | 6 |

ஆக மொத்த நூல்கள் 2343 இருக்கின்றன. வாழ்க ஸ்ரீஸித்தேச்வரீ கிரந்தாலயம்!

## 3. பழனி கும்பாபிஷேகம்.

தென்தேசத்திலே பழனிமலைமீதிருக்கும் ஸ்ரீ தண்டா யுதபாணி ஆலயம் மஹா பிரஸித்தமானது. ஆறுபடை வீடுகளில் இது ஒன்று. சற்று ஏறக்குறைய 1912-ஆம் பழனி ஆண்டவனுக்கு அதிக விமரிசையாக கும்பாபி ஷேகம் நடத்த சில பக்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. தற்செயலாய், நமது ஸ்வாமிகள் அபிஷேகம் நடக்க இரண்டு தினங்களுக்கு முன் குற்றாலத்திலிருந்து திருச் சிராப்பள்ளிக்கு ஒரு பக்தரால் வரவழைக்கப்பட்டார்கள். ஆனால் ஸ்வாமிகளுக்கோ அல்லது திருச்சி பக்தருக்கோ பழனி கும்பாபிஷேகம் சமாசாரம் தெரியாது. இரண்டு தினங்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் திருச்சியிலிருந்து குற்

ருலத்திற்கு புறப்பட்டார்கள். இதேதினம் தான் பழனி ஆண்டவனுக்கு கும்பாபிஷேகம் நடத்த தீர்மானித்திருந்தது.

அன்று பழனிமலையில் கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. ஸ்வாமிகளும் திண்டுக்கல் சமீபம் வருகையில் ஆனந்த நிஷ்டையில் லயித்துவிட்டார்கள். திண்டுக்கல் ஸ்டேஷன் வந்ததும் ஸ்வாமிகள் இறங்கி பழனியை நோக்கி புறப்பட்டார். பழனிமலைமேல் அபிஷேகத்திற்கு பூசாரி கும்பத்தை எடுக்கப் போகையில், அங்கு ஒரு பக்தருக்கு ஆவேசம் வந்து "கும்பத்தைத் தொடாதே. அபிஷேகம் செய்ய மௌனி ஒருவர் வருகிறார்" என்று அலறவே, யாவரும் பயந்து ஒன்றும் தோன்றாது நிற்கையில் மௌன ஸ்வாமிகளும் அவ்விடம் தோன்றினார். ஸ்வாமிகளைக் கண்டதும் எல்லா பக்தர்களும் எதிர்கொண்டழைத்து, அபிஷேகம் செய்யும்படி பிரார்த்திக்க, ஸ்வாமிகளும் கும்பத்திற்கு கற்பூர ஹாரத்தி எடுத்து, கும்பத்தைக் கையில் எடுத்ததும் ஜகஜ்ஜோதியான பிரகாசம் சில நிமிஷகாலம் ஒளிவிட்டு வீசிக்கொண்டிருந்ததாம். பக்தர்கள் எல்லாரும் திக்பிரமைகொண்டு ஆனந்தமடைந்தார்கள். கும்பாபிஷேகம் எல்லாம் ஆனந்தமாய் முடிவடைந்ததும் ஸ்வாமிகள் குற்றாலத்திற்கு புறப்பட்டுவிட்டார்கள்.

விஷயம் தெரியாமல் ஸ்வாமிகள் கும்பாபிஷேகத்திற்கு வந்ததும், மலையில் மௌனி அபிஷேகத்திற்கு வருகிறார் என்று ஒரு பக்தர் ஆவேசம்வந்து சொன்ன

தும் விந்தையாகவே இருக்கிறது. எல்லாம் பழனி ஆண்டவனின் திருவிளையாடல்களே!

## 4. கரிவலம்வந்தநல்லூர்.

திருநெல்வேலி ஜில்லாவில் சங்கரன்கோவிலுக்கு அடுத்து கரிவலம்வந்தநல்லூர் என்ற ஓர் ஊர் உள்ளது. அக்கிராமத்தில் பாடல்பெற்ற புராதனமான சிவஸ்தலம் ஒன்று உளது. இவ்வாலயத்திலுள்ள சிவலிங்கத்திற்கு க்ஷீரவர்ணேசுவரர் என்ற நாமம் வழங்கப்படுகிறது. லிங்கம் பார்வைக்கு கம்பீரமாயும், உயரமாயும், பால்போன்ற வெண்மை நிறமுமுள்ளது. இந்த லிங்கமானது ஆதிகாலமுதல் நேர்நிலையில் இராமல் சற்று வடபுரமாக சாய்ந்தே இருக்கும்.

சில வருஷங்களுக்கு முன் அவ்வூர் பக்தர்களில் சிலர் லிங்கமூர்த்தியை நேராக வைத்து அஷ்டபந்தனம் செய்ய விரும்பி, இதுவிஷயமாய் ஆலோசனை செய்ய குற்றாலத்திற்கு வந்து நமது ஸ்வாமிகளை தரிசித்து, விஷயங்களைத் தெரிவித்து ஸ்வாமிகளையும் கூட்டிக்கொண்டு லிங்க மூர்த்தியை தரிசிக்க கரிவலம்வந்தநல்லூருக்கு வந்தார்கள். ஸ்வாமிகள் க்ஷீரவர்ணேசுவரர் சன்னிதிக்கு வந்ததும் நிஷ்டையில் சில நிமிஷங்கள் இருந்துவிட்டு இந்த லிங்க மூர்த்திக்கு அஷ்டபந்தனமே தேவையில்லையென்றும், லிங்கமானது ஸ்வயம்பு என்றும், பாதாளத்திலிருந்தே ஆவிர்பவித்திருப்பதாயும், இதை அசைக்க முடியாதென்றும், மஹாசக்தி வாய்ந்த லிங்கம் என்றும் சொல்லி

யாவரையும் திருப்தி அடையும்படி சொல்லிவிட்டு, மீண்டும் குற்றாலம் வந்துசேர்ந்தார்கள்.

## 5. மற்ற பிரதிஷ்டைகள்.

திருக்குற்றாலத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணி மடாலயத்திலும், ஸ்ரீ தத்தாத்ரேய மந்திராலயத்திலும் செய்த பிரதிஷ்டைகளைத் தவிர ஸ்வாமிகள் இன்னும் பல்வேறு இடங்களிலும் இதர தேவாலயங்களிலும் எண்ணற்ற பிரதிஷ்டைகளைச் செய்திருக்கிறார்கள். அவற்றுள் நானறிந்தவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடலானேன். அவையாவன :—

| மூர்த்தி. | இடம். |
|---|---|
| 1. சிவலிங்கம் | காசியில் பிரஹ்மானந்த ஸரஸ்வதீ மடாலயம். |
| 2. பாணலிங்கம் | ஸ்டோனல்பேட்டை (நெல்லூர்). |
| 3. கணபதி | கணபதி அக்ரஹாரம், திருவையாறு |
| 4. விக்னேசுவரர், நாகர் | கலவை சுப்பராயசெட்டி தோட்டம். கீழ்ப்பாக்கம், மதராஸ். |
| 5. யந்திர ஸ்தாபனம் | திருவொற்றியூர் கோவில், மதராஸ். |
| 6. ஷை | குமாரஸ்வாமிகோயில், சாண்டூர். |
| 7. விநாயகர் | செங்கோட்டை. |
| 8. யந்திர ஸ்தாபனம் | அம்மன் கோவில், புதுக்கோட்டை. |
| 9. ஹநுமார் | பெல்லம்வரிபாளையம் (குண்டூர்). |
| 10. கணபதி | பணகால் ஹவுஸ், சிராலா. |
| 11. யந்திர ஸ்தாபனம் | ஜொன்னவாடா. |
| 12. கணபதி | நாமவரம் கிராமம், டேனி தாலுகா, விசாகப்பட்டணம். |

இதைத்தவிர இன்னும் எத்தனையோ பிரதிஷ்டைகளும், யந்திர ஸ்தாபனங்களும் செய்திருக்கிறார்கள். அநேக ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம், புனருத்தாரணம் முதலிய விசேஷங்களுக்கு அழைப்பின்மேல் சென்றிருக்கின்றனர்.

## 6. பாணலிங்க வரலாறு.

எனது பாட்டனார் (மாதாமஹர்) ஸ்ரீ M. ரத்னசாமி அய்யர் அவர்கள் திருவனந்தபுரத்தில் அரசாங்க உத்தியோகத்தில் திவான் பேஷ்காராக பதவி வகித்துவந்த காலத்தில் யாத்திரையாக வடதேசத்தில் காசி, ஹரித்துவாரம், நேபாளம் முதலிய இடங்களுக்குச் சென்று புண்ணிய தீராடி, ஸ்தல தரிசனங்கள் செய்து சிராத்தாதி கர்மங்களை முடித்துக்கொண்டு திரும்பி வரும்பொழுது மூன்று பாணலிங்கங்களை நேபாளப் பிரதேசத்தினின்றுகொண்டு வந்திருந்தார்கள். அவைகள் வெகுநாட்களாக எங்கள் வீட்டு மேடையின்மீது வைக்கப்பட்டிருந்தன. நானும் என் தம்பியும் சிறுவயதில் பச்சை வாதாங்கொட்டைகளை உடைப்பதற்காக இந்த கற்களை எடுத்துத் தட்டி உடைப்பது வழக்கம். எங்களுக்கு அப்பொழுது அவைகள் பாணலிங்கங்கள் என்பது தெரியாது.

ஒருசமயம் நாங்கள் இம்மாதிரி செய்துகொண்டிருந்த பொழுது ஸ்வாமிகள் அங்கு வந்துவிட்டார்கள். நாங்கள் கையில் வைத்திருந்த அக்கல்லைக் கவனித்து "அக்கல்லைக் கொண்டுவா" என்றறிவித்து அதை எங்களிடமிருந்து வாங்கிப் பார்த்தார்கள். உடனே "இது உங்களுக்கு

எது? மகா இலாக்கியமான பாணலிங்கமாயிற்றே! எனக்குக் கொடு" என்றார்கள். நாங்களும் "சரி" என்று கொடுத்துவிட்டு மேலும் "இம்மாதிரி இன்னும் இரண்டு கற்களிருக்கின்றன" என்று சொல்லி அவற்றையும் கொண்டுவந்து ஸ்வாமிகளிடம் கொடுத்துவிட்டோம்.

அவைகளுள் ஒன்று ஜானவாடாவிலும், மற்றொன்று திருக்குற்றாலம் தத்தாத்திரேய மந்திரத்தில் ஸ்ரீ காமேச்வரராகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள மற்றொன்று குற்றாலத்தில் மடாலயத்திலேயே இருந்தது. இதை அர்த்தநாரீச்வரர் என்றும், சிவனும் சக்தியும் சேர்ந்ததென்றும் புகல்வார்கள்.

வாதாங்கொட்டையை உடைக்க எடுத்துக்கொள்ளப்பட்ட கற்கள், இன்று பக்தர்கள் யாவரும் தரிசித்துத் தொழும்படியான கடவுளாக மாறியதைக்காண ஆச்சரியமன்றோ? இன்றும் நான் இக்கற்களை மூர்த்திகளாகத் தரிசனம் செய்யும்பொழுதெல்லாம் அன்று நான் என் இளமையில் செய்துவந்த குற்றத்தை மன்னிக்குமாறு அடிக்கடி வேண்டிக்கொள்வதுண்டு.

கற்களுக்குக்கூட யோகம் ஏற்படுகின்றது என்பது இதன்மூலம் தெளிவாக விளங்குகின்றதல்லவா? என்னே கடவுளின் சிருஷ்டி!

## 7. கடைசி பிரதிஷ்டை.

ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயத்தில் ஸ்வாமிகள் எல்லா பிரதிஷ்டைகளையும் செய்து, மடாலயத்திற்குத் தேவையான பொருள்களையும் சேகரித்து வைத்து நல்ல

முறையில் கண்காணித்து வரும் தருணம், திருக்குற்றால நாதர் ஆலயத்தைச்சேர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருந்த தண்டபாணி மடாலயத்தைக் காலிசெய்து தேவஸ்தான நிர்வாகிகளுக்கு அந்த இடத்தை ஒப்புவிக்க வேண்டுமென்ற நிர்பந்தம் ஏற்பட்டது. அதனால் ஸ்வாமிகள் அந்த மடாலயத்திலுள்ள தண்டாயுதபாணி, ஆதிசங்கர மூர்த்திகளை ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயத்திலேயே ஒரு சிறு ஆலயத்தை நிர்மாணம் செய்து அதில் பிரதிஷ்டை செய்து விட்டால் மிக்க நலமெனக் கருதினார். உடனே இந்த விஷயத்தை ஸ்வாமிகள் என்னிடம் கலந்தாலோசித்தார்கள். அப்போது நான் ஸ்வாமிகளை நோக்கி "ஆதியில் ஸ்வாமிகள் தண்டாயுதபாணி, ஆதி சங்கரர் பிரதிஷ்டைகளைச் செய்வதற்கும், மடாலயங்களை உருவாக்குவதற்கும் என் தந்தை தங்களுக்கு பல வழிகளில் உதவியாயிருந்ததன் பயனாய் எங்கள் குடும்பம் இன்றும் நல்ல நிலைமையில் சுகம் பெற்றுத் தழைத்தோங்கித் திகழ்கிறது. ஆனால் என் பிதாவோ 1942ம் வருடம் ஜனவரி மாதம் 2ம் தேதி காலமாய் விட்டார்கள். தற்சமயம் அவர்கள் இருந்தால் இப் பிரதிஷ்டைகளையும் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் யாவற்றையும் தன் சொந்த செலவிலேயே செய்து விடுவார்கள். ஆதலால் இப் பிரதிஷ்டைகளின் நிமித்தம் ஏற்படும் ஸகல செலவினங்களையும் இதர தொண்டுகளையும் செய்யும் பாக்கியத்தை எனக்களிக்க வேண்டும்" என்று அவரது பதமலர்களில் விழுந்து இறைஞ்சினேன்.

அதற்கு ஸ்வாமிகள் "உங்கள் பிதா ஆதிமுதல்

அவர் அந்தியகாலம் வரை என் தர்ம கைங்கர்யங்களின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றை எல்லாம் உதவி ஆற்றி வந்த தொண்டுக்கும், ஏனைய செயல்களுக்கும் என் மனம் நன்றிசெலுத்த வேண்டுமே யல்லாமல் மறக்காது. இந்த உன்னதமான மடாலயத்தை நிர்மாணிப்பதற்கும், அதில் இத்தனை பிரதிஷ்டைகளை செய்வதற்கும் முக்கிய காரணஸ்தராயிருந்தவர் அவரே யாவர். சமயா சமயங்களில் என் காரியங்களில் வேறுபாடுகள் ஏதேனுமிருந்தாலும், அவர் அவற்றை எல்லாம் எனக்கு எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இதெல்லாம் தெய்வ ஸங்கற்பமே யன்றி வேறல்ல. வேண்டிய அளவு பொருளுதவியும் அவராலேயே செய்யப்பட்டு வந்திருக்கிறது. அவருடைய காலமாகியும் உங்களுக்கெல்லாம் நான் அதிக சிரமம் கொடுக்க விரும்பவில்லை. தற்போது மடாலயத்திற்கே போதுமான சொத்துகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தவிரவும் இன்னும் எத்தனையோ சிஷ்யர்கள் இக்கைங்கர்யங்களைச் செய்துவைக்க ஸித்தமாய்க் காத்திருக்கிறார்கள். அதனால் உங்களுக்கு இந்த சிரமம் வேண்டாம்'' என்றார்கள்.

இதைக் கேள்வியுற்றதும் எனக்கு மிகவும் வருத்தமாய்விட்டது. என்ன செய்வதென்று தோன்றாமல் சற்றுநேரம் ஆலோசித்து மீண்டும் ஸ்வாமிகளிடம்சென்று அவரது பாதங்களில் வணங்கி "இக்கைங்கரியத்தைச் செய்து நான் நிறைவேற்றாவிட்டால் என் தந்தையின் ஆத்மா சாந்தியடைய முடியாது. எங்கள் குடும்பத்திற்கு குருகடாக்ஷமும், தெய்வானுகூலமும் கிட்டாமல் போய்விடுமோ! என்று அஞ்சுகிறேன். தவிரவும் பிதா

ஆற்றிவந்த பணியை அவருக்குப்பின் அவரது மக்கள் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்ற தர்மம் இருக்க அவர்கள் முன்வரவில்லையே! என்று உலகம் எங்களைத் தூற்றும். அதனால் இந்த காரியத்தைச் செய்துமுடிக்க எனக்கே அருள்புரிய வேண்டும்'' என்று மன்றாடிக் கெஞ்சினேன்.

அதன்பிறகே ஸ்வாமிகள் அப்பெரும்பேற்றை எனக்களித்தார்கள்.

பிறகு தத்தாத்திரேய மந்திரத்தில் ஸ்ரீ ஷண்முகர் ஸன்னிதிக்கு வடபுறம் சிறு ஆலயம் ஒன்று நிர்மாணித்து 1118ம் ஆண்டு ஸுபானு-௵ வைகாசி-௴ 5௳ புதவாரம் (19-5-1943)ல் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ தண்டபாணி மூர்த்தியையும், ஸ்ரீ தத்தாத்திரேயர் ஸன்னிதியில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை அடுத்து ஆதி சங்கரரையும் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த இரு பிரதிஷ்டைகளே ஸ்வாமிகளால் ஆதியிலும் அந்திய காலத்திலும் செய்யப்பட்டவை. எல்லாம் தெய்வ ஸங்கல்பம்!

# அத்தியாயம் 8

## விதேஹ முக்தி

### 1. அந்திய காலம்.

ஸ்ரீ தத்தாத்திரேய மந்திரத்தில் தண்டாயுதபாணியைப் பிரதிஷ்டை செய்த பிறகு, அடிக்கடி ஸ்வாமிகள் தண்டாயுதபாணி கோவிலுக்குப்போய் வந்து 'அந்த இடம் எனக்கு ஏகாந்த நிஷ்டைக்கு மிகவும் சுகமாய் இருக்கிறது. நல்ல மனோ நிம்மதியளித்து வருகிறது. நான் அங்கேயே இருந்து விட்டால் என்ன?' என்று பல தடவைகளில் என்னிடம் பிரஸ்தாபம் செய்து வந்திருக்கிறார்கள். அவர் அவ்வாறு விரும்புவதன் நோக்கமும் காரணமும் எனக்குப் பின்பு தான் தெளிவாய்த் தெரிந்தது.

நிற்க, கடைசி காலத்தில் ஸ்வாமிகளிடம் நல்ல பயனடைந்த சிஷ்யர்களில் முக்கியமானவர் ஸ்ரீ ஹனுமந்த ராவ் அவர்கள் தான். இவர் டிபுடிகலெக்டர் பதவி வகித்து வந்தவர். ஸ்ரீ ஹனுமந்த ராவ் அவர்களின் பாரியை வாத ரோகத்தினால் வருந்திக்கொண்டிருந்தபோது மடாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஸ்வாமிகளால் சிகிச்சை செய்யப்பட்டு உபாதியினின்று குணமடைந்தாள். வெகு காலமாக அவர்களுக்கு புத்திரப் பேறில்லாத பெருங்குறை இருந்தது. ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தினாலும், தேவியின் கருணையினாலும், சாந்திகள் பல செய்யப்பட்டதன் பயனாலும், அக்குறை நீங்கி புத்திரப்பேறு ஏற்பட்டு

சுகப்பிரஸவமும் ஆயிற்று. இந்த நற்செய்தி கும்ப கோணத்திலிருந்து ஸ்ரீ ஹனுமந்தராவ் அவர்களால் தந்தியின் மூலம் ஸ்வாமிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இதைக் கேள்வியுற்ற யாவரும் பெருமகிழ்ச்சி யடைந்தனர். ஸ்ரீ ஹனுமந்த ராவ் அவர்களின் மனைவியின் பக்தி விசுவாசத்தைக் குறித்து ஸ்வாமிகள் பெரிதும் மெச்சினார்கள்.

ஸ்வாமிகளின் அந்தியகாலக் கடாக்ஷம் இக் குடும்பத்திற்கே லபித்தது எனலாம். இக்குடும்பத்தாருக்கு தேவியின் அருளால் ஸகல அபீஷ்டங்களும் மேன்மேலும் ஏற்பட வேண்டுமென்றும், இன்னும் இக்குடும்பத்தார் மந்திராலயத்தின் கைங்கர்யங்களில் பங்கெடுத்து இன்புற்றிருக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை அந்தரங்கத்தில் தியானிப்போமாக!

இந்த ஸம்பவம் நிகழ்ந்த சில மாதங்களில் ஸ்வாமிகளது உடல் நலங்குன்றி உபாதி ஏற்பட ஆரம்பித்தது. நாளா வட்டத்தில் பிணி முற்றிக்கொண்டே வந்தது. அப்பொழுது நான் ஒரு வாரத்திற்கு இரு முறை குற்றாலம் சென்று ஸ்வாமிகளின் தேக நிலையைக் கவனித்து வந்து கொண்டிருந்தேன். அரிய பெரிய வைத்திய நிபுணர்களால் சிகித்சை செய்யப்பட்டு மருந்துகளும் கொடுக்கப்பட்டு வந்தது.

ஸ்வாமிகள் ஸித்தி யடைவதற்கு இரு தினங்களுக்கு முன்பு, நான் பாளையங்கோட்டையில் என் வீடுதியிலிருந்த பொழுது ஒரு நாள் அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தேன். அப்பொழுது என்

பக்கத்தில் யாரோ ஒரு பெரியவர் காவியாடையால் மூடிப் படுத்திருப்பதாகத் தோற்ற மளித்தது. உற்று நோக்குகையில் என் செவிக்குள் 'பெரியவர் ஸித்தியாகப்போகிறார். விரைவாய்ப்போ' என்று சொல்லுவதைப் போலிருந்தது. என் மனம் சற்று திகிலடைந்தது. உடனே புறப்பட்டு திருக்குற்றாலத்தையடைந்தேன்.

அச்சமயம் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் பதவி வகித்துவந்த ஸ்ரீ V. N. விசுவநாதராவ் அவர்கள் தம் தர்மபத்தினியுடன் திருக்குற்றாலத்தில் முகாமிட்டு, மடாலயத்தைச் சேர்ந்த வஸந்தமண்டப பங்களாவில் தங்கியிருந்தார்கள்.

நான் மடாலயத்திற்கு வந்ததும் ஸ்வாமிகளைப்பார்க்கச் சென்றபொழுது, ஸ்வாமிகள் அறையின் கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே படுத்திருந்தார்கள். தொந்திரவு கொடுக்கலாகாதென்று சற்றுநேரம் அங்குள்ள கோவிலில் மூர்த்திகளைத் தரிசித்துவிட்டு மீண்டும் ஸ்வாமிகளின் அறைக்குப் போகவே அஃது ஸ்ரீ விசுவநாதராவ் அவர்களும் வந்திருந்தார்கள். கதவைத் தட்டியதும் திறக்கப்பட்டது. ஸ்வாமிகளைக் கண்டதும் அஞ்சலி செய்தேன். "எப்பொழுது வந்தீர்கள்? மிகவும் ஸந்தோஷம்!" என்று சைகைசெய்து கேட்டார்கள். இது தான் என்னிடம் ஸ்வாமிகள் பேசிய இறுதியான மொழி.

ஸ்வாமிகளின் உடல் நிலையைக் கண்ணுற்றதும் எனக்கு மிகவும் கவலையாய்விட்டது. அதிக தொந்திரவு கொடுக்கக்கூடாதென்று விடைபெற்றுக்கொண்டு சிலர்



Mrs. & Mr. V. N. விச்வநாதராவ், M. A., B. L,
ரிடயர்டு ஜில்லா கலெக்டர் & அட்வைசரி போர்டு
அங்கத்தினர், தத்தாத்ரேய மந்திரம், குற்றாலம்.

வெளியே வந்துவிட்டோம். அங்கிருந்து நான் ஸ்ரீ விசுவ நாதராவ் அவர்களிடம் சென்று "ஸ்வாமிகளின் தேக நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. உடனே டாக்டரை வரவழைக்கவேண்டும்" என்று புகலவே டாக்டருக்கு கார் அனுப்பி வரவழைத்தார்கள். டாக்டர் ஸ்வாமிகளின் தேக நிலையைப் பரீக்ஷைசெய்து "மிகவும் வருந்துகிறேன். வேறு பெரிய டாக்டர்களை அழைத்துப் பார்த்தால் நலம்" என்று சொல்லிவிட்டார். உடனே வேறு பெரிய டாக்டருக்கு ஆள் அனுப்பப்பட்டது. அன்று இரவு ஸ்வாமிகளின் நிலை முன்னிலும் மோசமாய் விட்டது. சுமார் இரவு 11 மணியிருக்கும். ஸ்வாமிகள் ஆஸனமிட்டு உட்கார்ந்தார்கள். அதே நிலையில் மறுநாளிரவு 2 மணிவரை இருந்துவிட்டு ஈசனது திருவருளிற் கலந்து ஸித்தியடைந்தார்கள்.

ஸித்தியாகும்பொழுது ஸ்வாமிகளின் தலையின் உச்சியில் நீர் குமிழிகள் போன்று தென்பட்டுக்கொண்டிருந்தன. கலெக்டர் ஸ்ரீ V. N. விசுவநாதராவ் அவர்களின் பத்தினி தம் கரத்தினால் ஸ்வாமிகளின் அந்தியகாலத்தில் அவரது ஆத்மா சாந்தியடைய வாயில் புனித கங்கா ஜலத்தை அடிக்கடி ஊற்றிக்கொண்டேயிருந்தார்கள். இந்த மகா உன்னதமான ஸேவையைச் செய்ய அந்த புனிதவதிக்குத்தான் கொடுத்துவைத்தது.

வேதகோஷங்களும், ராமநாம ஜபமும் இரண்டு நாட்களாகவே நடைபெற்று ஸ்வாமிகள் ஸித்தியடையும் வரை நீடித்தன. ஸ்வாமிகள் திருக்குற்றாலம் வந்த நாள்

முதல் அவரது இறுதிகாலம்வரை அவருடனேயே இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

1119ம் ஆண்டு ஸுபாநு-௵ மார்கழி-மீ 12உ (28-12-1943) புஷ்ய சுத்த பிரதமை திதி திங்கட்கிழமை இரவு 2-55 A. M. மணிக்கு ஸ்வாமிகள் ஸித்தியடைந்ததும், எந்த இடத்தில் ஸமாதி வைப்பதென்று ஆலோசனை செய்யும்பொழுது, கலெக்டர் ஸ்ரீ V. N. விசுவநாதராவ் அவர்கள் பத்தினி தான் ஒரு வாரத்திற்கு முன் ஒரு கனவு கண்டதாகச் சொன்னார்கள். அந்த கனவில் ஸ்வாமிகள் தண்டாயுதபாணி ஆலயத்திற்கு வந்ததாகவும், ஸமாதிவைப்பதற்கு ஒரு குழி தோண்டி இருப்பது போலவும், தண்டாயுதபாணியை தரிசனம் செய்துவிட்டு ஸ்வாமிகள் அக் குழிக்குள் மடமடவென்று இறங்கிவிட்டதாகவும், சிறிது நேரத்திற்கெல்லாம் அக்குழியிலிருந்து ஒரு ஸர்ப்பம் படம் எடுத்து வெளியில்வந்து தண்டாயுதபாணி ஸன்னிதிக்குள் போய்விட்டதாகவும் சொன்னார்கள்.

அந்த சொப்பனத்தில் தோன்றிய அதே இடத்தில் ஸமாதிக்குக் குழிவெட்டி எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம்.

## 2. ஸ்ரீ ஸ்வாமிகளின் சாஸனம்.

மறுநாட்காலையில் ஸ்வாமிகளின் சடலத்தை ராமர் ஸன்னிதிக்குக் கொண்டுவந்து, முன்புறமுள்ள கொட்டகையில் வைத்து அபிஷேக அலங்கார உபசாரங்கள்

யாவற்றையும் செய்து பல்லங்கில் வைத்து ஊர்வலத்திற்கு சித்தமாக இருந்தோம்.

அப்போது அங்கு கூடியிருந்த பக்தர்களைக் கண்டு ஸ்ரீ விசுவநாத ராவ் அவர்கள் "ஸ்வாமிகள் ஸித்தியான உடன் அன்றிரவே நான் இருந்தஜாகைக்கு ஸ்வாமிகளின் சிஷ்யன் ஸ்ரீ ராதா கிருஷ்ணன் என்பவர் சீல்வைத்து மூடப்பட்டிருந்த காகிதஉறை (cover) எடுத்துக் கொண்டு வந்து 'ஒருக்கால் ஸ்வாமிகள் சித்தியடைந்துவிட்டால் இந்த கவரை தான் கொடுக்கச் சொன்னதாக கலெக்டர் அவர்கள் எங்கிருந்தாலும் அங்குபோய் உடனே கொடுக்கும்படி ஸ்வாமிகள் சொன்னதால் இதைத் தங்களிடம் கொடுக்கிறேன்' என்று கூறி என்னிடம் கொடுத்தார். அதை வாங்கி நான் ஆபீஸ் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்துக் கொண்டேன். அந்த சீல்வைத்த கவர்தான் இது. இங்குள்ள யாவருமறிய உங்கள் முன்னிலையிலேயே உடைத்து வாசிக்கிறேன். கேளுங்கள்" என்று சொல்லி கவரை உடைத்தார். அது முற்றிலும் தெலுங்கிலேயே எழுதப்பட்டிருந்தது. அதனால் வேறு ஒருவரைக்கொண்டு உரக்கப் படிக்கச்செய்து உடனுக்குடன் தமிழிலும் மொழிபெயர்த்து எல்லோருக்கும் விளங்கும்படி வாசிக்கப்பட்டது.

அதில் ஸ்வாமிகளால் தத்தாத்திரேய மந்திராலய விஷயமாய்த் தனக்குப்பின் நடத்தவேண்டிய முறைகள் முதலியவற்றைப் பற்றி ஒரு சாஸனம் (Will) விபரமாய் எழுதப்பட்டிருந்தது.

அந்த சாஸனத்தில் மடாலய விஷயமாய் கவனித்து நிர்வகிக்க பின்வரும் பக்தர்களை "அட்வைசரி போர்டு" (Advisory Board) அங்கத்தினர்களாக நியமனம் செய்யப்பட்டிருந்தது.

1. ஸ்ரீமான் V. N. விசுவநாத ராவ் அவர்கள் M.A.B.L. ஜில்லா கலெக்டர்.
2. ,, S. வெங்கட சுப்ரமணிய அய்யர், மிட்டாதார்.
3. ,, V. T. சேவுக பாண்டிய தேவர், சேத்தூர் ஜமீன்தார்.
4. ,, கோண்ட கோடய்யகாரு B.A.B.L. அட்வோகேட், மதருஸ்.
5. ,, கஸ்தூரி கிருஷ்ணராவ்காரு.

இந்த சாஸனத்தைப் படித்து முடித்ததும் ஸகல மரியாதைகளுடன் ஊர்வலம் செய்யப்பட்டு ஸ்ரீ தண்டாயுத பாணி கோவிலில் ஸ்வாமிகளின் சடலத்தை முறைப்படி ஸமாதி செய்யப்பட்டது.

ஸ்வாமிகள் ஸித்தியாகி ஸமாதி செய்யப்பட்டதும் தொடர்ந்து அவரது உத்தரக்கிரியைகள் யாவும் சாஸ்திர முறைப்படி எவ்வித குறைவுமின்றி நடந்தேறின. அக்கிரியைகள் யாவற்றையும் வெகு பயபக்தி வினயத்துடன் ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயத்தில் ஏஜண்டு பதவி வகித்துவரும் ஸ்ரீ கஸ்தூரி கிருஷ்ணராவ் அவர்களே நடத்திவைத்தார்கள்.



ஸ்ரீ கோண்டா கோடய்யா, B. A., B. I.,
அட்வகேட், மதருஸ் & அட்வைசரி போர்டு
அங்கத்தினர், தத்தாத்ரேய மந்திரம், குற்றாலம்.



ஸ்ரீ கஸ்தூரி கிருஷ்ணராவ்,
ஏஜண்ட் & அட்வைசரி போர்டு அங்கத்தினர்,
தத்தாத்ரேய மந்திரம், குற்றாலம்.

## 3. கஸ்தூரி கிருஷ்ண ராவ்

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ கஸ்தூரி கிருஷ்ணராவ் அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லாமலிருக்க முடியாது.

ஸ்ரீ கஸ்தூரி கிருஷ்ணராவ் என்பவர் குண்டூர் ஜில்லாவிலுள்ள இண்டூர் என்ற ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஆந்திர நியோகி பிராஹ்மணர். குடும்பம் இருந்தும் அதில் மனப்பற்றில்லாது பொதுநன்மைக்கான பணிகளிலேயே தம் வாழ்நாள் முழுமையுமே ஈடுபடுத்தி கழித்து வருகிறார். 1939-ஸ் நமது மௌன் ஸ்வாமிகள் வடதேசத்தில் யாத்திரையாகப் போனபொழுது இவரைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுதே ஸ்ரீ கிருஷ்ணராவைத் தமது மடாலயத்திற்கு சேவைபுரிய வருமாறு ஸ்வாமிக்ள் ஆணையிட்டார்களாம். அதன்படியே ஸ்ரீ கிருஷ்ண ராவ் திருக்குற்றாலத்திற்கு 1939 ஸ் டிசம்பர்-மீ 31உ வந்துசேர்ந்தார்.

இவர் மடாலயத்தில் பதவியேற்றுத் தொண்டாற்றி வருவதைக் கவனித்து ஸ்வாமிகள் இவரையே மடத்தில் (பவர்பெற்ற) அதிகாரம் பெற்ற ஏஜண்டாக 1940 வருஷம் முதல் நியமனம் செய்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணராவ் மகா உத்தமராதலினால் மடாலய வேலைகளை ஒழுங்கான முறையில் நடத்தி மடத்திற்குப் பலவிதத்திலும் நல்ல ஆதாயத்தையே காட்டி வந்தார்கள். இவருக்குத் தன் நலம் என்பதே கிடையாது. பொருளாசையும் ஒரு சிறிதுகூடக் கிடையாது; மிகுந்த சாந்த குணமும் எளிய

வாழ்க்கையும் உடையவர். ஸ்வாமிகள் ஸித்திபெற்றதும் மடாலய பொக்கிஷத்திலுள்ள நகைகள், வெள்ளிப் பாத்திர வகைகள் முதலிய சாமான்கள் யாவற்றையும் வெகு ஜாக்கிரதையுடன் களவுபோகாமலும், பழுதேதும் ஏற்படாமலும் கவனித்துக் காப்பாற்றிவந்தார். ஸ்வாமிகள் இவர் செய்துவந்த காரியங்களில் திருப்தியடைந்து இவரை ஏற்கனவே ஏஜண்டாக நியமனம் செய்ததுடன் தமக்குப் பிற்காலமும் இவரை ஆயுள் உள்ளளவும் மடாலயத்தில் மானேஜராகவும், தர்மகர்த்தாக்களில் ஒருவராகவும் பணியாற்ற சாஸனத்தின் (Will) மூலம் நியமித்தார்கள். மடாலயத்தின் வளர்ச்சியே இவரது முக்கிய லக்ஷியம். மடாலயத்தின் வளர்ச்சியை உத்தேசித்து இவர் இன்னும் பல ஆண்டுகள் நீடுழிவாழ்ந்து, மடாலயத்தை நல்ல முறையில் பராமரித்து வரவேண்டுமென்று அன்னை ஸ்ரீ ராஜராஜேச்வரியை நாம் யாவரும் அந்தரங்கத்தே துதித்து இறைஞ்சுவோமாக!

## 4. லிங்க பிரதிஷ்டை.

நிற்க, ஸ்ரீ மௌனஸ்வாமிகளின் உத்தரக் கிரியைகளுக்கு அவரது பூர்வாசிரமத்தில் ஜனித்த இரு பெண் மக்களும் தங்கள் குடும்ப ஸகிதம் வந்து ஸ்ரீ தத்தாத்திரேய மடாலயத்தில் தங்கி கிரியைகளின்போது கூடவேயிருந்து ஸகல காரியங்களிலும் பங்கெடுத்து வந்தார்கள்.

கிரியைகள் யாவும் முடிவுற்றதும், ஸ்வாமிகளின் ஸமாதியின்மீது ஓர் லிங்கப் பிரதிஷ்டை செய்யவேண்டிய விஷயமாய் ஆலோசிக்கையில், மடாலய ஸம்பந்தமாய் சில



ஸ்ரீ ஸித்தேச்வரி பீடாதிபதி
ஸ்ரீ ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்ற
ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகள். (1942)



ஸ்ரீ நீலகண்டேச்வரர்.

[ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளின் ஸமாதி]

இடையூறுகள் ஏற்பட்டன. அதனால் சிறிதுகாலம் வரை ஏதும் செய்ய இயலவில்லை.

பிறகு 1950ம்வருஷம் பிரதிஷ்டையைப்பற்றி ஆலோசனை செய்ததில் சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த மூர்த்திகளைத் தான் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். அதனால் இவ் விஷயத்தைக் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடமும், ஸ்ரீ சிருங்கேரி சங்கராசார்யார் ஸ்வாமிகளிடத்திலும் கலந்தாலோசிப்பதென்றும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் மூர்த்தியையே பிரதிஷ்டை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு மடாதிபதிகளும் ஸமாதியில் லிங்க பிரதிஷ்டை செய்வது தான் உத்தமம் என்று ஆக்ஞாபித்து விட்டபடியால் அதன்படி சிஷ்யர்களில் ஒருவராகிய புனலூர் ஸ்ரீ நரஸிம்ஹ அய்யர் அவர்களால் காசியிலிருந்து ஏற்கனவே வருவிக்கப்பட்ட ஒரு பெரிய அழகான பாணலிங்கத்தையே பிரதிஷ்டை செய்வதாக நிச்சயிக்கப்பட்டு, அதற்கு வேண்டுவன யாவும் தயாரிக்கப்பட்டன. கல்தச்சர்கள் மூலம் பீடக்கற்கள் அஷ்டகோண வடிவத்தில் உருவாக்கப்பட்டன. அவற்றை வைத்து ஸமாதியின் மீது அழகாய் கட்டிடமும் கட்டி, பீடத்தின் மேல் கோமுகிக்கல் அடித்துவைத்து, அதன்மீது கர வருஷம் ஆனிமீ 29ம்உ (13-7-1951) வெள்ளிக்கிழமையன்று லிங்கப் பிரதிஷ்டை அதிவிமர்சையாக செய்யப்பட்டது. இந்த வைபவத்திற்கு கும்பகோணத்திலிருந்து ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்களின் ஆசீர்வாதமும் தேவியின் பிரஸாதமும் தபால் மூலம் கிடைத்தன.

ஸமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்திற்கு ஸ்ரீநீலகண்டேச்வரர் என்று நாமகரணம் செய்யப்பட்டது. அன்று மத்தியானம் பிராஹ்மண ஸந்தர்ப்பணைகளும் நடைபெற்றன. அன்று அந்திவேளையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திக்கு திவ்ய அலங்காராதிகள் செய்யப்பட்டு, எல்லா பக்தர்களாலும் ஸஹஸ்ரநாம அர்ச்சனை முதலியன செய்யப்பட்டு வேத பாராயணம் பஜனை முதலியவைகளும் நடத்தப்பட்டன. இத்துடன் பிரதிஷ்டை விழா முடிவுற்றது. பிறகு நாற்பது தினங்கள் சென்றதும் சிறந்த முறையில் மண்டலாபிஷேகமும் க்ஷீர தாராபிஷேகமும் கர ஆவணிமீ 6ம் உ (22-8-1951) புதன்கிழமை அதிக விமரிசையாய் நடைபெற்றன. வாழ்க ஸ்ரீ நீலகண்டேச்வரர்!

---

## அத்தியாயம் 9

## ஸ்ரீ ஸ்வாமிகளின் மஹிமை.

### 1. ஸ்வபாவம்.

ஸ்வாமிகள் நல்ல தேஜஸ்ஸுடன் ஸ்வர்ணச்சாயலாக இருப்பார்கள். நிதானமான ஆகிருதியுடையவர். உடலும், அங்கங்களும் அவர் சொற்படிக் கேட்டு இயங்கும். அசதி, தூக்கம், வியர்வை, உடலில் துர்நாற்றம் என்பன எதுவும் அவரிடம் சிறிதும் கிடையாது. எப்போதும் ஊக்கத்துடனும், யோக ஜபதபங்கள் செய்யும் நேரங்கள்

தவிர மற்ற ஸமயங்களில் ஏதாவது காரியங்களைச் செய்து கொண்டும் இருப்பார்கள். அடிக்கடி திடீரென்று யோக நிஷ்டையில் லயித்துவிடுவார்கள். ஆனால் இது எப்போது ஏற்படும் என்பது எவருக்கும் தெரியாது.

அவரது மனதின் ஓர் பாகம் எப்பொழுதும் ஈசுவரத் தியானத்திலேயே இருக்கும். காலையில் நிஷ்டை கலைந்து சிறிதுநேரம் வரை என்ன செய்கிறோம் என்பது அவருக்கே தெரியாமலிருக்கும். அத்தருணங்களில் நாம் ஏதாவது கேட்டாலும் அவர் எழுதிக் காட்டினாலும் ஒன்றுக்கொன்று எவ்வித ஸம்பந்தமும் இராது. அந்த ஸந்தர்ப்பங்களில் நாம் அவரைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவதுதான் நலம்.

ஸ்வாமிகள் நாள்தோறும் சூரிய உதயத்திற்குள் ஸ்நானம் செய்து நிஷ்டையிலமர்ந்து விடுவார்கள். சிற்சில சமயங்களில் பக்தர்கள் தரிசனத்திற்கு வந்ததும் அவர்கள் பேசுவதற்கு முன்பே காகிதத்தில் அவர்கள் நினைத்துவந்த விஷயங்களை எழுதிக் காண்பித்துவிடுவார்கள். ஒருவரைப் பார்த்தமாத்திரத்திலேயே அவரது குணதிசயங்கள் யாவற்றையும் அறிந்துவிடுவார்கள்.

ஸ்வாமிகள் தாகத்திற்காக ஓர் சிறிதளவு தண்ணீர் கூட உட்கொண்டதில்லை. சிற்சில நேரங்களில் பக்தர்களின் கட்டாயத்தின்பேரில் இளநீர், பசுவின் மோர் இவற்றை அருந்துவதுண்டு. இவருக்கு எப்பொழுதும் உஷ்ணமான இடம்தான் பிடிக்கும். ஆடம்பரமான செயல்களே பிடிக்காது.

எல்லா வேத சாஸ்திரங்களிலும் நல்ல ஆராய்ச்சியுள்ளவர். வேதத்தின் மகிமைகளைப் ப்ரத்யக்ஷமாய் நிரூபித்து பலரறிய காட்டியிருக்கிறார்கள். அநேகருக்கு கர்மபந்தங்களை நிவிருத்தி செய்து காப்பாற்றியிருக்கிறார்கள். எத்தனையோ கிருஹஸ்தர்களுக்கும் பண்டிதர்களுக்கும், சாஸ்திர ரீதியான தீராத சந்தேகங்களையும் தீர்த்து வந்திருக்கிறார்கள். எப்பொழுதும் குழந்தை உள்ளம் படைத்தவர். சிறு குழந்தைகளிடம் அதிக பற்றுதலுடையவர். பல பாஷைகள் அறிந்தவர். ஸங்கீதம் கேட்டால் உடனே மெய்மறந்து நிஷ்டையில் அமர்ந்துவிடுவார். தர்ம சிந்தனையும் தாராள மனதும் படைத்தவர். எவருக்கும் தெரியாமல் தர்மம் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். ஸந்தர்ப்பணைகள் நடத்துவதில் அதிக ஊக்கம் காட்டுவார். சகலவித தொழில் வேலைகளையும் நன்கறிந்தவர்.

## 2. சக்ர ரேகை.

ஸ்வாமிகள் திருச்சிராப்பள்ளியிலிருந்து சென்னைக்குப்போகும் ஓர் சந்தர்ப்பத்தில் இரண்டாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தார். அப்பொழுது பகல் வேளையாயிருந்தது. ஸ்வாமிகள் ஏறிய வண்டியிலேயே மற்றொருவரும் பிரயாணம் செய்து வந்தார். அவர் பங்களூரிலிருந்து வருவதாகக் கூறினாராம். இரயில்வண்டி திருச்சி நிலயத்தை விட்டுப்புறப்பட்டதும் ஸ்வாமிகள் யோகாஸனமிட்டு நிஷ்டையில் அமர்ந்தார்கள். அந்த வண்டியில் பிரயாணம் செய்து வந்த மனிதர் ஸ்வாமிகளின் பாதத்

தின் கட்டை விரலின் அடிப்பாகத்தைக் கூர்ந்து கவனிக்கவே பிரமித்து, ஸ்வாமிகள் நிஷ்டை கலைந்ததும் எழுந்து அவரது பாதங்களில் வணங்கி "நான் இருப்பது யாழ்ப்பாணம். எல்லாப் பரீக்ஷைகளிலும் நல்ல தேர்ச்சி யடைந்துள்ளேன். இருபத்தைந்து ஆண்டுகளாக ரேகை சாஸ்திர ஆராய்ச்சி செய்து வருகிறேன். இது விஷயமாய் உலகமுழுவதும் இரு முறை சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கிறேன். பலருடைய நூதன ரேகைகளைப் படம் பிடித்து வைத்திருக்கிறேன். ரேகை சாஸ்திர ஆராய்ச்சியில் லக்ஷக் கணக்கான பொருள் செலவழித்திருக்கிறேன். இன்னும் அதன் விஷயமாய் அலைந்து வருகிறேன். ஸ்வாமிகளின் கால் கட்டைவிரலிலுள்ள 'சக்ர ரேகையை' தான் இதுவரை எவரிடமும் கண்டதில்லை. சில அரிய ரேகை நூல்களில் இந்த ரேகையைப் பற்றி கற்றறிந்துள்ளேன். இது தேவாம்சம் பொருந்திய மஹான்களுக்கு மட்டுமே காணப்படும். ஆதலால் ஸ்வாமிகள் ஒரு பெரிய மஹாத்மாவென்று இதன் மூலம் அறிந்தேன். அதன் விஷயமாய் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை." என்று கூறி ஸ்வாமிகளின் உத்திரவின் பேரில் அந்த சக்ர ரேகையை ஒத்தி மாதிரிக்காக படம் பிடிக்க எடுத்துக்கொண்டார்.

## 3. மூலிகைப் பிரயோகம்.

ஸ்வாமிகள் மூலிகைகளைப் பற்றியும், அவற்றின் உபயோக முறைகளைக் குறித்தும் அநேக அரிய நூல்களின் மூலமாகவும், பல ஸித்திபெற்ற மஹான்கள் மூல

மாகவும் அறிந்திருப்பதாய்த் தெரிவித்திருக்கிறார்கள். மூலிகைகளின் உபயோகத்தினால் உலோகங்களையே உரு மாற்றக் கூடுமென்றும் சொல்வார்கள். முற்காலத்தில் மூலிகைகளின் சக்தி யாவருக்கும் நன்கு புலப்பட்டிருந்த தென்றும், வரவர ஆராய்ச்சிக் குறைவினால் அவற்றின் பெருமையை எவராலும் அறிந்துகொள்ள இயலாமற் போயிற்றென்றும் கூறுவார்கள். ஒவ்வொரு மூலிகைக்கும் அதன் சக்தி மனிதர்களுக்குத் தெரியாமலேயே இருக்கவேண்டுமென்ற சாபம் உண்டென்றும், அச் சாபத்தை விமோசனம் செய்யும் அரிய சக்திவாய்ந்தவர்களுக்கே அவற்றின் உண்மையான வன்மையும், தன்மையும் அறிய இயலும் என்றும் சொல்வார்கள். "மூலிகைகளுக்கு சாப விமோசனம் செய்யும் முறை நம் வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தின் அர்த்தங்களைத்தெரிந்து அதன் நுட்பங்களை கிரகித்துஅம்முறையே நடந்தால் மூலிகைகளின் சாப நிவர்த்தி மார்க்கத்தை நன்கறியலாம்" என்பார்கள். பல பெரிய ஸித்த புருஷர்கள் இவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்து அநுபோகத்திலும் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்றும் ஸ்வாமிகள் அடிக்கடி சொல்வார்கள்.

ஸ்வாமிகள் மூலிகைகளின் பிரயோகங்களினால் பக்தர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் அநேக விதமான காரியங்களை நிதர்சனமாய் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவையாவன :

1. நல்ல பாம்பு கடித்த அநேகருக்கு கண்ணிற்குள் மருந்திட்டு வாய்க்குள் சில பச்சிலைச் சாற்றைப் பிழிந்து குணப்படுத்தியிருக்கிறார்கள்.

2. கண்பார்வை மழுங்கியவர்களுக்கும், அறவே கண் அற்றவர்களுக்கும் ஏதோ சில பச்சிலை மூலிகைகளை அரைத்துத் தடவி சிகித்சைசெய்து பார்வை யளித்திருக்கிறார்கள். இன்றும் அவர்கள் நல்ல பார்வையுடன் நடமாடி வருகிறார்கள்.

3. நீரழிவு ரோகத்திற்கு பச்சிலை, வேர் முதலிய பலவகை மூலிகைகளின் பிரயோகத்தினால் நானறிய ஏழு பேர் வரை நல்ல குணமடைந்திருக்கிறார்கள்.

4. குன்ம வியாதி, மஞ்சட்காமாலை, எலும்புருக்கி நோய் முதலிய கொடிய பிணிகளை எத்தனையோ பக்தர்களுக்கு நிவிருத்தி செய்திருக்கிறார்கள். யாவும் மூலிகை முறையே.

5. ஸ்வாமிகள் ஒரு அதிசயமான வேர் வைத்திருந்தார்கள். அந்த வேரைப் பிரஸவ காலத்தில் ஸ்திரீகள் தம் தலைக்கடியில் வைத்துப் படுத்துக்கொண்டால் எவ்வித இடையூறுமின்றி உடனே ஸுகப்பிரஸவமாகும். இவ்வேரை அநேகர் ஸ்வாமிகளிடமிருந்து வாங்கிச் சென்று ஸுகப்பிரஸவமானதும் திரும்பக்கொண்டுவந்து ஒப்படைத்து விடுவார்கள்.

6. வெட்டுக்காயம் முதலியவற்றை குணப்படுத்த ஸ்வாமிகள் சில மூலிகைகளின பஸ்மத்தை உபயோகிப்பதுண்டு. அது எப்பேர்ப்பட்ட பயங்கரமான வெட்டுக்

காயங்களானாலும் குணப்படுத்தும். வெட்டுப்பட்டு இரு துண்டுகளானாலும் இம்மருந்தைத் தடவிய மாத்திரத்தில் நன்றாய் ஒட்டி இணைத்துக்கொள்ளும்.

7. சில மூலிகைகளின் பிரயோகத்தினால் இரும்பு வெங்கலம், பித்தளை, வெள்ளி முதலிய உலோகங்களைத் தங்கமாக்கி விடலாமென்று சொல்வதுடன் அம்முறைகளை செய்தும் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவ்விதம் தயாரிக்கப்படும் தங்கத்தை சொந்தத்திற்கு உபயோகிப்பதே கிடையாது. அவ்விதம் யாராவது சொந்தமாய் உபயோகித்துக்கொண்டால் அது மகா பாதகமாகும் என்றும், மீறி உபயோகப்படுத்தினால் பதினான்கு தலைமுறைக்கும் எந்தவிதமான விமோசனமும் கிடையாது என்றும் ஸ்வாமிகள் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் ஸ்வாமிகளிடம் அநேக சிஷ்யர்கள் இந்த ரஸவாத வித்யையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற பேரவாவுடன் அந்தரங்க பக்தி பூண்டவர்கள் போல் நடித்துவந்தார்கள். இவர்கள் செய்யும் பாவனையையும், நடிப்பையும் ஸ்வாமிகள் நன்றாய் அறிந்துகொண்டார்கள். இவர்களின் நோக்கம் என்ன என்பது அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. ஆனாலும் ஸ்வாமிகள் அவர்களது அந்தரங்க எண்ணம் தனக்குத் தெரியாதது போலும், அவர்களது வெளிவேஷமான பக்தியுடன் கூடிய நடிப்புகளைத் தாம் உண்மையானவை என்று நம்பி இருப்பதாயும் காட்டிக்கொண்டார்கள். அந்த நடிக சிஷ்யர்கள் என்ன செய்தும் ஸ்வாமிகளிடமிருந்து ரஸவாதத்

தைக் குறித்து எள்ளளவு நுட்பமும் அறிந்துகொள்ள அவர்களால் இயலவில்லை. ஸ்வாமிகள் அடிக்கடி இம் மாதிரியான ஆட்களைக் குறித்துச் சொல்வதுண்டு. அவர் களின் பெயர் முதலிய விபரங்களை நான் இங்கு கூறுவது உசிதமாகாது.

மேலும் ஏதோ ஒருவிதமான அதிசயப் பச்சிலை யிருப்பதாயும், அதை ஒருவன் தன்வசம் வைத்திருந்தால் அவன் உலகில் நடமாடிவருவதும், செய்யும் காரியங்களும் மற்றவர்களுடைய கண்களுக்குத் தெரியாது என்றும் ஸ்வாமிகள் சொல்வதுண்டு.

ஸ்வாமிகளுக்கு உயர்தரமான தைலங்களும், லேகி யங்களும் மற்றும் முத்து, பவழம், தாம்ரம், தங்கம் முதலிய பஸ்மங்களும் சிறந்த முறையில் செய்ய நல்ல அப் பியாசம் உண்டு. பொதுவாக ஸ்வாமிகள் எவருக்கும் சிகித்சை செய்யவோ, மருந்து கொடுக்கவோ எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏற்றுக்கொண்டால் குணம் ஏற்படுவது உறுதிதான்.

## 4. பிக்ஷா விநோதம்.

ஸ்வாமிகள் தம் பிக்ஷையை கிரமமாக பலவாறு மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதன்முதலில் குற்றாலநாதர் ஆலயத்தில் ஸ்ரீ தரணீ பீடத்திற்கெதிரில் வாசம் செய்யும் தருணம் ஸ்வாமிகள் கோவிலில் விற்கப் படும் நிவேதனமான சாதக் கட்டிகளை வாங்கி உண்டு வந்தார்கள் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இதற்குப் பிறகு எல்லோரையும் போலவே, இலை போட்டு

ஸஸ்யாதிகளுடன் உணவு ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டிலும் உண்டு வந்தார். இச் சமயங்களில் தான் பக்தர்கள் இல்லம் சென்று பிக்ஷை செய்து வந்தார். சில ஆண்டுகள் சென்றதும் இலையில் பரிமாறியவற்றை எல்லாம் ஒன்ருக சேர்த்து கலந்து பிசைந்து உருண்டைகளாக்கி, பக்தர்கள் கையினுல் கொடுக்கப்பட்டு உண்டு வந்தார்கள். சிறிது காலம் கழிந்து, உணவை அறவே நிறுத்தி ஒருவேளைமட்டிலும் பழம், பால், அருந்தி வந்தார்கள். பிற்பாடு சிறிது காலம், பழம், பால், அருந்துவதையும் நிறுத்திவிட்டு வேப்பிலைக் கொழுந்தை அரைத்து தினம் இரண்டு உருண்டை சாப்பிட்டு வந்தார்கள். இதற்கப்பால் ஸ்வாமிகளுக்கு உணவின் மேல் அபேக்ஷயே ஏற்படவில்லை. கடைசி காலங்களில் எவ்விதமான உணவுமின்றி ஜீவித்து வந்தார்கள். ஆகாரம் இல்லாமல் எப்படி ஜீவிக்க முடியும் என்று நாங்கள் ஸ்வாமிகளிடம் கேட்க, யோகாப்பியாஸ முறையில் தேர்ச்சி யுள்ளவர்களுக்கு மற்ற ஆகாரமே தேவை இல்லை என்றும், உடலுக்குத் தேவையான ஆகாரத்தை, உடலிற்குள்ளேயே, யோக முறையால் தயார் செய்து கொள்ளலாம் என்றும், இம் முறையைத் தான் சில மஹான்கள் தவம் செய்யும் பொழுது அனுஷ்டிக்கிருர்களென்றும் கூறினுர்கள்.

முதன்முதலில் ஸ்வாமிகள் சென்னைக்கு வந்த பொழுது எங்கள் வீட்டிற்கருகிலுள்ள ஸ்ரீ கோபாலாச்சாரியார் வீட்டில் தங்கி யிருந்தார்கள். நாங்கள் போய் ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து விட்டு வந்தோம். பிறகு மற்ெருரு நாள் ஸ்வாமிகளை எங்கள் வீட்டில் பிக்ஷை

செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தோம். ஸ்வாமிகள் எங்கள் வேண்டுகோளுக்கிசைந்தார்கள். ஸ்வாமிகள் அச்சமயம் இலையிட்டு ஸகல ஸஸ்யாதிகளுடன் போஜனம் செய்யும் காலமாகும். நாங்கள் அன்று காலையிலேயே ஓர் பெரிய விருந்திற்கொப்ப எல்லாவிதமான சாமான்களும், சுமார் இருபத்தைந்து பேர்களுக்குப் போதுமான நிலைமையில் தயாரித்தோம். சமையல் செய்து முடித்த பிறகு ஸ்வாமிகளை பிக்ஷைக் கழைக்கப் போன பொழுது, ஸ்வாமிகள் ஸ்ரீ V. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் வீட்டிற்கு பிக்ஷை செய்யப் போயிருப்பதாகவும், அநேகமாய் பிக்ஷை முடிந்து அவர் திரும்பி வரும் தருணம் என்றும் அங்குள்ளவர்கள் சொன்னார்கள். இதைக்கேட்டதும் எங்கள் யாவருக்கும் மிகவும் வருத்தமாய் விட்டது. ஸ்வாமிகள் வந்ததும் விபரம் அறிந்து போவோம் என்று நினைத்து அவரது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்வாமிகளும் வந்தார்கள்.

ஸ்வாமிகள் எங்களைக் கண்டதும் சற்று யோஜித்து "நான் பிக்ஷை செய்வதற்கு வருகிறேன்" என்று சொல்லி எங்களுடைய வீட்டிற்கு புறப்பட்டு வந்தார்கள். ஏற்கனவே ஸ்வாமிகள் பிக்ஷை செய்தாய்விட்டதென்றறிந்த பிறகு எப்படி எங்கள் வீட்டில் பிக்ஷை செய்ய முடியும் என்று யோஜித்தோம். ஒரு வேளை எங்கள் ஸமாதானத்திற்காக பிக்ஷை செய்தாலும் கொஞ்சமாகத்தானே சாப்பிட முடியும் என்றும், நாம் இருபத்தைந்து பேர்களுக்குச் சமையல் செய்தோமே என்றும், ஸ்வாமிகள் திருப்தியாக

பிக்ஷை செய்வதற்கில்லையே என்றும், எனக்கு அதிக வருத்தமாயிருந்தது.

ஆனாலும் ஸ்வாமிகள் இலைபோடச் சொல்லி பிக்ஷை செய்ய ஆரம்பித்ததும் பரிமாறியதையெல்லாம் உண்டு மேலும் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். தயாரித்திருந்த ஸஸ்யாதிகள் முதலிய யாவும் தீர்ந்து மறுதடவை கேட்டால் போடுவதற்கில்லையே, என்ன செய்வது என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தோம். ஸ்வாமிகள் எங்களைக் கண்டு புன்முறுவல்பூத்து "பிக்ஷை செய்தது போதுமா? இன்னும் சாப்பிட வேண்டுமா?" என்றார்கள். "எங்களை சோதிக்கக் கூடாது. உங்களால் பிக்ஷை செய்ய முடியுமாவென்று நாங்கள் நினைத்தது தவறு தான்" என்று அவரது கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டோம். பிறகு ஸ்வாமிகளும் எழுந்து கைகளை சுத்தம் செய்துகொண்டார்கள்.

"உணவருந்திய பின் மறுபடியும் எவ்விதம் இவ்வாறு சாப்பிடமுடிந்தது?" என்று கேட்டதும், "ஒருமுறை யோகம் செய்தால் எவ்வளவு சாப்பிட்டிருந்தாலும் அவ்வளவும் ஜீர்ணமாகிவிடும்" என்று ஸ்வாமிகள் கூறினர்.

பிறகு நாங்கள் யாவரும் மறுபடியும் சமையல்செய்து போஜனம் செய்தோம்.

ஸ்வாமிகளிடம் எல்லாமே விநோதமாகவே இருக்கும்!

## 5. பூஜா வைபவம்

ஸ்வாமிகள் சொந்தமாக தேவ பூஜை செய்வதற்கு தனியாக சில விக்கிரகங்களை வைத்திருந்தார்கள். அனுதினமும் காலையில் தவருமல் ஆராதனை நடத்தி வருவார்கள். யாத்திரை காலங்களிலும், பிரயாணம் செய்யுங் காலங்களிலும், ஸ்வாமிகள் தம் தேவ பூஜையில் சில முக்கியமான மூர்த்திகளை மாத்திரம் கூடவே எடுத்துச் செல்வார்கள். ஸ்வாமிகளின் பூஜையில் முக்கியமாக ஸ்ரீ சக்ரம், மேரு, ரிஷபவாகனருடராய் பார்வதீ பரமேச்வரர், தத்தாத்திரேயர், சாரதாம்பிகை முதலிய மூர்த்திகள் உண்டு.

ஸ்வாமிகள் சென்னைக்கு வந்திருக்கையில் எங்கள் வீட்டில் பல தடவைகள் பூஜை செய்திருக்கிருர்கள். ஸாயங்காலங்களில் பூஜை நடைபெறும் பொழுது பக்தர்கள் பலர் குடும்பத்துடன் வந்து தரிசிப்பார்கள்.

சிலநாட்களில் இரவு வெகுநேரம் வரை பூஜைகள் நடக்கும். சில இரவில் தேவிக்கு நவாவரண பூஜை நடத்துவார்கள். பூஜை நடைபெறும் சமயங்களில் ஸ்வாமிகள் நிஷ்டையிலமர்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிவதுண்டு. அதைப் பிரத்யக்ஷமாய்ப் பார்த்தவர்களுக்கு பக்தி பரவசமேற்பட்டு உடம்பும் புல்லரிக்கும். ஒவ்வொரு தினமும் பூஜைக்குறிய செலவுகளை பக்தர்களே ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு ஏற்று நடத்துவார்கள்.

அநேகம் தடவை ஸ்வாமிகள் செய்யும் பூஜைக்குப் பணியாற்றும் பேறு எனக்கு கிட்டியது. அலங்காரம் செய்யும் சமயம் அங்கு வந்து கூடியிருக்கும் ஸ்திரீபக்தர்கள் யாவரும் தங்கள் தங்கள் அணிகலன்களைக் கழற்றி மூர்த்திகளுக்கு அலங்கரிக்க உதவுவார்கள். பூஜைகள் முடிந்து அவரவர்களது நகைகளைப் பெற்றுச் செல்வார்கள். அவ்வாறு அலங்காரத்திற்காக வரும் நகைகள் எண்ணற்றன. நகைகள் யாவற்றிலும் வைரங்களும், நவரத்னங்களும் இழைக்கப்பட்டிருக்கும். ஒருநாள் ஸ்திரீ பக்தர்கள் அதிகமாய் வந்திருந்தனர். அன்று நகைகள் ஏராளமாக வந்து குவிந்திருந்தன. அவை யாவும் அன்றிரவு அலங்கரிக்கப்பட்டன. ஸ்வாமிகளின் ஆனந்தத்திற்கு அன்று அளவேயில்லை. அன்று நவாவரண பூஜை செய்யத் தொடங்கினர். அந்தணர்கள் யாவரும் வேத பாராயணம் செய்தனர். அன்று ஸ்வாமிகள் செய்த அர்ச்சனையே நூதனமான முறையிலிருந்தது. புஷ்பங்களை அர்ச்சனை செய்யும்பொழுது மூர்த்திகளின் மேல் போடுவதற்கு பதிலாக நேரே மேல்நோக்கித் தூக்கிப் போடுவார்கள். போட்டுவிட்டு கையை நீட்டுவார்கள். மேலே போடப்பட்ட புஷ்பங்கள் ஸ்வாமிகளின் உள்ளங்கையின் மேல் விழுந்து காம்பு கீழாகவும் மலர் மேலாகவும் நட்டமாய் நிற்கும். பிறகு கை உதரப்பட்டதும் அம்மலர் கீழே விழுந்துவிடும். இது பார்ப்பதற்கு விநோதமாகவும், விசித்திரமாகவும் இருந்தது. அன்று பூஜைகள் முடிவுற்றதும் ஆபரணங்களைக் கழற்றி வழக்கம்போல் உடையவர்களிடம் சேர்ப்பிக்க நினைத்து

ஸ்ரீ சாரதாம்பிகை விக்ரஹத்தின் மேலுள்ள வைர அட்டிகையைக் கழற்ற யத்தனிக்கையில் அவ்விக்ரஹம் மளமளவென்று குதிக்க ஆரம்பித்தது. உடனே நான் இதைக் கண்ணுற்று அஞ்சி நகையைக் கழற்ருமலே ஒதுங்கி வந்துவிட்டேன். இந்த அதிசயத்தையும் அங்கு கூடியுள்ள யாவரும் கண்டு வியந்தனர். ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி அன்று அந்த நகையை எடுக்காமல் மறுநாட்காலையில் எடுத்து உடையவர்களிடம் சேர்க்கப்பட்டது. இச்செய்திகள் யாவும் சென்னை நகரெங்கும் பரவலாயிற்று. அன்னை பராசக்தியின் அருளும் மகிமைகளும் அன்று பிரத்யக்ஷமாகத் தாண்டவமாடின என்றே சொல்லவேண்டும். இம்மாதிரி பூஜைகளை ஸ்வாமிகள் பல இடங்களிலும் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி சென்னையில் செய்திருக்கிருர்கள்.

ஒரு சமயம் சென்னையில் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் தாயார் தம் வீட்டிலும் சேர்ந்தாற்போல் மூன்று இரவுகள் பூஜை நடத்தவேண்டும் என்று ஸ்வாமிகளைக் கேட்டுக்கொண்டார். அவர்களது பிரார்த்தனைக்கிணங்கி ஸ்வாமிகள் அன்னூர் இல்லத்திலும் தம் பூஜையைச் செய்து வந்தார்கள். ஒவ்வொரு இரவும் பூஜை முடிவுற்றதும் எங்கள் வீட்டுக்குத் திரும்பி ஸ்வாமிகளுடன் வந்து விடுவோம். ஸ்ரீ ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் தாயார் மஹா பக்த சிகாமணி. தேவீ பூஜை செய்பவர். அவர்கள் வீட்டில் பூஜா அறையில் ஓர் வெள்ளிச் சப்பரம் உண்டு. அதில் தான் பூஜாகாலங்களில் விக்கிரகங்களை வைத்துப் பூஜிப்பதுண்டு. அம்

மூன்று தினங்களில் ஒரு நாள் பௌர்ணமியாக அமைந்தது. ஸ்வாமிகள் அன்றைய பூஜையை வெகு சிறப்பாய்ச் செய்தார்கள். ஸ்வாமிகளின் பூஜைக்குரிய மூர்த்திகளும் அந்த வெள்ளிச் சப்பரத்திலேயே வீட்டு விக்கிரகங்களுடனேயே வைக்கப்பட்டு பூஜை நடத்தப்பட்டது. பூஜை நடைபெறும் சமயத்தில் "கிரீச்" "கிரீச்" என்று அடிக்கடி ஒருமாதிரியான சப்தம் உண்டாயிற்று. அந்த சப்தம் எங்கிருந்து வருகிறதென்று நானும் அந்த அம்மாளும் உற்றுக் கவனித்தும் அறியக்கூடாமல் சற்று திகைத்தோம்.

நிஷ்டையிலிருந்து அப்பொழுது கலைந்த ஸ்வாமிகள் எங்களைக்கண்டு புன்சிரிப்புடன் "எந்த இடத்திலிருந்து அந்த சப்தம் வருகிறதென்று இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று ஜாடை செய்து சப்பரத்திலிருந்த மூர்த்திகளைச் சுட்டிக்காட்டினார்கள். அஃது உற்று நோக்குகையில் தேவியின் விக்கிரகங்கள் முன்னும் பின்னுமாக நகர்ந்துகொண்டேயிருந்தன. நாங்கள் யாவரும் இந்த ஸம்பவத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தோம்.

ஸ்வாமிகள் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களது தாயாரிடமும், மனைவியிடமும், "இதெல்லாம் தேவியின் திருவிளையாடல்!" என்று எழுதிக் காட்டினார்கள்.

சக்தியின் கூற்றை எவரால் வர்ணிக்க இயலும்?

## 6. நவராத்திரி உத்ஸவம்.

தத்தாத்திரேய மந்திராலயத்தில் வருடந்தோறும் உத்ஸவாதிகள் முறைப்படி ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன. நவராத்திரி உத்ஸவம் தான் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது. இந்த ஒன்பது நாட்களிலும் காலை மாலைகளில் வேத பாராயணமும், ஸந்தர்ப்பணைகளும் நடைபெறும். விசேஷமான அபிஷேக ஆராதனைகளும் நடக்கும். நவராத்திரி வெள்ளிக்கிழமைகளில் ஸ்வாமிகளே நேரில் தேவிக்கு குங்குமாபிஷேகம், அர்ச்சனை முதலியன செய்வார்கள். இதைத்தவிர பக்தர் யாவரும் சேர்ந்து வெகு ஆசார சீலத்துடன் லக்ஷார்ச்சனை முதலியன செய்வார்கள். ஸாயங்காலம் தேவிக்கு அபூர்வமான அலங்காரங்கள் செய்யப்படும். அற்புதமான ஆபரணங்களும் சாத்தப்படும். இதைத்தவிர கன்யாப்பெண்களுக்கு குமாரி பூஜையும், ஸுவாஸினீ பூஜைகளும், தம்பதி பூஜைகளும் முறைப்படி நடத்தப்படும்.

மேலும் கணபதி ஹோமம், சண்டிகா ஹோமம் முதலியவைகளை பக்தர்கள் வெகு நியமத்துடன் நடத்துவார்கள். இவ்விழாவிற்கு வெளியூர்களிலிருந்தும், அண்மையிலுள்ள கிராமங்களிலிருந்தும், பக்தர்கள் எல்லோரும் தத்தம் குடும்பசகிதம் வந்து ஒன்பது தினங்களும் தரிசனம் செய்து பிரஸாதம் பெற்றுப்போவார்கள். அநேகமாய் மாலை நேரங்களில் உபன்யாஸங்களும், கதா காலக்ஷேபங்களும், ஸங்கீத கச்சேரிகளும் நடைபெறும். கடைசியாக சண்டிகா ஹோமம் பூர்ணாஹுதியான மறு

நாள், ஸ்ரீராஜராஜேச்வரி அம்பாள் எழுந்திருப்பு செய்யப்பட்டு அம்பு எய்யும் விழாவுடன் நவராத்திரி உற்சவம் முடிவடையும்.

வேதபாராயண கோஷங்கள் பக்தகோடிகளைப் பரவசப்படுத்தும். போஜன காலங்களில் ஒரே சமயம் நூற்றுக்கணக்கான ஸுவாஸினிகள் போஜனம் செய்வதையும், அவர்களுக்கு மஞ்சள் குங்கும தாம்பூலாதிகள் வழங்கப்படுவதையும், பார்ப்பதற்குப் பரமானந்தமாய் இருக்கும்.

அபிஷேகம் செய்யப்பட்ட குங்குமப் பிரஸாதம் ஓர் மஹா ஔஷதமாகும். க்ஷயரோகம், குன்மம், உஷ்ணக்காங்கை முதலிய கர்மவியாதிகள் நீங்குவதற்கு இக்குங்கும பிரஸாதத்தை நாள்தோறும் சாப்பிட்டு வந்தாலே போதுமானது. அப்படி அநேக பக்தர்கள் குணமடைந்ததை நான் பிரத்யக்ஷமாய்க் கண்டிருக்கிறேன்.

லக்ஷார்ச்சனை செய்யப்பட்ட குங்கும பிரஸாதத்தால் பிசாசம், சங்காதோஷம் முதலிய வியாதிகள் குணமடையும். தவிர இக்குங்கும பிரஸாதத்தை நாள்தவறாமல் நியமத்துடனும் பக்தி விச்வாஸத்துடனும் ஸ்திரீகள் அணிந்துகொண்டு வந்தால் மாங்கல்ய பாக்யமும் புத்திர ஸந்தானமும் ஏற்படும். சண்டிகா ஹோம குண்டத்திலுள்ள பஸ்மமும் ஹோம குண்டத்தில் போடப்பட்டுள்ள நாணயக் காசுகளும் சாலச் சிறந்த வஸ்துக்கள்.

ஹோம குண்டத்திலுள்ள திருநீறு குஷ்டம், மர்ம வியாதி, பற்றுப்படைகள், வாய்ப்புண் முதலியவைகளுக்கு

மேலான மருந்தாகும். இதை ஒருவன் தரித்துக்கொண்டால் அவனை அபமிருத்யு அணுகவே அணுகாது. ஹோமகுண்டத்திலிடப்பட்ட நாணயங்களை குழந்தைகளும் ஸ்திரீகளும் அணிந்துகொண்டால் ஓர் ரக்ஷையாக இருக்கும். யாதொரு தோஷமும் அணுகாது.

## 7. தீர்த்தப் பிரஸாதம்.

ஸ்வாமிகள் பூஜா காலங்களிலும் ஏனைய விசேஷ உத்ஸவ காலங்களிலும் பக்தர்களுக்குத் தீர்த்தப் பிரஸாதம் வழங்குவது வழக்கம். ஸ்வாமிகள் காலையில் தம் பூஜை ஜபங்களை முடித்துக்கொண்டு நல்ல ஆசார சீலத்துடனிருக்கும் பொழுது தான் இத்தீர்த்தப் பிரஸாதமருள்வார்கள். சிலருக்கு தோஷ நிவர்த்திக்காகவும் தனியாக ஜபம் செய்து இப் பிரஸாதம் கொடுப்பதுண்டு.

பொதுவாக இத்தீர்த்தப் பிரஸாதம், ஹிஸ்டீரியா, க்ஷயம், குன்மம், பித்தப்பாண்டு, உஷ்ணகாங்கை, அன்னத்துவேஷம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட ஔஷதமாகும். நானறிய பலருக்கு நலமேற்பட்டிருக்கிறது.

பேய் பிசாசு பிடித்தல், கர்ப்பச் சிதைவு ஏற்படுதல், சங்காதோஷம், மாலைக்கண்ணோய் முதலிய ஸகல விதமான பயந்த கோளாறுகளுக்கும் நம் ஸ்வாமிகள் பிரத்தியேகமாக ஜபம் செய்து காலை நேரங்களில் இப் பிரஸாதத்தைக் கொடுப்பதுண்டு. உபாதியுள்ளவர்கள் நல்ல நியமத்துடனும், ஆசாரத்துடனும் வந்து ஸ்வாமிகளால் அளிக்கப்படும் இத் தீர்த்தத்தை ஏற்றுக்கொண்டு குண

மடைந்திருக்கிறார்கள். என்னே! இத் தீர்த்தத்தின் மஹிமை? மூன்று பொழுதிலேயே மேற்கண்ட பிணிகள் நீங்கிக் குணமேற்பட்டுவிடும். இந்த மஹிமையை அறிந்து பல பக்தர்களும் சிஷ்யர்களும் வெகு தூலையிலிருந்து வந்து இப் பிரஸாதத்திற்காக காத்துக் கொண்டிருப்பார்கள். நாள்தோறும் காலையில் பூஜை முடிந்ததும் வழங்கப்படும் தீர்த்தப் பிரஸாதத்தை சில சமயங்களில் சில பக்தர்களுக்குக் கொடுக்காமல் ஸ்வாமிகள் மறுத்து விடுவார். அதற்குக் காரணம் விசாரிக்கையில் அவர்களிடம் ஏதாவது ஆசாரக்குறைவு இருந்திருக்கும் அல்லது சாவு தீட்டு ஏதாவது ஸம்பவித்திருக்கும என்று தெரியவரும்.

ஆகையால் ஸ்வாமிகளிடம் தீர்த்தப் பிரஸாதம் வாங்கிக்கொள்ளும்போது பக்தர்கள் யாவரும் நல்ல ஆசாரத்துடனிருந்து பயபக்தியுடனேயே வாங்கிக் கொள்வார்கள்.

---

# அத்தியாயம் 10.

## ஸ்வாமிகளின் யோக சக்தி.

### 1. விசித்திர நிஷ்டை.

ஸ்வாமிகள் யோகாப்பியாஸ முறைகள் யாவற்றையும் நன்கு அறிந்தவர். ஜல ஸ்தம்பம், வாயு ஸ்தம்பம் முதலியவைகளையும் நன்கறிந்தவர்கள். யோக பலத்தினால் நினைத்த காரியங்களில் ஸித்திபெற்றிருந்தார்கள். எப்

பொழுதும் இரவு நேரங்களில் யோக நிஷ்டையிலமர்ந்து விடுவார்கள். தூக்கம் என்பதே அவரிடம் கிடையாது.

சென்னையில் எங்கள் வீட்டில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது ஓர்நாளிரவில் சுமார் 12 மணிக்கு ஸ்வாமிகளின் அறையில் திடீரென்று ஏதோ ஒரு சாமானைக் கீழே போட்ட மாதிரி தொப்பென்று சப்தம் கேட்டது. அதற்கடுத்துள்ள அறையில் நாங்கள் படுத்துக்கொண்டிருந்தோம். இந்த இரு அறைகளுக்கும் இடையில் வாசலில் அக்காலத்திலுள்ள இறக்கைக் கதவுகள் இருந்தன. எப்போதும் இக்கதவுகள் மூடியே இருக்கும். நானும் என் தம்பியும் தூக்கம் கலைந்து விழித்துக்கொண்டோம். அந்த சப்தம் கேட்டதிலிருந்து எங்களுக்கு ஒருவித அதிர்ச்சியும் பயமும் ஏற்பட்டது. ஸ்வாமிகளுக்கு என்ன நேர்ந்ததோவென்று கவலைப்பட்டு ஸ்வாமிகளை எழுப்பவும் பயந்து ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து, மெதுவாய் அந்த இறக்கைக் கதவுகளைத் திறந்து பார்த்தோம். அந்தோ! பயங்கரமான காக்ஷி. ஸ்வாமிகளின் அங்கங்கள் கிடந்த நிலையைப் பார்த்து திகிலடைந்தோம். ஸ்வாமிகள் ஓர் பெஞ்சியின்மீது உட்கார்ந்த வண்ணம் சரீரம் சுவற்றில் சாய்க்கப்பெற்றுத் தலை தொங்கிக்கொண்டும், தோள்பட்டையிலிருந்து இரு கைகளும் தொங்கவிட்டுக்கொண்டும், இடுப்பிற்குக் கீழ் இரு கால்களும் தொங்கவிடப்பட்டு உயிரற்றுக் கிடப்பதைப்போலிருக்கக் கண்டோம்.

ஸ்வாமிகளின் ஆவிக்கே எவரோ ஆபத்து விளைவித்து விட்டார்களென்று திகிலடைந்து, இந்த அர்த்த

இராத்திரியில் இதை எப்படி எல்லோரையும் எழுப்பி அறிவிப்பது என்றும், அவ்விதம் அறிவித்தால் "உங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்? அதை ஏன் நீங்கள் பார்த்தீர்கள்?" என்று யாராவது கேட்டால் என்ன செய்வது! அதனால் ஏதேனும் குற்றமேற்பட்டுவிடுமோ என்று அஞ்சி பொழுதுபுலரும் வரை தூங்காமலேயே இருந்தோம். ஸ்வாமிகள் பொழுதுவிடிந்து நாலுமணிக்கெல்லாம் வழக்கம்போல் அறையின் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வரும் அரவம் கேட்டு நாங்கள் வியந்தோம். அவரைக் கண்டதும் எங்களுக்கு சற்று மனதிம்மதி ஏற்பட்டது.

காலையில் எழுந்து முகம் சுத்திசெய்து கொண்டு ஸ்வாமிகளை தரிசிக்க நினைத்து வினயத்துடன் அவரது அறைக்குள் சென்றோம். அச்சமயம் ஸ்வாமிகள் ஸ்நானம் செய்து ஜபதபாதிகளை முடித்துக்கொண்டு ஏதோ புஸ்தகத்தைப் படித்தவண்ணம் வீற்றிருந்தார்கள். நாங்கள் நமஸ்கரித்துப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு அங்கு உட்கார்ந்தோம். அச்சமயம் ஸ்வாமிகள் படித்துக்கொண்டிருந்த புஸ்தகம் கைதவறிக் கீழே விழுந்தது. அதை எடுத்துக்கொடுக்கும் பொழுது திறந்திருந்த பக்கத்தில் ஓர் சித்திரம் இருந்தது. அது இரவில் நாங்கள் ஸ்வாமிகளை எந்த நிலைமையில் கண்டோமோ அதைப்போலவே இருந்தது. அதைக் கண்ணுற்று வியப்புடன் உவந்தோம். ஸ்வாமிகள் எங்கள் களிப்பைக்கண்டு "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று வினவ, நாங்கள் உண்மையைப் புகன்றோம். ஸ்வாமிகளும் அதை யதார்த்தமென ஒப்புக்கொண்டனர்.

அது யோகாப்பியாஸ முறைகளில் ஒன்று என்றும், அதன் பெயர் கண்டயோகம் என்றும் கூறி, அப்படத்தை மறுபடியும் காண்பித்தார்கள். இம்மாதிரியான யோகாப்பியாஸங்களைச் செய்யும் காலங்களில் எவ்விதமான இடைஞ்சலும் அரவமும் செய்யக்கூடாதென்றும், நாங்கள் அப்பொழுது பேசாதிருந்தது சரிதான் என்றும், சத்தமுண்டாக்கினால் யோகத்திலிருப்பவருடைய மன அமைதி கெட்டு லயப்படாமல் போய் அங்கங்களை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவர இயலாமற்போகும் என்றும், அக்கோலத்தைக் கண்டு எவரும் அஞ்சவேண்டியதில்லை என்றும் அறிவித்தார்கள். ஸ்வாமிகள் தாம் வைத்திருந்த புஸ்தகத்தில் அநேக யோகாப்பியாஸ முறைகளைப்பற்றி படத்துடன் விளக்கப்பட்டிருக்கிறதென்று கூறி, தெலுங்கில் எழுதப்பட்டிருந்த அந்த நூலைப்பார்க்குமாறு என்னிடம் கொடுத்தார்கள். அப்புஸ்தகத்தில் சுமார் எழுபது யோகாஸன முறைகள் சித்திரங்களுடன் விளக்கப்பட்டிருந்தது. சிற்சில ஆஸனங்களை யன்றி ஏனையவை யாவும் மிகவும் கடினமானவை. "ஸ்வாமிகளுக்கு இந்த ஆஸனங்கள் யாவற்றிலும் அப்பியாசமுண்டோ?" என்று கேட்டதும் அறையின் கதவுகளைத் தாளிட்டு, உடைகளை நீக்கி கௌபீனதாரியாகி அமர்ந்துகொண்டு அப் புஸ்தகத்திலிருந்த ஆஸனங்களையெல்லாம் ஒன்று விடாமல் சிறிது நேரத்தில் வெகு எளிதில் செய்து காட்டியருளினார்கள். அது கண்டு நாங்கள் யாவரும் வியப்புற்றோம். என்னே யோகியின் மஹிமை !

## 2. அறிவூட்டல்.

சித்தூர் ஜில்லாவிலுள்ள பக்தர்களின் அழைப்பின் பேரில் ஸ்வாமிகள் சித்தூருக்கு ஒரு சமயம் சென்றார்கள். அவர்கள் ஸ்வாமிகளைத் தக்க மரியாதையுடனும், பக்தி வினயத்துடனும் வரவேற்று கௌரவித்தனர். அவ்வூரில் ஸ்ரீ ராகவய்யா என்ற ஓர் அந்தண வைத்தியர் இருந்தார். சென்னையில் வழக்கறிஞர் தொழிலாற்றி வந்த ஸ்ரீ L. A. கோவிந்த ராகவய்யர் என்பவருடைய சகோதரர் ஸ்ரீ L. A. வீரராகவய்யர் அவர்களுக்கு இந்த வைத்திய ராகவய்யா ஓர் நல்ல நண்பராவர். இவர் ஒரு தேவீ உபாஸகர். யோக முறைகளை விடாமல் அப்யஸித்தவர். யாவற்றிலும் நல்ல தேர்ச்சியுடையவர்.

தான் அனுஷ்டித்துவந்த முறைகளில் பூர்ண வெற்றியடைய முடியாமல் பல மஹான்களை அண்டியும், எவராலும் மேற்செல்லும் வழிகளைக் கற்பிக்க இயலாமற் போகவே மனம் வெறுத்து "இனி எனக்குத் தெரிந்தளவு கூட மற்றவர்களுக்குத் தெரியாது" என்று நினைத்து, "இனி நான் எப்பேற்பட்ட மஹான் வந்திடினும் வந்தனம் முதலிய மரியாதைகள் செய்யப்போவதில்லை" என்று தீர்மானித்திருந்தார்.

ஸ்ரீ L. A. வீரராகவய்யர் தம் நண்பராகிய ராகவய்யாவை கட்டாயப்படுத்தி நம் ஸ்வாமிகளிடம் அழைத்துச் சென்றார்கள். வந்தவர் யாவரும் ஸ்வாமிகளைத் தரிசித்து வந்தனம் செலுத்தினார்கள். வெகு அலக்ஷியத்துடன் வந்த ஸ்ரீ வைத்திய ராகவய்யா, ஸ்வாமிகளைக் கண்டதும்

பரவசமடைந்து சற்று திகைத்து நின்று, திடீரென்று அவரது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, வெகுநேரம் வரை எழாமலே விழுந்து கிடந்தார். ஸ்வாமிகள் அவரை எழுந்திருக்கும்படி ஆஞ்ஞையிடவே தன்னுணர்வு கொண்டு தன் நிலைமையைச் சொல்லி ஸித்திபெறும் மார்க்கத்தை அருளவேண்டுமென்று கோறினர்.

ஸ்வாமிகள் ஸ்ரீ ராகவய்யாவைப் பார்த்து "உம் அகந்தையை ஒழிக்கவேண்டும்" என்றும், "உலகில் கற்றது கைமண்ணளவு, கல்லாததுலகளவு" என்பதற்கொப்ப "நீங்கள் படித்தறிந்தது காணாது" என்றும் அறிவித்து, "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா ?" என்றபடி "நீங்கள் கற்றதெல்லாம் ஒரு குருவில்லாமல் கற்றதாகும். அது ஒன்றிற்கும் பயன்படாது" என்று சொல்லி அவரை ஓர் ஆஸனத்தில் அமரச்செய்து தாமும் நிஷ்டையிலமர்ந்து அவருக்குபதேசித்து அவர் கற்றதிலிருந்து மேற்செல்லும் வழியைக் காட்டியருளினர்கள். அன்றிருந்து ஒவ்வொரு நாளும் அப்பியாசத்தின் பேரில் நிர்விகல்ப ஸமாதியில் சற்று நேரம் லயித்து வந்ததாக அவர் சொல்வர். திருக் குற்றாலத்தில் தத்தாத்திரேய மந்திராலயத்தில் ஸ்ரீ ராஜ ராஜேச்வரி பிரதிஷ்டையானதும் ஸ்ரீ ராகவய்யா அவர்கள் வந்திருந்தார். அப்போது நான் இவரைக் கண்டேன். தனக்குக் கிடைத்த பாக்கியத்தை என்னிடம் கூறி மனம் பூரிப்பார்.

ஸ்வாமிகள் சென்னையில் தங்கியிருந்தபொழுது மற்றுமோர் சமயத்தில், மதருஸ் தென்மராட்டா இருப்புப் பாதை நிலயத்தில் தொழிலாற்றிவந்த ஓர் வைணவ

அந்தணர் அடிக்கடி நம் ஸ்வாமிகளைத் தரிசித்துப் போவ துண்டு. அவர் வந்தால் சற்றுநேரம் அங்கு உட்கார்ந்து விட்டு ஸ்வாமிகளிடம் விடைபெற்றுச் சென்று விடுவார் கள். எவருடனும் வீணுகப்பேசவே மாட்டார். ஸ்வாமி கள் இவருக்குத் தம் அந்தரங்க கடாக்ஷத்தினுல் நிர் விகல்ப சமாதி நிலையை அடையும் வழியைக் கற்பித்தார் களாம். இச்செய்தி ஓர் காலத்தில் ஸ்வாமிகளாலேயே எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்த அந்தணர் உத்தி யோகத்தில் உயர்ந்து, பிறகு ஒய்வு பெற்றிருக்கும் காலத் தில் இறைவன் திருவடி நிழலை யடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## 3. வீண் ஆசை.

ஸ்வாமிகள் திருக்குற்றுலத்தே தண்டாயுதபாணி மடாலயத்தில் வாசம் செய்துவந்த சமயம் ஸ்ரீவில்லிபுத் தூருக்கருகாமையிலுள்ள ஓர் சிறு கிராமத்தைச் சார்ந்த ஒருவர் தொடர்ந்து பல நாட்கள் வரை மடாலயத்தின் முன் நின்று ஸ்வாமிகளைத் தரிசித்தவண்ணமாயிருந்தார்.

ஒரு நாள் ஸ்வாமிகள் தம் ஞான திருஷ்டியால் அறிந்து வெளியில் வந்து அவரை யாரென்று வினவினர். அதற்கு அவர், ஸ்வாமிகளைத் தரிசித்து தனிமை யில் சிற்சிலவற்றைப் பேச விரும்புவதாகவும், ஸந்தர்ப்பம் எதிர்நோக்கி இது நாள் வரை காத்திருந் ததாகவும், தன் இல்லத்தில் ஓர் புதையல் இருப்பதாக அறிந்து அதை அடைவதற்கு முயற்சி செய்தபொழுது தன் கைக்கு எட்டாமல் பூமிக்குள் சென்றுவிடுவதாகவும்,

தான் எவ்வளவோ பள்ளமாகத் தோண்டிப் பார்த்தும் பலனில்லாமற் போயிற்றென்றும், இது விபரத்தை பல பெரிய ஜோதிடர்களிடம் இரகசியமாய் ஆராய்ச்சி செய்து பார்த்ததில், ஓர் மிகப்பழைமையான ஏட்டுப்பிரதியில் இச் சொத்தை அடைய விரும்புகின்றவன் திருக்குற்றாலத்தில் வரப்போகும் மஹாமௌனியின் கிருபையைப் பெற்றால் கிட்டும் என்று எழுதியிருந்ததாகவும், ஸ்வாமிகளின் தரிச னார்த்தமாய் இங்கு வந்திருப்பதாகவும், ஸ்வாமிகளைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்று அந்த நிதி முழு வதையும் ஸ்வாமிகளின் தர்ம கைங்கர்யங்களுக்கே அர்ப் பணம் செய்து விடுவதாகவும், ஸ்வாமிகள் பார்த்துத் தனக்கு ஏதாவது கொஞ்சம் கொடுத்தருளினால் போது மென்றும் கூறி, அவரது மலர்பாதங்களில் வீழ்ந்து இறைஞ்சினார்.

ஸ்வாமிகள் இவற்றையெல்லாம் கேட்டு சற்று நேரம் வரை யோகநிஷ்டையிலமர்ந்தார்கள். பிறகு அவரிடம் "மூன்றுமாதகாலம் சென்று வாருங்கள்" என்றறிவித்து அனுப்பி விட்டார்கள்.

அவர் விடைபெற்றுச் சென்றதும், ஸ்வாமிகள் எங்களை நோக்கி "அவர் கூறியது முற்றிலும் உண்மை. ஆனால் அது கொடிய பாபகரமான பொருள். பல களவுக ளும் கொலைகளும்செய்து சேகரித்துப் புதைக்கப்பட்டது. அது இவனுக்குக் கிட்டாது" என்று தெரிவித்தார்.

"அவ்வாறிருக்குமானால் தாங்கள் ஏன் அவரை மூன்று மாதங்கள் கழித்து இங்கு வரச்சொன்னீர்கள்?"

என்று நாங்கள் ஸ்வாமிகளைக் கேட்டோம். "எப்பொழுதும் நடக்கவிருக்கும் விஷயத்தை மறைத்தே கூறுதல் வேண்டும். தவிரவும் இவருக்கு இம்மூன்று மாத காலத்திற்குள் ஆயுள் முடிவு பெறுவதாலும், அந்தச்செல்வம் இவருக்கு கிடைக்கும் பாக்கியமில்லை. அவரது திருப்திக்காகவே அவ்விதம் பதிலளித்தனுப்பினேன்" என்று தெரிவித்தார்கள்.

என்னே! ஸ்வாமிகளின் மஹிமை. பொருளில் கூட புண்ணியம், பாபம் என்று இருக்கிறது பாருங்கள். இதை சாதாரண ஜனங்கள் எவ்வாறு அறிந்துகொள்ள இயலுமோ தெரியவில்லை.

## 4. ஸத்ய ஸங்கல்பம்.

ஒரு சமயம் ஸ்வாமிகள் ஆந்திர தேசத்திற்கு யாத்திரையாக சில பக்தர்களின் அழைப்பின் பேரில் சென்றார்கள். அப்போது நெல்லூரிலிருந்து அடுத்துள்ள ஓர் கிராமத்திற்கு மோட்டாரில் செல்லவேண்டியிருந்தது. மோட்டாரில் ஏறிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் வழியில் சற்று மோட்டாரை நிறுத்தும்படி ஸ்வாமிகள் டிரைவரிடம் சொல்ல, அவர் அதை அலக்ஷியம் செய்து நிறுத்தாமலே ஓட்டிக்கொண்டிருந்தார். சுமார் நூறு அடி தூரம் சென்றிருக்கும். மோட்டார் தானாகவே நின்றுவிட்டது. டிரைவர் என்ன செய்தும் மோட்டார் ஓடுவதற்கு இல்லை. பட்டபாடெல்லாம் வீணாயிற்று. மோட்டார் நின்ற காரணம் எவராலும் அறியக்கூடவில்லை.

ஸ்வாமிகளிடம் அங்குள்ளவர்கள் அதன் காரணம் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, ஸ்வாமிகள் "என் கமண்டலுவிலுள்ள இந்தத் தண்ணீரைக் கீழே கொட்டிவிடவேண்டும் என்று டிரைவரிடம் காரை நிறுத்தச்சொன்னேன். அப்படி அத்தண்ணீரைக் கொட்டாமல் கமண்டலுவிலேயே வைத்திருந்தால், மோட்டார் ஓடும்போது இதர பிரயாணிகளின் மேல் அலம்பிச்சிதறும் அல்லவா ? நான் எவ்வளவு சொல்லியும் அலக்ஷியத்துடன் மோட்டார் ஓட்டப்பட்டது. அதன் பயனாய்த் தானாகவே மோட்டார் நின்று விட்டது'' என்று அறிவித்தார். கமண்டலுவிலுள்ள நீரை ஸ்வாமிகள் கீழே கொட்டினார்கள். இதைக்கேட்டு மோட்டார் டிரைவர் ஸ்வாமிகளின் பாதங்களில விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு, மோட்டார் ஓடும்படி உத்தரவு செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். 'இப்போது ஓட்டுங்கள்' என்று ஸ்வாமிகள் சொல்லவே மோட்டார் ஓட ஆரம்பித்தது. இந்த நிகழ்ச்சியைக் கண்ட யாவரும் வியப்புற்றனர். இச்செய்தி அக்காலத்தில் நம் ஸ்வாமிகளுடன் சென்ற மடாலய நிர்வாகி ஸ்ரீ எரக்க ராஜு என்ற ஆந்திர அன்பர் அவர்களால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

எப்பொழுதும் பெரியோர் ஆணைப்படியே யாவும் இயங்கும் என்பது நன்கு விளங்குகிறதல்லவா ?

### 5. பல்விடம் தோன்றல்.

ஒரு தருணம் சென்னையில் எங்கள் வீட்டில் ஸ்வாமிகள் தங்கி பிக்ஷைசெய்த நேரத்தில் ஒரு அதிசயமான

சம்பவம் நடைபெற்றது. மூன்று இடங்களில் ஒரே ஸமயத்தில் ஸ்வாமிகள் தோன்றியது தான் யாவரும் வியக்கக்கூடியது. அதாவது அன்றே அம்பாசமுத்திரம் முனிசீப் அவர்களால் அம்பாசமுத்திர ரயில் நிலயத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு அவரது இல்லத்தில் பிக்ஷை செய்தது இரண்டாவது. அதேசமயத்தில் ஸ்வாமிகள் காஷ்மீரத்தில் ரிஜிஸ்டர் தபால் வாங்கியது மூன்றாவது. இதெல்லாம் ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா ? இதுபற்றித் தீவிரமாக விசாரணை செய்ததில் தகுந்த முகாந்திரங்களுடன் நிரூபிக்கப்பட்டது. இதைப்பற்றி ஸ்வாமிகளையும் கேட்டதில் அது யாவும் உண்மைதான் என்றும், யோகமுறையில் எல்லோருடைய மனதையும் வசப்படுத்தி நிஜ சம்பவம் நடந்ததாகவே காட்டலாம் என்றும் கூறினர். இம்மாதிரி முறைகளைச் செய்வதற்கு பக்தர்கள் அந்தரங்க சுத்தியுடனும், களங்கமற்ற நெஞ்சம் படைத்தவராகவும் இருத்தல் வேண்டும் என்றார்கள்.

பக்தர் நினைத்ததை எல்லாம் செயலில் செய்தே காட்டலாம் என்பார்கள். யாவும் யோகத்தின் மகிமையே.

## 6. திவ்ய திருஷ்டி.

மற்றொரு சமயம் சுமார் 1912ம்வருடம் என் பிதா காலஞ்சென்ற மிட்டாதார் சுந்தரமய்யர் அவர்களும் வேறு சிலரும் ஸ்வாமிகளுடன் திருக்குற்றால மலையின் மீது ஏறிச்சென்ற பொழுது, திடீரென்று ஓர் பாறையின் சமீபத்தில் வந்ததும் ஸ்வாமிகள் அதன் மேல் அமர்ந்து

ஆனந்த நிஷ்டையிலிருந்தார்களாம். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் நிஷ்டை கலைந்து, தான் கன்னியாகுமாரி அம்பாளைத் தரிசனம் செய்ததாகவும், அம்பிகைக்கு புஷ்பாஞ்சலி அபிஷேகம் நடந்துகொண்டிருப்பதாகவும் அறிவித்தார்களாம். அதைக்கேட்டு அங்கு கூடியிருந்த யாவரும் தங்களுக்கும் அந்த தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்வாமிகள் அவர்கள் யாவரையும் உட்காரச்செய்து, தம் கையைத் தட்டி சப்தம்செய்ததும் யாவரும் கண்களை மூடிக்கொண்டு தேவியை நினைத்து அந்தரங்கத்தில் தியானம் செய்ய வேண்டுமென்றும், மறுமுறை கைதட்டிய பிறகு கண்களைத் திறக்கவேண்டும் என்றும், எக்காரணத்தைக் கொண்டும் இடையில் எவரும் கண்களைத் திறக்கக்கூடாதென்றும் அறிவித்தார்களாம்.

அவ்வாறே ஸ்வாமிகளின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு யாவரும் தம் கண்களை மூடிக்கொண்டு இருக்கும்போது கன்னியாகுமாரி தேவியை தரிசிப்பது போலவும், அம்பாளுக்குப் புஷ்பாஞ்சலி ஆனதும் கற்பூர ஹாரத்தி நடந்ததாகவும், தரிசனம் ஆனபிறகு அர்ச்சகர் குங்கும பிரசாதம் கொடுப்பதாகவும் பிரத்தியக்ஷமாய் கண்டார்களாம். அதன்பிறகு ஸ்வாமிகள் இரண்டாவது தடவை தன் கைகளைத் தட்டியதும் கன்னியாகுமாரி தரிசனம் மறைவுற்று பழைய நிலையை அடைந்தார்களாம்.

ஒவ்வொருவருடைய கரத்திலும் குங்கும பிரசாதமும் புஷ்பமும் இருக்கக்கண்டு அவர்கள் யாவரும் பெரி

தும் வியந்து ஸ்வாமிகளின் மஹிமையைப் புகழ்ந்து ஆனந்தக் கூத்தாடிக் கொண்டே மடாலயத்திற்கு மீண்டும் வந்துசேர்ந்தார்களாம்.

இந்த அதிசயமான விஷயம் எனது மருமகன் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் (Deputy Commercial Tax Officer) சொல்ல அறிந்துகொண்டேன்.

இம்மாதிரி அரிய செயல்களை நம் ஸ்வாமிகள் பல்வேறு இடங்களிலும் செய்து பக்தர்களைப் பரவசப்படுத்தி இருக்கிறார்கள்.

ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளின் சக்திக்கு ஒப்புயர் வேதேனுமுண்டோ!

---

## அத்தியாயம் 11.

## சில லீலைகள்.

### 1. கருணை வள்ளல்.

1. எனது இளைய ஸகோதரன் ராமச்சந்திரன்மீது ஸ்வாமிகளுக்கு அத்தியந்த பிரியமுண்டு. யோகாப்பியாச முறைகள் சிலவற்றை அவனுக்கு பழக்கிவைத்திருந்தார்கள். ஸ்ரீ ஸீதாராமர் பிரதிஷ்டைக்கு வந்திருந்த நாங்கள் குடும்பத்துடன் குற்றாலத்தில் மந்திரத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் வாடகைக்குப் பேசித் தங்கியிருந்தோம். நாங்கள் பிரதிஷ்டைக்கு மடாலயத்தில் ஸ்வாமிகளுடன் இருக்கும்பொழுது எங்களுடன்

கின்றுகொண்டிருந்த ஸ்வாமிகள் திடீரென்று தம் அறைக்குட் சென்று கதவையும் தாளிட்டுக்கொண்டு நிஷ்டையில் அமர்ந்துவிட்டார்கள். அதன் காரணம் எவரும் அறியமுடியவில்லை. அதே சமயம் எங்கள் ஜாகையின் மேல்மாடியில் கைப்பிடி சுவற்றை பிடித்து நின்றுகொண்டிருந்த எனது ஸகோதரன் திடீரென்று கைநழுவி கீழே விழுந்துவிட்டதாயும், விழுந்த அதிர்ச்சியினால் மூர்ச்சையுற்றுக் கிடப்பதாகவும் எங்களுக்கு செய்தி கிடைத்தது. உடனே நாங்கள் யாவரும் மிக்கக் கவலையுற்று ஜாகைக்கு புறப்படும் சமயம் ஸ்வாமிகள் வெளியே தோன்றி "ஆபத்து ஒன்றுமில்லை. நீங்கள் எதற்கும் பயப்படவேண்டாம். கீழே விழுந்த சம்பவம் தெரிந்தே நான் திடீரென்று உள்ளே சென்று நிஷ்டையில் அமர்ந்தேன். ஜபம் செய்து ஆபத்தை நிவர்த்திசெய்தேன். இனி ஒன்றுக்கும் பயமில்லை'' என்று அறிவித்து பிரசாதமும் கொடுத்து அனுப்பினர். அப்பிரஸாதம் தரித்ததும் என் ஸகோதரன் மயக்கம் நீங்கி எழுந்தான்.

இந்த சம்பவம் நடக்குமுன் அன்று காலையில் என் ஸகோதரன் ஸ்வாமிகளைக்கண்டு தரிசித்தபொழுது ஸ்வாமிகள் அவனை அன்று எங்கும் போகாமல் தம்முடனேயே இருக்கும்படி அறிவித்திருந்ததாகவும், அதைமீறி என் தம்பி வெளியில் போனதினால் இக்கஷ்டம் சம்பவிக்கலாயிற்று என்றும், இதைக் கேட்டிருந்த சில சிஷ்யர்கள் சொல்ல பின்னால் தெரிந்துகொண்டோம்.

2. ஓர் நவராத்திரி சமயத்தில் நான் குடும்பத்துடன் குற்றாலத்தில் ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயத்திற்குச்

சென்றிருந்தபொழுது, என் தம்பி ஸ்ரீ ராஜராஜேசுவரீ ஸன்னிதிக்கு எதிரில் வெளிப்பக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்த ஹோமகுண்டத்தில் தவறி விழுந்துவிட்டான். அப்பொழுது குண்டத்தில் நெருப்பு தகதகவென்று சுடர்விட்டு எறிந்துகொண்டிருந்ததினால் அவரது முழங்கால் நெருப்பில் சிக்கிக்கொண்டது. அவர் கொஞ்சம் மனோதைரியம் படைத்தவராதலின் ஓவென்று அலறிக்கொண்டு இருகரங்களையும் ஊன்றி ஹோம குண்டத்தினின்று எழும்பி வெளியில் குதித்துவிட்டார். உடனே சற்றும் தாமதம் செய்யாமல் நாங்கள் மெதுவாக அவரைத் தூக்கிச் சென்று ஸ்வாமிகள்முன் விட்டோம். ஸ்வாமிகள் விபூதி மந்திரித்துப் பூசி பிறகு தீப்பட்ட இடத்தில் சிறிது நேரம்வரை வாழைப்பட்டைகளின் சாற்றைப் பிழிந்துவிட எரிச்சல் நின்று ரணமும் கொப்பளிக்காமல் அழுங்கியது.

எங்கள் குடும்பத்தில் கிருபைகூர்ந்து மலைபோல் வந்த ஆபத்தைப் பனிபோல் நீக்கி காத்தருளிய மஹா ஸன்னிதானத்திற்கு எங்களையே அர்ப்பணம் செய்து கொள்வதைத் தவிர வேறு ஏதும் உளதோ!

3. சுமார் 1911-ம் வருடம் என் தகப்பனார் திருக்குற்றாலத்திற்குப் பருவகாலத்தில் போயிருந்தபொழுது ஒரு நாள் திடீரென்று குளிர் ஜ்வரம் ஏற்பட்டு பிரக்ஞையற்றிருக்கும் சமயம் ஸ்வாமிகள் வந்து விபூதி மந்திரித்து நெற்றியில் தடவி இரு புருவங்களுக்குமிடையில் கட்டைவிரலால் அழுத்தி சற்றுநேரம் ஜபம் செய்தார்கள். சுவய ப்ரக்ஞை ஏற்பட்டதும் என் பிதா தம் கண்களைத் திறந்து

ஸ்வாமிகள் வந்திருப்பதைக் கண்ணுற்று கரங்களை கூப்பித் தொழுதனர். சிறிதுநேரம் கழித்து ஸ்வாமிகளும் மடலாயத்திற்குப் போய்விட்டனர்.

நான்கு தினங்களில் என் பிதா குணமடைந்ததும் ஸ்வாமிகளைக் கண்டு தரிசித்தபொழுது "உங்களுக்கு ஓர் கண்டம் ஏற்பட்டது. அதை நிவர்த்தி செய்துவிட்டேன். இதற்குப் பரிகாரமாக நீங்கள் பஞ்சலிங்க தரிஶனம் செய்ய வேண்டும். இதற்கு இந்த ஜில்லாவிலும் சமீபத்திலுமே பஞ்சலிங்கங்கள் இருக்கின்றன. நானே உங்களை அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைக்கிறேன்" என்று அறிவித்தார்கள்.

## 2. பஞ்சலிங்க தர்சனம்.

சில நாட்களுக்குப் பிறகு ஸ்வாமிகளுடன் என் பிதாவும் யாத்திரையாக சங்கரநயினார்கோவில், சேத்தூருக்கு அடுத்துள்ள தேவதானம், கரிவலம்வந்தநல்லூர், தாராபுரம், சதுரகிரி சுந்தர மஹாலிங்கம் முதலிய ஸ்தலங்களுக்கு புறப்பட்டார். வெகு எளிதில் முதல் நான்கு லிங்கங்களையும் தரிசித்துவிட்டு, சதுரகிரியில் மஹாலிங்கத்தை தரிசிக்கும்பொருட்டு, மலை அடிவாரத்திலுள்ள வத்திராயிருப்பு என்னும் ஊரை யடைந்தார்கள். வத்திராயிருப்பு வாசிகள் சிலர் ஸ்வாமிகளையும் என் பிதாவையும் வரவேற்றுத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். காலையில் சதுரகிரிக்கு மஹாலிங்க தரிசனம் செய்யப்போவதாக என் பிதா கூறியதும் அவ்வூர்வாசிகள் யாவரும் ஒன்று சேர்ந்து கிருஹஸ்தர்

கள் அம்மலைக்குப் போகக்கூடாதென்றும், ஸமீபத்தில் ஒரு சர்க்கார் அதிகாரி கூட தன் ஆட்களுடன் மலையில் ஏறி சுந்தர மஹாலிங்கத்தை தரிசனம் செய்துவிட்டு மேலும் மலையின்மீது சென்றபொழுது, "இங்கு வராதே! இங்கு வராதே!!" என்று மூன்று தடவை அசரீரி கேட்டதாகவும், "ஏன் வரக்கூடாது" என்று அந்த சர்க்கார் அதிகாரி கேட்டுக்கொண்டே மேலும் சென்றபோது, திடீரென்று அவரும் அவரது தோழர்களும் கடுஞ்ஜ்வரம் கண்டு தன்னறிவிழந்து கீழே விழுந்துவிட்டதாகவும், பிறகு கீழேயிருந்து பலர் போய் அவர்கள் யாவரையும் தூக்கி எடுத்துக்கொண்டு வந்ததாகவும், கீழே வந்து ஒரு வாரத்திற்குள் அவர்கள் யாவரும் இறந்தனர் என்றும் செய்தியறிவித்தார்கள். தவிரவும் வெகுதூரம் மலைமீது ஏறவேண்டுமென்றால் மிகவும் சிரமம் என்றும் அவர்கள் புகலவே, என் தகப்பனர் இதை ஸ்வாமிகளிடம் யோஜிக்கையில், ஸ்வாமிகள் "நான் உங்களுடன் வரும்பொழுது என்ன பயம்?" என்று ஊக்கமளித்து மறுநாட் காலையில் என் பிதாவுடன் புறப்பட்டார்கள். என் தகப்பனர் வண்டியில் ஏறிக்கொண்டு மற்ற ஏவலாளர்களுடன் மலை அடிவாரத்திற்குச் சென்றனர். ஸ்வாமிகள் வண்டியிலேறமல் நடந்தே ஏகினர்.

யாவரும் அடிவாரத்தை யடைந்ததும் காபி தயாரிக்க ஏற்பாடு செய்தனர். பால் வரத் தாமதமாயிற்று. எல்லோரும் பால் வரவில்லையே என்று சற்றுநேரம் காத்திருந்தனர். அதற்குள் ஸ்வாமிகள் எங்கேயோ போய் வரலானர். வந்ததும் எல்லோரையும் புறப்படச் சொன்னர்கள்.

அதற்கு அவர்கள் "காபி அருந்தியதும் புறப்படலாம்" என்றனர். உடனே ஸ்வாமிகள் "இதோ இருக்கிறது பால்" என்று ஒரு கமண்டலு நிறையப் பால் கொடுத்தார்கள். அப்பாலைக்கொண்டு காபி தயாரித்து யாவரும் அருந்திக்கொண்டிருந்தனர். அச்சமயம் ஸ்வாமிகள் ஒரு காலி பாத்திரம் கேட்டு வாங்கிப்போய் சற்று தூரத்திலுள்ள நீரோடையில் கொஞ்சம் நீரை எடுத்து அதில் ஏதோ மூலிகைச்சாற்றைக் கலந்து அருந்தினர்களாம். கூடச் சென்றிருந்த யாவரும் இதைக் கண்ணுற்று ஸ்வாமிகளிடம் அதைக் கொஞ்சம் வாங்கி ருசி பார்த்தார்களாம். அது மிகவும் இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்ததென்றார்கள். அதை அருந்தினால் பசி ஏற்படாதென்றும், உடல் நோவும் களைப்பும் ஏற்படாதென்றும் ஸ்வாமிகள் அறிவித்தார்கள்.

பிறகு மாலை நேரத்தில் யாவரும் மகாலிங்கர் கோவிலுக்குப்போய்ச் சேர்ந்தனர். அங்கு தங்குவதற்குப் போதிய இடவசதிகள் இல்லாதிருந்தது. மலையின்மேல் குளிர் அதிகம். அக்குளிரைத் தாங்க இயலாதவர்களாய் எல்லோரும் அங்குள்ள சிறு தாழ்வாரத்திற்குள் முடங்கிக் கிடந்தார்கள்.

சுந்தர மஹாலிங்க மூர்த்தியின் பூஜை முதலிய ஆராதனைகள் யாவற்றையும் அங்குள்ள மலைப் பணிக்கர்களே தங்களுக்குள் முறை வகுத்துச் செய்துவருவது வழக்கம் என்று சொன்னார்கள். அன்று ஸாயங்கால பூஜை, தீபாராதனை முதலியவற்றைத் தரிசனம் செய்ததும் அங்குள்ள

சிறு தாழ்வாரத்திலேயே எல்லோரும் படுத்துறங்கினார்கள்.

சுந்தர மஹாலிங்கம் உயரமாயும், பெரிதாயும் இருக்கும். அதனருகில் பல்வேறு விதமான இலைகளுடன் கூடிய ஓர் பெரிய மரம் இருக்கிறது. ஸ்வாமிகள் அம் மஹாலிங்க மூர்த்தியின் எதிரில் ஆசனமிட்டு நிஷ்டையிலமர்ந்தார்கள். மலைப் பணிக்கர்கள் வனவிலங்குகளின் தொந்தரவேற்படாமலிருக்கும்பொருட்டு ஸ்வாமிகளைச் சுற்றிலும் நாலாபக்கங்களிலும் அக்கினியை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். நடுநிசியில் யாரோ பெரிய மஹான் ஒருவர் நம் ஸ்வாமிகளின் முன் தோன்றி அவரை அழைத்துச் சென்றார்களாம்.

பொழுது புலர்ந்ததும் என் பிதாவும், ஏனையோரும் எழுந்து பார்க்கையில், ஸ்வாமிகள் அங்கில்லாததினால், மலைப் பணிக்கர்களிடம் "ஸ்வாமிகள் எங்கே யிருக்கிறார்கள்?" என்று கேட்டதும் "ஸ்வாமிகளை நேற்றிரவிலேயே ஓர் பெரிய மஹான் வந்து மலைக்குள் அழைத்துப்போனார்கள், இன்னும் வரவில்லை" என்று கூறினர்.

"ஸ்வாமிகள் எங்கு சென்றனரோ!" என்று யாவரும் கவலையிலாழ்ந்திருந்த சமயம் நம் ஸ்வாமிகள் திரும்பி வந்து சேர்ந்தார்கள். ஸ்வாமிகளின் ருத்ராக்ஷமாலையும் விபூதிப்பையும் வழக்கம்போலில்லாமல் மாறுபட்டிருந்தது.

என் தந்தையவர்கள் ஸ்வாமிகளிடம், தன்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்தும் மலைக்குள் அழைத்துச் செல்லாமல் தான் மட்டும் தனியே சென்றதைக் குறித்துக்

கேட்கவே ஸ்வாமிகள் "எனக்குத் தெரிந்த ஒரு பெரிய மஹான் நேற்றிரவில் இங்கு வந்து என்னைத் தம்முடன் அழைத்துச் சென்றார்கள். பெரிய மஹாத்மாக்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது மரியாதை செய்தல் என்ற முறையில் தங்கள் தங்கள் சாமான்களை மாற்றிக் கொள்வது வழக்கம். அந்த சம்பிரதாயப்படி என் ருத்ராக்ஷமாலையையும் விபூதிப்பையையும் அவருக்குக் கொடுத்துவிட்டு அவருடையதைப் பெற்றுக்கொண்டேன்" என்று சொல்லிவிட்டுத் தன் கையிலுள்ள ஏதோ ஒரு வஸ்துவை என் பிதாவின் கையிலும் கொடுத்தார்கள். அது என்ன என்ற விபரம் எங்களுக்கும் தெரியவில்லை. என் தகப்பனார் அவர்களும் சொல்ல மறுத்துவிட்டார்கள்.

இந்த சதுரகிரி மலையைப்பற்றிய சில விசேஷங்களை நாங்கள் அறிய விரும்பியபொழுது ஸ்வாமிகள் இம்மலையின் மேல் மஹாலிங்க மூர்த்தி இருக்குமிடம் வரை கிருஹஸ்தர் வரலாமென்றும் அதற்குமேல் போகக்கூடாதென்றும் அங்கு பல பெரிய மஹான்களும் மஹா தவசிகளும் வசிப்பதாகவும், அங்கு சாதாரண மானிடர்கள் செல்வது தவறு என்றும், மேலும் அம்மலையில் சஞ்ஜீவி முதலான உயர்ந்த மூலிகைகள் இருப்பதாகவும் அறிவித்தார்கள்.

மஹாலிங்கம் முதலிய க்ஷேத்திரங்களை தரிசித்துவிட்டு வீடு வந்ததும் என் பிதா பல நாட்கள் நல்ல நிலைமையில் இருந்தார்கள்.

## 3. கலவி சுப்பராய செட்டியார்.

சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள பக்தர் ஸ்ரீ கலவி சுப்பராய செட்டியாரவர்களது இல்லத்தில் ஓர் சமயம் ஸ்வாமிகளால் வியாஸ பூஜை செய்யப்பட்டது. அங்கு அடியார்கள் பலர் வந்து தரிசனம் செய்து பகவத் பிரஸாதம் பெற்றுச் சென்றனர். இவரது பங்களாத் தோட்டத்தில் முன்பு ஸ்வாமிகளால் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அங்கும் ஆராதனைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன.

வியாஸ பூஜை முடிந்து செட்டியாரவர்களுக்குப் பிரஸாதம் வழங்கும்பொழுது அப் பிரஸாதத்துடன் சிறிய கிருஷ்ண விக்கிரஹமும் ஸ்வாமிகளது திருக்கரத்தினின்று எதிர்பாராத விதமாய் விழுந்தது. இந்த நிகழ்ச்சியை அங்கு கூடியிருந்த பக்தர்கள் யாவரும் கண்ணுற்று பெரிதும் வியந்து நின்றனர்.

ஸ்ரீ சுப்பராய செட்டியாரவர்களுக்கு ஆண் மகவு பிறக்கவில்லையே என்ற கவலையை நீக்கவே தெய்வப் பிரஸாதமாக ஸ்ரீ கிருஷ்ண விக்கிரஹத்தையளித்து அருள் புரிந்ததாகவும், அடுத்த வருஷம் வியாஸபூஜைக்குள் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் அனுக்கிரஹித்தார் நமது ஸ்வாமிகள்.

அம்மாதிரியே புத்திரப்பேறு உண்டாயிற்று. பேர் காலம் ஏற்படும் தினத்திற்கு முதல்நாள் மாலைவரை ஸ்வாமிகள் ஸ்ரீ சுப்பராய செட்டியாரவர்களுடனேயே

அவரது இல்லத்தில் இருந்துவிட்டு அன்றே திடீரென்று தாம் திருச்சிராப்பள்ளிக்குப் போக வேண்டுமென்று கூறி பிரயாணமாய்விட்டார்கள். ஸ்வாமிகள் புறப்பட்டுச் சென்ற நாளிரவே பிரசவத்தின் அறிகுறி தோன்றி மறு நாள் அதிகாலையிலேயே செட்டியாரவர்களின் இல்லாள் சுகமாய் ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தனள்.

இந்த மகிழ்ச்சிகரமான நற்செய்தியை செட்டியார் ஸ்வாமிகளுக்குத் தந்திமூலம் அறிவிக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கையில் ஸ்வாமிகளிடமிருந்து செட்டியாரவர்களுக்கு புத்திர ஸந்தானம் ஏற்பட்ட நற்செய்தியைப் போற்றி ஆசீர்வதித்து, அக்குழந்தைக்கு கணபதி என்று பெயரிடும்படி ஆக்ஞாபித்து திருச்சியிலிருந்து தந்தி வந்துவிட்டது.

இதெல்லாம் யோகஸித்தியினால் அறியும் விஷயம். யோகஸித்தியின் பெருமையே பெருமை!

இந்த பக்தர் ஸ்ரீ சுப்பராய செட்டியார் ஸ்வாமிகளின் தர்ம கைங்கர்யத்திற்கும், மடாலய நிர்மாணத்திற்கும் அளவற்ற பொருளுதவி செய்திருக்கிறார்கள். ஸ்வாமிகளின் அருளால் இக்குடும்பம் அநேக காரியங்களில் அனுகூலமடைந்திருக்கிறது.

## 4. காப்பு முனி.

சென்னையில் எங்கள் பங்களா தோட்டத்தில் ஒரு பெரிய புளியமரம் உண்டு. அம்மரத்தில் ஒரு முனி இருப்பதாகக் கூறி, எங்கள் குதிரைவண்டிக்காரன் வருடத்திற்கு இருமுறை எங்களிடம் பண உதவி பெற்று,

பூஜை முதலிய சில ஆராதனைகள் செய்வது வழக்கம். இச்செய்தி நம் ஸ்வாமிகளிடம் ஒருசமயம் அறிவிக்கப் பட்டது.

அன்றிரவே எதிர்பாராதவிதமாய் நடுநிசியில் ஸ்வாமிகள் தங்கும் அறையிலிருந்து கோபத்துடன் அதட்டிப் பேசிய ஒரு பயங்கரமான பெரிய சப்தம் கேட்டது. நாங்கள் அடுத்துள்ள அறையில்தான் தூங்கிக்கொண்டிருந்தோம். இந்த கோர சப்தம் கேட்டு விழித்தெழுந்து பிறகு பயத்தினால் தாக்கப்பெற்று மறுபடியும் எவரும் அறியாமல் படுத்துத் தூங்கிவிட்டோம்.

மறுநாட் காலையில் ஸ்வாமிகளைக் கண்டு இரவில் கேட்ட சப்தத்தின் காரணம் என்னவென்று வினவ, அந்த முனியைப்பற்றி சொல்லலானார். இரவில் முனியை ஸ்வாமிகள் வரவழைத்ததாகவும், அப்புளிய மரத்தில் அந்த முனி வாஸம் செய்வது முற்றிலும் உண்மையென்றும், அது துர்தேவதையல்லவென்றும், எங்கள் குடும்பத்தை அது காத்தருளி வருவதாயும் அறிவித்தார்கள்.

மேலும் அந்த முனி ஸ்வாமிகளை நோக்கி "என்னை ஏன் வரவழைத்தீர்கள்?" என்றும் "வந்ததற்கு ஏதாவது பதிலுபகாரம் செய்தால்தான் உங்களை விட்டுச் செல்வேன்" என்றும் அலறியதாம்.

இம்மாதிரி தேவதைகளுக்கு மஹான்கள் பிரதியுபகாரம் செய்யவேண்டியது அவசியமென்றும், அதற்காக ஸ்வாமிகள் உபாஸித்துவந்த ஓர் மந்திர சக்தியை தானம் செய்து கொடுத்தனுப்பியதாகவும் கூறினர்.

உண்மையில் அந்த முனி ஒரு நல்ல பாதுகாப்பாகவே இருந்தது எங்களுக்கு.

## 5. ஏவல் கதி.

இராஜபாளையத்தை யடுத்துள்ள ஓர் ஊரில் ராமநாதய்யர் என்ற ஒருவர் இருந்தார். அவர் நம் ஸ்வாமிகளின் பரம பக்தர்களில் ஒருவர். ரயில்வே இலாகாவில் பதவி வகித்து (Station Master) ஓய்வு பெற்றவர். இவர் ஒரு பெரிய ஸம்ஸாரி. இவர் ஓய்வு பெற்றதும் இவரது குடும்பத்தின் பொதுச் சொத்துக்கள் பிரிவினை செய்துகொள்ளப்பட்டது. இவரது ஓய்வுக்குப் பிறகு ரயில்வேயினின்று இவருக்குறிய பிற்கால க்ஷேம நிதி (Provident Fund)யும் கொடுக்கப்பட்டது. அதிலிருந்தும் ஓர் பெருந்தொகை கிட்டியது. ஏனைய பங்காளிகளைப் போலல்லாமல் இவர் நற்கியாதி பெற்றிலங்கினார். ஓய்வு பெற்றதிலிருந்து இவர் தம் சொந்த கிராமத்திலேயே வாசம் செய்து வந்தார். இவர் நல்ல நிலைமையிலிருப்பதைக் கண்டு பொறுமை மேலிட்டு, துவேஷ புத்தியுடன் பல இடையூறுகளைச் செய்தும் ஏளனம் செய்தும் வந்தார்கள் இவரது பங்காளிகள். ஒருவர் நன்றாய் இருப்பதைக் கேள்வியுற்றாலே சகிப்பாரில்லை இப்பாழும் உலகில். எல்லாம் விதியின் கொடுமை. யாரை நொந்து பயன் யாது விளையும்?

இறுதியில் இவரது பங்காளிகள் இவருக்கு ஏவல், பில்லி சூனியம் முதலிய பலவிதப் பிரயோகங்களைச் செய்து தாங்கமுடியாத துன்பத்திற்கும், இன்னல்களுக்

கும் ஆளாக்கினார்கள். என்னே ஏவலின் கொடுமை? வீட்டிலுள்ள துணிமணிகள் திடீரென்று தீப்பற்றி எரியும். ஆக்கிவைத்த உண்டிகள் யாவும் ஆபாசக் கொட்டிலாகிவிடும். ஏற்றிவைத்த திருவிளக்கு திடீரென்று அணைந்து இருள் நிறையும். அவரது மனைவி அறிவு நிலையில் தடுமாறி எவருக்கும் அறிவிக்காமல் வீட்டுக் கூரையின்மீது ஏறி ஓடுவார். அந்தோ பரிதாபம்! பச்சிளங் குழந்தைகளும் வயதுவந்த மக்களும் இரத்த இரத்தமாய் கக்குவார்கள். வீட்டிலுள்ள பொருள் யாவும் கண்ட கண்ட இடங்களில் சிதறிக் கிடக்கும். இத்துன்பங்கள் யாவற்றையும் அனுபவித்து வந்தார் ராமநாதய்யர்.

மாந்திரிகர்கள் பலரை வரவழைத்தும் நிவர்த்திக்கு ஏதும் வழி காண முடியவில்லை. யாவரது முயற்சியும் வீணாயின. இறுதியில் நமது மௌன ஸ்வாமிகளிடம் வந்து விஷயங்களைக் கூறி முறையிட்டார். ஸ்வாமிகளைத் தன் ஊருக்கு வந்து இதற்கெல்லாம் ஓர் பரிகாரம் செய்து தரும்படி பிரார்த்தித்தார். அடியார்க்கு அருள்புரியும் அண்ணலாம் ஸ்ரீ மௌனானந்தர் உடனே யோகநிஷ்டையில்மர்ந்து அகக்கண்ணால் அங்கு நிகழும் விபரீதங்கள் யாவற்றையும் அறிந்து அடுத்த நாளே ராமநாதய்யருடன் அவரது கிராமத்திற்குப் பிரயாணமானார்கள்.

அதற்குள், ராமநாதய்யர் திருக்குற்றாலத்திலிருந்த சமயம், யாரோ ஒரு ஸ்திரீ மந்திரவாதி ராமநாதய்யர் வீட்டிற்கு வந்து அங்குள்ளவர்களிடம், தான் இந்த ஏவல் முதலியவைகளை நிவர்த்தி செய்துவிடுவதாக ஒப்புக்

கொண்டு மூன்னூறு ரூபாய் காணிக்கை பேசி அதற்கு வேண்டிய ஜபதபங்களைச் செய்வதாக இரண்டு மூன்று நாட்களாகவே அட்டகாசம் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுதே ஸ்வாமிகளும் ராமநாதய்யரும் வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகளைக் கண்டதும் அந்த ஸ்திரீ சற்றும் லக்ஷியம் செய்யாமல் பலவிதமாய் நிந்தனை பேசி, கோபித்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

ஸ்வாமிகள் இதையெல்லாம் அசட்டைசெய்து அங்கு தங்கி மூன்று தினங்கள் தேவீ பூஜைகள் ஆற்றி கிரஹசக்ரப் பிரதிஷ்டை யொன்றும் அவ் வீட்டில் செய்தார்கள். மஹான்கள் செய்யும் பரிகாரங்களுக்கு முன் எது தான் எதிர்த்து நிற்க இயலும்? பறந்தோடின பண்ணிய வினைகள் யாவும். ஏவலும் சூனியமும் எங்கு ஓடி ஒளிந்தனவோ? எவராலும் எளிதில் அறியக்கூடவில்லை. இன்னல்கள் யாவும் நீங்கி இன்புற்றது ராமநாதய்யரின் குடும்பம்.

அந்த ஸ்திரீ மந்திரவாதி மறுபடியும் ஸ்வாமிகளிடம் வந்து துதித்துத் தான் கொண்டுவந்த எலுமிச்சம் பழத்தை ஸ்வாமிகளின் கையில் வைக்கப்போகவே "உன் சாமர்த்தியம் என்னிடம் பலிக்காது. இந்த எலுமிச்சம்பழ விஷயம் என்னவென்று எனக்கு நன்ருய்த் தெரியும். நீ அதில் பிரயோகம் செய்துள்ள மந்திரம் எனக்கும் தெரியும். அதை நீயே வைத்துக்கொள். நீ இவ்விடம் விட்டுச் செல்லாவிடில் அதன் பயனை நீயே அனுபவிக்கப்போகிருய்" என்று அறிவித்ததும், அவள் அஞ்சி

நடுங்கி அண்ணல் ஸ்ரீ மௌனானந்தரிடம் மன்னிப்பு வேண்டி ராமநாதய்யரிடம் தன் செலவிற்குக் கொஞ்சம் பணமும் பெற்றுக்கொண்டு ஓடி மறைந்தனள்.

சூனியம், ஏவல் முதலியவற்றைச் செய்ய ஏற்பாடு செய்த தாயாதிகளும், ஏவல் பிரயோகம் செய்தவர்களும், கர்மவியாதிகளுக்காளாகி, சொத்து சுதந்திரம் முதலிய யாவற்றையுமிழந்து, உற்றார் உறவினரற்றுப் பிச்சை எடுத்துண்ணும் நிலைக்குவந்து, ஏனென்று கேட்பாரற்று நாசமடைந்தார்கள்.

ஏவல் பிரயோகத்தின் முடிவு இதுதான்.

## 6. பக்த பராதீனர்.

ஸ்வாமிகள் சென்னையிலிருக்கும்பொழுது ஒரு சமயத்தில் பக்தர்கள் யாவரும் மைசூரில் நடைபெறப் போகும் வைரமுடி விழாவிற்குச் செல்ல நினைத்து ஏற்பாடுகள் யாவற்றையும் செய்துகொண்டு நமது ஸ்வாமிகளையும் தம்முடன் வரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். ஸ்வாமிகளும் அதற்கு இசைந்தனர். அப்போது ஸ்வாமிகள் என்னையும் அழைத்துப் போவதாய்க் கூறினர். நாமும் போவோம் என்று மகிழ்ந்திருக்கும் சமயம் திடீரென்று எனக்குக் குளிர் ஜ்வரம் வந்துவிட்டது. மறு நாட்காலையில் எல்லோரும் புறப்படுவதற்கு முன்பு, ஸ்வாமிகள் மட்டும் நான் படுத்திருந்த இடத்திற்கு வந்து விபூதி மந்திரித்து, என் உடம்பு முழுதும் தடவி “பயப்படவேண்டாம். உன் உடம்பு சௌகர்யமாய் விடும். நான் இப்போது போய் வருகிறேன். உன்னை அடுத்ததடவை

அழைத்துப் போகிறேன். கவலைப்படவேண்டாம்'' என்று எவ்வளவோ ஆறுதல் செய்தும் எனக்கு சற்றும் மன நிம்மதி ஏற்படவில்லை ஸ்வாமிகளுடன் போய் வருவதற்கில்லையே என்ற கவலை ஏற்பட்டு எனக்கு துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. கைகூப்பித் தண்டனிட்டு ஓவென்று அலற ஆரம்பித்துவிட்டேன். ஸ்வாமிகளும் என்னை ஒருவாறு தேற்றிவிட்டுப் போய்விட்டார்கள்.

ஸ்வாமிகள் சென்றதிலிருந்து என் மனம் அவரது தியானத்திலேயே ஈடுபட்டு நின்றது. ஜ்வரம் நின்றபாடில்லை. வைரமுடி விழாவிற்குப் போன ஸ்வாமிகள் மறு நாள் மாலையிலேயே திரும்பிவிட்டார்கள். வந்தவர் நேராக என்னிடம் வந்து ''நான் திரும்ப வந்துவிட்டேன். நீ பயப்படாதே. நீ நேற்றிரவெல்லாம் என்னை நினைத்துக் கொண்டிருந்தது, என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் ரயிலில் போய்க்கொண்டிருக்கும் போதே நடுவழியிலிருந்தே திரும்பி வந்துவிட்டேன். சிஷ்யர்களை மாத்திரம் சென்று விழாவைக் கண்டு களித்து வருமாறு அனுப்பிவிட்டு வந்திருக்கிறேன்'' என்றறிவித்தார்கள்.

அதற்குள் எனக்கும் சற்று உடல் நலமேற்பட்டு ஸ்வாமிகளைக் கண்டு ஆனந்தங்கொண்டேன். ''தாங்கள் வைரமுடி விழாவிற்குப் போகும்போது நான் தடைசெய்யக்கூடாதே என்று வருந்தினேன்'' என்று தெரிவிக்க, ஸ்வாமிகள் ''பக்தர்களது ஒப்பற்ற பக்திக்கு கட்டுப் பட்டேதான் நடக்கவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்

மாவே சகாதேவனுடைய பக்தியினால் கட்டுண்டாரே" என்று தெரிவித்து பிரஸாதம் கொடுத்தருளினார்.

## 7. சில விசித்திர ஸம்பவங்கள்.

1. ஒரு சமயம் நானும் ஸ்வாமிகளும் சென்னையில் ஊத்துமலை ஜமீன்தாரிணியவர்களின் குதிரை வண்டியில் ஏறிச்சென்றோம். அப்போது கடுமையான வெய்யிலடித்துக்கொண்டிருந்தது. கொடும் வெய்யிலைத் தாங்காமல் குதிரை திடீரென்று கீழே விழுந்து கால்களை உதைத்துக் கொண்டு மூக்கின் வழியாய் இரத்தம் கக்கி இறக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. வண்டிக்குள்ளிருந்த நாங்களிருவரும் கீழே குதித்துவிட்டோம். ரஸ்தாவில் கூட்டங் கூடிவிட்டது. ஸ்வாமிகள் குதிரையைக் காப்பாற்ற நினைத்துத் தம் விபூதிப் பையிலிருந்து கொஞ்சம் விபூதியெடுத்து மந்திரித்து குதிரையின் மீது தடவி கமண்டலுவிலுள்ள ஜலத்தைக் குதிரையின் மேல் தெளித்ததும் குதிரை களைப்பு நீக்கம் பெற்று எழுந்து நின்றது. குதிரையைச் சற்று தேற்றி வண்டியில் பூட்டி ஜமீன்தாரிணியின் வீட்டிற்கனுப்பிவிட்டு நாங்கள் வாடகைவண்டியில் போய்விட்டோம். எல்லோரும் கண்டு வியந்தனர். இச்செய்தி சென்னைமா நகரெங்கும் பரவி யாவரும் ஆச்சரியப்பட்டு ஜமீன்தாரிணி வீட்டிற்கும் பலர் சென்று அக்குதிரையைப் பார்த்துப் போனதாக ஜமீன்தாரிணியே பின்பு ஒருகாலத்தில் என்னிடம் புகன்றார்.

2. நானும் ஸ்வாமிகளும் சில பக்தர்களுடன் திருச்சிராப்பள்ளியிலிருந்து ஒரு சமயம் கும்பகோணம் போய்

விட்டு அங்கேயிருந்து வண்டி வைத்துக்கொண்டு ஸ்வாமி
மலைக்குச் சென்று "தகப்பன் ஸ்வாமி" என்று வழங்கப்
படும் முருகப்பெருமானை தரிசித்துவிட்டு திரும்ப கும்ப
கோணம் வந்து ஒரு பக்தர் வீட்டில் போஜனம் செய்து
விட்டு நேரம் ஆய்விட்டதென்று ரயிலுக்கு வேகமாய்ப்
புறப்பட்டோம். யாவருமே ரயில் நிலையத்தை நோக்கி
ஓடி வந்து கொண்டிருந்தோம். ரயில் நிலையத்திற்குட்
புகுந்ததும் வண்டியும் புறப்பட்டு மெதுவாக நகர்ந்து
கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் நாங்
கள் திகைத்தோம். ஏதோ காரணம் தெரியவில்லை. திடீ
ரென்று என்ஜினில் கோளாறு ஏற்பட்டதினால் நகர்ந்து
கொண்டிருந்த வண்டி நின்றுவிட்டது. அவ்வளவு தான்,
நாங்கள் எல்லோரும் டிக்கட் எடுத்து வண்டியில் உட்கார்
ந்ததும், என்ஜின் பழுது நீங்கி வண்டியும் புறப்பட்டது.
இதனால் பெரியோரை அண்டினால் ஒரு குறைவும் வராது
என்பது நன்கு விளங்குகிறது.

3. தத்தாத்திரேய மந்திரத்தில் நவராத்திரி உற்
சவத்திற்காக சாமான்கள் யாவும் சேகரிக்கப்பட்டன.
பிராஹ்மண ஸந்தர்ப்பணைக்கு வேண்டிய பலகாரங்
களை நெய்யில் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டு அதன்
பொருட்டு நெய்க்காரரிடம் சொல்லி ஏற்பாடுகள் செய்யப்
பட்டிருந்தது. ஆனால் குறித்த நேரம் வரை காத்திருந்
தும் நெய் வந்து சேரவில்லை. வெளியில் எங்கும் நெய்
வாங்கமுடியாமல் போய்விட்டது. என்ன செய்வதென்று
சமையல்காரர்கள் யோஜித்துக்கொண்டிருந்தார்கள். பல
கார வகைக்கு குஞ்சாலாடு தயாரிப்பதாகத் தீர்மானமிடப்

பட்டிருந்தது. நெய் இல்லாமல் எவ்வாறு செய்யமுடியும்? எல்லோரும் திகைத்து நின்றார்கள். உடனே ஸ்வாமிகள் தான் நெய் தயாரித்துக் கொடுப்பதாய் அறிவித்து தன் அறையில் ஒரு கரியடுப்பும் ஒரு பெரிய இருப்புச் சட்டியும் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். இரண்டு டின் மண்ணெண்ணெயும் (Kerosene oil) கொண்டுவரச் செய்தார். அடுப்பு மூட்டி சட்டியைக் காயவைத்து அந்த மண்ணெண்ணெய்யை கொஞ்சம் கொஞ்சமாக அதில் ஊற்றிக் காய்ச்சலானார். காயும்போது ஸ்வாமிகள் ஏதோ ஒருவிதப் பச்சிலைச் சாற்றை அதில் பிழிந்தார். சிறிது நேரங்கழித்து அடுப்பிலிருந்து சட்டியை இறக்கி விட்டார்கள். என்ன ஆச்சரியம்! அந்த மண்ணெண்ணெய் முழுவதும் நல்ல நெய்யாக மாறிவிட்டது. எவ்வித துர் நாற்றமும் கிடையாது. தனி நெய்யாகவே இருந்தது. இதில் தான் சுமார் ஐயாயிரம் குஞ்சாலாடுகள் தயாரிக்கப் பட்டன. அவை வெகு ருசிகரமான முறையில் இருந் தன. நவராத்திரி பத்துநாட்களும் ஸந்தர்ப்பணைக்கு உப யோகித்தும் மீதியிருந்தன. அவற்றை சிஷ்யர்கள் ஊருக் குப் போகும் சமயம் தலைக்குக் கொஞ்சமாக கொடுக்கப் பட்டது. சாப்பிட்டவர்களுக்கு அதனால் எவ்விதக் கெடு தலும் ஏற்படவில்லை. என்ன அற்புதம் பாருங்கள். மஹான்கள் நினைத்த மாத்திரம் எக்காரியமும் பலித மடைகிறது. இதெல்லாம் மூலிகையின் சக்தி என்றும் கூறலாம்.

---

# அத்தியாயம் 12.

## சில முக்கிய பக்தர்கள்.

### 1. ஸர் எஸ். சுப்பிரமண்ய அய்யர்.

பல ஆண்டுகளுக்கு முன் ஸ்வாமிகள் எங்களுடன் சென்னையில் தங்கியிருந்தபொழுது ஒரு சமயம் காலம் சென்ற மணி அய்யர் என்ற ஜஸ்டிஸ் ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யரும் அனிபெஸன்ட் அம்மையாரும் ஸ்வாமிகளைத் தரிசிக்கும்பொருட்டு வந்தனர். அவ்விருவரும் ஸ்வாமிகளை வணங்கிப் பொதுவாக ஸநாதன தர்மத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அனிபெஸன்ட் அம்மையார், ஏதோ ஜோலியிருப்பதாகக் கூறி ஸ்வாமிகளை அடையாற்றிலிருக்கும் பிரஹ்மஞான ஸபை (தியஸாபிகல் ஸொஸைடி)க்கு விஜயம்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து, உத்திரவு பெற்றுப் போய்விட்டார்.

பிறகு ஜஸ்டிஸ் மணி அய்யர் ஸ்வாமிகளிடம் ஒரு ஸந்தேஹத்தைக் கேட்க விரும்பினார். "ஸ்வாமி! எனக்கு ஓர் ஸந்தேஹம் ஏற்பட்டுள்ளது. அதைத் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆவலுறுகிறேன். அதைத் தங்களிடம் சொல்லலாமா? உத்தரவு அளிக்கக் கோருகிறேன்" என்றனர். அதற்கு ஸ்வாமிகள் "நீங்கள் இங்கு வந்ததுமே, உங்களுக்கு ஓர் ஸந்தேஹம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டேன். உங்களுடன் அனிபெஸன்ட் அம்மையாரும் வந்திருந்ததினால் நான் முதலிலேயே உங்களிடம் சொல்லவில்லை. எனக்கு உங்கள் ஸந்தேஹம் தெரிந்திருந்த போதிலும் அதை உங்கள் மூல

மாகவே அறிந்துகொள்வதுதான் நியாயமான முறை. அதனால் நீங்களே சொல்லுங்கள்'' என்றனர். உடனே ஜஸ்டிஸ் மணி அய்யர் ஸ்வாமிகளை நோக்கி ''ஸ்வாமி! மானிட ஜன்மமெடுத்த ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ தன் ஜன்மம் ஸாபல்யமடையவும், ஈசனுடன் ஒன்றுபட்டிடவும், சாஸ்திரங்களின் அனுஷ்டானத்தினாலோ அல்லது யோகாப்பியாசத்தினாலோ அல்லது மூட பக்தியினாலோ அந்தப் பயனையடைய இயலுமா? நற்கதியடைய அது போதுமானதா? என்பதுதான் என் ஸந்தேஹம். இதை என் அறிவுக்கெட்டிய அளவு எனக்குள் ஆராய்ந்து பார்த்தேன், என் ஐயம் தீர்ந்தபாடில்லை'' என்றனர். உடனே ஸ்வாமிகள் ''வேத சாஸ்திரத்தின் முறைப்படி ஒருவன் தன் நித்திய கர்மானுஷ்டானங்களை பிரதிப் பிரயோஜனமேதும் கருதாமல் செய்து வந்தால் நிச்சயமாக ஜன்ம ஸாபல்யம் உண்டு. மந்திர சக்தியின் மஹிமைகளை நீங்கள் நன்றாய் அறிந்திருந்தால் உங்களுக்கு இந்த ஸந்தேஹமே ஏற்பட்டிருக்காது. யோகாப்பியாச முறையும் அம்மாதிரியேதான். சரியான குருநாதனை அண்டி யோகாப்பியாசத்தை அனுஷ்டித்தாலேயே அதுவும் பலிதமாகும். குருவில்லாமல் நூல்களிற்கண்ட முறைகளை அனுசரித்தால் பயனுண்டாகாது. பலனுக்குப் பதிலாக விபரீதமே விளையும். நீந்துவதற்கு புஸ்தக முறைகளைக் கையாண்டால் பயன்படுமா? தண்ணீரில் நீந்துவதற்குத் தெரிந்த ஒருவரை தன்னுடன் வைத்துக்கொண்டல்லவா நாம் நீந்த முயற்சிசெய்ய வேண்டும்? குரு என்ற முறையில் அவர் சொற்படி கேட்டல்

லவா பழகவேண்டும்? நல்ல பயிற்சி ஏற்படும் வரை குரு கூடவே இருந்தால் விபத்துகள் ஏதும் விளையாது. பயிற்சியில் நல்ல தேர்ச்சியும் உண்டாகும்'' என்று அறிவித்தார்கள். பிறகு பக்தி மார்க்கத்தைக் குறித்தும் ''பக்தி மார்க்க அனுஷ்டானம் மிகவும் சுலபம் என்று எல்லோரும் கருதுவார்கள். மேற்சொன்ன இரு மார்க்கங்களுமே பக்தி மார்க்கத்தைக் காட்டிலும் சுலபமானது. பிரபஞ்ச வாழ்க்கையில் இருந்துகொண்டே மனதை அடக்கி ஸதா ஸர்வகாலம் பகவத் தியானம் செய்வதுதான் பக்தி மார்க்கம் எனப்படுவது. அவ்வாறில்லாமல் பொழுதுபோக்கிற்காக ஆலயங்களுக்குப் போய் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் அஃது கொடுக்கப்படும் சுண்டல் முதலிய சிற்றுண்டிகளை உண்டு வம்பு பேசிக்கொண்டும் இருந்தால் எளிதில் ஜன்மஸாபல்யம் அடையமுடியாது. அந்தரங்க பக்தி வேண்டும். அந்த பக்தியே காரிய ஸித்தியளிக்கும்'' என்று அறிவித்தார்கள்..

பிறகு அது சம்பந்தமாய் சில பிரத்யக்ஷ நிரூபணமும் செய்து காட்டினர். ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி ஓர் கரியடுப்பு நெருப்புடன் கொண்டுவரப்பட்டது. ஸ்வாமிகள் காக்காப்பொன் தகடு ஒன்றை சிறு துண்டுகளாக வெட்டி ஒன்றை ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் கையிலும் மற்றொன்றை என்னிடமும் கொடுத்துவிட்டு மூன்றாவது துண்டைத் தானும் எடுத்துக்கொண்டார். ''நாம் மூவரும் குரு உபதேசமும் பிரஹ்மோபதேசமும் பெற்றவர்களாதலால் நமது உபதேசமந்திரங்களை உச்சரித்து ஜபித்து ஒவ்வொருவரும் நம் கையிலுள்ள காக்காப்பொன்

துண்டை அடுப்பில் நாமே போடவேண்டும்" என்றார். அதன்படி எல்லோரும் சிறிதுநேரம் ஜபம் செய்து அத்துண்டுகளை நெருப்பிலிட்டதும் ஸ்வாமிகளின் தகடு நல்ல சுத்தத் தங்கமாக மாறிவிட்டது. மற்ற எங்கள் இருவருடையதும் நெருப்பில் கருகியது. இதே முறையை யோகாப்பியாசம் செய்து பரீக்ஷை செய்ததில் ஸ்வாமிகளது தகடு மாத்திரமே பொன்னாயிற்று. பக்தி மார்க்க முறையிலும் ஸ்வாமிகளுக்குத் தான் ஜயமேற்பட்டது.

இம்மாதிரி ஸ்வாமிகள் நிரூபித்துக் காட்டவே ஜஸ்டிஸ் மணி அய்யரவர்கள் பூர்ண திருப்தியடைந்து ஸ்வாமிகளுக்களித்த தொந்திரவுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டு விடைபெற்றுப் போகும் தருணம், ஸ்வாமிகள் நிரூபித்துக் காட்டிய பொற் தகடுகளை ஸ்ரீ மணி அய்யரவர்களுக்கே ரக்ஷையாகக் கொடுத்து அனுப்பினார்.

இவ்விஷயம் அடையாறு பிரஹ்மஞான சபைக்கு எட்டி, பிரசாரமாய் விட்டது. அதிலிருந்து ஸ்வாமிகளிடம் அநேக பிரஹ்மஞான ஸபையார் (Theosophists) வந்துபோகத் தொடங்கினர்.

## 2. சாண்டூர் மஹாராஜா.

சாண்டூர் ஸம்ஸ்தானம் பெல்லாரி ஜில்லாவிலுள்ளது. இந்த ஸமஸ்தானத்தை ஆண்டு வருபவர்கள் ரஜபுத்ர வம்சத்தை சேர்ந்தவர்கள். சாண்டூர் மஹாராஜா நமது ஸ்வாமிகளின் மகிமைகளை அறிந்து தம் ஊருக்கு வரும்படி அழைத்திருந்தார். நமது ஸ்வாமிகளும் சாண்டூருக்கு சென்றிருந்தார்கள். மஹாராஜா ஸ்வாமிகளை எல்லா

விதமான விருதுகளுடன் தக்க மரியாதை செய்து தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். மஹாராஜாவுக்கு ஒரே பெண் தானுண்டு. மஹாராணியும் நமது ஸ்வாமிகளிடம் பரம பக்தியுள்ளவர். மஹாராஜா தனக்கு பிற்காலம் ராஜ்யபரிபாலனம் செய்ய புத்திரபேரு இல்லையே என்ற ஏக்கம்கொண்டு ஸ்வாமிகளை வேண்டிக் கொண்டார்.

ஸ்வாமிகள் சாண்டூரிலுள்ள மலைப்பிரதேசங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து வருகையில், ஒரு புதரைக் கண்டு அதனருகில் வந்ததும் நிஷ்டையிலமர்ந்தார். பிறகு ஸ்வாமிகளின் கட்டளைப்படி அங்குள்ள புதர்களை வெட்டி அழிக்கப்பட்டதும் ஒரு குகை தென்பட்டது. அதனுள் பிரவேசித்துப் பார்க்கையில் குமாரஸ்வாமி ஆலயம் ஒன்று தென்பட்டது. ஸ்வாமிகளினால் இவ்வாலயத்திற்கு ஓர் தனிப் பெருமை ஏற்பட்டது.

ஒரு சமயம் மஹாராஜாவும் மஹாராணியுமாக ஸ்வாமிகளைப் பார்த்து, ஸ்வாமிகளை ஒரு யௌவன ஸன்னியாஸியாக பார்க்க விரும்புவதாய் சொல்ல, ஸ்வாமிகளும் "இப்போ என்னை போட்டோ எடுங்கள், நீங்கள் விரும்பியபடி கிடைக்கும்" என்று சொன்னார்கள். உடனே போட்டோ எடுக்கப்பட்டு பார்த்தால் ஸ்வாமிகள் அதிபால்ய ஸன்னியாஸியாக காணப்பட்டார். யாவரும் இந்த சக்தியைக் கண்டு வியந்தார்கள். நமது மடாலயத்திற்கு மஹாராஜா ரொம்ப உதவி புரிந்திருக்கிறார்கள். குற்றாலத்திற்கும் சுமார் 1923 ரூ வாக்கில் குடும்பசகிதம்

வந்து மடாலயத்தை பார்வையிட்டு மூர்த்திகளையும் தரிசித்திருக்கிறார்கள்.

## 3. பத்ராசலம் ராஜா.

பத்ராசலம் என்ற ஊர் ஐதராபாத் ஸம்ஸ்தானத்தை சேர்ந்தது. இவ்வூரிலுள்ள ஸ்ரீராமர் கோவில் புராதனமான ஸ்தலம். இக்கோவிலை கட்டி விருத்தி பண்ணினவர் ராமதாஸ் ஸ்வாமிகள். இந்த மஹானின் சரித்திரம் யாவரும் அறிந்ததே. இதை ஆண்டுவரும் ராஜா ஸ்ரீ ராமர் வம்ச பரம்பரையைச் சேர்ந்தவர் என்று ஒரு வதந்தி உண்டு.

சுமார் 1916ஷு பத்ராசலத்தை ஆண்டுவந்த ராஜா சென்னையில் தனது அரண்மனையில் வசித்துவந்தார். ராஜா வயதானவர். மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். சென்னையில் எங்களது வீட்டிற்கு சமீபத்தில் ராஜாவின் அரண்மனையும் இருந்ததால், ராஜாவுடன் நாங்கள் பழகிவர சௌகர்யப்பட்டது.

1916ஷு ஒரு சமயம் ஸ்வாமிகள் சென்னைக்கு வந்த பொழுது, ராஜா இதை அறிந்து ஸ்வாமிகளை பார்க்கப் பிரியப்படுவதாய் என்னிடம் சொல்ல, அவரை அழைத்து வந்து ஸ்வாமிகளுக்கு அறிமுகப்படுத்தினேன். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, “ஸ்வாமிகளுக்கு ரசவாத மார்க்கம் தெரியுமா?” என்று கேட்டார். அதற்கு ஸ்வாமிகள் “ரசவாத மார்க்கமும் தெரியும். அந்த மார்க்கமில்லாமலே தங்கம் வரவழைக்கவும் முடியும்” என்று சொல்லி தமது வெறுங்கைகளை மூடிக்கொண்டு சற்று

நிஷ்டையிலமர்ந்து பிறகு கைகளை விரிக்கவே ஒரு கரத்தில் குங்குமமும் மற்றொன்றில் ஸ்வர்ணத்தகடும் இருந்தன. ஸ்வாமிகள் அவற்றை ராஜாவுக்கே அளித்துவிட்டார்கள். ஸ்வாமிகளின் அரிய சக்தியைக் கண்டு வியந்து, மெய்மறந்து, அவரது பாத மலர்களில் விழுந்து பணிந்தார். தான் எவ்வளவோ பெரிய மஹான்களைக் கண்டு தரிசித்திருப்பதாகவும் இதுவரை இப்பேற்பட்ட மஹானை கண்டதே இல்லை என்றும் ஏற்றி போற்றித் துதிசெய்து தான் கொடுத்த தொந்தரவிற்கு மன்னிக்கும்படிக்கும் ஸ்வாமிகளை வேண்டினார். மறுநாள் ராஜா ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து ஒரு பெரிய வியாக்ராஸனத்தையும் ஒரு தட்டில் கொஞ்சம் தங்க நாணயங்களையும் வாசனைத் திரவியங்களையும் பாத காணிக்கையாக சமர்ப்பித்து விடைபெற்றுச் சென்றார்.

## 4 என்ஜினீயர் ராமஸ்வாமி அய்யர்.

ஸ்வாமிகளின் அந்தரங்க பக்தர்களில் என்ஜினீயர் ராமஸ்வாமி அய்யரும் ஒருவர் என்று முன்னமேயே கூறப்பட்டுள்ளது. இவர் தம் குடும்பத்துடன் தத்தாத்திரேய மந்திராலயத்தில் உள்ள வீடுகளில் ஒன்றில் வாசம் செய்து வந்தார். இவருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டு சில நாட்கள் கஷ்டப்பட்டு வந்தார். திடீரென்று ஒருநாள் காலையில் வியாதியின் கொடுமையால் பேச்சு மூச்சு நின்றுவிட்டது. சுற்றத்தாரும் அன்பரும் அழ ஆரம்பித்துவிட்டார்கள். அழுகைக் குரலைக் கேட்டு நானும் ஸ்வாமிகளும் சில சிப்பந்திகளுடன் ராமஸ்வாமி

PAGE NO- 140,141 MISSING IN ORIGINAL

மஹானாகவே எண்ணினார். தனக்குள்ள சந்தேகங்களை எல்லாம் ஸ்வாமிகளிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம் என்று நினைத்து "ஸ்வாமி! எனக்கு தேவீ உபாஸனை விஷயமாய் சில ஸந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றைத் தாங்கள் நிவிருத்தி செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஸ்வாமிகளும் ராமசந்திர அய்யரவர்களை நோக்கி "உங்கள் தீராத சந்தேகங்கள் தீருவதற்காகவே தேவீ உங்களை இங்கே அழைத்து வந்திருக்கிறாள். இந்த நவராத்திரி வைபவங்களை இங்கேயே இருந்து கவனித்து வாருங்கள். உங்கள் சந்தேகங்கள் யாவும் தானாகவே நிவிருத்தியாகும்" என்றறிவித்தார். ஸ்வாமிகளின் ஆணையைச் சிரமேற்கொண்டு அவரும் தம் சாமான்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வந்து, மடத்தில் ஒரு ஜாகையில் இருந்துகொண்டு ஈச்வரீ கைங்கர்யங்களைக் கவனித்து வந்தார்.

நவராத்திரி சமயம் ஒருநாளிரவு பூஜைகள் முடிவுற்றதும் நாங்கள் சிலபேர் தேவீ ஸன்னிதியின் முன் வாசலிற் படுத்துக்கொண்டோம். எங்களுடன்கூட ராமசந்திர அய்யரவர்களும் இருந்தார்கள். எல்லோரும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருக்கையில் திடீரென்று ராமசந்திர அய்யர் பெருங் கூக்குரலிட்டு எங்களை அழைத்தார். நாங்களும் அந்த அரவங்கேட்டு விழித்தெழுந்தோம். ராமசந்திர அய்யரிடம் "விஷயம என்ன? ஏன் இப்படி அலறினீர்கள்?" என்று நாங்கள் யாவரும் கேட்க, அவர் "ஐயா! வெகு நேரமாய்த் திரள் திரளாக ஸுமங்கலிகள் மஞ்சள் குங்குமத்துடன் இந்தவழியாகக் கோவிலுக்குள்

போய்க்கொண்டே இருக்கிறார்கள். உள்ளே ஸன்னிதிக்குள் போனவர்கள் மீண்டும் திரும்பி வெளியே வரக்காணோம். இன்னும் மேற்கொண்டும் ஸுமங்கலிகள் போனவண்ணமாயிருக்கிறார்களே, உங்களுக்கொன்றும் தென்படவில்லையா?" என்று கதறினார். ஆனால் எங்கள் கண்களுக்கொன்றுமே தெரியவில்லை. பிறகு அவருடன் பொழுதுவிடியும் வரை பேசிக்கொண்டே இருந்து காலையில் அருவிக்கு ஸ்நாநம் செய்யப் போய்விட்டோம். சற்று நேரங்கழித்து ஸ்வாமிகளிடம் ராமசந்திர அய்யர், தான் இரவில் கண்ட தோற்றத்தைச் சொல்ல, ஸ்வாமிகள் "இது தான் உங்கள் ஸந்தேகத்தின் முடிவு" என்று ஏதோ எழுதிக் காண்பித்தார். அதன் விபரம் என்ன என்பது எங்களுக்கெல்லாம் அறிவிக்கவில்லை. ராமசந்திர அய்யரும் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அவர்களே சொல்லாமலிருக்கும்பொழுது நான் கேட்பது நியாயமில்லை என்று இருந்துவிட்டேன். ஆனால் அதிலிருந்து ராமசந்திர அய்யர் மடத்திலேயே இருந்துகொண்டு ஸ்வாமிகளின் பரம பக்தர்களில் ஒருவராய் விட்டார். அவ்வப்பொழுது மடத்தின் கைங்கர்யங்களைச் செய்துவந்தார்.

## 6. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் என்பவர் போஸ்டல் ஆடிட்டர் வேலைபார்த்து ரிடையர் ஆனவர். நாங்கள் சென்னையில் இருந்தபோது இவருடைய சிநேகம் ஏற்பட்டது. இவர் அந்த காலம் முதலே தெய்வபக்தியிலீடு

பட்டவர். பக்த பஜனை கோஷ்டிகளில் சேர்ந்து தெய்வ வழிபாடு செய்துவந்தார். ஸ்வாமிகள் சென்னைக்கு வந்து பூஜைசெய்யும் காலங்களில், அர்ச்சனை வாசிக்க இவரை அழைத்து வருவோம். அதிலிருந்து நம் ஸ்வாமிகளுடன் நெருங்கி பழகும் பாக்கியம் ஏற்பட்டு, உபதேசங்கள் பெற்று, பெரிய தேவீ உபாஸகராய்விட்டார் ஸ்வாமிகள் இவரையே நவராத்திரி காலங்களில் மடத்தில் நடத்தப் படும் தேவீ பூஜா கைங்கர்யங்களைச் செய்வதற்குப் பழக்கம் செய்துவைத்தார்கள். அவரும் தம் காலமுள்ள வரையில் ஒவ்வொரு நவராத்திரி முதலிய விசேஷங்களுக்கும் வந்து தேவீ காரியங்களை அதிக பக்தி சிரத்தையுடன் பக்தர் யாவரும் ஆனந்திக்கும்படி செய்து வந்தார்.

1948ஞ ஜனவரி மாதம் மடத்தில் நடக்கப்போகும் மௌன ஸ்வாமிகளின் ஆராதனை விசேஷத்திற்காக தனது ஊர் சிதம்பரத்திலிருந்து 6-1-48 ஸாயங்காலம் புறப்பட்டு சீர்காழியில் தனது தங்கையின் இல்லத்தில் தங்கி மறுநாள் குற்றாலம் புறப்பட உத்தேசித்து சீர்காழி சென்று தங்கையின் இல்லத்தில் படுத்தவருக்கு அன்று இரவிலேயே அனுயாஸ மரணம் சம்பவித்தது. இவருக்கு ஒரு ஆண் மகவும் இரு பெண்களும் இருக்கிறார்கள். இவரது புத்திரர் திருவாரூரில் ஆடிட்டர் வேலை பார்த்து வருகிறார். தகப்பனாரைப்போல் இவரும் தெய்வபக்தியில் ஈடுபட்டவராய், நமது மடாலயத்திற்கு பொருளுதவி செய்துகொண்டே வருகிறார்.

தற்சமயம் இந்த கைங்கர்யங்களை ஸ்வாமிகளிடம்



சாண்டூரில் இராஜ தம்பதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி
ஸ்ரீ மௌன ஸ்வாமிகள் பால்ய ஸந்யாசியாகத்
தோற்றமளித்த காக்ஷி



ஸ்ரீ பாலசந்திர கணபதி ஸ்வாமிகள் என்ற

ஸ்ரீ ஸ்ரீ தேங்காய் ஸ்வாமிகள்

பழகி வந்த மற்றொரு சிஷ்யர் ஸ்ரீ T. R. விச்வநாத அய்யர் என்பவர் செய்து வருகிறார். இவரும் ஒரு பெரிய பக்தர்.

## 7. ஸ்ரீ தேங்காய் ஸ்வாமிகள்.

ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகள் திருக்குற்றாலத்தில் தண்டாயுதபாணி மடாலயத்தில் வசித்து வந்தபொழுது தேங்காய் ஸ்வாமிகள் என்று சொல்லப்படும் ஸ்ரீ பால சந்திர கணபதி ஸ்வாமிகள் என்ற ஓர் பிராஹ்மண ஸந்யாஸியும் ஸ்வாமிகளுடன் மடத்திலேயே இருந்து வந்தார்கள். இவர் பரம ஸாது. எப்போதும் தெய்வ சிந்தனையிலேயே ஈடுபட்டிருப்பார். மஹா கணபதி உபாஸகர். விநாயகருக்கு லக்ஷக்கணக்கில் தேங்காய்கள் உடைப்பதை ஓர் ஜந்ம விருதமாகப் பூண்டு அனுஷ்டித்து வந்ததால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதெனத் தெரியக் கிடைக்கின்றது.

மௌனானந்தரிடம் இவருக்கு அதிக அன்பு உண்டு. இவர் அடிக்கடி வெளியூர்களுக்கு விசேஷமாய் மணப்பாரைக்குப் போய்வருவார்.

இவர் ஸ்ரீ தண்டாயுதபாணி மடாலயத்திற்கு பெரிதும் உதவிபுரிந்து வந்திருக்கிறார்.

நம் ஸ்வாமிகள் சென்னைக்குப் போயிருந்த சமயம் 1092ம் ஆண்டு நளவருஷம் புரட்டாசி-மீ 7உ (22-9-1916) வெள்ளிக்கிழமையன்று இவர் தண்டாயுத பாணி மடாலயத்திலேயே ஸித்தியடைந்துவிட்டார்கள். இவரை சேத்தூர் ஜமீந்தாரவர்களால் ஸ்ரீ மௌன ஸ்வா

மிகளுக்குக் கொடுக்கப்பட்ட பரமானந்தத் தோப்பில் ஸமாதி செய்யப்பட்டது. அதில் விநாயகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

## 8. செங்கோட்டை ஸ்வாமிகள்.

செங்கோட்டை ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில் அஷ்ட ஸஹஸ்ர அந்தணர் வகுப்பைச் சார்ந்தவர். பெரிய குடும்பத்தையுடையவர். நல்ல சாந்த குணம் படைத்தவர். ஒருசமயம் இவர் வியாதியால் அவஸ்தைப்பட நேர்ந்தது. அப்பொழுது ஆபத்ஸந்யாஸம் எடுத்துக்கொண்டார். ஆண்டவனருளால் பிணி நீங்கிற்று. பிறகு ஆசிரம தர்மத்தை நடத்திவர பெரிதும் சிரமப்பட்டார். இவர் பெரிய போஜனப் பிரியர். புனித மனமுடையவர். இவர் ஊரூராகச் சென்று இறுதியில் செங்கோட்டையில் தமது பூர்வாசிரம உறவினர்களால் பராமரிக்கப்பட்டு வந்தார்கள். இவரது குழந்தையுள்ளம் யாவரையும் வசப்படுத்தியது. இவர் அடிக்கடி திருக்குற்றாலம் வந்து தண்டாயுதபாணி மடாலயத்தில் தங்குவார்கள். இவருக்கு ஸ்ரீ மௌன ஸ்வாமிகளிடம் நல்ல விசுவாசமும் அன்பும் உண்டு. இவர் வந்தபொழுதெல்லாம் நம் ஸ்வாமிகள் இவருக்குத் திருப்தியான முறையில் போஜனமிடச் செய்வார்கள்.

ஒருசமயம் இவர் மௌனஸ்வாமிகளுடன் வனசஞ்சாரத்தைக் குறித்து சைகையால் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, காட்டு மிருகங்களைக் குறித்துப் பேச்சு வந்தது. செங்கோட்டை ஸ்வாமிகள் காட்டுமிருகங்களைச் கண்

டால் தனக்குப் பயமில்லை என்று சொன்னார். "புலியைக் கண்டால் பயப்படுவீர்களா?" என்று கேட்டார் மௌன ஸ்வாமிகள். "எனக்கு அச்சமென்பதே கிடையாது" என்றார் செங்கோட்டை ஸ்வாமிகள். "இப்பொழுது நான் புலியை வரவழைத்தால் நீங்கள் அஞ்சாமலிருக்கி றீர்களா? பார்ப்போம்" என்றார் மௌன ஸ்வாமிகள். "எங்கே புலியை வரவழையுங்கள் பார்க்கலாம்" என்று செங்கோட்டை ஸ்வாமிகள் சொல்லவே, மௌன ஸ்வாமி கள், அவரைக் கண்களை மூடிக்கொள்ளுமாறு கூறி தாம் நிஷ்டையிலமர்ந்தார்கள்.

ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் செங்கோட்டை ஸ்வா மிகளின் கண்களுக்குப் பயங்கரமான புலி ஒன்று வருவ தாகத் தோன்றியது. உடனே அவர் "ஐயோ! புலி வரு கிறதே. புலி வந்துவிட்டதே! ஐயோ! இந்தப் பக்கம் வருகிறதே! அந்தப்பக்கம் வருகிறதே! என்னை நுகர்ந்து பார்க்கிறதே! போதும், போதும்! புலியை போகச் சொல் லுங்களேன்! விரட்டுங்களேன்!" என்று கதறிவிட்டார் கள். நமது மௌன ஸ்வாமிகள் தம் நிஷ்டையினின்று கலைந்து சிரித்துக்கொண்டு "உங்களுக்கு புலியைக் கண் டால் பயமில்லையே?" என்று பரிகசித்தார்கள். அதற்கு செங்கோட்டை ஸ்வாமிகள் "நீங்கள் ஒரு பெரிய மஹான் தான். நிஜமாகவே புலியை வரவழைத்து விட்டீர்களே! என்ன பயங்கரம்! எனக்கு உங்களுடன் பேசுவதற்கே பயமாயிருக்கிறது" என்று சொல்லித் தன் பிழையை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

சில ஆண்டுகளுக்குப் பின் செங்கோட்டை ஸ்வாமி

கள் செங்கோட்டையிலேயே ஸித்தியடைந்தார்கள் என்பது பிரஸ்தாபம்.

## 9. ஸங்கீத வித்வான்கள்.

நமது ஸ்வாமிகள் ஓர் பெரிய ஸங்கீத ரசிகர் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இவர் ஸங்கீத நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது சுருதி லயத்துடன் ரசித்து அப்படியே மனோலயப்பட்டு ஆனந்த பரவசமாய் விடுவார். நவராத்திரி, வியாஸ பூஜை காலங்களில் பெரிய வித்வான்கள் வந்து இசை நிகழ்ச்சிகளும், கதா கால க்ஷேபங்களும் செய்து பகவத் பிரஸாதம் பெற்றுப் போவார்கள்.

காலஞ்சென்ற கும்பகோணம் பாகவதர் பஞ்சாபகேச சாஸ்திரிகள மடாலயத்திற்கு மிகவும் வேண்டிய பக்தர். இவர் வருடந்தோறும் வந்து ஸத்கதா காலக்ஷேபங்கள் செய்து பிரஸாதம் பெற்றுப் போவது வழக்கம்.

ஸ்ரீமதி ஸரஸ்வதிபாயும் உத்ஸவத்திற்கு வந்து உபந்யாஸங்களும் கதாகாலக்ஷேபங்களும் செய்வதுண்டு. ஒரு சமயம் இவர்வந்தபொழுது தமக்கு உள்நாக்கு வளர்ச்சி ஏற்பட்டு அடிக்கடி கஷ்டப்படுத்துவதாய் ஸ்வாமிகளிடம் சொன்னார். ஸ்வாமிகள் பிரஸாதம் அளிக்க அந்த உபாதை நீங்கிற்று. இவர் இன்னும் நமது மடாலயத்திற்கு வந்து தமது கைங்கர்யத்தை நடத்திக்கொண்டு வருகிறார்.

திருவாங்கூர் ராஜவம்சத்தைச் சேர்ந்தவரும் வைணிக வித்வானுமாகிய மாவலிக்கரை ஸ்ரீ உதயவர்ம ராஜா வருடந்தோறும் நவராத்திரியின்போது ஸ்வாமி

களிடம் வந்து வீணை வாசித்து அவர்களைப் பரவசமாக்குவார்.

ஸ்வாமிகள் சென்னைக்கு வரும்பொழுதெல்லாம் காலஞ்சென்ற ஸ்ரீமதி வீணை தனம்மாள் வந்து தமது ஸங்கீதத் திறமையினால் ஸ்வாமிகளையும் அங்கு கூடியிருக்கும் இதர சிஷ்யர்களையும் பரவசப்படுத்தி வந்தார்.

முன்சொன்னபடி மடாலயத்தின் முக்கிய சிஷ்யரும் சேத்தூர் ஜமீந்தாருமாகிய ஸ்ரீ V. T. சேவுக பாண்டியத் தேவரும், தமக்குள்ள லயக்ஞானத்தைப் பலமுறை தம் 'கஞ்சரா' வாத்தியத்தின் மூலம் ஸ்வாமிகளிடம் காட்டி நன்மதிப்பை யடைந்துள்ளார்.

உற்சவகாலங்களில் பிரபல நாதஸ்வர வித்வான்கள் வந்து தங்கள் திறமைகளை ஸ்வாமிகளிடம் காண்பித்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்வர்.

மைசூரைச்சேர்ந்த ஸங்கீத வித்வான் ஸ்ரீ பிடாரம் கிருஷ்ணப்பா என்பவரும் ஸ்வாமிகளிடம் சிறந்த பக்தி விசுவாசம் கொண்டவர். உற்சாகத்துடன் அவர் அடிக்கடி மடாலயத்திற்கு வந்து ஸ்வாமிகளிடம் தன் ஸங்கீதத் திறமையைக் காட்டி அனுக்ரஹம் பெற்றுப்போயிருக்கிறார்.

இவ்விதம் வரும் வித்வான்களுக்கு ஸ்வாமிகள் சிற்சில சமயங்களில் தகுந்த ஸம்மானமும் அளித்து வந்திருக்கிறார்கள்.

# அத்தியாயம் 13.

## இதர மதஸ்தர்கள்.

### 1. சென்னை ஜைனுல் அவுதீன்.

ஸ்வாமிகளிடம் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களும் அதிகமாய் வந்து பழகிப்போவதுண்டு. தங்கள் குறைகளை ஸ்வாமிகளிடம் சொல்லி பலர் குறை நீங்கப்பெற்றிருக்கின்றனர்.

சென்னையில் ஜைனுல் அவுதீன் என்ற ஒரு தனவந்தர் இருந்தார். இவர் ஒரு வைத்திய நிபுணரும் கூட. இவரது வைத்தியம் யுனானி மார்க்கமானாலும் நாட்டு வைத்தியமாகிய ஆயுர்வேத வைத்தியப் பழக்கமே அதிகமாயிருந்தது. இவர் தெய்வ பக்தி மிகுந்தவர். மருந்து கொடுக்கும்போதும், வியாதியஸ்தர்களைப் பார்க்கப்போகும் போதும், இந்துக்களைப்போலவே ராகு காலம், சகுனம் முதலிய எல்லாவற்றையும் கவனிப்பார். மருந்துகள் தயாரிப்பதில் பிறரை நம்புவதில்லை. தாமும் தம் மனைவியுமாய் சேர்ந்துதான் மருந்துகள் யாவற்றையும் தயாரிப்பது வழக்கம். நோயாளிகளை அவ்வளவு இலேசாய் சிகித்சைக்கு ஏற்றுக்கொள்ளமாட்டார். ஏற்றுக்கொண்டு மருந்து கொடுத்தால் நிச்சயமாக குணம் உண்டு.

இவர் ஸ்வாமிகளிடம் அடிக்கடி வந்து வைத்திய முறைகளில் தமக்கு ஏற்படும் ஸந்தேஹங்களைத் தீர்த்துக்கொண்டு, அதன்படியே நடந்து வந்திருக்கிறார். இவருக்கு மதத்துவேஷமே கிடையாது. இவருக்கு ஸ்வாமிகளிடம் அதிகப் பற்றுதலும் விசுவாசமும் உண்டு.

## 2. ராமநாதபுரம் மஹமதியர்.

மற்றொரு சமயம் 1941ம் வருடம் திருக்குற்றாலத்தில் நமது தத்தாத்திரேய மந்திராலயத்தில் நவராத்திரி முடிந்ததும் ஒருவர் தினந்தோறும் மடாலயத்திற்கு வந்து முன் வாசல் பக்கம் நின்றுகொண்டு, உள்ளிருக்கும் ஸ்வாமிகளை தரிசித்தவண்ணம் இருந்துவிட்டுப் போய்விடுவார். இம்மாதிரியே இரண்டு மூன்று நாட்கள் இவரை மடாலயத்தின் முன்பு கண்டோம்.

ஒருநாள் நானும் ஸ்வாமிகளும் வாசற்புரம் வந்ததும் அவர் அஞ்சலி செய்தார். ஸ்வாமிகள் எனனிடம் ஜாடை செய்து "இவர் யார்" என்று விசாரித்தறியச் சொன்னார். நானும் உடனே அவரது ஊர் முதலிய விபரங்களைக்கேட்டு "உள்ளே வாருங்கள்" என்றேன். அவர், தான் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்தவரென்றும், மகமதிய மதஸ்தர் என்றும், தான் உள்ளே வரக்கூடாதென்றும், திருக்குற்றாலத்திற்கு தம் பத்தினியுடன் வந்து மூன்று நாட்களாகின்றதென்றும், ஸ்வாமிகளை தரிசிக்கவே அங்கு வந்ததாயும், தான் மகமதியனானாலும் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய இந்து கோவிலுக்கு தர்மகர்த்தாவென்றும், சொந்தத்திலேயே அதிக சொத்துக்களை எழுதிவைத்து சிறப்பாக அக்கோவிலை நடத்தி வருவதாயும் சொன்னார். மேலும் ஸ்வாமிகளிடம் சென்று தன் குறைகளைத் தீர்த்துக்கொள்ளும்படி ஒரு ஜோதிஷர் மூலம் அறிந்துகொண்டதினால் தான் இங்கு வந்திருப்பதாகவும், ஸ்வாமிகளிடம் சில வார்த்தைகள் பேச விரும்புவதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு ஆச்

சரியமாய்விட்டது. ஸ்வாமிகளும் அந்த மகமறிய பக்தரை அவரது சிரேஷ்டமான குணத்தைக் கண்டு மெச்சினார். உடனே அவரது விருத்தாந்தத்தைக் கூறும்படி உத்தர விட்டார். அவர் உடனே "ஸ்வாமி! எனக்குத் திருமண மாகி பதினாறு வருட காலமாகிறது. நானும் என் மனைவி யும் மிகவும் அன்னியோன்யமான முறையில் வாழ்க்கை நடத்திவருகிறோம். ஆனால் நாளதுவரை எங்களுக்கு மக்கட்பேறு ஏற்படவில்லை என்பதைக்குறித்து வருந்து கிறோம். எத்தனையோ ஆலயங்களுக்குச் சென்று தரிச னங்கள் செய்து பிரார்த்தித்து வந்தோம். பயன் ஒன் றும் ஏற்படவில்லை. கைரேகை சாஸ்திரம் முதலியவை களைப் பார்த்தோம். அதில் எனக்கு இரு மனைவிகள் உண்டென்றும், புத்திர ஸந்தானம் உண்டாகுமென்றும், குற்றாலத்தில் உள்ள மௌனி என்ற பெரிய மஹானின் கிருபை கிடைத்தால் என் மனோரதம் கைகூடும் என்றும் ஒரு ஏட்டில் எழுதியிருந்ததால் இங்கு வந்து மூன்று நாட் களாய் ஸ்வாமிகளின் தரிசனத்திற்காக காத்துக்கொண் டிருக்கிறேன். ஸன்னிதானத்தின் தரிசனம் இன்று தான் கைகூடிற்று. எனக்கு தற்சமயம் இருப்பது ஒரே பத் தினி தான். அவள் என்னை மற்றொரு பெண்ணைப் பார்த்து விவாஹம் செய்துகொள்ளும்படி வற்புறுத்து கிறாள். அதன் மூலமாகவாவது புத்திரப்பேறு உண்டா காதா என்ற ஒரே ஆவல்தான் அவளுக்கு. எனக்கோ இந்த மனைவியின்மீது அதிகப் பற்றுதல் உண்டு. இரண் டாவது தாரமாக மற்றொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டால் இவள்மீது வெறுப்பு ஏற்பட்டு

விடுமோ என்று அஞ்சி மறுத்தேன். ஆதலால் ஸ்வாமி கள்தான் எனக்கு உத்தரவளிக்கவேண்டும். நான் மறு விவாஹம் செய்துகொள்ளலாமா? எனக்கு ஸந்தான பாக்கியம் உண்டாகுமா? என்று கேட்டார். ஸ்வாமிகள் அவரை மறுநாட்காலையில் வரச்சொல்லி அனுப்பிவிட் டார்கள்.

அன்று இரவு ஸ்வாமிகள் நிஷ்டையில் அமர்ந்து பார்த்ததில் அம்மகமதிய பக்தன் மற்றொரு விவாஹம் செய்துகொள்ளலாம் என்றும் புத்திரப்பேறு உண்டாகும் என்றும் அறிந்தாராம். மறுநாட்காலையில் அம்மகமதிய பக்தர் வந்தார். அவரிடம விஷயங்களை ஸ்வாமிகளே அறிவித்தார்கள். அதற்கு அந்த பக்தர் ஸ்வாமிகளிடம் பணிந்து "அப்படி மறுபடியும் விவாஹம் செய்துகொண் டால் புத்திரப்பேறு யாரிடம் உண்டாகும்" என்று கேட் டார். "உமக்கு விவாஹம் செய்துகொண்டால் ஸந்தா னம் உண்டு. அது யாரிடம் ஏற்பட்டால் என்ன?" என்றார் ஸ்வாமிகள்.

மகமதிய பக்தர் ஸ்வாமிகளுக்கு நன்றி செலுத்தி விட்டு, விடைபெற்றுக்கொண்டு தம் ஊர் சென்றவர், 1943-ம் வருடம் தம் இளைய மனையாளுடனும், பிறந்த ஆண் குழந்தையுடனும் வந்து சேர்ந்தார். ஸ்வாமிக ளிடம் வந்து தரிசனம் செய்து, ஸ்வாமிகளின் ஆக்ஞைப் படி தான் மறுமுறை விவாஹம் செய்து கொண்டதாகவும், தன் இளைய மனைவியிடம் ஓர் ஆண் குழந்தை பிறந்திருப் பதாகவும், கொஞ்ச நாட்களுக்குப்பின் மூத்தவள் இறந்த தாகவும் சொன்னார்.

ஸ்வாமிகளும் நானும் இவ்விசேஷங்களைக் கேட்டு முதலில் சற்று வருத்தமுற்றோம். ஆனால் ஒரு மகிழ்ச்சி அம்மகமதிய பக்தனுக்கு புத்திரப்பேறு ஏற்பட்டது தான். அம் மகமதிய பக்தன் பழம், கற்கண்டு, ரூபாய்கள் முதலியவற்றை ஓர் தட்டில் வைத்து ஸ்வாமிகளின் பாத காணிக்கையாகக் கொடுத்து வணங்கி, ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார்.

## 3. கவர்னர் பென்ட்லண்டு துரை.

ஸ்வாமிகள் தண்டாயுதபாணி மடாலயத்தில் வாஸம் செய்து வந்த காலத்தில் சென்னை மாகாண கவர்னர் பென்ட்லண்டு துரையும் அவரது மனைவியும் குற்றாலம் வந்தார்கள். கவர்னர் குற்றால நாதர் ஆலயத்தையும், அருவியையும் பார்வையிடுவதாகத் தீர்மானம் போட்டிருந்தனர். கவர்னர் வரப்போகிறார் என்று எல்லா இடங்களிலும் ஸகல ஏற்பாடுகளுடன் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் தண்டபாணி மடாலயத்தில் ஸ்வாமிகளுடன் இருந்தோம். அன்று ஏதோ ஓர் விசேஷமான தினால் தண்டாயுதபாணிக்கு அத்புத அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. "கவர்னர் பெரிய கோவிலுக்கு வரப்போகிறார் என்பது நமக்குக் காலையிலேயே தெரிந்திருந்தால், நம் மடாலயத்திற்கும் அழைத்திருக்கலாமே" என்று எல்லோரும் பேசிக்கொண்டோம.

கவர்னர் பெரிய கோவிலின் முன் வாசல் வழியாக நேராக அருவியைப் பார்க்கப் போய்விட்டார். பெரிய கோவில் தேவஸ்தான அதிகாரிகள் "கவர்னர் கோயிலுக்

குள் வராமல் போய்விட்டாரே" என்று வருந்தி ஒருக்கால் திரும்பி வரும் பாதையில் வரலாம் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் கவர்னர் அருவியைப் பார்வையிட்டதும், ஆலயத்தைச் சுற்றி வெளிப் பிராகாரத்தின் வழியாய் வலமாக வந்துகொண்டிருக்கும்பொழுது தண்டாயுதபாணி மடாலயத்தைக் காட்டி "இது என்ன கட்டிடம்" என்று கலெக்டரைக் கேட்டார். ஸ்வாமிகளைப் பற்றிச் சொல்லவே "இதைப் பார்ப்போம்" என்று கவர்னர் தம் மனைவியுடன் தண்டாயுதபாணி கோவிலின் முன்புறம் வெளியிலிருந்தே தரிசனம் செய்து, அலங்காரத்தைக் கண்டு பிரமித்து நின்றனர். பிறகு ஸ்வாமிகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல ஸ்வாமிகள் மடாலயத்தின் முன்புறம் ஆஸனமிட்டு நிஷ்டையிலமர்ந்திருந்தார்கள். கவர்னரும் மற்றவர்களும் வெளியில் போடப்பட்டிருந்த பெஞ்சுகளிலமர்ந்தனர். நிஷ்டை கலைந்தபிறகு, கவர்னர் ஸ்வாமிகளை நோக்கி "நீங்கள் ஏன் பேசுவதில்லை? என்ன ஆஹாரம் சாப்பிடுவீர்கள்? விக்கிரகங்களின் மேலுள்ள நகைகள் எல்லாம் உண்மையான வைரங்கள்தானா?" என்று பல கேள்விகளை ஆங்கிலத்திலே கேட்டார். ஸ்வாமிகள் அதற்குத் தமிழில் விடைகளை எழுதிக்கொடுத்து அதை நம்மவர் மூலம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொல்லப்பட்டன. கவர்னரது மனைவி "மயில் வாகனம் மிகவும் அழகாயிருக்கிறது. இக்கோவிலை ஏன் விஸ்தாரமாய் கட்டக்கூடாது?" என்று கேட்டனர்.

இம்மாதிரியாக சுமார் நாற்பத்தைந்து நிமிஷங்கள் வரை பேசிக்கொண்டிருந்து கவர்னர் போகுமுன் ஸ்வாமி

கள் சில சிஷ்யர்களிடம், தம் சிறிய அறையில் உள்ள ஒரு தட்டு ஆப்பிள் பழங்களையும், இரண்டு பெரிய ரோஜா ஆரங்களையும் கொண்டு வந்து கவர்னர் தம்பதிகளுக்கு மாலை போட்டு, பழங்களையும் ஸமர்ப்பிக்கச் சொன்னார். ஸ்வாமிகள் அப்படிச் சொல்லி சைகை காட்டியதும் நாங்கள் எல்லோரும் அதிர்ச்சியடைந்தோம். ஏன்? ஒருவரிடமும் அறிவிக்காமல் ஸ்வாமிகள் இந்த பழங்களையும் சுமார் ஐந்து அடி உயரமுள்ள இரு ரோஜா மாலைகளையும் எவ்வாறு தயாரித்தார்கள் என்பது எவருக்கும் விளங்காமையே அதன் காரணம். எதற்கும் ஸ்வாமிகளின் கட்டளைப்படி உள்ளே சென்று பார்த்ததில் அங்கு அவர் சொன்னபடியே பழங்களும் இரு ரோஜா ஆரங்களுமிருந்தன. அவற்றைக் கொணர்ந்து கவர்னர் தம்பதிகளுக்கு ஸமர்ப்பித்தோம். கவர்னர் தம்பதிகள் இவ்வளவு பெரிய மாலைகளையும் ஆப்பிள் பழங்களையும் கண்டு "இவைகள் எல்லாம் ஏது? வடதேசத்திலிருந்து தருவித்தீர்களா?" என்று கேட்டு பிரமித்தனர். ஸ்வாமிகளுக்கு காணிக்கையாக ஏதோ கொஞ்சம் பணம் கொடுத்து, கவர்னர் தம்பதிகள் சென்றனர்.

அந்த ரோஜா ஆரத்தின் அழகும் புஷ்பத்தின் செழுமையும் நான் இதுவரை கண்டதேயில்லை. ஒவ்வொரு மலரும் உள்ளங்கையளவு அகலம் இருந்தது. பழங்களோ ஒவ்வொன்றும் சிறு தேங்காயளவிருந்தது. நல்ல சிவப்பு வர்ணம். இதையெல்லாம் ஸ்வாமிகள் வைத்திருப்பதற்கு மார்க்கமே இல்லை. அவருக்கு எப்படி கிடைத்ததோ தெரியவில்லை. எல்லாம் அவர் திருவிளையாடல்தான்.

## 4. J. C. மெலோனி, I. C. S.

ஸ்வாமிகளுக்கு J. C. மெலோனி I. C. S. என்பவரையும் அவரது மனைவியையும் நன்றாய்த் தெரியும். J. C. மெலோனி என்பவர் கவர்னரது கவுன்ஸில் மெம்பர். இவரது மனைவி தமக்கு தொழுவதற்கு ஒரு விநாயகர் வேண்டுமென்று ஸ்வாமிகளிடம் கேட்க, கல்லினால் செய்யப்பட்ட ஒரு சிறிய விநாயகர் விக்கிரகத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் அந்த விநாயகருக்குத் தினந்தோறும் காலையில் எழுந்து பிரார்த்தனை செய்துவந்தார்கள். சென்னையில் மற்ற ஐரோப்பிய ஸ்திரீகளுடன் விநாயகரைப் பற்றியும் ஸ்வாமிகளின் மகிமைகளைப் பற்றியும் அவர்கள் அடிக்கடி பேசிக்கொள்வார்களாம். ஸ்வாமிகள் சென்னைக்கு வரும்போதெல்லாம் மற்ற துரைமார்களையும் அவர்களது ஸ்திரீகளையும் கூட அழைத்துக்கொண்டு வந்து பழம் முதலியவற்றை ஸ்வாமிகளுக்கு ஸமர்ப்பித்து தரிசனம் செய்து போவார்கள்.

ஸ்வாமிகளைத் தரிசனம் செய்யும்பொருட்டு J. C. மெலோனி துரையும் அவரது மனைவியும் திருக்குற்றாலத்திற்குப் பலதடவைகள் வந்து போயிருக்கிறார்கள். இவர்கள் இருவருடைய பெயருக்கும் தண்டபாணி கோவிலில் மாதாந்தரக் கட்டளை நடத்தும் வகைக்கு ஆளுக்கு ரூ. 36 வீதம் சிலவருடகாலம் வரை பணம் அனுப்பி வந்தார்கள். இவர்கள் பதவியினின்று நீங்கி தம் சொந்த நாடாகிய சீமைக்குப் போகும்பொழுது ஸ்வாமிகள் கொடுத்த விநாயகர் விக்கிரகத்தையும் கூட எடுத்

துச் சென்றூர்களாம். சீமைக்குப் போயும் கட்டளைக்குப் பலவருடங்கள் வரை பணம் அனுப்பியுள்ளார்கள்.

இதைத் தவிர தூத்துக்குடியிலிருந்த மெஜுரா கம்பெனி ஜாகப் துரையும் அவரது மனைவியும் ஸ்வாமிகளிடம் பக்தி விசுவாசம கொண்டிருந்தார்கள்.

அன்னிய தேசத்தாராலும், ஜாதிமத வேறுபாடிருந்தாலும் பக்தி விசுவாசம் யாவருக்கும் ஒன்றேயன்றே!

---

## அத்தியாயம் 14.

## சில பக்தர்களின் அனுபவங்கள்.

### 1. M. ஸுப்ரஹ்மண்ய அய்யர்.
### (Retired Income Tax Officer)

ஸ்ரீ மௌனனந்த ஸ்வாமிகளைக் குறித்து யான் 1910-ம் ஆண்டிலேயே கேள்வியுற்றிருந்த போதிலும் முதன் முதலாக 1916-ம் ஆண்டில் தான் அவரை நேரில் கண்டு தரிசிக்கும் பேறு கிட்டியது. அச்சமயம் ஸ்வாமிகள் சென்னையில் புரசவாக்கத்திலுள்ள ஸ்ரீ மிட்டாதார் சுந்தரம் அய்யரவர்களின் "ஷண்முக விலாஸ்" மாளிகையில் தங்கியிருந்தனர். அன்று ஸ்வாமிகளை தரிசனம் செய்த மாத்திரத்திலேயே எனக்கு ஓர் புத்துணர்ச்சியும், பக்தி விநயமும் அவர் பால் உண்டாகியது. அதுமுதல் ஸ்வாமிகள் சென்னைக்கு வரும் தருணமெல்லாம் தரிசித்து வரலானேன்.

நான் என் உத்தியோகமுறையில் குண்டூர், கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் வாஸம் செய்துவந்த சமயம், ஸ்ரீ மௌனஸ்வாமிகளின் பூர்வாச்ரம வரலாறுகள் சிலவற்றை கேள்விப்பட்டு அறிந்தேன். அவற்றை ஈண்டு வரைய விரும்புகிறேன்.

1916-ம் ஆண்டு நமது ஸ்வாமிகள் நெல்லூர் ஜில்லாவில் கொவ்லூர் தாலுகாவைச் சேர்ந்த ஜொன்னவாடா என்ற ஊரிலுள்ள ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் ஆலயத்திற்கு விஜயம் செய்தபொழுது அவரது பூர்வாச்ரம பந்துக்கள் சிலர் அவர்களைத் தரிசிக்க வந்தார்களாம். ஆனால் ஸ்வாமிகள் அவர்களை பார்க்க மறுத்துவிட்டு அவ்விதம் கண்டு பேசிக்கொள்வதெல்லாம் ஆசிரம தருமத்திற்கே முறணானது என்றும், தம் ஏகாந்த வாழ்க்கைக்கு அது பங்கம் விளைவிக்கும் என்றும் தம் சிஷ்யர்களின் மூலம் கூறி அனுப்பிவிட்டார்களாம். அப்பொழுது ஸ்வாமிகளுக்குத் தம் பூர்வாச்ரமத்தில் பிறந்த பெண்கள் இருவரில் இளையவருக்கு தேக ஆரோக்கியம் குன்றி வருந்துவதாயும், பிணி நீக்கத்திற்கு ஸ்வாமிகளின் அனுக்கிரகம் தேவை என்றும் அவர்கள் பிரார்த்திக்க, தம்மால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்று கூறி அவர்கள் யாவரையும் அங்கிருந்து செல்லும்படி கண்டிப்பாய் உத்திரவிட்டதாகவும் ஒரு செய்தி புலனாகிறது. ஸ்வாமிகளின் பூர்வாச்ரமத்தில் ஜனித்த ஒரே புத்திரன் மரணமடைந்த செய்தியைத் தெரிவித்தும் அதில் தமக்கு எவ்வித ஸம்பந்தமும் இல்லை என்றே சொன்னார்களாம். இவற்றை எல்லாம் தம்மிடம் கூற வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை என்

றும் சொன்னார்களாம்.

மேற்கூறிய விஷயங்கள் யாவும், ஸ்வாமிகளின் பூர்வாச்ரம பந்துவும் மருமகனுமாகிய போனங்கி சோமசுந்தரம் பந்துலு என்பவராலும், ராஜமஹேந்திரபுரத்தில் தாசில்தாராக இருந்து பிறகு டிப்டி கலெக்டர் பதவி வகித்துவந்த தவனூரி உமாமஹேச்வர ராவ் என்பவராலும் எனக்குக் கூறப்பட்டவையாகும். தவிரவும் ஸ்வாமிகளே தமக்கு பூர்வாச்ரம பந்தங்கள் ஒரு சிறிதும் கூடவே கூடாதென்று புகல்வதுண்டு.

யான் 1929 – 30ம் வருடங்களில் குண்டூரில் தொழில் செய்து வரும் சமயம் அருண்டேல்பட்டில் எனது விடுதியில் இரண்டு மூன்று மாதகாலம் ஸ்வாமிகள் தங்கியிருக்கும்படியான பெரும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. அவ்வருஷ வியாஸ பூஜையையும் ஸ்வாமிகள் அங்கேயே செய்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகளின் பூர்வாச்ரம மாப்பிள்ளை ஸ்ரீ போனங்கி சோமசுந்தரம் என்பவர் அடிக்கடி வந்து தரிசித்துப்போவது வழக்கமாயிற்று. அப்பொழுது அவர் தான் ஸ்வாமிகளிடம் தனக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தும் அதை மறுத்து விட்டதாகக் கூறினார். மேலும் ஸ்ரீ சோமசுந்தரமவர்கள் சில தங்க நாணயங்களை என்னிடம் கொடுத்து. வியாஸ பூஜை செலவிற்காக அதை ஸ்வாமிகளிடம் சமர்ப்பிக்கும்படி என்னை வேண்டிக்கொண்டார். யானும் அவர் விருப்பத்திற்கிணங்கி அவற்றை ஸ்வாமிகளிடம் சமர்ப்பிக்கச் சென்றபொழுது, ஸ்வாமிகள் அதை மறுத்து ஏற்றுக் கொள்ளாமல் திரும்பக் கொடுத்துவிடும்படி உத்திரவிட்

டார்கள். பிறகு போனங்கி ஸோமஸுந்தரமவர்களின் நிலையைக்கண்டு எல்லோரும் ஸ்வாமிகளை மிகவும் வேண்டிக்கொண்டதின்பேரில் அதை என் மூலம் அங்கீகாரம் செய்தார்கள். அம்மாதிரியே 1931ம் வருஷமும் ஸ்வாமிகள் சீராலாவில் வியாஸ பூஜை செய்த சமயம் ஸ்ரீ ஸோமஸுந்தரமவர்கள் விசேஷமான தனத்தை ரிஜிஸ்டர் போஸ்டு மூலம் சீராலாவிற்கு அனுப்பியிருந்தார்கள்.

இந்த வியாஸ பூஜையின் முதல் நாள் ஸ்வாமிகளின் விருப்பப்படி யானும் ஸ்வாமிகளுடன் கிருஷ்ணா நதியில் நீராடுவதற்கு அமராவதி சென்றபோது, தமது குருநாதர் அமராவதியில் ஸித்தியடைந்தார்களென்றும், கிருஷ்ணா நதியில் பூத உடல் இழுத்துவிடப்பட்டதாகவும் அறிவித்தார்கள்.

தமக்கு அப்பிரதேசங்களில் பூர்வாச்ரம பந்துக்கள் எத்தனையோ பேர் இருந்தாலும் என்னுடைய வீட்டில் தான் அவருக்கு மனச்சாந்தி ஏற்படுகிறதென்றும், பகல் வேளைகளில் எங்கு சென்றாலும் இராக் காலங்களில் என் வீட்டில் வந்து தங்கினால் தான் மனச்சாந்தி ஏற்படுகிறதென்றும் கூறி அவ்விதமே செய்து வந்தார்கள். இதனால் ஸ்வாமிகளுக்கு என்போன்ற சிஷ்யர்களின் மீதுள்ள கருணையும் அன்பும், அவரது ஆசிரம தருமப் பாதுகாத்தலும் ஊக்கமும் நன்கு விளங்கும்.

எல்லோரும் முயற்சி செய்தால் ஸமாதி நிலையை சுலபமாய் அடையலாமென்றும், மனது ஒரு நொடிப்பொழுதாகிலும் மெய்மறந்து தியானத்திலீடுபட்டால் அதனு

டைய சுகம் நன்கு விளங்குமென்றும், நிஷ்டையிலிருக்கும் பொழுது ஸஹஸ்ராரம் நாடியினின்று அமிருத தாரை பெருகுவதால் வேறு எவ்வித ஆகாரமுமே தேவையில்லை யென்றும் ஸ்வாமிகள் என்னிடம் அடிக்கடி அறிவித்த துண்டு.

ஸ்வாமிகளுக்கு ஏகாந்தமாய்த் தவமியற்றுவதிலேயே விருப்பமதிகம் என்று யான் இரு நிகழ்ச்சிகளின் மூலம் அறிந்து கொண்டேன்.

ஒரு சமயம் ஸவாமிகளுடன் நான் சென்னையிலிருந்து ஜொன்னவாடவிற்குச் சென்று அங்குள்ள ஸ்ரீ காமாக்ஷி தேவியின் ஆலயத்தில் அன்னையைத் தரிசித்து பிறகு ஸ்வாமிகளுடன் சென்னைக்குத் திரும்பி வந்து அவர்களைக் கலவி சுப்பராய செட்டியார் மாளிகையில் விட்டுவிட்டு யான் வீடு செல்ல விடை கோரியபோது, ஸ்வாமிகள், தனக்குப் பந்தங்கள் அதிகமாய் ஏற்பட்டுவிட்டதாகவும் அதை எல்லாம் நீக்கி மறுபடியும் காட்டிற்கே சென்று தனிமையில் தவமியற்றுவதற்கு எப்பொழுது காலம் வாய்க்குமோ என்றும் வருந்தி கண்ணீர் உகுத்து எழுதிக் காட்டினர்.

பிறகு 1930-ம் வருஷம் குண்டூரில் எல்லேபத்தி ஸ்ரீ ஸாம்பசிவ சாஸ்திரிகளின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு விசேஷத்திற்கு யானும் ஸ்வாமிகளுடன் சென்ற சமயம், அங்கு ஒரு ஏகாந்தமான அறையில் தனித்திருந்த போது கீழ் கண்டவாறு அறிவித்தார்கள்.

ஒரு சமயம் தான் திருவண்ணாமலையில் தங்கிய

பொழுது அங்கு ஸ்ரீ ரமண மஹரிஷி வந்ததாகவும், தான் ஒரு குகையிலும் ஸ்ரீ ரமணர் ஒரு குகையிலுமாகத் தங்கி வந்ததாகவும், அவ்விடத்திற்கு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் என்னும் மஹான் ஒருவர் அடிக்கடி வந்து போனதாகவும், அவர் என்னைக் கண்டதும் "உன்னைக் கண்டால் எனக்கு மிகவும் இஷ்டமாய் இருக்கிறது" என்று கூறி ஆலிங்கனம் செய்துகொள்ள அருகில் நெருங்கியதாயும், உடனே தமக்குப் பந்தங்கள் கூடாது என்பது ஞாபகத்திற்கு வரவே விலகிக்கொண்டதாயும், அப்படிப்பட்ட ஸ்வேச்சை நிலையே மேலானதென்றும் கூறி, அந்த நிகழ்ச்சியைக் குறித்துப் புகழ்ந்து தமக்கு ஏற்பட்டிருக்கும் பந்தங்களை நினைத்து நமது ஸ்வாமிகள் பெரிதும் வருந்தினார்கள்.

ஸ்ரீ மௌனானந்தர் திருக்குற்றாலம் வருமுன் தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரி தீரத்திலுள்ள பல கிராமங்களில் யாத்திரை செய்ததாகத் தெரிகிறது. உமையாள்புரம், பாஸ்கரராஜபுரம், கணபதி அக்கிரஹாரம் முதலிய பல கிராமங்களுக்குச்சென்று வந்ததாகவும் அறிவித்துள்ளார்கள்.

ஸ்வாமிகளால் அநேக இடங்களில் செய்யப்பட்ட பல பிரதிஷ்டைகளில் செப்புத்தகட்டில் யந்திரம் வரைந்து மந்திரம் எழுதி முறைப்படி ஜபங்கள் செய்ய அது ஸ்வர்ணத் தகடாக மாறி எடையில் கூடியிருந்ததையும், அவைகளை ஸ்வாமிகளே தம் கைகளினால் பீடத்தில் வைத்து பிரதிஷ்டைகள் செய்ததையும் எல்லோரும் அறிவார்கள். மேலும் தம் தபோ மகிமையினால் நவரத்தினங்கள், பவ

மும் முதலியவற்றை வரவழைத்து பீடத்தில் பிரதிஷ்டைக்கு முன்பு வைப்பார்கள். இவ்விதமான அத்புத செயல்களை கிருஷ்ணா ஜில்லாவில் பந்தர் கிராமத்தில் ஸ்வாமிகளால் செய்யப்பட்ட ஒரு பிரதிஷ்டையின் பொழுது யான் நேரில் கண்டு களிக்கும் பெரும்பேறு பெற்றேன்.

ஸ்வாமிகளின் பிரதம சிஷ்யர்களில் ஒருவராகி செங்கோட்டையில் வாஸம் செய்துவந்த ரயில்வே ரிடையர்டு இன்ஜினீயர் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யரவர்களின் தருமபத்தினி அதிக நோயினால் வருந்தி மரணத்தருவாயிலிருந்த சமயம நமது ஸ்வாமிகள் விபூதிப் பிரஸாதமளித்ததினால் உடனே பிணி நீங்கி குணமடைந்தார்களென்றும், அந்த அம்மையாருக்கு நீரழிவு உபாதியிருந்ததாகவும், அதற்கும் தகுந்த ஓர் ஔஷதம் கொடுத்து நலம் செய்தார்களென்றும் தெரியவருகிறது.

யான் எல்லூரில் தொழிலாற்றிவந்த சமயம் என் மனைவி கர்ப்பமுற்றிருந்தாள். அவள் தன் நிலையைக் கண்டு மனதில் அதைரியப்பட்டுக் கொண்டிருக்கையில் ஸ்வாமிகள் அங்கு வர நேர்ந்தது. ஸ்வாமிகள் என் மனைவிக்கு ஊக்கமூட்டி "கவலை வேண்டாம், இன்னும் ஒரு வாரத்தில் அமாவாஸைக்குள் ராமன் பிறந்ததுபோலவே கிருஷ்ணனும் ஜனிப்பான்" என்று அறிவித்தார்கள், அதுபோலவே சதுர்தசி இருக்கும்பொழுதே ஓர் ஆண் மகவு பிறந்தது. ஸ்வாமிகளின் திருவாக்கின்படியே அக்குழவிக்குக் கண்ணன் என்றே பெயரிட்டோம். பிறகு என் மனைவிக்குப் பலதடவைகளில் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டு ஸ்வாமிகளின் ஆணைப்படி மடாலயத்திற்கு வந்து

ஒருமாதகாலம் தங்கியிருந்தோம். அப்பொழுது ஒவ்வொரு தினமும் தீர்த்தப் பிரஸாதம் கொடுத்துவந்தார்கள். அதனால் அந்த நோய் நீங்கிற்று. ஸ்வாமிகளால் கொடுக்கப்பட்ட ஒரு வேர் என் மனையாளிடம் இன்னும் ரக்ஷையாக இருக்கிறது.

ஒருசமயம் நமது மௌனானந்த ஸ்வாமிகள் என்னுடன் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேத்தூர், தேவதானம் முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தார்கள். அப்பொழுது பல யோகாஸனங்களைப்பற்றியும் அவற்றின் முறைகளைப்பற்றியும் பேச்சு வந்தது. அதையடுத்து ஸ்வாமிகள் சீர்ஷாஸனம், குக்குடாஸனம், மயூராஸனம், சவாஸனம் முதலியவற்றை செய்து காட்டினார்கள்.

ஒருசமயம் ஸ்வாமிகள் பழனியிலிருந்து பொள்ளாச்சி செல்லவேண்டியிருந்ததால் அவ்வூரிலுள்ள பெரிய மிராசுதார் ஒருவரிடமிருந்த குதிரை வண்டியை இரவல் கேட்கவே மிராசுதார் கொடுக்க மறுத்துவிட்டார். உடனே ஸ்வாமிகள் "நாம் நடந்தே செல்வோம். வழியில் ஏதாவது வண்டி கிடைக்கும்" என்று அறிவித்து நல்ல வெய்யிலில் மற்றவர்களுடன் நடந்தே சென்றனரும். இதை வேடிக்கை பார்த்துவந்த அந்த மிராசுதாரும் வெய்யிலின் வேட்கை தாளாமல் குதித்துக் குதித்து நடந்து வந்ததாகவும், சாலைப்புறம் வந்ததும் பொள்ளாச்சி ரயிலில் வரும் தனிகர் ஒருவரை அழைத்துவர காலி வண்டி ஒன்று போய்க்கொண்டிருந்ததாகவும், அந்த வண்டியில் ஸ்வாமிகளை ஏறிக்கொள்ளும்படி வண்டிக்

காரன் கோரியதும், ஸ்வாமிகளும் அவ்வண்டியில் ஏறி பொள்ளாச்சி ரயில் நிலையத்தை அடைந்து அங்கிருந்து மங்களூருக்குப் பிரயாணம் செய்தார்களாம். திரும்ப ஸ்வாமிகள் பழனி மார்க்கமாக வரும்பொழுது மிராசுதாரின் குதிரை நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதாகவும் ஸ்வாமிகள் எனக்கு எழுதிக்காட்டினார்கள்.

ஸ்வாமிகள் ஓர் பெரிய தபஸ்வி. பலதினங்கள் தொடர்ந்தாற்போல் அன்னஹாரமின்றி நிஷ்டையிலிருந்து விடுவார்கள். சில சமயங்களில் பாலும் பழமும் ஒருவேளை மட்டும் உட்கொள்வது வழக்கம். சிற்சில சந்தர்ப்பங்களில் அதுவும் உட்கொள்வதில்லை. வேறு சில சந்தர்ப்பங்களில் ஒரே வேளையில் இரண்டு மூன்று இடங்களில் மிருஷ்டான்ன போஜனம் செய்துமிருக்கிறார்கள். இன்னும் சில ஸமயங்களில் வெறும் வேப்பிலையை மட்டிலும் அரைத்து உருண்டைகளாக உட்கொள்வார்கள். எவ்வளவு தூரமானாலும் வெய்யிலில் நடப்பார்கள். வியர்வை என்பதே அவரிடம் காணமுடியாது. இவர்கள் கடைசிகாலம்வரை மௌன விரதத்தையே அனுஷ்டித்து வந்துள்ளார்கள். இவர்களுக்கு அனுக்கிரக நிக்கிரக சக்தியுண்டு. இம்மஹான் ஆத்மலாபத்தை குறைத்துக்கொண்டு நம்போன்ற கிருஹஸ்தர்களுக்கு வேண்டிய இஹபர ஸுகத்தைத் தேடிக் கொடுத்தவர்கள். இவரது பதமலர்களுக்கு நாம் யாவரும் திரிகரண சுத்தியுடன் அஞ்சலி செலுத்தி அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை ஏற்றிப் போற்றித் துதிப்போமாக!

## 2. A. S. K. அய்யங்கார்.

எனக்கு ஸ்ரீ மௌனானந்த ஸ்வாமிகளை 1911-ம் வருஷத்திலிருந்தே நல்ல அறிமுகம் உண்டு. பாளையங்கோட்டை வெங்கு பாட்சா முதலியார் குமாரரும், ஞானமணியம்மாள் சத்திர அக்தாருமான ஸ்ரீ T. V. நாகப்ப முதலியாரவர்கள் மூலம் ஸ்வாமிகளின் வரலாற்றினை மேலும் அறிந்துகொண்டேன். அச்சமயம் நமது ஸ்வாமிகள் திருக்குற்றாலத்தில் தண்டபாணி மடாலயத்தில் வாஸம் செய்து வந்தார்கள்.

திருக்குற்றாலத்தில் ஸ்ரீ தத்தாத்திரேய மந்திராலயம் நிர்மாணிக்கப்பட்டு அங்கு ஸ்ரீ ராஜராஜேசுவரி தேவியின் பிரதிஷ்டை நடைபெறும்பொழுது ஸ்ரீ வெங்கு பாட்சா அவர்கள் சந்ததியைச் சேர்ந்தவரும் எனது ஆப்த நண்பருமாகிய ஸ்ரீ பிங்களநேச முதலியார், என்னையும் அவ்விழாவிற்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருந்தார்கள். நான் பிரதிஷ்டைக்குச் செல்ல மனமின்றிப் போகவில்லை. முதலியாரவர்கள் குற்றாலத்தில் அம்பிகை பிரதிஷ்டை, நவராத்திரி, கும்பாபிஷேகம் முதலியவற்றை தர்சித்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்ததும் என்னை யழைத்து, திருக்குற்றாலத்தில் முதலியாரவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளால் நிஷ்டையிலிருந்து வரவழைத்துக் கொடுக்கப்பட்ட ஒரு பவுனையும் குங்குமப் பிரஸாதத்தையும் எடுத்து எனக்குக் காண்பித்தார்கள். தேவீ பிரதிஷ்டைக்கு செலவு முழுவதும் தான் ஏற்றுச் செய்ததாகக் கூறினார்கள். உடனே நான் வருந்தி முதலியாரவர்களை நோக்கி "ஆண்

டிகள் பேச்சைக் கேட்டு அனாவசியமாக ஏராளமான பண த்தை வீண் செலவு செய்யலாமா?'' என்று கேட்டேன். அன்று இரவில் ஸ்வாமிகள் என் கனவில்தோன்றி தான் தாங்கியுள்ள கமண்டலுவிலுள்ள ஜலத்தைக் கையால் வாரி என் முகத்தில் அடித்தார்கள். அன்றுமுதல் நான் ஸ்வாமிகளிடம் பக்தி விசுவாசம் மேலிட்டு எப்பொழுதும் மனத்தகத்தே அவரது மலரடிகளைத் தியானித்து என் குருநாதராகவும் கொண்டேன்.

ஒரு சமயம் ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்த பொழுது கலவி ஸ்ரீ சுப்பராய செட்டியார் வீட்டில் நானும் எனது நண்பர் ஸ்ரீ முதலியாருடன் போய் ஸ்வாமிகளைத் தரிசித்தேன். அவ்வமயம் சென்னை ஹைகோர்ட் நீதி பதிகள் ஸ்ரீ சேஷகிரி அய்யர், குமாரஸாமி சாஸ்திரிகள், இன்னும் பல தனதனவான்களும் ஸ்வாமிகளின் தரிசனத் தின் பொருட்டு வந்திருந்தனர். அச்சமயம் நான் ஸ்வாமி களிடம் சென்று அதிக வணக்கத்துடன் அன்று நான் ஸ்வப்னத்தில் கண்ட அதிசயத்தைக் கூறினேன். ஸ்வாமிகளைத் தரிசித்த மாத்திரத்தில் நான் அவரிடம் கொண்டிருந்த துரபிப்பிராயங்களை யெல்லாம் மறந்து அவருக்கே என்னை அடிமையாக்கிக்கொண்டு, அவர் களது முக்கிய சிஷ்யர்களில் ஒருவராகத் திகழும்படியான பெரும் பேரடைந்தேன். ஸ்வாமிகளும் என்மீது அன்பு கொண்டு, என்னை தன் ஆத்ம சிஷ்யன் என்று இதர சிஷ்யர்களிடம் அடிக்கடி சொல்லி வருவார்களாம். இது இதர சிஷ்யர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம்.

1923ம் ஆண்டில் நான் சென்னையில் வைசூரி வினை

யாடி துன்பப்பட்டுக்கொண்டு ஆபத்தான நிலைமையி லிருந்தபொழுது ஓர் இரவில் ஸ்வாமிகள் என் கனவில் தோன்றி தரிசனமளித்து அஞ்சலென்றருளினார்கள். மறுநாட் காலையில் இதை என் நினைவுடன் யாவருக்கும் அறிவித்தேன். பிறகு சிலநாட்களுக்குள் என் பிணி நீங்கிக் குணமேற்பட்டது.'

1925ம் வருஷம் ஸ்ரீ ராம நவமி உத்ஸவ சமயம் ஸ்வாமிகள் சென்னை நகரிலிருந்ததால் முன்கூட்டியே திருக்குற்றாலத்தில் உற்சவ ஏற்பாடுகளைச் செய்ய என்னையும், நண்பர் ஸ்ரீ விஸ்வநாத அய்யரையும் அனுப்பினார்கள். உற்சவ சமயத்தில் ஸ்வாமிகளும் வந்துவிட்டார்கள். உத்ஸவம் முடிந்ததும் நான் சென்னைக்குத் திரும்பிப்போக உத்திரவு கேட்டபொழுது "போகவேண்டாம். இங்கேயே இருங்கள்" என்று ஜாடைகாட்டி உத்திரவிட்டார்கள். ஆனால் நான் திரும்பத் திரும்ப மன்றாடி உத்திரவு கேட்டுக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டேன். சென்னையை அடைவதற்குள் வழியிலேயே கடுஞ் ஜ்வரம் கண்டு மிகுந்த சிரமத்துடன் வீடுவந்து சேர்ந்தேன். சுமார் மூன்று மாத காலம்வரை அந்த நோயினால் வருந்தி அன்னஹாரமில்லாமல் பெரிதும் சிரமமடைந்தேன். பெரிய பெரிய வைத்திய நிபுணர்கள் (Doctors) கூட, என்னைப் பரிசோதித்துப் பார்த்து வியாதி முற்றிவிட்டபடியால் கவலைக்கிடமாக இருப்பதாய்ச் சொன்னார்கள். திருக்குற்றாலத்திலிருந்து ஸ்வாமிகள் அனுப்பிய கடிதமும் பிரஸாதமும் அச்சமயத்தில் வந்தது. அப்பிரஸாதத்தை யணிந்துகொண்டதும் கொஞ்சம் கொஞ்சமாக வியாதி நீங்கி பூரண குணமேற்

பட்டது. அதன் பிறகு இதுவரை யாதொரு பிணியும் என்னை அண்டியதில்லை.

மற்றொரு சமயம் ஸ்வாமிகள் சென்னைக்கு வந்து விட்டு திருக்குற்றாலத்திற்குத் திரும்பும்போது என்னையும் தன்னுடன் குற்றாலம் வந்து சிலநாட்கள் தங்கியிருக்கும்படி அழைத்துச் சென்றார்கள்.

எனது நண்பர் ஸ்ரீ பிங்களநேச முதலியாரவர்களுக்கு மக்கட்பேறு இல்லையென்ற குறை நீங்க ஸ்வாமிகள் அனுக்கிரகம் செய்து ஓர் பெண் மகவு பிறக்குமென்று அருளினர். அதன்படியே அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

சுமார் 1923ம் வருஷம் நெல்லூரில் நீதிபதியாகப் பதவி வகித்துவந்த ஸ்ரீ A. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்வாமிகள் ஆந்திர தேசத்திற்குச் சென்றார்கள். அச்சமயம் நானும் ஸ்வாமிகளின் அழைப்பின்பேரில் கூடப் போயிருந்தேன். ஸ்வாமிகள் அப்பிரதேசங்களில் சுமார் ஒருமாத காலம்வரை யாத்திரை செய்ய நினைத்ததாகவும், ஆனால் தென் நாட்டுப்பழக்க வழக்கமே தனக்கு வெகுவாய்ப் பிடித்திருப்பதாகவும் கூறி, மேலும் யாத்திரை செய்ய மனமில்லையென்று தம் யாத்திரையை நீடிக்காமல் நாட்களைக் குறுக்கிக்கொண்டு குற்றாலத்திற்குத் திரும்பிவிட்டார்கள்.

இப்பொழுது ஸ்வாமிகள் ஸித்தியடைந்துவிட்டாலும், வருஷத்திற்கு ஒருமுறையாகிலும் நான் குற்றாலம் சென்று தத்தாத்திரேய மந்திரத்திலுள்ள மூர்த்திகளை

தரிசித்து வருவேன். ஸ்வாமிகளின் ஸமாதியின்மீது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ நீலகண்டேச்வரர் என்னும் லிங்கத்தின் அபிஷேக தீர்த்தத்தினாலும், விபூதி பிரஸாதத்தினாலும் அநேகருக்குப் பிணி முதலியன நீங்கி சுகமடைந்திருக்கின்றார்கள் என்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். அப்பிரஸாதத்தை நானே பல நண்பர்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

எல்லாம் குருநாதன் செயல்!

## 3. A. ராமஸ்வாமி அய்யர், B. A.,
## (Dy. Commercial Tax Officer) திருமங்கலம்.

திருக்குற்றால மௌன ஸ்வாமிகளிடம் எனக்கு 1912ம் வருஷம் முதல் நெருங்கிய பழக்கம் உண்டு. மிட்டாதார் ஸ்ரீ S. சுந்தரம் அய்யரவர்கள் எனது தாய் மாமனார். மௌன ஸ்வாமிகளின் மகிமைகளையும் லீலா விநோதங்களையும் அடிக்கடி என் தாய் மாமனார் சொல்லக் கேட்டும், நானே நேரில் கண்டும் ஆனந்தித்திருக்கிறேன். என் தாய் மாமனார் ஸ்ரீ S. சுந்தரம் அய்யர் ஸ்வாமிகளின் அந்தரங்க சிஷ்யர்களில் முதன்மையானவர் எனக் கூறிடின் மிகையாகாது. அவர் ஸ்வாமிகளின் மகிமைகளை எல்லாம் வரைந்து ஓர் புத்தக ரூபமாக வெளியிட்டு, பக்தர்கள் யாவரும் அறிந்து ஆனந்திக்குமாறு செய்யவேண்டுமென்று பலதடவை கூறுவதுண்டு. அவரது வாழ் நாட்களிலேயே இம்மகத்தான காரியத்தைச் செய்யாவிட்டாலும் அவரது விருப்பத்தை அவரது திருமகன் ஸ்ரீ S. வெங்கடஸுப்பிரமணிய அய்யரவர்கள் மேற்

கொண்டு நிறைவேற்றியது பெரிதும் போற்றுதற்குரிய பணியேயாகும். இவர் மீதும் ஸ்ரீ மௌன ஸ்வாமிகளுக்கு மிகுந்த அன்பு உண்டு. இவருக்கும் ஸ்வாமிகளிடம் தீவிரபக்தியும் விசுவாசமும் உண்டு.

இந்நூலில் குறிப்பிட்டுள்ள ஸ்வாமிகளின் மகிமைகளில் சில எனக்கு முன்னமேயே தெரியும். ஆனாலும் இங்கு குறிப்பிடப்படாத எனக்குத் தெரிந்த ஓர் ஸம்பவத்தை மட்டிலும் எழுத அவாவுருகிறேன்.

1941ம் ஆண்டு யான் குடும்ப ஸஹிதம் ஸ்வாமிகளைத் தரிசிக்கும்பொருட்டு திருக்குற்றாலம் சென்றிருந்தேன். அங்கு யானும் ஏனைய சிஷ்யர்களில் சிலரும் ஸ்வாமிகளிடம் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் யான் ஸ்வாமிகளிடம் "ஹிந்துக்களைத் தவிர மற்ற மதத்தார்களில் சக்தி வாய்ந்த மஹான்கள் தற்சமயம் உலகில் எவரேனும் உளரோ?" என்று வினவ, அதற்கு ஸ்வாமிகள் எல்லா மதத்தின் கொள்கைகளும் ஒரே முடிவுக்கே வருவதால் மதபேதம் கிடையாதென்றும், தான் ஒருகாலத்தில் இமயமலைச் சாரலில் சஞ்சரிக்கையில் ஒரு மகமதிய மகானுடன் சிலகாலம் பழகியதாகவும், அவர் சகலவிதமான சக்தியும் வாய்ந்தவரென்றும், ஆக்கல், அழித்தல் முதலிய அரிய சக்திகளை யுடையவரென்றும், தான் அவரிடம் பழகிவரும் காலத்தில் மகமதியர்களின் முக்கிய விசேஷமான நாற்பது நாள் நோம்பு வந்த சமயமென்றும், அந்த விரதத்தை அம்மஹானும் அனுஷ்டித்து வந்ததாகவும், அந்த நாற்பது தினங்களும் அவர்களின் முறைப்படி தான தர்மங்களை வழங்குவதற்கு மலையில் வேறு ஆட்களில்லா

திருந்ததால் அவரே நூதனமாய் சிலரை சிருஷ்டிசெய்து, தானத்திற்குத் தேவையான சாமான்களையும் உண்டாக்கி நோம்பு கொண்டாடியதாகவும், விரதம் முடிவுற்றதும் அவரால் சிருஷ்டிக்கப் பெற்றிருந்த ஆட்களையும் மற்றெல்லாவற்றையும் மறையும்படி செய்துவிட்டதாகவும் அறிவித்தார்கள். அம்மஹானுடன் பழகியதின் பயனாய்த் தனக்கும அவ்விதமான அரிய சக்திகளில் பயிற்சி உண்டு என்றும் கூறியுள்ளார்கள்.

---

## 4. K. S. RAMASWAMY SASTRIGAL, Retired District Judge

I am proud to be and to claim to be one of the oldest and staunchest of the disciples and admirers of Sri Sivachidananda Saraswathi Swamigal more familiarly known as Sri Mowna Swamigal of Courtallam. It was in the year 1909 that I first came to know about him through my noble and pious friend, the late Mr. A. S. Krishnaswami Iyer, who was at that time District Munsiff at Ambasamudram. My father, the late Professor K. Sundararama Iyer, was at that time the Principal of the Hindu College at Tinnevelly and I was at that time District Munsiff at Tinnevelly. Mr. A. S. Krishnaswami Iyer told my father and me that Sri Swamigal was an adept in yoga and was

a devotee of Sri Raja Rajeswari Devi and had attained certain siddhis (occult powers). Even before then I had seen him once in 1908 in front of Dharani Peetam in the Siva Temple at Courtallam, but at that time I knew nothing about him and merely prostrated before him and went away. He was even then under a vow of silence and used to be sitting in yoga day and night before the Peetam. None knew then where he had come from. He had been seen moving about in the Courtallam hills shunning company and wrapped in himself and putting a wall between him and others by his vow of silence. Even then he sat in front of the Peetam, his silence cut him off from the outside world.

Mr. A. S. Krishnaswami Iyer brought Swamiji to our house in 1909. My father and I felt drawn to Swamiji. There was a brightness about his face as well as a wonderful composure (Santhi). We felt the truth of the well-known scriptural statement "ब्रह्मविदिवाभाति ते मुखम्". Though Swamiji preserved his vow in silence unbroken, he was gracious enough to write his answers to our queries, also his queries to us. He was always kind and playful in regard to children and they always liked him exceedingly.

In 1909 the then Pontiff of Sringeri (Sri Abhinava Nrisimha Barati Swamigal) came to Tinnevelly. I had the great privilege and happiness of meeting him earlier at Watrap and Srivilliputtur and Rajapalayam in 1908 when I was District Munsiff at Srivilliputtur and of being initiated by him into certain holy mantras and into the study of the Bhagawad Gita. His Holiness spent his Chaturmasyam period at Papanasam near Ambasamudram. After being with him at Tinnevelly, my father and I went to meet him at Papanasam. Sri Mowna Swamigal also came to meet him there. His Holiness asked him to construct a Mutt for Sanyasi at the holy place of Courtallam, as it was a place eminently suitable for Tapas and yet no mutt for ascetics existed there. Sri Mowna Swamigal agreed to do so. This was the real embryo of the great Mutt-cum-Temple now flourishing at Courtallam as the spiritual creation of Sri Mowna Swamigal.

One day Sri Mowna Swamigal came to my house at Tinnevelly. He stayed that night also there. He preferred to stay that night in the street pial of my house. When my mother went out that night to throw the plantain leaves in the dust-bin in the street, she found Sri Swamigal in

the Sirshasana posture for a long time and told us next morning about it. He left next morning for Courtallam.

Mr. S. Sundaram Iyer (the author's father), Mittadar of Pudukotah, was one of Sri Mowna Swamigal's earliest disciple like myself. He was a generous and loveable man and a loyal devotee and disciple. His unbroken service to the Swamiji for decades enabled the Mutt to be established and the shrines to be built.

So long as I was at Tinnevelly Sri Mowna Swamiji used to come often to my house. At that time he would not eat with his own hands. The preparations were served on his leaf and I used to mix them all up as per his command and roll them into a ball and place one mouthful after another into his right palm to be swallowed by him. Evidently this was a Sadhana to conquer the temptations of the palate. The Bhagawata rightly says: जितं सर्वं जिते रसे Jitam Sarwam Jite Rase (when the tongue is conquered everything is conquered).

It was in 1910 that he had the Dandayuthapani Temple constructed on a portion of the Siva Temple site near a brook. He established

also the image of Sri Sankaracharya there. There was no opposition at that time, but later on a slight opposition—more underground than open—was raised to the installation of the Idol of Sri Sankaracharya.

The ceremony of the consecration of the above said shrine and the installation of the images was celebrated on an imposing scale and was attended by the elite of the District and by many disciples of Swamiji outside the District. I was then District Munsiff at Tinnevelly, and present on the occasion. Mr. Sundaram Iyer took a prominent part in arranging the unique ceremony.

I had occasion when I was at Tinnevelly to see some of the special Siddhis (powers) which he had developed as the result of his austerity and yoga resulting in divine grace. He used to put his right hand inside his upper cloth and produce fragrant vibhuthi (sacred ashes) and kunkum and give the same to his devotees. When Rao Bahadur A. Sundara Sastri who was then the public Prosecutor of Tinnevelly and a most estimable and loveable man wanted to collect funds for the Hindu College and went to Sri Swamigal for blessings, the Swamigal put his right hand inside his upper cloth and produced a gold sovereign and gave it

with his blessings. On one occasion I saw a remarkable incident in Mittadar Sundaram Iyer's brother Narayana Iyer's house in Vannarapet at Tinnevelly (Tirunelveli). Mr. A. Mahalinga Iyer who was then Science Assistant in the Hindu College, I and others were present. Swamigal took two bits of copper and asked two receptacles to be brought in which some coal was placed. Two blow-pipes were brought. Swamiji asked Mahalinga Iyer to blow the coals and flame and place the copper bit on the fire and utter the Gayatri Mantra and convert the copper into gold. Swamiji brought some herb from the garden of that house and pressed the juice on the copper bit in the flame and uttered some mantra and blew the blow-pipe. After ten minutes we saw that his copper bit had a yellow shine while the other copper bit was of the copper colour. Mr. Mahalinga Iyer later tested Swamigal's copper bit in a retort with an acid and told me that the chemical reaction was that of gold. Often when going on journeys I have seen Swamiji producing coins by just putting his hand inside his upper cloth, and pay for buying a railway ticket. I do not know personally if he had other siddhis such as are called the *animadi ashta siddhis* but what I have seen and stated

above showed that he had the grace of some aspect of divinity (presumably Sri Raja Rajeswari who was his favourite deity).

Even after I left Tinnevelly, he used to come often to the stations where I served as Judge and I used to go often to Courtallam to see him. When I was at Tiruchinapally, I found that he was taking only tender Neem leaves and milk. When I was at Tiruturaippundi, he initiated me into various mantras and gave me the images of Sri Krishna and Sri Mahalakshmi and Sri Raja Rajeswari for worship.

Later on he purchased the site of the present mutt from the Zamindar of Seithur and installed the various images such as Vinayaka, Dattatreya, Sri Rama and Lakshmana and Sita, Krishna, Anjaneya, Narasimha, Kameswara (Linga) and Rajarajeswari. This Mutt-shrine has become a famous Institution. He has established there a good religious library. I helped to get books therefor from the Travancore and Baroda and Kashmir States, and also presented my books. The Navarathri festival is the chief festival at the Mutt shrine. The Vyasapuja also is grandly celebrated. Swamiji called the Peetam as Siddhes-

wari Peetam mainly at my suggestion. He began also to give titles to his devotees and was kind enough to bestow the title of Asthika Mani on me.

He had innumerable disciples—all over India and espetially in the Andhra Desa and Tamil Nad. I went with him to Zonnawada in the Nellore District and other places. He used to speak highly of the place called Mahalingam near Watrap in the Ramnad District and said that great Siddhas and saints lived there. He wandered all over India as Sanyasi and met Bhagavan Sri Ramana Maharishi often. I met in his company one Thenkai Swamigal who used to get cocoanuts and offer them to God and distribute them and give grass in plenty to cows. I have seen many great ascetics and Sadhus and Siddhas but though they were eminent and learned and pious they were not such adepts in yoga as Swamiji was and had not the powers and Siddhis which he had. He used only for his Mutt-shrine all the Kanikkais (gifts) in kind and in money given to him by his devoted disciples. I used to tell him often to establish a band of disciples who would be experts in Yoga Sastra and Mantra Sastra and Ayurveda Sastra and Jyothisha Sastra. He promised to do so. But he attained Mahasamadhi before he could

perfect that aspect of his mission. I am glad that the Committee of management appointed by him are putting up a shrine over his Samadhi. May the institution be always a live wire of spirituality as it was in his time!

I quote here in conclusion, two Sonnetts which I wrote about him in my Sonnetts-sequence entitled "THE TEMPLE OF BEAUTY".

I

"With shining eyes and calm and happy face
And blessed with boundless life and psychic peace,
The Mownaswami who had won release
From passion's power by God's almighty grace
Approached with sweet and persuasive ways.
He drew men's hearts. The lower self's decease
And higher self's intending sweet increase
He had achieved within his mortal days.
He yearned to see all men released from pain.
And knew nor rich nor poor nor high nor low
But went to all diffusing life and light
And taught how we by pure love could attain
The power behind earth's varied fleeting show,
Have revelations of the inner sight.

II

"Whenever vicious thoughts do thee assail,
Think of his sweet serenest holiness,
And stormless modes of inner blessedness,
His sweet release from passion's gilded gaol,
Partaker in the soul's divine wassail,
His love for men and gentle tenderness
Bring Godlike tears at sight of our distress
And ceaseless woes that lust and hate entail.
Ah! See the moon of his reposeful face
Which doth the gloomy clouds of grief disperse
And seas of Godward aspiration swells.
Ay! even me, outcaste from realms of grace,
That babble thus in unmelodious verse
A new and unknown force to light impels.

## 5. R.S. SANKARA AYAR, (Retd. District Judge).

When the Dandayudapani shrine was built in the outer court of Kuttalam temple, Sri Swami was always in Shencotta with the Engineer Ramaswami Aiyar. Swami was always in Shencottah about 4 miles from the workspot and did not visit or supervise. At the end of every week, the maistry would go to Shencotta to ask for payment. Swami would ask the maistry to go and dig at the

foot of some nearby tree. It was different each time. When he went and dug he found the exact amount in Rs. As. and Ps. The wages differed week by week according to the number of men, women and boys engaged as the work needed. All through that work, Swami never handled money himself. All payments came as stated above. This was told to me by Ramaswami Iyer who could not understand how the exact sum was found, when Swami did not know how many worked each week-day. Ramaswami Iyer mentioned this as one of the marvels.

In 1932 Dusserah Vijayadasami night, my wife and I were asked to instal Sree Subrahmania and Devayanai in the shrine attached to the Mutt. A copper sheet yantram was produced. I marked it for identity. The Swami then kept it and got into a trance. It was weighed before being given to him. After the trance he handed it back and it was weighed again; the weight had increased to the proportion of gold in excess of copper. The mark I made was on the gold sheet.

In 1913 he was with me for about five days at Sivaganga where I was alone (my family being then in Bangalore) where I was then District Munsiff. He explained how he was able to tell what

happens in distant places, as to persons whom he does not know. He said "I do not go there. No one comes from there to me. But to my mind the picture of the situation there appears. The voice speaking there falls in my ears. I only reproduce what I see or hear".

In these days of Radio and television one may perhaps find that there is in nature other means of hearing and seeing without the aid of transmitters or machines.

There can be no doubt of the fundamental fact that the limits of natural powers have yet to be studied, that what is considered supernatural today becomes proved to be natural tomorrow and the marvel is that without the aid of machines there have been sages who possessed these exceptional powers by self-development. 'The created world has in it the powers of the Creator like charcoal having the Sun's fire—Man has in him that power'. How it can be developed and made to manifest itself is the Search of the Yogī. The Saying "TAT TWAM ASI" has to be literally so understood. Like the electric light having the current of the generator—but not being the generator—man has God's power but is not God. So I understand Swamiji's message.

## 6. V. N. VISVANATHA RAO, (Retired Collector).

My wife and her parents (the late Justice Sir & Lady Kumaraswami Sastri) have been long standing devotees of the Swamiji. The marriage of my wife's sister with the son of the late A. S. Krishnaswami Aiyar, District Judge, (A. K. Ramachandra Aiyar, Sub-Judge, Tanjore) was fixed up by the Swamigal after Nishta.

I once met the Swamiji in 1923 with my wife and her parents and her sister and her husband. We all did our obeisances and sat down. The Swamigal signalled about me and wrote on a slip "இவருக்கு நம்பிக்கை கிடையாது". I said I had; but he smiled and said he was right. He had guessed my thoughts correctly. I was then an Assistant to the Director of Agriculture. Later in 1930, when I was Collector of Tinnevelly I visited him only once, though my wife visited him almost every day, whenever she was in Courtallam camp. In 1942, I came to Courtallam on leave, then became Collector. I was meeting him every day when in Courtallam on leave or on camp until his siddhi in 1943. I had become a maturer man in matters of spirit by then. He welcomed me warmly everytime I saw him.

When once he asked me whether I had any desire, I replied that I had only one desire viz., to be able to do Nishkama Karma, and that I had no other desire. I think he realised that I was sincere and that I was not still the man who had no faith, but made formal obeisance in 1923.

### 7. KONDA KOTTIAH,

Advocate, Madras.

I made my first acquaintance with Sri Mowna Swamijee in 1924 at Courtallam during my pilgrimage to the south. My first impression was that he was a great pious Sanyasi devoted to religious propaganda. I came into closer contact with him since April 1939 when I received Sri Vidya Deeksha from him at Madras first and in the Mandiram later. I performed my son's Upanayanam in the Mandiram under His auspices in May 1939 and did "Bhashya Shanti" under His disciple Sri Yogananda Saraswathi Swamigal.

His main upadesh, at any rate to me, was Manolaya by Manasika-mantra-japam as well as by doing Nithya and Naimittika karma prescribed in srutis and smritis. He used me as an instrument for initiating my wife and son into Mantra-upadesam, so far as it is not inconsistent with Sastraic injunctions.

Ever since 1939 I looked upon Swamijee not merely as my Guru but as God incarnate. It is perhaps with a view to take me on to higher planes, He was creating pleasant experiences for my wife and myself.

He was appearing to us in Dhyanam, in dreams and in visions even in waking state. But he was always attributing the same not to himself but to our own devotion and sincere and persistent practice. All the same he was putting before our mind's eye the goal of Manolaya and Jeevabrahma-Aikyam.

To mention a few of our experiences:—

1. Even within a month of His Upadesh to me, I was sometimes forgetting the Mantra-japam and in Dhyana seeing him and doing Susrusha (physical service) to him mentally.

2. As I was feeling worried about the refusal of licence for the construction of my house in Mylapore, he appeared to me in Dhyana and gave me some advice which when followed immediately yielded the expected result.

3. A long standing disciple Rao Sahib Baktha Bushana Sri Venkatasubbiah Garu was very much attached to Him and invited him for

Pada Pooja in his house on the occasion of his Janma-vardhanthi (birthday) in 1941 which fell on the occasion of Narasimha Jayanti day and which also happened to be Friday and when simultaneously my humble self also made a pressing request of the same kind to him. He kept quiet and went away to a distant place promising to satisfy the request of both. Each one of us was expecting his return to our house on the birthday but there was no communication from him till three days before the birthday. The communication was in a dream to my wife to honour us with his presence in our house on the birthday. At the same time he was pleased to write to the other Sishya to arrange his Pada Pooja in my house in the presence of all his disciples available at Madras. That Sishya and myself moved like brothers in my house, received the Swamijee and did Pada Pooja in the presence of several sishyas.

4. When my wife was feeling anxious about the marriage of our eldest daughter after the demise of Swamijee, he appeared to her at Guntur in actual waking state and assured her that the match for which we were trying would soon be settled. In fact it was settled in a few hours.

5. In 1942 my wife got a heart attack at

Guntur where we were staying on account of the Government order to leave Madras. That attack developed into convulsions and fits. In August, 1942 the doctor at Guntur advised me to take her to Madras for treatment and I did so. Several eminent doctors, Allopathic, Homeopathic, Ayurvedic and Unani, tried their best to treat her, but failed. All the same I did not think it proper to worry our Swamijee about this. But a disciple Sri S. V. Srinivasa Rao of Guntur going to Courtallam for Navarathri celebrations saw me at Madras and pressed me to permit him to report my wife's condition to Swamijee. It was accordingly done and Sri Swamijee was pleased to send a Yanthram with necessary instructions for my wife wearing the same and when the Yanthram was worn she was completely relieved of the trouble to the pleasent surprise of doctors as well as the members of the family.

6. In April, 1942 when I was seriously thinking of permanently shifting to Guntur on account of threatened invasion by the Japanese, Swamijee appeared to me in a dream at 4 A. M. of 16–4–42 and told me that by the Grace of Sri Rajarajeśwari Ambal nothing untoward would happen to us and that I need not remove any samans to Guntur

and that I might even bring my family from Guntur to Madras. All the same I attempted to remove the samans but I failed in the attempt for want of conveyances. I myself went to Guntur to join my family there. Shortly thereafter I received a holograph letter of Sri Swamijee containing the same message.

7. On the 13th day of his demise when I was in the Mutt premises as I was taking a stroll in the mutt garden, I saw the vision of Swamijee coming towards me with a torch light in his hand.

Since his demise in December 1943 such experiences have become scarce but I have reasons to believe that he is helping me to make progress towards "Manolaya".

When I was thinking seriously of Thuriya Asrama in 1941 while Swamijee was camping with me at Madras, he was pleased to explain to me the difficulties of strictly following the Sastraic injunctions prescribed for the asrama and persuaded me to continue as a householder doing religious sadhana.

When occasionally I was referring to his occult powers, he mentioned to me that they were given to him for the purpose of establish-

ing the Mutt and, that purpose having been achieved, he was deliberately avoiding the use of such powers and advised me not to think of them at all as they are obstacles in the way of real spiritual progress.

## 7. L. S. PARTHASARATHY AIYAR, Retired District Judge.

What to say of His Holiness Sree Mowna Swamigal? That one, who came from Andhra Desa, to the southern-most part of the Tamilnad, unknown and by dint of sheer Tapasya, was able to instal deities in the temple there, and build temples of his own and acquire valuable property for them, and more, able to draw hundreds and thousands of Sishyas to him, all like Sri Dakshinamoorthi, by Mowna (silence), is itself proof of his spiritual powers and the desire to elevate humanity and take it to its proper and native place, viz. Brahmanhood. All His Grace !

## அத்யாயம் 15.

## ஸ்ரீ ஸ்வாமிகளின் பொன்மொழிகள்.

### 1. பற்றுதலின் தன்மை.

1917-ம் வருடம் சென்னை நகரில் எங்கள் பங்களாவில் தாழ்வாரத்தில் உத்திரக்கட்டையைப் பிடித்து நின்று கொண்டு ஸ்வாமிகள் என்னுடன் பொதுவான சில விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தபொழுது, திடீரென்று அந்த விட்டத்தினின்று தம் இரு கரங்களையும் எடுத்துவிட்டு அறிவித்ததாவது :—

"இதுதான் உண்மை! உத்திரத்திலிருந்து கை எடுக்கப்பட்டதும் உத்திரம் வேறாகவும் கை வேறாகவும் பிரிந்து தனியாகி நிற்கின்றன. ஒன்றிற்கொன்று எவ்வித ஸம்பந்தமுமில்லை. உத்திரத்தில் கையை வைத்தால் உத்திரமும் கையும் ஸம்பந்தப்படுகிறது. அதைப்போலவே நாமும் நம் வாழ்க்கையில் ஏற்படும் பந்த பாசங்களும். ஆதலால் ஸந்தோஷம், துக்கம், அபிமானம் முதலிய எல்லாவற்றையும் ஸமமாகவே பாவிக்கவேண்டும். கை உத்திரத்தைத் தொடுவதினால் உத்திரத்தைக் கை தாங்குவதாக நினைப்பதும், உத்திரம் இல்லாவிடில் கை உயர்ந்து நிற்க முடியாது என்று நினைப்பதும் பெருந்தவறாகும். ஆகையால் வாழ்க்கையில் பந்தம் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் அதன் முடிவை எதிர்பாராமல் நடந்து கொள்வதே முறை. வினையின் முடிவைத் தீர்ப்பது இறைவன் செயல். அதைக் குறித்து நாம் துயரமடைய வேண்டாம்.

அபிமானம் ஏற்படும்போது ஸங்கல்பம் உண்டாகிறது. இறைவன் ஒருவன் நம் ஸங்கல்பங்களைப் பூர்த்தி செய்து உதவக் காத்திருக்கின்றான். ஒருவனுக்கு இப் பிறவியிலோ அல்லது முற் பிறவிகளிலோ ஏற்பட்ட பந்தங்களை அனுபவித்தே தீரவேண்டும். அது தீரும்வரை பல ஜன்மங்கள் எடுத்தாகவேண்டியிருக்கும். இதுதான் வேண்டாத விஷயம். நம் உள்ளத்தில் ஸங்கல்பம் ஏற்பட இடங்கொடுத்ததினாலன்றோ இப்பந்தங்கள் நம்மைத் தொடருகின்றன. ஆதலால் அந்தவிதமான ஸங்கல்பங்களுக்கு இடமே கொடுக்கலாகாது. கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நிஷ்காமமாகவே நம் வாழ்நாட்களைத் தள்ளவேண்டும். நம்மைப்பற்றிய பொறுப்புகள் யாவற்றையும் இறைவனிடமே ஒப்படைத்துவிட்டு ஸாத்விக முறையிலேயே வாழ்வது சாலச் சிறந்த மார்க்கமாகும்.''

## 2. வைராக்கியம்.

ஒரு சமயம் எனக்கு மனதில் சாந்திக்குறைவு ஏற்பட்டிருந்தது. உடனே திருக்குற்றாலம் சென்று ஸ்ரீ மௌன ஸ்வாமிகளைத் தரிசித்தேன். ஸ்வாமிகளும் என்னை அங்கேயே சில நாட்கள் தங்கி இருக்குமாறு ஆக்ஞாபித்தார்கள். நானும் அதை மறக்காமல் அவ்விடமே தங்கியிருந்து, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் மலையருவியில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நியம நிஷ்டையுடன் ஸ்ரீ ஸ்வாமிகளையும் மடாலயத்திலுள்ள மூர்த்திகளையும் தரிசனம் செய்து ஒரு வேளை மட்டிலும் உணவருந்திவிட்டு, எஞ்சியுள்ள பொழுதை ஸ்ரீ ஸித்தேச்வரி கிரந்தாலயம் என்ற வாசகசாலையி

லிருந்துகொண்டு வேதாந்த நூல்களை படித்துக்கொண்டு நாட்களை நல்ல முறையில் சுகமாகக் கழித்து வந்தேன். அப்பொழுது என் மனம் நிம்மதியாயும் சந்தோஷமாயுமிருந்தது. அப்பொழுது என் தகப்பனார் என்னை அழைத்து வருமாறு தகவல் கொடுத்து ஆளனுப்பியதாலும், ஸ்வாமிகளும் போய் வருமாறு உத்திரவளித்ததாலும் திரும்பி ஊர் வரவேண்டியதாயிற்று. விடையேற்க நான் ஸ்வாமிகளிடம் சென்ற சமயம் "நீங்கள் அனுஷ்டித்து வந்த விரதம் வைராக்கிய ஸாதனம். இதுதான் உண்மைப் பொருளை அடைய வழி. இந்த வைராக்கியம் ஒவ்வொருவருக்கும் அனுபவத்தில் தான் கிட்டவேண்டுமேயன்றி கற்றுக் கொடுக்கக்கூடிய விஷயமல்ல. நாளடைவில் நிர்விகல்ப ஸமாதியடைய இந்த வைராக்கிய மார்க்கமே பிரதானம்" என்று ஸ்வாமிகள் கூறினார்.

## 3. நித்திய ஸுகம் தேடு.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்களால் என் தந்தைக்கும் எனக்கும் எழுதப்பட்டிருக்கும் பல கடிதங்களிலிருந்து இதனடியில்கண்ட பொன் மொழிகள் பொதுமக்கள் நலம் பெறுமாறு பொருக்கித் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

"சாசுவதமான பொருள் எதுவோ, அதையே நாம் விரும்பவேண்டும். நித்தியமான சுகத்தைவிட்டு அநித்திய சுகத்தை நாம் ஒருபோதும் அபேக்ஷிக்கக் கூடாது. அந்த அநித்ய சுகத்தை யடையவேண்டி அதன் சம்பந்தமான முயற்சிகளில் வீணாக நம் புத்தியை உபயோகித்துப் பாழடையவேண்டியதில்லை. அதனால் ஏற்படும் இடுக்கண்கள்

அளவற்றன. வந்தால் சந்தோஷமும் வேண்டாம், வரா விட்டால் வீண் கவலையும் வேண்டாம். நாம் தாமரை இலைத் தண்ணீரைப் போலவே பட்டும் படாமலும் இருக்க வேண்டும்.''

“தேங்காயினுள் ஜலம் உண்டாகிப் பின் எவ்வாறு வற்றிவிடுகிறதோ அதைப்போன்றதே இப்பிரபஞ்ச காம்ய பலன்கள். நிஷ்காம பக்தியால் ஏற்படும் பலன் அவ் வாறில்லை. என்றும் அழியாதது. எல்லாம் கால சக்கரத் தின் சுழற்சியால் நிகழக் கூடியவையே யன்றி வேறல்ல. இதன் பொருட்டு நாம் ஏன் வீண் கவலைக்குள்ளாக வேண்டும்?''

“உலகில் மானிட வாழ்க்கை துக்கத்திற்கு அடிமைப் பட்டது. அந்த துக்கம் எந்த நிமிஷத்திலும் ஸம்பவிக் கக்கூடும். அதைப்பற்றி எவராலும் அறிய இயலாது. அந்த துக்கத்திற்குக் காரணம் ஒருவனுடைய அநித்திய விஷயமான காமனையால் ஏற்படுகிறது. அந்த அநித்திய விஷயமான இச்சையை நீக்கி நித்தியமான பொருளையே நாம் ஒவ்வொருவரும் நாடவேண்டும். நாம் செய்யும் கர்ம ங்களின் பலாபலன்களை எதிர்பாராமல் சாசுவத நிலையை நாடி தூய்மையைக் கடைப்பிடித்து முழு நம்பிக்கையுட னும் நல்ல சித்த விருத்தியுடனும் நற்காரியங்களைச் செய்வ தில் முனைந்து ஈடுபட்டு, மனதை ஒரே நிலையில் நிறுத்தி தியானித்து வந்தால் அநித்தியமெனத்தகும் கருத்துக்கள் நம்மை விட்டு விறண்டோடி ஒழிந்து, மனோலயம் ஏற்பட்டு எப்பொழுதும் நித்தியமெனத் தகும் பரமாநந்த நிலையை அடையலாம். அப்போது துக்கம், மாயை முதலிய யாவும்

கதிரவனைக் கண்ட பனிபோல் மறையும். இந்த உண்மையே நித்யாநந்தத்தையடைய நமக்கு ஓர் வழிகாட்டியாகும்.''

## 4. உலக ஸ்வபாவம்.

'' இக்காலத்தில் தர்ம சிந்தனையும் ஈச்வர பக்தியுமுள்ளவர்களுக்கே ஏதாவது இன்னல்களும் இடுக்கண்களும் ஏற்படுகிறது. இது ஸஹஜமேயாகும். இவ்விதம் இருக்கிறதேயென்று நினைத்து அக்கிரமத்தில் பிரவேசிப்பார்களேயானால் திரிசங்கு ஸ்வர்க்கம் போலாகி திண்டாட்டமடைவார்கள். ஆனால் சிலருக்கு ஆத்மாதிரி செல்வதில் மனம் துணிவதில்லை''.

''நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. இதை எல்லாம் யோஜித்துப் பார்த்தால் ஒருவருக்கொருவர் யாதொரு ஸம்பந்தமுமில்லை. உலகம் ஓர் சந்தைக் கூட்டம். தெரிந்திருந்தும் மாயையினால் ரொம்பவும் பிரமம் அடைகிறோம். வரவேண்டியது வந்தே தீரும். விவேகிக்கும் அவிவேகிக்கும் சுகதுக்கம் ஒன்றேதான். அவிவேகியானவன் கஷ்டம் வந்ததே! என்று தவிக்கின்றான். விவேகியானவன் அனுபவிக்க வேண்டியது ஒரு காலமும் தவறமாட்டாது, அதை அனுபவித்தே தீர வேண்டும், என்று நினைத்து மனதை திடப்படுத்தி ஸமாதானம் செய்துகொண்டு இருப்பான். அதனால் விசேஷ கஷ்டமாகத் தோன்றாது''.

''கஷ்ட சுகங்கள் காட்டிலிருந்தாலும் வரும், வீட்டிலிருந்தாலும் வரும். அவற்றைத் தடுக்க முடியாது.

கஷ்ட சுகங்கள் ஈசுவராதிகளேயே விடவில்லை. அவர்களும் அனுபவித்தே தீர்த்தார்கள். தாயார், தகப்பனூர், குழந்தைகள் முதலியவர்கள் யார்? ஒருவருக்கொருவர் ஸம்பந்தமேயில்லை. அப்படி ஸம்பந்தமிருந்தாலும் ஒருவரது கஷ்ட சுகங்களை மற்றவர்களால் பகிர்ந்துகொள்ள முடியுமா? ஆகையால் அஞ்ஞானத்தில் மனதை செலுத்தக்கூடாது. எல்லாம் மித்யை. அதிக சிநேகம் அதிக பந்தம். துக்க ஸாகரத்திலேயே இருந்தால் முன்னேறுவது எப்பொழுது? பிரமத்தை அறவே விட்டுவிட வேண்டும். ஆனூல் கடவுளை நிந்தை செய்யக் கூடாது. அதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. நமது கர்மத்தை நாம் அனுபவித்தேயாக வேண்டும்''.

''பிராரப்தங்கள் எப்பேற்ப்பட்ட மஹான்களேயும் விடுவதில்லை. அதை அனுபவித்தே தீரவேண்டும். ஸத்ஸங்கத்தினூல் என்ன உபயோகமென்றூல், பிராரப்தங்கள் அனுபவத்தில் இருந்தபோதிலும் ஒருவிதத்தில் அவ்வளவு கடினமாய்த் தோன்றூது. அதுவும் தவிர அவரவர்கள் செய்த பூர்வபுண்யத்தின் பயனூலும், ஸத் விஷயங்களின் பயனூலும் பெரிதாக வரவேண்டியவை எல்லாம் இலேசாகத் தோன்றி மறையும்.''

''ஸம்ஸார சித்திரங்கள் எப்போதுமிருக்கும். இந்த ஸம்ஸாரமும் பிராரப்த கர்மந்தான். அதனூல் கஷ்ட சுகங்களும், இடையூறுகளும் வந்துகொண்டேயிருக்கும். அக்கஷ்டங்களை கவனித்தால் மேல் நடக்கவிருக்கும் விஷயங்களுக்கு பெரிதும் இடைஞ்சலாகவே

இருக்கும். ஆகையால் எந்தெந்த காலங்களில் எதை நடத்த வேண்டுமோ அதையே நடத்த வேண்டும்."

